# மதுர நிலவே

## மதுரா

CPL 647582



மேகலா சித்ரவேல்

647582

759/08
10

**நூல் விவரப் பட்டியல்**

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | **மதுர நிலவே மதுரா** |
| ஆசிரியர் | : | மேகலா சித்ரவேல் |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| முதற் பதிப்பு | : | நவம்பர், 2007 |
| மொழி | : | தமிழ் |
| நூலின் அளவு | : | 1 x 8 கிரவுன் |
| மொத்தப் பக்கங்கள் | : | 256 |
| பைண்டிங் | : | சாதா அட்டை பைண்டிங் |
| தாள் | : | 11.6 kg வெள்ளைத்தாள் |
| அச்சு எழுத்து | : | 11 புள்ளி |
| நூல் வெளியிடுவோர் | : | **இலக்குமி நிலையம்** 53/115, கௌடியாமடம் சாலை, இராயப்பேட்டை, சென்னை-14 |

**விலை ரூ.40.00**

| | | |
|---|---|---|
| ஒளி அச்சு | : | 'சிவம்'ஸ், போன்: 9444232005 |
| அச்சிட்டோர் | : | உதயம் எண்டர்பிரைசஸ், சென்னை - 2. |

894.8113
MEK
CONNEMARA PUBLIC LIBRARY CHENNAI-600 008
26 FEB 2008

## என்னுரை

**வ**டஆற்காடு மாவட்டத்தின் ராணிப்பேட்டையில் சிலர் மட்டுமே அறிந்து வைத்திருந்த என்னை, உலகமெங்கும் தமிழ் படிக்கும் நெஞ்சங்களுக்கு நெருங்கினவளாக்கிய பெருந்தகை,

வாசகர் நெஞ்சங்களில் என் எழுத்தை சிறுகதை என்னும் விதையாய் விதைத்து, அது பாசவேர் பிடித்து நிரந்தரமாக வளர்ந்ததும் முதல் புதினப் பூவையும் அதில் பூக்க வைத்து என் எழுத்துலக வாழ்வை மணமுள்ளதாக மாற்றிய பெருந்தகை...

தேவி ஆசிரியர் உயர்திரு பா. இராமச்சந்திர ஆதித்தன் ஐயா அவர்களுக்கு என்றென்றும் நன்றி பாராட்ட கடமைப்பட்டுள்ளேன்!

(முதல் சிறுகதை 'தேவி'யில் ''அனலில் ஒரு அனிச்ச மலர்''. முதல் புதினம் 'தேவியின் கண்மணி'யில் - ''மதுராவை மறப்பேனோ..'')

என் 'மதுர நிலவே மதுராவை' உங்கள் உள்ளங்களில் உலவ விட்டு, இல்லங்களில் உங்களில் ஒருத்தியாக இணைய வைத்த அன்புத் தம்பிகள் இலக்குமி பதிப்பகத்தின் இளவல்கள் திரு. ராஜசேகர், திரு. அருணாசலம் இருவருக்கும் என் அன்பின் நன்றிகள்!

நாள் தவறினாலும், தவறாமல் புதிது புதிதாக எழுதச் சொல்லி அன்புக் கட்டளையிடும் அவர்களின் பாசத்திற்கு என் பிரியமான நன்றிகள்!

என் கதைகளில் ஆரம்ப வரிகளுக்கு கதைக் களம் அமைத்துத் தரும் வானுக்கும் நட்சத்திரங்களுக்கும் நிலவுக்கும் மேகத்துக்கும் காற்றுக்கும் என்றென்றும் நன்றிகள்...!

அன்புடன்,

**மேகலா சித்ரவேல்**
சென்னை

26 FEB 2008 CHENNAI

## காணிக்கை

முதல் முதலாய்...

வாழைப்பழம் திணிக்கப்பட்டவாய்... சந்தனம் பூசிய மொட்டைத் தலை... கண்மை கரைந்து ஓடிய அழுகையோடு காதில் தொங்கிய வைரக் கம்மலை கண்ணாடியில் பார்த்து, வலி மறந்து சிரித்த கணம்...

ஒரு கையில் புது கரும்பலகை.. மறு கையில் முழு பலப்பம்.. கண்களில் மிரட்சியும் அழுகையும் திமிரத் திமிர ஒன்றாம் வகுப்பில் நுழைந்த கணம்...

புதிதாக போட்டுக் கொண்ட மேலாக்கு நழுவி விழுந்து விடுமோ என்கிற கவலை கலந்த நினைவோடு கழித்த முழுநாள்...

வாழ்க்கை முழுவதும் இப்படி 'முதல் முதலாய்' முகம் மலர்ந்த கணங்கள் இன்னும் எத்தனையோ...? அவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தக் கணம்.. என் மகள் எனக்கு அம்மாவாக பதவி உயர்வு தந்தக் கணம்தான். அறிவும் அழகும் ஒன்றாகக் கலந்து பிறந்த எங்கள் குடும்பத்து இளவரசி.

மூன்று வயதில் எல்.கே.ஜி. வகுப்பில் சேர்க்கும் முன்னே வீட்டிலேயே அ, ஆவையும், ஏ, பி, சி, டியையும், பதினைந்து தமிழ், ஆங்கில குட்டிப் பாடல்களையும் கற்றுக் கொண்டவள்.

சுவர் கடிகாரத்தில் பார்த்து ஒன்று முதல் பனிரெண்டு வரை எண்களை தானாகவே கற்றுக் கொண்டு எழுதி எல்லோரையும் வியப்பிலாழ்த்தியவள்.

பெண்களைப் படிக்க வைப்பதையும், வெளி உலகிற்கு வேலைக்கு அனுப்புவதையும் பெரும் குற்றமாக நினைத்த ஒரு தலைமுறையிலிருந்து விலகி முதல் முதலாக மருத்துவம் படித்தவள். புற்று நோய் மருத்துவத்தில் மேற்படிப்பு முடித்தவள்...

சின்ன வயதில் என் பிள்ளைகளுக்கு நான் சொல்லிக் கொடுத்தது இதுதான்...

''வாழ்க்கையில் ஏற்படும் சறுக்கல்களுக்கு மனம் தளர்ந்து விடாதே... வெற்றி தரும் தருணங்களில் அடக்கமும் மற்றவர்களை மதிக்கும் பண்பையும் அதிகமாகக் கடைப்பிடிக்கத் தவறாதே...''

இதையே வேதவாக்காகக் கொண்டு வாழ்க்கையில் நடைபயிலும் நல்ல மகள். மற்றவர்கள் மத்தியில் தான் ஒரு மருத்துவர் என்பதையோ, உலகப் புகழ் பெற்ற ''ஈரோப்பியன் ரேடியாலஜி அசோசியேஷன் ஆன்லைன் ஜர்னலில்'' புற்று நோய் சம்பந்தப்பட்ட பல கட்டுரைகள் வெளியிட்டதைப் பற்றியோ கர்வப்பட்டு விடாமல் அடக்கமாகவே இருக்கும்,

எங்கள் வீட்டு மதுர நிலவு, டாக்டர் வந்தனா, M.B.B.S., D.M.R.T. வுக்கு இந்த மதுராவை காணிக்கையாக்குகிறேன்.

மேகலா சித்ரவேல்
சென்னை.

26 FEB 2008 CHENNAI

# மதுர நிலவே மதுரா

## 1

மஞ்சள் மாலைப் பெண் செந்நிறத்தாய்மை அடைந்து நட்சத்திரக் குழந்தைகளைப் பிரசவிக்கும் பின் மாலைப் பொழுது. பூமியில் இறங்கிய வானவில்லாய் நின்ற பல வண்ணக் குடையின் கீழ் இந்த ஆண்டுக்கான போனஸ் பற்றின பேச்சுவார்த்தை நல்ல முறையில் நடந்து முடிந்தது.

''உங்க அன்பான நிர்வாகத்தில் நம்முடைய தொழிலாளர்கள் நல்லவற்றை அனுபவிக்கிறாங்க மேடம். அவர்கள் சார்பில் எங்க நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்'' என்று மனம் நெகிழச் சொல்லி தொழிலாளர் தலைவர் கைகூப்பியபோது, சின்ன புன்சிரிப்பால் அவள் அதைத் தடுத்து விடை தரும் விதமாக எழுந்தாள்.

பங்களா உள்ளே நுழைந்தவளைப் பின் தொடர்ந்த மானேஜர், ''என்ன மேடம் அள்ளிக் கொடுத்திட்டீங்க. இது அடுத்த வருட எதிர்பார்ப்புக்கு வழி தருமே'' என்றார்.

''அவங்க உழைக்கிறாங்க. அதுக்குரியதை நாமாவே கொடுத்திட்டா வீண் பிரச்சினைகளைத் தவிர்க்கலாம். சேகர், லேடீஸ் கிளப் பரிசளிப்பு விழா இன்னிக்குத்தானே?''

கையில் பைலுடன் நின்றிருந்த பி.ஏ. சேகர், ''ஆமாம், மேடம். ஏழு மணிக்கு அந்த விழா. எட்டு மணிக்கு லயன்ஸ் கிளப்பில் நிர்வாகத் துறை பற்றி பேசறீங்க, நைட் டின்னர் அங்கேயே முடியுது. பத்து மணிக்கு ஆடிட்டரை வரச் சொல்லியிருக்கீங்க'' என்று கூறினான்.

''இதோ இன்னும் பத்தே நிமிடத்தில் தயாராகி வந்துடறேன்'' துள்ளல் நடையில் படிகளைத் தாண்டி உள்ளே நுழைந்தாள்.

எல்லா வேலைகளையும் முடித்து ஆடிட்டரை வீட்டிற்கு அனுப்ப நள்ளிரவாகி விட்டது. உடை மாற்றி கழுத்தை அழுத்திக் கொண்டிருந்த கொண்டையை அவிழ்த்து இடுப்பு வரை தொங்கும் தலைமுடியை பிரஷினால் ஒழுங்கு செய்தாள். அப்பாவின் படத்தின் முன் ஊதுபத்திகளை ஏற்றி வைத்து வணங்கினாள்.

எப்போதும் உடனிருக்கும் பணிப்பெண் பிரபா கையில் பால் டம்ளரோடு வந்தாள். வழக்கமாகப் போட்டுக் கொள்ளும் தூக்க மாத்திரையோடு இன்னும் ஒன்றையும் சேர்த்துப் போட்டு விழுங்கினாள். பிரபாவை அனுப்பி விட்டு படுக்கையில் விழுந்தாள். தூக்கம் வரவே மறுத்து ஒளிந்தது.

எழுந்து பால்கனிக்குச் சென்றாள். மேகத் திரைக்குள் கண்ணாமூச்சி ஆடி நிலவு முத்து வானவீதியில் ஓடும் அழகை சற்று நேரம் பார்த்துக் கொண்டிருந்தாள்.

கீழே தோட்டக்காரர் கந்தன் வீட்டிலிருந்து சிணுங்கலும், கொஞ்சல் சிரிப்பும் கேட்டது. அவர்களிடம் அள்ளி செலவு செய்ய பணமில்லை. படுத்துப் புரள பஞ்சணையில்லை. வள்ளி அடையும் நிம்மதியும், மகிழ்ச்சியும் விலை கொடுத்து



வாங்கப்பட்டதா என்ன.. அன்புக்குரிய கணவன் அருகாமை தரும் சுகத்தை, அந்த பாதுகாப்பு உணர்ச்சியை அனுபவிக்கும் போது ஏற்படும் நிம்மதியல்லவா...

பணம் இருந்தால் எதுவுமே பெரிசில்லை என்றுதானே இந்த மனிதர்கள் நினைக்கிறார்கள். இத்தனை பணத்தையும் வைத்துக் கொண்டு என்ன செய்வது? கூடி உண்டு, உடன் படுத்து எழ யார் இருக்கிறார்கள். அவளுக்கு ஆயாசமாக வந்தது.

விழிகளை கடிகாரத்திற்கு ஓட்டினாள். இரண்டு மணியாகியிருந்தது. காலையில் ஏழு மணிக்கு ஜப்பான் கம்பெனி ஒன்றின் தொழில் வல்லுனர் குழுவுடன் பேச்சு வார்த்தை நடத்த வேண்டியது நினைவுக்கு வந்தது. மூன்று மணி நேரமாவது ஓய்வு அவசியம் என்பதால் படுக்கையில் விழுந்து வலுக்கட்டாயமாக கண்களை மூடிக் கொண்டாள்.

காலையில் எழுந்து பேச்சுவார்த்தைக்கான குறிப்புகளைப் படித்துக் கொண்டாள். வெள்ளைப் பட்டுப் புடவையில் தேவதை போல மாடியில் இருந்து இறங்கியபோது சேகர் தயாராக நின்றிருந்தான்.

ஐந்து நட்சத்திர ஓட்டலில் ஜப்பானிய வல்லுனர் குழுவினரின் குறுங் கண்களில் இந்த வியப்பும், திகைப்பும் ஏற்பட்டது. அவளுடன் பேச பேச இத்தனை விஷயம் ஞானம் உள்ளவளா என்ற அவர்களது எண்ணம் பேச்சு வார்த்தையின் வெற்றியாக அவளுக்கு முடிந்தது.

தொழிற்சாலைக்குள் வல்லுனர் குழுவினரோடு அவள் நுழைகையில் வாயிலருகே காத்திருந்த தொழிலாளர்கள் அத்தனை பேரும் கைதட்டி வரவேற்றார்கள். காரை விட்டு

இறங்கியவளை மாலை அணிவித்து பாராட்டுக்களை அள்ளிக் குவித்தார்கள். பேச்சுவார்த்தைக்கான மகிழ்வாக அது தோன்றவில்லை. விவரம் புரியாமல் திகைத்தவர்களிடம் அவளுக்கு சிறந்த இளம் தொழில் முனைவர் விருது அளிக்கப்பட்டுள்ளது என்பது தெரிவிக்கப்பட்டது.

ஒரு கணம் தவித்தவள் மறுகணமே அவர்களுக்கு நன்றி தெரிவித்து மாலைகளைக் கழட்டி சேகரிடம் நீட்டி விட்டு, வல்லுனர் குழுவோடு தொழிற்சாலைக்குள் நுழைந்தாள். அவர்களுக்கு தொழிற்சாலையைச் சுற்றிக் காட்டி விட்டு, தொழிலாளர்களோடு கூட்டு சந்திப்புக்கும் ஏற்பாடு செய்தாள். கலந்துரையாடல் முடிந்த பிறகு ஜப்பானிய குழுவினரின் மகிழ்வுடன் விடை பெற்றனர்.

''அப்பா.. உங்க ஆசை நிறைவேறிட்டுதுப்பா... நானே தனியா நின்று ஜெயிச்சிருக்கேம்ப்பா... இதை நேரில் பார்க்க நீங்க இல்லேப்பா..'' புகைப்படத்திலிருந்த அப்பா அவளைப் புன்முறுவலுடன் பார்த்துக் கொண்டிருந்தார்.

## 2

அழகிய உடையில் தேவதையாய் கவர்னரிடம் பரிசு பெறும் அவளது புகைப்படம் அத்தனை நாளிதழ்களிலும் தலைப்புச் செய்தியாக வந்திருந்தது. அன்று அப்பாவின் சமாதிக்குப் போய் வருவதாக ஏற்பாடு. தொழிலாளர்கள் திரண்டு வர கையில் மலர் மாலையுடன் முன்னே நடந்தாள்.



மலையசைந்தாலும் மற்றவர் எதிரே தன்னை வெளிப்படுத்திக் கொள்ளாதவள் மாலையை வைத்தவுடன் கண்ணீர் மல்கினாள்.

மாலை மயங்கும் நேரத்தில் தோட்டத்தின் அழகில் லயித்திருந்தவளைப் போன் கூப்பிட்டது. சுவாரசியமின்றி எடுத்தவள் எதிர்முனைச் செய்தியில் ஆடிப் போனாள். டிரைவரைக் கூப்பிடும் அவகாசத்தைக் கூட வீணாக்காமல் தானே காரை ஓட்டிக் கொண்டு பறந்தாள்.

தூரத்திலேயே தொழிற்சாலையின் ஒரு கட்டிடம் நெருப்பும் கரும் புகையுமாக அவளைக் கூப்பிட்டது. வழி தவறிய ஆட்டுக் கூட்டம் போல தவித்தபடி ஆளுக்காள் ஓடினார்கள். கத்தினார்கள். அம்பு போல் பாய்ந்து வந்தக் காரைக் கண்டதும் பெருமூச்சு விட்டு நிமிர்ந்தார்கள்.

அதன் பின் மளமளவென்று வேலைகள் நடந்தன. பயர் என்ஜின் வந்தது. ஆம்புலன்ஸ் வந்தது. திடீரென ஏற்பட்ட தீ விபத்தில் உள்ளே ஷிப்டில் சிக்கியவர்கள் வெளியே கொண்டு வரப்பட்டார்கள். உயிர்ச் சேதம் இல்லையென்றாலும் காயம் பட்டவர்கள் நிலை பயத்தைக் கொடுத்தது. இவர்களை ஏற்றிச் சென்ற ஆம்புலன்ஸில் தானும் நர்சிங் ஹோமிற்குச் சென்றாள்.

''நல்ல வேளை யாருக்கும் ஆபத்தில்லை. சரியான நேரத்தில் கொண்டு வந்துட்டீங்க'' அசரீரி போலக் கேட்ட அந்தக் குரல் அத்தனைப் பேருடைய இதயத்திலும் தேன் வார்த்தது. டாக்டர் உடையில் அவன் தேவ தூதனாய் நின்று கொண்டிருந்தான்.

அவனுக்கு நன்றி கூறக் கூடத் தோன்றாத நிலையில் வார்டினுள் ஓடினாள்.

தொழிற்சாலைக்குத் திரும்பிய உடன் மற்ற அதிகாரிகளைக் கூட்டிப் பேசினாள். எரிந்து போன கட்டிடமும் மிஷின்களும் இன்சூர் செய்யப்பட்டவை. அதனால் பிரச்சனை இல்லை. தொழிலாளர் குடும்பங்களுக்கு உடனடியாக குடும்ப நல நிதி தருவதற்கு ஏற்பாடுகள் செய்தாள். அந்த தனியார் மருத்துவ மனையில் ஸ்பெஷல் வார்டுகளில் வைத்து வைத்திய வசதிகள் செய்யவும் அதற்காகும் செலவை நிர்வாகம் ஏற்றுக் கொள்ளும் என்று அவள் முடிவெடுத்தபோது மற்ற நிர்வாகிகள் வியப்புடன் பார்த்தார்கள்.

''மேடம் செலவு ஏகப்பட்டது ஆகும்'' என்று ஜி.எம். சொன்னபோது அவள் தலையசைத்தாள்.

''அவங்க உயிர் அதுக்கெல்லாம் அப்பாற்பட்டது. அந்த ஒவ்வொரு தொழிலாளியையும் நம்பி அந்த குடும்பத்து உயிர்கள் பின்னப்பட்டிருக்கு. அதனால இதை மனிதாபிமான காரியமா ஏத்துக்கறதா முடிவு பண்ணிட்டேன். நீங்க போய் ஆக வேண்டியதைப் பாருங்க.''

அளவுக்கு அதிகமான உடல் உழைப்பு, மன உளைச்சல் இருந்தாலும் அவளுக்கு ஓய்வாவது ஒன்றாவது. எங்கேயாவது தனியாக ஒரு பத்து நாள் சென்றுவிடவேண்டும் என்று தன்னையும் மீறி அவள் நினைப்பது உண்டு. ஆனால் மனிதர்கள் இல்லாத தனிமை தனக்கு சாத்தியமில்லை என்பது நிதர்சனமான உண்மை என்பது நினைவுக்கு வரும்போது சிரிப்புத்தான் வரும்.

இன்னொரு தொழிற்சாலை நிறுவ இருப்பது சம்பந்தமாக ஜி.எம். டெல்லிக்குப் போயிருந்தார். அவர் எந்த நேரமும் போனில் தொடர்பு கொள்ளலாம். அது சம்பந்தப்பட்ட பைல்



ஒன்றைப் படித்துக் கொண்டிருக்கும்போது சேகர் உள்ளே நுழைந்தான். அவனுக்குப் பின்னே, ''குட்மார்னிங் மேடம்'' என்ற குரலுக்குரியவனின் முகம் பரிச்சயமானதாக இருந்தது. ஒரு நிமிடம் நெற்றியை சுருக்கியவள் அடையாளம் கண்டு கொண்டாள்.

''ஹலோ டாக்டர், குட்மார்னிங்... வாங்க.. என்ன திடீர்னு வந்திருக்கீங்க.''

அவன் சிரித்துக் கொண்டே தன் பெற்றவர்களையும் தங்கையையும் அறிமுகப்படுத்தி விட்டு தங்கையின் கல்யாணப் பத்திரிகையை நீட்டினான்.

அதைப் பிரித்துப் படிப்பதற்குள் குளிர்பானம் வந்தது. ''அவசியம் நீங்க வரணும் மேடம். எங்களுக்கு ரொம்பப் பெருமையாக இருக்கும்.'' அவனுடைய அம்மா கூப்பிட்ட போது புன்முறுவலித்தாள். சேகரைத் திரும்பிப் பார்த்தாள். திருமணத்தன்று பதினோரு மணியளவில்தான் மாவட்ட ஆட்சித் தலைவரோடு சந்திப்பு இருந்தது. மற்றபடி காலையில் வேலை எதுவுமில்லை என்று தெரிந்து கொண்ட பின் வருவதாகத் தலையசைத்தாள்.

அவர்களைக் காரில் அனுப்பி வைக்கும்படி கூறும் போதே போன் வரவும் தலையசைப்பில் விடை கொடுத்தாள். ஜி.எம்.தான் பேசினார்.

அவரது பேச்சில் ஒன்றும் தங்களுக்குச் சாதகமாக இல்லை என்பது புரிந்தது. மறுநாள் காலை தான் புறப்பட்டு வருவதாகச் சொல்லி போனை வைத்தாள். உடனடியாக டிராவல்ஸ் ஏஜென்ஸியில் சொல்லி டிக்கெட் உறுதி செய்யப்பட்டது.

நாளைக்கு எப்படி பேசுவது என்ற எண்ணம் இப்போதே தொடங்கியது.

எதிரில் மேஜை மீது அந்தப் பத்திரிகை 'பேன்' காற்றில் படபடத்தது. அவளைத் திருமணங்களுக்கு வரச் சொல்லி பலர் கூப்பிட்டாலும் அவள் பொதுவாக போக விரும்புவதில்லை. ஆனால் அந்த விபத்து நேரத்தில் இந்த டாக்டர் செய்த உதவி மறக்கக் கூடியதல்லவே.

ஆமாம்... அவருடைய பெயர் என்ன?.. மறந்து போய் விட்டதே. பத்திரிகையில் இருக்குமோவெனத் திருப்பிப் பார்த்தாள். அது மணப்பெண் அழைப்பது போல் அடிக்கப் பட்டிருந்தது. டாக்டர் என்றே அழைத்து வந்ததால் அவனுடைய பெயர் சட்டென்று நினைவுக்கு வரவில்லை.

இதைப் போலவேதான் தன்னுடைய பெயரும் ஆகிவிட்டது. மேடம், அம்மா என்றே மற்றவர்கள் கூப்பிட்டு வருவதால் தன்னுடைய பெயர் தனக்கே இன்னும் கொஞ்ச நாளில் மறந்து விடுமோ என்று தோன்றியது. அப்பா இருந்த வரை அவளுடைய பெயரை மிகவும் அழகாகக் கூப்பிடுவார். அவருக்குப் பின்னால் அதைக் கூப்பிடக் கூட யார் இருக்கிறார்கள். பெருமூச்சில் தன் வருத்தத்தை மறைத்துக் கொண்டு பைலை மீண்டும் பிரித்தாள்.

சேகர் உள்ளே வந்தான். ''மேடம்..'' பேசத் தயங்கியவனை என்ன என்பது போல தலையை உயர்த்தினாள். ''நேரம் ரொம்ப ஆகிவிட்டது. காலையில் டெல்லிக்குப் போகணும். வீட்டிற்குப் போய் நீங்க ரெஸ்ட் எடுத்தா நல்லா இருக்கும்.''

சிரித்தபடி மணியைப் பார்த்தாள். எட்டு. ''ஓ.கே. இந்த பைல் எல்லாத்தையும் வீட்டுக்கு அனுப்பிடுங்க.''



காரில் ஏறும்போதே நகைக் கடைக்குப் போக வேண்டும் என்பதை சேகர் நினைவூட்டினான். நகைக் கடைக்குப் போவதற்குள் மறுநாள் அவள் கொண்டுசெல்ல வேண்டிய பைல்களில் வரிசை எண்களை அவள் கூறக் கூற சேகர் குறித்துக் கொண்டான்.

நகைக் கடையில் முதலாளியே ஓடி வந்து வரவேற்றார். மோதிரம் வாங்கப்பட்ட பின் டாக்டரின் தங்கைக்குப் பரிசு வாங்க வேண்டுமென்று நினைத்தாள். பலவற்றைப் பார்த்தும் திருப்தி இல்லாமல் எழுந்திருக்கும் போது மேல் தட்டிலிருந்த நெக்லஸ் மிகவும் அழகாகத் தெரிந்தது. பச்சைக் கற்கள் பதித்த டாலருடன் முத்துக்கள் சரங்கட்டியிருந்தது. நல்ல சிவந்த நிறமுடைய அவளுக்கு இது மிகவும் எடுப்பாக இருக்கும் என்று தோன்றியது.

சேகரை அவனுடைய வீட்டில் இறக்கி விட்டு பங்களாவுக்குள் நுழைந்தவளை எதிர் கொண்டழைத்தாள் அத்தை. பிரபா காரிலிருந்து பைல் மூட்டையையும் நகைப் பெட்டியையும் எடுத்து வந்தாள்.

நகைப் பெட்டியைக் கண்டதும் அத்தை அதை வெடுக்கென்று பிடுங்கினாள். ''அத்தனையும் நல்ல முத்தா'' என்று கேட்டாள். உனக்கா என்று சந்தேகக் கேள்வி எழுப்பினாள். ''இல்லை என் பிரண்டுக்கு'' என்றபோது, ''ஊரிலே இருக்கவங்களுக்கு எல்லாம் அள்ளி விடுவே. உங்கப்பா கூடப் பிறந்த என்னையும் என் பிள்ளைகளையும் தான் உனக்கு கண்ணுக்குத் தெரியாது. இந்த பிரபா செய்யற வேலையை என் பெண் தங்கம் செய்ய மாட்டாளா? எனக்கும் முந்தி மாதிரி உடம்பு முடியலே. மாளிகை மாதிரி வீடு இருக்கு இங்கே. நான் வாடகை வீட்டில் இந்த பத்தையும் வச்சுக்கிட்டு

தவிக்கிறேன். இங்க கூட வந்து இருங்கன்னு சொல்ல உனக்கு வாய் வராதே. எங்கண்ணா இருந்தா இப்படியா?''

பேசிக் கொண்டே வந்தவள் வராத அழுகைக்காகப் புடவைத் தலைப்பை முகத்திலிட்டு துடைத்துக் கொண்டாள். அத்தையின் இந்த போலித்தனமான அழுகை அவளுக்கு சிரிப்பை வரவழைத்தது.

தன்னுடைய அலுப்பைப் பற்றியோ, களைப்பைப் பற்றியோ கவலைப்படாமல், தன் கதை சொல்லி அழும் சொந்தத்தைப் பற்றி என்ன சொல்வது, எங்கே போய் முட்டிக் கொள்வது?

ஆனாலும் அத்தைக்குப் பதில் கூறி சாப்பிட அனுப்பினாள். பிரபாவிடம் அத்தை படுக்கத் தன்னறைக்குள் வந்து விடாமல் பார்த்துக் கொள்ளச் சொல்லி உத்திரவிட்டாள்.

## 3

மறுநாள் காலை விமான நிலையத்திற்குக் கிளம்பும்போது, ''மேனேஜர் அத்தைக்கு மதிய ரயிலுக்கு டிக்கெட் வாங்கிடுங்க. பிரபா நீ போய் ரயிலேத்திட்டு வா. அத்தை நீங்க கிளம்பும் போது, நான் இருக்க மாட்டேன். போய் லெட்டர் போடுங்க'' என்று பேசிக் கொண்டே படிக்கட்டுகளில் இறங்கலானாள்.

அத்தை பின்னாலேயே ஓடி வந்தாள். ''நீ போறது இருக்கட்டும். நேத்து நான் கேட்டது பத்தி எதுவுமே சொல்லாம போறீயே..'



திரும்பிப் பார்க்காமல், ''மேனேஜர் கிட்டே சொல்லிருக்கேன்'' என்றபடி காரில் ஏறினாள். அவசரமாக அவள் போவதையே பார்த்துக் கொண்டு நின்றவளை பிரபா கூப்பிட்டாள்.

''அத்தையம்மா. சீக்கிரம் டிபன் சாப்பிடுங்க. அப்புறம் ரயிலுக்கு நேரமாகிடும். மேடம் திட்டுவாங்க.''

''என்னாங்கடி ஆளாளுக்கு விரட்டறீங்க. எங்கேடி போறா உங்க மேடம். மதியம் வரமாட்டாளா?''

''அவங்க டெல்லிக்குப் போறாங்க. முக்கியமான வேலை. அதனால திரும்பி எப்ப வருவாங்கன்னு சொல்ல முடியாது.''

அத்தை என்னவோ சொல்ல வாயெடுத்தபோது கையில் கவரோடு மேனேஜர் வந்தார். கவரைப் பிரித்துப் பார்த்தவள், ''என்னய்யா மேனேஜர் இரண்டாயிரம்தான் வைச்சிருக்கே. நான் அவளை ஐயாயிரம் இல்லே கேட்டிருந்தேன்'' என்று எரிச்சல்பட்டாள்.

''மேடம், இவ்வளவுதான் தரச் சொல்லிட்டுப் போனாங்கம்மா. என்னை என்ன பண்ணச் சொல்றீங்க. வேணாம்னா குடுத்திட்டுப் போங்க. மேடத்துக்கிட்டே ஒப்படைச்சிடறேன்.''

ஐயாயிரம் இல்லாமல் கிளம்ப முடியாது என்று அத்தை தங்கி விட்டாள். பி.ஏ.வுக்கும் மானேஜருக்கும் தவிப்பாக இருந்தது. அத்தையின் பிள்ளைகள் பங்களாவை துவம்சம் பண்ணிய போது பிரபாவுக்கு நடுக்கமாகியது.

டெல்லியில் வேலை முடிய நான்கு நாட்களாகி விட்டது. கடைசியாக மத்திய அரசின் அனுமதிக்கான உத்தரவை கையில் வாங்கிக் கொண்டு தான் அவள் கிளம்பினாள்.

விமான நிலையத்திலிருந்து வரும்போதே முக்கிய நிகழ்ச்சிகளை எல்லாம் சொல்லி வந்த பிரபா, அத்தை கிளம்பாததையும் சொன்னபோது அவளுக்கு எரிச்சலாக வந்தது. இருந்தாலும் காட்டிக் கொள்ளவில்லை. அமைதியாக இருட்டில் தெரிந்த விளக்குகளைப் பார்த்தபடி வந்தாள்.

தன் தந்தை வழி சொந்தம் இவள் ஒருத்திதான். தாய் வழி அறவே மறந்தாகி விட்டது. அம்மா உயிரோடு இருந்தபோது இந்த அத்தையிடம் என்ன பாடுபட்டிருப்பாள். அப்பாவும், அம்மாவும் காதலித்து மணந்து கொண்ட காரணத்தைக் காட்டி இந்த அத்தை வீட்டுப் படியேற அனுமதிக்கவில்லை. வறுமையின் பிடியில் அடுத்த வேளை சோற்றுக்கே குடும்பம் அலை மோதியபோது அம்மா போன்கேன்ஸர் வந்து சாகக் கிடந்தாள்.

வயதில் பெரியவரான அப்பா நல்ல நிலையில் இருந்த இதே அத்தையிடம் கையேந்தி யாசகம் கேட்டிருக்கிறார். அன்றைக்கு எத்தனை நிஷ்டூரமாகப் பேசியிருப்பாள். அப்பாவோடு பள்ளியிறுதி வகுப்பில் படித்த அவளும் கண்ணெதிரில் அம்மா துடித்து, துடித்து செத்ததை ஒன்றும் செய்ய முடியாமல் பார்த்துக் கொண்டிருந்தார். சொந்தமாவது ஒன்றாவது.

பிணத்தை எடுக்க வழியின்றி அப்பா கொட்டும் மழையில் வெளியே உதவிக்காக ஓடினார். ஓலைக் குடிசையின் வான் திறந்த கூரை வழியே அம்மாவை மழை நீரே குளிப்பாட்டி விட்டது. நல்லவர் சிலரின் உதவியோடு அம்மா இறுதிப் பயணம் கிளம்பியபோது அவளும் கூடச் சென்றாள். அப்பா சுடுகாட்டில் நெருப்புக்கு தர்ப்பணம் பண்ணிய வேளையில் அவள் கதறி கதறி அழுதாள்.



அப்பா அவள் தலையைத் தடவி விட்டபடி எரியும் சிதை முன் சொன்னது இன்றும் காதுகளில் ஓங்காரமாய் ஒலிக்கிறது.

''அழாதே, நீ விடற ஒவ்வொரு சொட்டுக் கண்ணீரும் உன் கோழைத்தனத்தை மத்தவங்களுக்குப் படம் பிடிச்சுக் காட்டிடும். தைரியமா நில்லு. எதிர்த்து நிமிர்ந்து நில்லு. துக்கத்தை முழுங்கிடு. மகிழ்ச்சியை மறைச்சிடு. எது நடந்தாலும் எதுவும் நடக்கலேன்னு நில்லு. நீ நிமிர்ந்தாத்தான் உலகம் உனக்கு வழிவிடும்.''

அதன் பிறகு அவள் அழவே இல்லை. எதற்குமே அழுவதில்லை. எந்த உறவும் தன்னோடு ஒட்ட விடாத சுபாவம் எப்படி வளர்ந்தது என்பதே புரியவில்லை. எதிர்பார்த்த சின்ன வயதில் அவர்களின் பாராமுகம் இப்படித் தோன்ற வைத்து விட்டதோ அல்லது தனக்குள் இருக்கும் எச்சரிக்கை உணர்வு இப்படி செய்கிறதோ புரியவில்லையே. சமயத்தில் தான் ஏன் இப்படிக் கல்லாகிக் கொண்டிருக்கிறோம் என்று தோன்றும். எந்த வாயிலிருந்து வரும் சொல்லும் பொய் யாகவே தோற்றமளிக்கிறது. அதனால் தான் அத்தையின் அன்பு அதிகப்படியான பொய்யாகத் தோன்றி எரிச்சலூட்டு கிறது.

அம்மாவின் மறைவு அப்பாவுக்கு ஒரு வைராக்கியத்தை ஏற்படுத்தி விட்டது. அசுர உழைப்பு உழைக்கலானார். அதிர்ஷ்டம் அப்பாவோடு கைகோர்த்துக் கொண்டது. பணம் வரவும் அத்தை மட்டுமா வந்து ஒட்டினாள். அம்மாவின் முகம் தெரியாத சொந்தமெல்லாம் வந்தது. வருபவர்களுக்கு ஒருவேளை நல்ல சாப்பாடு போட்டு கையில் நூறு ரூபாயைக் கொடுத்து அனுப்பி விடுவார் அப்பா. அதற்கு மேல் வீட்டில் தங்க அனுமதிக்க மாட்டார். அத்தை மட்டும் உடன் பிறந்தவள்

என்று உரிமை கொண்டாடுவாள். அதனால் கொஞ்சம் அதிகம் வாங்கிக் கொள்வாளே தவிர அவளையும் அதிகம் ஒட்ட விடமாட்டார்.

ஆனால் மற்றவருக்கு உதவ வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு இயற்கையாகவே இருந்தது. பணம் வந்ததும் அதைச் செயற்படுத்தினார். அன்புக்கு அடிபணிந்தாலும் ஆணவத் துக்கோ, அதிகாரத்துக்கோ கட்டுப்படவே மாட்டார். அவளது வாழ்வு ஒன்றையே தன் குறிக்கோளாகக் கொண்டிருந்தார். அவளை ஆண் பிள்ளைப் போலவே வளர்த்தார். நிமிர்ந்த நன்னடையும், நேர்கொண்ட பார்வையும், நானிலத்தில் யாருக்கும் அஞ்சாத குணமும் கொண்டவளாய் அவள் வளர்ந்தாள்.

தொழிற்சாலை நிர்வாகம் கற்றுக் கொடுத்தார். மனிதர்களைப் படிக்கக் கற்றுக் கொடுத்தார். மனிதாபிமானத்தை அவள் மனதில் விதைத்தார். தைரியத்தை ஊட்டினார். முடிவெடுத்துச் செயல்படும் வீரத்தை வளர்த்தார். எதிலும் முதலாவதாக வரவேண்டும், ஜெயித்தே தீர வேண்டும் என்ற தீரம் உடையவளாக அவள் இயற்கையிலேயே இருந்ததால் அவளது எதிர்கால வாழ்வைப் பற்றின பயம் அப்பாவுக்கு என்றுமே இருந்ததில்லை. அப்பா மறைந்தாலும் அவளோடு அவர் இருப்பதாகவே அவளுக்கு மனதில் தோன்றும்.

அதனாலேயே அப்பாவின் மறைவுக்குப் பின் சொந்தம் என்று வந்தவர்கள் எல்லோரையும் அவள் வெட்டி விட்டாள். கார் நிற்கும் மென்மையில் சட்டென சுய நினைவு வந்தவளாய் கீழிறங்கினாள்.



சேகர் விடைபெறுமுன் மறுநாள் டாக்டர் தங்கையின் திருமணம் இருப்பதையும் நினைவூட்டினான். அவனை அனுப்பி விட்டு உள்ளே நுழையும்போதே அத்தை வழிமறித் தாள்.

''இதோ பாரு கண்ணு. எதுக்காக இப்படி தனியா அலையற. மதுரையில் சாரதாவோட மகன் விக்ரம் வேலையில்லாம ஏதோ பிஸினெஸ் பண்ணிக்கிட்டு இருக்கான். அவனைக் கூப்பிட்டுத் துணைக்கு வச்சுக்கிட்டா எவ்வளவு நல்லாயிருக்கும். உன் அப்பா இருக்கும்போதே உங்க ரெண்டு பேருக்கும் கல்யாணப் பேச்சு கூட நடந்தது. ஏனோ நடக்கலே... அவன் உனக்கு சரியான துணையாக இருப்பான்.''

வந்த எரிச்சலை மறைத்துக் கொண்டு, ''எனக்கு நெறைய வேலை இருக்கு அத்தை. விக்ரமை பத்தியெல்லாம் பேசி என் நேரத்தை வீணாக்காதீங்க. ப்ளீஸ் காலையில் ஊருக்குக் கிளம்பறதைப் பாருங்க'' என்று கூறி விட்டு மாடிப் படியேறி னாள்.

## 4

**கா**லையில் தயாராகி வள்ளி கொண்டு வந்த மல்லிகை மாலையை அப்பாவின் படத்துக்கு அணிவித்து விட்டு கீழே இறங்கினாள்.

காபி குடித்தபடியே, பேப்பர் படித்து முடிக்கவும், சேகர் வரவும் சரியாக இருந்தது. பிரபா பரிசளிக்க வேண்டிய நெக்லஸ் பெட்டியை கொண்டு வந்தாள். அதற்குள் போன் மணியடித்தது. சேகர் எடுத்தான். ''டாக்டர் பேசறார் மேடம்!''

''ஹலோ டாக்டர்... குட்மார்னிங், மறக்கலே. இதோ கிளம்பிக் கிட்டிருக்கேன்.. ஸீ.. யூ..''

கண்டாஸா கல்யாண சத்திரத்திற்குள் நுழைந்ததுமே அவன் ஓடி வந்தான். ''வாங்க மேடம்'' கல்யாணப் பந்தலே அல்லோகலப்பட்டு விட்டது. திருமணம் முடிந்ததும் பரிசளித்து விட்டுக் கிளம்பியவளை அத்தனை பேரும் விட மறுத்து விட்டார்கள். சாப்பாட்டு மேசையில் அத்தனை பேரும் நின்று உபசரித்தார்கள். பெண்ணும் மாப்பிள்ளையும் பக்கத்தில் நின்று போட்டோ எடுத்துக் கொண்டார்கள். விடைபெற்றுக் கிளம்பியவளை டாக்டர் கார் வரை வந்து வழியனுப்பி வைத்தான்.

குறிப்பிட்டபடி கலெக்டரை நேரில் சந்தித்துப் பேசி தொழிற்சாலைக்குள் நுழைந்தாள்.

மூச்சு விடக் கூட முடியாத வேலை. அலுத்துக் களைத்து கண்களை மூடி பத்து நிமிடம் எடுத்த ஓய்வு பி.ஏ. கொடுத்த ஆப்பிள் ஜூஸோடு முடிந்தது. மீண்டும் வேலை தொடர்ந்து கிளம்ப எழுந்தபோது பர்சனல் நம்பரில் பிரபாவிடம் இருந்து போன் வந்தது.

''மேடம் விக்ரம் வந்திருக்கிறார். அத்தையம்மா இங்கே ஒரே அமர்க்களம் பண்றாங்க. உடனே வாங்க.''

காரில் வீட்டிற்கு விரையும் போது இது அத்தையின் வேலையாக இருக்குமோ என்று தோன்றியது. ஆனால் விக்ரமோட விலாசம் அவளுக்குத் தெரிய வாய்ப்பே இல்லை என்பதும் புரிந்தது. நேற்றுதான் அவனைப் பற்றி பேச்சு வந்தது... பார்த்து விடலாம்.



நடு ஹாலில் சோபாவில் உட்கார்ந்து டீப்பாயின் மீது கால் நீட்டி வாயில் சிகரெட்டோடு விக்ரம் உட்கார்ந்திருந்தான். அவன் எதிரில் அத்தை உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தாள்.

''நேத்துதான் உன்னை நினைச்சேன். என் ராஜா உனக்கு நூறு வயசு. பேசாம நீ இங்கேயே இரு. இது யார் சொத்து. நம்மதுதானே. நீ இங்கேயே இருந்துட்டா, நானும் நிம்மதியா உன்கூடவே இருந்திடுவேன். அவளைப் பத்தியா பயப் படறே.. அவ கிடக்கறா..''

அவர்களைப் பார்த்தபடி சோபாவில் கால்மேல் கால் போட்டபடி அவள் உட்கார்ந்தாள்.

''ஹலோ.. எப்படியிருக்கே... நான் எதுக்கு வந்திருக்கேன்னு நீயா கேட்க மாட்டே... நானே சொல்றேன். பல ஊர்களில் சுத்தி பிஸினஸ் செய்து அலுத்துப் போச்சு.. உன் கூடவே இருந்துக்கறேன்.. நீயும் பாவம் தனியாத்தானே இருக்கே... என்ன சொல்றே..''

''வெளியே போன்னு சொல்றேன்..''

''முடியாது இனிமே.. இங்கேயேதான் இருக்கப் போறேன். நீ என்ன சொல்றது, நான் எதுக்கும் பயப்படாதவன்.''

''போலீசுக்குப் பயப்படுவே இல்லே..''

விக்ரம் சட்டென முகம் மாறினான். ''சித்தி இவ என்ன பேசறா பாத்தியா? திமிர் பிடிச்சவ'' அவன் பேசிக் கொண்டிருக்கும்போதே,

''மேனேஜர் கால் த போலீஸ்'' என்ற அவளது கட்டளைக் குரல் வீடெங்கும் எதிரொலித்தது.

அதுவரை பதட்டத்திலும், பிரமிப்பிலும் இருந்த ஊழியர்கள் பதறியபடி ஓடிவந்தார்கள்.

விக்ரம் சட்டென பேண்ட் பாக்கெட்டிலிருந்து பேனாக் கத்தியை பிரித்துக் கொண்டான். அத்தனை பேரும் தயங்கின ஒரு வினாடியில் அவள் சட்டெனத் துணிச்சலாக அவனை நோக்கி முன்னேறினாள். அவளை எச்சரித்துக் கொண்டே நடக்க முற்பட்ட அவன் சோபாவில் இடித்துத் தடுமாறினான். அந்த இமைக்கும் நேரத்தைப் பயன்படுத்தி கத்தியைப் பிடுங்க முயற்சி செய்தாள். போராட்டத்தில் கத்தி அவள் கையில் ஆழமாகக் குத்தி ரத்தம் பீறிட்டது.

வெள்ளைப் புடவை ரத்தத்தில் நனையலாயிற்று. விக்ரம் பயந்து ஓட எத்தனித்தான். மற்றவர்கள் அவனைத் துரத்த கலாட்டாவாகியது. கந்தனும், வாட்ச்மேன் கேசவ்சிங்கும் அவனைக் கோழியை அழுத்துவது போல அழுத்தி கைகளைப் பின்புறம் கட்டினார்கள்.

அவள் கை காயத்தையும் பொருட்படுத்தாமல் தங்கள் குடும்ப நண்பர் எஸ்.பி. ரகுநாதனுக்கு போன் செய்தாள். ரகுநாதன் பதறிக் கொண்டு வரும் முன்னே எஸ்.ஐ.யும். போலீஸ்காரர்களும் விக்ரமை விருந்தாளியாக அழைத்துச் சென்று விட்டிருந்தார்கள்.

பிரபா கொண்டு வந்து கொடுத்த வெறும் பஞ்சை வைத்துக் காயத்தை அழுத்திக் கொண்டிருந்தவளை ரங்கநாதன் வலுக்கட்டாயமாக நர்சிங் ஹோமிற்கு அழைத்துச் சென்றார். வேண்டாம் என்று மறுத்தாலும் அவரை மீற முடியாமல் கிளம்பினாள்.



மாலை மயங்கிவிட்ட நேரமாதலால் நர்சிங் ஹோம் மிகவும் அமைதியாக இருந்தது. இவர்களின் வரவு அங்கே பெரும் பரபரப்பை ஏற்படுத்தி விட்டது. நர்சுகள் அவளது ரத்தக் கோலத்தைப் பார்த்து பதறி டியூடி டாக்டரை அழைத்து வர பறந்தோடினார்கள்.

''என்னாச்சு மேடம்'' பதட்டத்துடன் ஒலித்த பழக்கப்பட்ட குரலைக் கேட்டு திகைத்து விட்டாள்.

''அடி பலமா பட்டிருக்கும் போலிருக்கே. முதல்லே உள்ளே வாங்க. மேடம் ப்ளீஸ். ஒ. என்னோட தங்கையின் கல்யாண நாளுன்னு பார்க்கறீங்களா? காலையிலேயே என் வேலை முடிஞ்சு போச்சு. பொண்ணு மாப்பிள்ளை நாலு மணிக்கு புறப்பட்டு ஹனிமூன் போயாச்சு. எனக்கு நைட் டியூட்டி. நான் வந்துட்டேன். என்னால் ஒரு நாள் கூட இங்கே வராம இருக்க முடியாது'' உள்ளே போவதற்குள் இத்தனையும் சொன்னவனை முதல் முறையாக வியப்பால் விரிந்த விழிகளுடன் அவள் ஏறிட்டாள்.

## 5

**கா**ல்வாய் போல காயம் பிளந்துக் கிடந்தது. அதைத் தையல் போட்டு சேர்ப்பதில் ஈடுபட்டிருந்தான். ஆனாலும் வலி தெரியக் கூடாது என்று அவளிடம் பேச்சுக் கொடுத்துக் கொண்டிருந்தான்.

அவள் வழக்கமான புன்முறுவலுடன் கேட்டுக் கொண்டிருந்தாலும் மனம் புதிதாக அவனை அளவெடுக்க ஆரம்பித்தது.

இவன் இவ்வளவு அழகானவனா..? இத்தனை நாளும் ஏன் இது தெரியவில்லை. முகத்தில் ஒரு சின்ன மாசு கூட இல்லாத வழவழப்பும், பளபளப்பும் ஆணுக்கு சாத்தியமா?

சட்டென அந்தக் கன்னத்தைக் கிள்ள வேண்டும் போல் தோன்றியது. கிள்ளினால் அவனது முகம் எப்படி போகும் பார்க்க வேண்டும் போல குழந்தைத் தனமாகத் தோன்றியது. இதுவரையிலும் யாரையும் பார்த்துத் தோன்றாத எண்ணமாக தோன்றியதால் அவளுக்கு சிரிப்பு வந்தது.

''இத்தனை வலியிலும் சிரிக்கிறீங்களே மேடம். மத்தவங்க சொன்னது சரியாகத்தான் இருக்கு.''

என்ன என்பது போல அவனைப் பார்த்தாள். ''எஃகு மனுஷின்னு சொன்னாங்க. அதை நான் நேரில் பார்த்துக்கிட்டி ருக்கேன்'' அவன் வேலை முடிக்கும் தீரத்தில் இருந்தான்.

பெரிய டாக்டர் சொன்னார். ''நீங்க தினமும் இங்கே வர வேண்டாம் மேடம். தினமும் காலையில் வீட்டுக்கு டாக்டர் ஆர்.எம். வந்து பார்ப்பாரு'' நன்றி தெரிவித்து விடை பெற்றார்.

மறுநாள் காலையில் கண் விழித்த போதுதான் காயத்தின் வீரியம் புரிந்தது. வலியின் கடுமை தாக்கியது. கையை அசைக்க முடியாமல் தவிக்க வைத்தது. ரத்த சேதம் உடலில் கொஞ்சம் பலகீனம் காட்டியது. எழுவதற்குத் தாமதம் ஆனது. ''குட்மார்னிங் மேடம்'' என்று சொல்லியபடி உள்ளே நுழைந்த பிரபா வெள்ளி டம்ளரை நீட்டினாள். அதைப் பார்த்ததும் அவளை ஏறிட்டாள்.

''காபிக்கு பதிலா சாத்துக்குடி ஜூஸ் கொடுக்கச் சொல்லி டாக்டர் தான் சொன்னார்'' பிரபா மென்று விழுங்கினாள்.



''டாக்டர் வந்துட்டாரா என்ன? ஏன் என்னை எழுப்பலே?'' என்று கோபப்பட்டாள்.

''டாக்டர் வந்து ஒரு மணி நேரம் ஆகுது மேடம். அவர்தான் எழுப்ப வேண்டாம் என்று சொன்னார்.''

அதன் பிறகு அவசரமாகக் குளித்து கீழே வந்த போது அவன் எழுந்து நின்று வரவேற்றான்.

''குட்மார்னிங் மேடம். நர்சிங் ஹோமுக்கு போகும் முன் பார்த்திட்டுப் போகலாம் என்று வந்தேன்.''

பேசாமல் முறுவலித்தபடி கையை நீட்டினாள். அவன் டிரசிங் முடித்து ஊசி போடும் போதே பிரபாவிடம் வலது கையை ஜூசுக்காக நீட்டினாள்.

அவன் கிளம்பும் போது டிபன் சாப்பிடச் சொன்னாள். அவனோ பணிவுடன் மறுத்து விட்டான். ''நேரமாகிட்டுது. ஓபியில் கூட்டம் வந்திருக்கும். நீங்க இன்னிக்கு ஆபீஸ் போக வேண்டாம். ரெஸ்ட் எடுங்க.''

ஒரு வாரம் ஓடினது தெரியவில்லை. காலையில் டாக்டர் வரும் முன்னே தயாராகி தன்னறையில் இருப்பாள். பைக் சத்தம் கேட்டதும் கீழே இறங்கி வருவாள். அவன் எதையாவது பேசியபடி தன் வேலையில் கவனமாக இருப்பான். அவள் மனமோ அவனை குழந்தை போல முகத்தைக் கையில் ஏந்தி பார்த்துக் கொண்டேயிருக்க நினைக்கும். காது மடல் சிவக்க அவன் சிரிக்கையில் மூக்கைப் பிடித்துத் திருகி அவனைக் கத்த வைக்கத் தோன்றும். இத்தனையையும் மனதில் நினைத்து ரசிப்பாளே தவிர முகத்தில் எதையும் காட்டி விடாத எச்சரிக்கை இருக்கும்.

தையல் பிரிக்கப்பட்டது. காயம் முக்கால்வாசி ஆறி விட்டிருந்தது. இனியும் அவன் வரத் தேவையில்லை. அவளே மருந்திட்டுக் கொண்டால் போதும். இதை அவன் சொன்ன போது அவள் சட்டென நிமிர்ந்தாள். ஒரு சோக மேகம் அவள் விழிகளில் இறங்கியது. அதை அவனறியாமல் சமாளித்துக் கொண்டு தலையசைத்து விடை கொடுத்து அனுப்பினாள்.

ஒரு மாதம் சென்றிருக்கும். ஏனோ டாக்டரின் நினைவு தொடர்ந்து கொண்டேயிருந்தது. கண்ணியத்தோடு கூடிய மென்மையான குறும்பு பேச்சும், மனதை அள்ளும் அழகுமாக அவன் வந்துப் பழகியது கனவாய் போய் விட்டது. மனதுள் விரக்தியும், ஆயாசமுமாய் வந்தது. வீட்டிற்குப் புறப்பட்டாள். காரில் போகும்போது கூட ஏனோ மனமும், பார்வையும் எதிலும் ஒட்டாமல் வெட்டுக் கிளியாய் தாவித் தவித்தது. தற்செயலாக பஸ் ஸ்டாப்பை பார்த்தவள், காரை நிறுத்தச் சொல்லி இறங்கினாள்.

''ஹலோ மேடம் இங்கே எப்படி? காயம் முழுசும் ஆறி விட்டதா?'' அமிர்த தாரையாய் காதுகளில் ஓடிய அந்தக் குரலைக் கேட்டதும் தவித்துப் போன மனதைக் கட்டுப் படுத்திக் கொண்டு, ''ஹலோ டாக்டர், நீங்களும் நிக்கிறீங்களா? நான் அம்மாவை மட்டும்தான் பார்த்தேன். வாங்க வீட்டில் டிராப் பண்ணிடறேன்'' என்றாள்.

''எதுக்கு மேடம் தொல்லை'' என்ற அவனின் மறுப்பை காதில் வாங்காதவளாய் அம்மாவின் கையைப் பிடித்து காருக்கு அழைத்து வந்தாள். காரில் போகும் போது வசந்தம் வீசுவது போல் மனது குதூகலம் பொங்கி வழிய குதியாட்டம் போட்டது.



அவன் வழி சொல்லி வீடு வந்ததையும் கவனிக்கவில்லை. வாசலோடு போகிறேன் என்றவளை வீட்டிற்குள் அழைத்துச் சென்றார்கள். ''எதுவும் வேண்டாம்'' என்றவளை உட்கார வைத்து விட்டு அம்மா பரபரப்புடன் உள்ளே ஓடினாள்.

வீட்டிலிருந்த சோபாவில் தூசி தட்டி அவளை உட்கார வைத்து பேனை போட்டு, ''இதுதான் மேடம் எங்க சின்ன குடிசை. எப்படி இருக்கு? உங்க வீட்டு மாட்டுத் தொட்டில் மாதிரியாவது இருக்கா?'' என்றான். அவள் சிரித்தாள்.

''டூ யூ நோ ஒன்திங்.. ஒரு காலத்தில் நான் அடுத்த வேளை சாப்பாட்டுக்கே கஷ்டப்பட்டவ. எங்க அம்மா 'போன்' கேன்ஸர் வந்து சரியான மருத்துவ வசதி செய்ய முடியாம செத்துப் போனாங்க. எங்க அப்பாவுக்கு வந்த அதிர்ஷ்டம் 10 வருஷத்துக்கு முந்தினதுதான்.''

''அப்படியா?'' அவன் வியந்தான். ''ம்.. இதெல்லாம் நிறைய பேருக்குத் தெரியாது. தெரிஞ்சவங்களும் சொல்றதில்லே. எனக்கும் யாருக்கும் சொல்றதுக்கு நேரமில்லை. நான் மாடி வீட்டிலே இருந்தாலும் என் மனம் பழைய ஏழ்மையை மறக்கறதில்லே. யாருமில்லாத நான் ஒரு மாடி வீட்டு ஏழை..''

அவன் பதில் பேசுமுன்னே அம்மா கையில் தட்டுகளுடன் வந்து விட்டாள். தட்டில் முந்திரியும் நெய்யும் மினுங்க ரவா கேசரியும், ரிப்பன் பகோடாவும் இருந்தன.

''என்னால உங்களுக்கு தொல்லை. ஆனா நான் ஸ்வீட் சாப்பிடறதில்லை. இது போதும், காபி வேணும்'' பகோடாவை எடுத்து வாயிலிட்டுக் கொண்டாள்.

''எங்க வீட்டுக் கல்யாணத்துக்கு நீங்க வந்ததே பெரிசு. நீங்க கொடுத்த நெக்லஸ் எவ்வளவு விலை உயர்ந்தது. உங்க அன்புக்கு என்ன தர்றதுன்னு புரியலே'' அம்மா புலம்பி விட்டாள்.

''என்கிட்டே எப்பவும் இந்த பிரியம் காட்டினீங்கன்னா போதும் வர்றேன்.''

கார் வரை வந்து வழியனுப்பியவன், ''வீட்டிற்கு வந்து எங்களை ரொம்ப பெருமைப்படுத்திட்டீங்க. ரொம்ப தேங்க்ஸ் மேடம்..'' என்றபோது அவனுடைய அழகு முகத்தை ஒரு நிமிஷம் உற்று நோக்கினாள்.

'மனசுக்கு ரொம்ப நெருங்கினவங்களுக்கு தேங்க்ஸ் சொல்லக் கூடாது அசடு' என்று சொல்லி அவன் காதைப் பிடித்துத் திருக வேண்டும் என்று தோன்றியது. புன்முறுவலுடன் விடை பெற்றுக் கொண்டாள்.

## 6

படுக்கையில் சாய்ந்துக் கொண்டபோது அவனைப் பற்றிய நினைவு வந்தது. எத்தனை அழகான அளவான குடும்பம். வசதிகள் அதிகம் இல்லாத நிலையிலும் நிறைவு காணும் எளிமை. அம்மா என்று ஒருத்தி வீட்டிலிருப்பது எத்தனை சுகம். ''இன்னும் அப்பாவைக் காணோமே'' என்று காத்திருப்பது எத்தனை பெரிய விஷயம்.

அப்பா இருந்தவரை அம்மாவின் இழப்பு ரொம்ப மனதைப் பாதித்ததில்லை. அப்பா.. என்னுடைய அப்பா யாருக்குக் கிடைக்கும் இப்படி ஒரு அப்பா.. அடுத்த ஜென்மம் என்று ஒன்று இருந்தாலும் இந்த அப்பாவுக்கே மகளாகப் பெறக்கிற பாக்கியம் செய்வேனா... கண்களில் நீர் பெருகியது. அப்பாவின் புகைப்படத்தருகே சென்றாள். சந்தன மாலையிலிருந்து வந்த மணம் மனதை இதமாகத் தழுவியது.



''அப்பா என் மனம் ஒரு தோழமைக்காக ஏங்குது. மன வேதனைகளைச் சொல்லி மடியில் படுத்து அழ ஒரு துணை வேணும். சோதனைகளில் தோளில் சாச்சுகிட்டு நானிருக்கேன்னு சொல்றதுக்கு ஒரு நட்பு வேணும். பணம், காசுக்கு மட்டும் எங்கிட்ட பழகத் துடிக்கிறவங்க மத்தியில ஒரு நல்ல உள்ளத்தைப் பார்த்துவிட்டது புரியுது. டாக்டர் என்னைப் பத்தி என்ன நினைக்கிறாரோ தெரியலியே... மனதில் இருப்பதை எப்படி சொல்வது? என்னவென்று சொல்வது?'' புலம்பிய மனதை அறிவு கண்டித்தது.

''துள்ளித் திரியும் முயல் போல இருக்கும் அவனை உன்னோடு இணைத்து அவனையும் பலி கொடுக்கத் துணிந்து விட்டாயா? நீதான் துரதிருஷ்டம் பிடிச்சவளாச்சே... பாவம் அவன். வேண்டாம் அவனாவது நன்றாக இருக்கட்டும்.''

மீண்டும் படுக்கையில் படுத்தாள். ஊரே உறங்கும் பொழுதில் தான் மட்டும் உறக்கம் பிடிக்காமல் இப்படித் தவிப்பது எந்த பிறவியின் பாவமோ.. ஊரையெல்லாம் தாலாட்டி தூங்க வைத்த உறக்கம் கடைசியாக அவளிடம் வந்தது.

காலையில் புதிய தொழிற்சாலை தொடங்குவது பற்றி விருந்தினர்கள் வந்தனர். அவர்கள் விரும்பியதால் தோட்டத்திலே அமர்ந்து பேச்சுவார்த்தை தொடங்கப்பட்டது.

மும்பையின் வளமான உடல்களோடு அவர்கள் பேச்செல் லாம் வியாபாரம், தொழில் என்றே இருந்தது. பெரியவர் மன்மோகன் அவளுடைய புத்திசாலித்தனத்தையும், நிர்வாகத் திறமையையும் கேள்விப்பட்டிருந்தார். அவளை நேரில் பார்க்கும்போது இன்னும் அவளது திறமையைக் கண்டார். அவளோடு தொழில் தொடங்க மிகவும் ஆர்வமாக இருந்தார்.

பேச்சுவார்த்தை உச்ச கட்டத்தை எட்டிக் கொண்டிருக்கும் போது கேட்டில் பைக் சத்தம் கேட்டது. டாக்டர்தான். அவள் பரபரப்புடன் பார்க்கையில் கேசவ்சிங் அவனிடம் முக்கியமான பேச்சுவார்த்தை என்று கூறுவது முக பாவத்தில் புரிந்தது. அவன் தலையசைத்தபடி பின்வாங்கி கிளம்புவது தெரிந்தது. பைக் ஒலியால் பெரியவரின் மகன் அஜய் வாயிற் புறத்தைப் பார்த்தான். திரும்பியவன் தற்செயலாக அவன் முகத்தைப் பார்க்க நேர்ந்தது.

கேசவ்சிங் மீது அவளுக்குண்டான அதிருப்தி, அவன் தன்னுடைய வேலையைத்தானே செய்தான் என்ற நினைவு மாற்றியது. விழி இமைக்கும் பொழுதில் நடந்த மனப்போர் முடிந்து கவனத்தை அவர்கள் கொண்டு வந்த அக்ரி மெண்டுக்கு திருப்பினாள். உடனிருந்த அவளுடைய வழக்கறிஞர் அதிலிருந்த சில ஷரத்துக்களை மாற்றி, சில திருத்தங்கள் செய்தார். இரு தரப்பினரும் கையெழுத்துப் போட்டு கை குலுக்கி குளிர்பானம் குடித்தார்கள். காலை டிபனுக்காக அவர்களை உட்கார வைத்து உபசரித்து விட்டு மன்னிப்பு கேட்டபடி தன்னறைக்கு ஓடினாள். உடனடியாக நர்சிங் ஹோமிற்குப் போன் செய்தாள். யார் என்றதற்கு என்ன பதில் சொல்வது என்று விழித்து யார் வேண்டும் என்று கேட்டதற்கு டாக்டர் ஆர்.எம். வேண்டும் என்று சொன்னபோது



அதே பெயரில் இரண்டு பேர் இருப்பதாகவும் இருவரும் ஓ.பி.யில் இருப்பதாகவும் யாரைக் கூப்பிடுவது என்ற வினா எழுப்பப்பட்டபோது விழித்தாள். போனை வைத்து விட்டு ஓட்டமும் நடையுமாக டைனிங் டேபிளுக்கு வந்து சேர்ந்துக் கொண்டாள்.

தொழிற்சாலையைச் சுற்றிப் பார்க்க மன்மோகன் விரும்பியதால் அழைத்துச் சென்றாள். அன்றிரவு அவர் களோடு அவளையும் மன்மோகன் மும்பைக்கு வரும்படி கேட்டுக் கொண்டார். இன்ஜினியர்களைப் பார்த்து பிளான் பற்றி பேசவும், மிஷின்களைப் பற்றி பேசவும் இந்தப் பயணத்தில் அவளும் இருக்க நேர்ந்து விட்டது. போன இடத்தில் ஒரு வாரமும் அலைச்சலும், வேலையுமாக பறந்து விட்டது. அவ்வப்போது 'எதற்காக வந்திருப்பான்' என்று நினைவு வரும். அதற்குள் வேறு வேலைகள் அவளை அமுத்தி விடும்.

கடைகளுக்கு செல்ல வேண்டுமென்று அஜயும் அவள் தங்கை வினுவும் கிளம்பியபோது அவளும் உடன் சென்றாள்.

அஜய் சட்டைகள் வாங்கும்போது அவளுக்கும் சட்டை வாங்க வேண்டும் என்றபோது முகம் சிவந்து அவள் தவித்த தைப் பார்த்த அஜய், தலையசைத்தான். நூற்றுக்கணக்கான சட்டைகளில் எதை எடுப்பது என்று புரியாமல் பத்து நிமிடம் அவள் தவித்ததை ரசனையோடு பார்த்து விட்டு உதவி செய்ய முன்வந்தான்.

''என்னுடைய உடலமைப்பு இருக்குமா?'' என்று கேட்ட போது அவள் ஆமென்று தயக்கத்துடன் தலையசைத்தாள்.

''நல்ல சிவந்த நிறமென்றால் இந்த இளமஞ்சள் கோடு போட்டது சூப்பரா இருக்கும். பேண்ட் இதுக்கு கறுப்பு சூட்டா

இருக்கும். அதனால பிட்டா எடுத்துக்குவோம்'' பார்சலை வாங்கி அவளிடம் கொடுத்துவிட்டு ''பைக்கிலே வருவாரோ'' என்று கேட்டான்.

அவள் சட்டென நிமிர்ந்தாள். ''நான்தான் பார்த்தேனே நீங்க பட்ட அவதியை'' அவன் செய்த கிண்டல் ஏனோ உல்லாசத்தில் மனதை தவிக்க வைத்தது. ஆனாலும்,

''நோ.. நோ.. நீங்க சொல்ற மாதிரியெல்லாம் இல்லேங்க. எனக்கு நல்ல பிரண்டு அவர். புரிஞ்சுக்குங்க'' அஜய் புன்முறுவலுடன் தலையசைத்தான்.

மறுநாள் அவள் விடை பெற்று விமானம் ஏறினாள். விமானம் கிளம்பியதுமே மனம் துள்ளிற்று. சீக்கிரம் சென்னை வந்து விடாதா? என தவித்தது. அவனுக்கு எப்படி இந்த துணிகளைக் கொடுப்பது என்ற யோசனை வந்து தாக்கிற்று. முதன் முதலில் துணி கடைக்குச் சென்று துணி வாங்கியது அவனுக்குத்தான். கொடுத்தால் வாங்கிக் கொள்வானா என்ற தயக்கமும், வேண்டாம் என்றால் என்ன செய்வது என்ற பயமுமாக பயணம் முடிவடைந்து சென்னை கீழே தெரிந்தது.

## 7

ஒரு வாரம் ஊரில் இல்லாததால் ஏற்பட்ட வேலைச் சுமையில் நான்கு நாட்கள் சென்று தான் அந்த துணிகளின் நினைவே வந்தது. ஏதோ ஒரு வேகத்தில் வாங்கி விட்டாளே தவிர அவனிடம் அவற்றைத் தரும் தைரியம் மனதில் வரவில்லை. இந்த அன்பும் பாசமும் நம்மோடு இருந்து அழிந்து போகட்டும். வீணாக அவனை இதில் சிக்க வைக்க வேண்டாம் என்று தோன்றி விட்டதால் அந்தத் துணிகளை அலமாரியின் அடித்தட்டில் வைத்து மூடினாள். அவனைப் பற்றின நினைவுகளை கொஞ்சம் கொஞ்சமாக மறக்க முயற்சி செய்தாள்.



அவன் மீது ஏற்பட்ட நட்பு பாசமாக, காதலாக கனிந்து வரும் நாட்கள் நெருங்கி விட்டது புரிந்தது. இன்னும் ஒரு முறை அருகில் பார்த்துப் பேசினால் எப்படியும் தான் வெளிப்பட்டு விடுவது நிச்சயம் என்பது புரிந்தபோது தவிப்பாக இருந்தது. அதற்கு இடம் கொடுத்து விடக் கூடாது என்று உறுதி செய்து கொண்டாள். ஒரு நிமிடம் செய்து கொள்ளும் உறுதி மறு நிமிடம் மாறிவிடும். அவனை மனதிலிருந்து எடுக்கவோ, அவன் நினைவைத் தடுக்கவோ முடியவில்லையே.. துன்பத்துடன் கண்களை மூடிக் கொண்டாள்.

தோட்டத்தில் செம்மண் வண்ண ரோஜா செடியின் அருகில் சென்று அந்த புதுமைக் கலப்பான மலரின் வண்ணத்தில் மனம் மயங்கிக் கொண்டிருந்தாள். மெதுவாகத் தொட்டுத் தடவினாள். ஏனோ அவன் நினைவு வந்தது. அவன் கன்னமும் உதடுகளும் இப்படித்தான் வழவழப்பாக மென்மை யாக இருக்கும் என்று மனம் சொன்னது. கண்கள் கலங்கின.

''பிறந்த நாள் வாழ்த்துக்கள்'' என்ற குரல் கேட்டு திரும்பினாள். அந்தக் குரல் பாலமுதாய் நெஞ்சை நனைத்து உயிரில் இறங்கியது. கையில் பூங்கொத்துடன் அவன்தான். முழுதாக இரண்டு மாதங்கள் சென்று பார்க்கும் போது மனமெல்லாம் தவித்தது. தாவிச் சென்று அவனைக் கட்டிப் பிடித்து அவன் தோளில் சாய்ந்து கொண்டு அழ வேண்டும் என்று தோன்றியது.

அவளுக்கே மறந்து போன பிறந்த நாள் அவனுக்கு எப்படித் தெரியும். வியப்பாக இருந்தது. கூடை நாற்காலியைக் காட்டி

விட்டு உட்கார்ந்தாள். அவன் வைத்த விழி வீழ்த்தாமல் பார்த்துக் கொண்டே இருந்தான். அவளோ நேராகப் பார்க் காமல் அவனுடைய கால் விரல் நகப்பூக்களை விழிகளால் முத்தமிட்டுக் கொண்டிருந்தாள். அவன் மெதுவாக செருமினான். விழிகளை உயர்த்தினாள்.

அவனுடைய தேன் நிற விழிகளில் அவளுடைய உருவம் பட்டுத் துணியில் பொதிந்த ரோஜா போல் அலுங்காமல் பதிந்து சிரித்தது தெரிந்தது.

அவன் பார்வையில் பிரிவின் தாபம் தகித்தது. எதையோ சொல்ல வருகிறான், சொல்ல முடியாமல் தவிக்கிறான் என்பது புரிந்தது. உடலில் ஏற்பட்ட சிறு நடுக்கம். அதை மறைக்கும் லாவகம்.

''சிளம்பறேன் மேடம்'' என்றவனைத் தடுத்து ''காபி'' என்றாள். அவன் பேசுவான் என்று அவளும், பிறந்த நாள் எப்படித் தெரியும் என்று அவள் கேட்பாள் என்று அவனும் காத்திருந்தார்கள். காபி வரவும் குடித்துவிட்டு விடை பெற்றான். அவன் கிளம்பவும் வீட்டிற்குள் நுழைய படிக்கட்டில் ஏறியவள் திரும்பிப் பார்த்த அதே நேரத்தில் அவனும் பைக்கிலிருந்து திரும்பிப் பார்த்தான். பார்வைகள் தாபத்தோடு தழுவி அவரவரிடம் மீண்டன. அவளது நடுக்கம் கையில் பிடித்திருந்த பூங்கொத்தின் மெல்லிய அலையலில் தெரிந்தது. பொன்னிற முகம் ரத்தமாய் சிவந்து சிலிர்க்க அவன் பைக்கைப் பாய விட்டான்.

அப்பாவின் புன்னகைக்கு எதிரே வைக்கப்பட்டிருந்த பூங்கொத்து தன்னுடைய இனிமையை காற்றில் பரப்பிக் கொண்டிருந்தது. முதன் முதலாக அவனுடைய காதல் ஜொலித்த விழிகள் அவளை தாபத்துடன் பார்ப்பது போல தெரிந்தது. அவனுக்குள்ளும் பருவம் தன் வித்தையைக் காட்டி விட்டது புரிந்தது. அவன் மீது நாளாவட்டத்தில் ஏற்பட்ட இந்தப் பிரியமும், காதலும் அவனுக்கு எப்படி எப்போது ஏற்பட்டிருக்கும். வியப்பாக இருந்தது. காதல் ஏற்பட்ட நேரமோ காலமோ கூட உண்டா அல்லது சொல்லிக் கொண்டா காதல் வருகிறது. தன்னைப் போலவே அவனும் வெளியில் சொல்லிக் கொள்ள முடியாத தவிப்பிலும், இம்சையிலும் தவிக்கிறானோ என்னவோ.. பெருமூச்சொன்று எழுந்தது.



அதன் பிறகு தொழிற்சாலையிலிருந்து வீடு திரும்பும் போது ரோட்டில் ஓரத்தில் அவன் பைக்கில் உட்கார்ந்திருப்பது பல நேரங்களில் கண்ணில் படும். இரவு நேரங்களில் ஊரின் ஒதுக்குப்புறத்தில் அவனுக்கு எந்த வேலையும் இருக்க வாய்ப்பில்லை. ஆனாலும் அங்கே அவன் காத்திருப்பது மனதுள் சிலிர்ப்பைத் தரும். அவனருகில் காரை நிறுத்தலாமா வேண்டாமா என்று தவிக்கும்போதே அவன் வேகமாக கிளம்பி விடுவான்.

மனதில் அன்பை வைத்துக் கொண்டு வெளியிட முடியா தது பெரும் இம்சை. வீட்டிற்குள் நுழைந்தவளை மேனேஜரும், பிரபாவும் கலங்கிய விழிகளுடன் வரவேற்றார்கள். என்ன என்று அவர்கள் முகத்தைப் பார்த்தபோது. ''அத்தையம்மா தந்தியடிச்சிருக்காங்க மேடம்'' என்று பதில் வந்தது.

## 8

"ஏதோ அவர் இருந்தார். பார்த்துக்கிட்டார். இப்ப அவர் மலை போல சாஞ்சுட்டார்.. நண்டும், சிண்டுமான இந்த பத்துப் பிள்ளை களையும் வைச்சுக்கிட்டு நான் என்ன செய்யறது? இந்த ஊரிலே இனிமேலும் தனியா இருக்க எனக்கு பயமா இருக்கு? உன் கூடவே வந்து நம்ம வீட்ல இருந்திடறேன்'' அத்தை பிலாக்கணம் வைத்தாள். உடனிருந்த குழந்தைகள் எதற்காக அழுகிறோம் என்று புரியாமல் அழுதார்கள். அவளுக்குத் தலையில் அடித்துக் கொள்ள வேண்டும் போல் இருந்தது.

''இதோ பாருங்க அத்தை. நீங்க இங்கேயே இருங்க. மாசமானா வீட்டுச் செலவுக்குப் பணமும், மளிகையும் வந்திடும். நீங்க அங்கே வர வேணாம். நான் கிளம்பறேன். மேனேஜரும், பிரபாவும் கூட இருந்து ஆக வேண்டியதைப் பார்ப்பாங்க. நீங்க கவலையில்லாம இருங்க. சேகர் நாம் கிளம்பலாம்.''

அடுக்கடுக்காய் உத்தரவுகளைப் போட்டுவிட்டுக் கிளம்பும் அவளை அக்கம்பக்கத்தார் திறந்த வாய் மூடாமல் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

தொழிற்சாலையின் திறப்பு நாள் நெருங்கி விட்டதால்தான் அத்தனை வேகமாக மேடம் சென்று விட்டார்கள் என்று சொன்னால் கூட இவர்களுக்குப் புரியுமா என்று பிரபா யோசித்தாள். அத்தையோடு பேச முயற்சித்த போதெல்லாம் அவள் முறுக்கிக் கொண்டாள்.

''எப்படியாவது பங்களாவுக்கு போய் விடலாம் என்ற தன் ஆசை, நிராசையாகிப் போன எரிச்சல் அவளுக்கு. ஒரு



வழியாக காரியம் முடிந்ததும் பிரபாவும் மானேஜரும் விட்டால் போதும் என்று வந்து சேர்ந்தனர். காரியத்துக்குக் கூட அவள் போக முடியாமல் வேலை அவளை கட்டிப் போட்டுவிட்டது.

தொழிற்சாலையின் திறப்புக்கு இன்னும் ஒரு வாரம்தான் இருந்தது. மும்பைக்கும், டெல்லிக்கும் பறந்தபடி இருந்தாள். கவர்னர் தலைமையில் மத்திய அரசின் தொழில் துறை அமைச்சர் தொழிற்சாலையை திறந்து வைப்பதை அழைப்புகள் இந்தியா முழுவதும் பறைசாற்றின.

முக்கியமானவர்களுக்கு நேரடியாகப் பத்திரிகைக் கொடுக்கும் வேலையில் அவள் மும்முரமாக இருந்தாள்.

மருத்துவமனையின் பெரிய டாக்டரின் பெயரைப் போட்டு கத்தையாகப் பத்திரிகைகளை அவரிடம் ஒப்படைத்துவிட்டு கிளம்பினாள். மாலை நேர ஆரவாரத்துடன் மருத்துவமனை சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தது. இந்த நேரத்தில் அவனைப் பார்த்துவிட்டால் கவனம் சிதறிப் போகுமென்ற பயத்தில் மடமடவென படிக்கெட்டில் இறங்கியவள் கீழ்ப்படிக் கட்டில் நின்று அவளை எதிர் கொண்டவனைப் பார்த்து தவித்துப் போனாள்.

அவன்தானா இது, முகம் வாடி உடல் இளைத்துப் போயிருந்தது. நேரில் பார்த்து எத்தனை நாளாகி விட்டது. எவ்வளவுக்கு எவ்வளவு அவன் நட்பும், அன்பும், பிரியமும் மனதுக்கு தேவையாக இருந்ததோ அறிவுக்கு அவை பயத்தை கொடுத்தது. மனம் விட்டுப் பேசத் துடித்தது. உயிர், ஆனாலும் அவனைத் தன்னோடு இணைக்கப் பயப்படும் முன் அனுபவம் வேண்டாம். தன் அன்பால் அவனை இழக்க அவளால் முடியவில்லை.

கண்களில் எதையோ யாசிக்கும் அவனை மீறிக் கொண்டு செல்வதும் முடியாத காரியமாகிவிட்டது. ''ஹலோ மேடம்..'' அவனே பேசினான். அவள் தனக்குள் ஏற்பட்ட உணர்வு பிரளயத்தைக் காட்டிக் கொள்ளாமல், ''ஹலோ டாக்டர், பேக்ட்ரி திறப்பு விழாவுக்கு பெரிய டாக்டர் கிட்ட பத்திரிகை கொடுத்திருக்கேன். நீங்க அவசியம் கலந்துக்கணும். ரொம்ப.. பிஸி.. வரட்டுமா?'' என்றபடி வேகமாக ஓடி விட்டாள்.

தன்னை விட்டு ஓடுவதில் அவள் குறியாக இருக்கிறாள் என்பது புரிந்ததும் அவன் தவித்துப் போனான். அவளிடம் பேச வேண்டும் என்று உயிரில் தளும்பிக் கொண்டிருந்த அவா விஸ்வரூபம் எடுத்து இம்சை கொடுத்தது. கண்கள் கலங்கி விட்டன.

அவனுடன் பணிபுரியும் டாக்டர் மனோகர் அவனை முதுகில் தட்டியதும் சுயநினைவுக்கு வந்தான். ''சொல்றேன்னு தப்பா நெனைச்சுக்காதே... நீ போன நாலு மாசமாவே ஆள் சரியில்லை. ஏதாவது காதல்.. ஊதல்னு மாட்டிக்கிட்டியா, வேணாம் ராஜா, நம்மைப் போல இருக்கவங்க லைப்பை என்ஜாய் மட்டும்தான் பண்ணனுமே தவிர நிரந்தரமா சிக்கிடக் கூடாது. பொண்ணுங்க சகவாசம் சனியன் பிடிச்சதுக்கு சமானம்... வரட்டுமா இன்னிக்கு என் கேர்ள் பிரண்டோட, சினிமாவுக்குப் போகப் போறேன்.. பை.. பை..''

வீட்டிற்குப் போகும்போது அவள் வீட்டு வழியாகப் போக வேண்டும் போல் தோன்றியது. அவளது கண்டாஸாவைக் காணாததால் இன்னும் வீடு திரும்பவில்லை என்று புரிந்தது. வீட்டிற்கு வந்து சாப்பிடப் பிடிக்காமல் இரவின் இருட்டு வானத்தைப் பார்த்துக் கொண்டே உட்கார்ந்திருந்தான்.



தொழிற்சாலை திறப்பு விழா மேடையில் கவர்னர் முதல் மத்திய அமைச்சர் தொடங்கி அத்தனை பேரும் அவளுக்குப் பாராட்டுகளாகக் குவித்தார்கள். பாராட்டு மழையில் நனைந்து கொண்டிருந்தாலும் முகத்தில் எந்த விதமான உணர்வையும் காட்டாது அவள் அங்கும், இங்கும் அலைந்துக் கொண்டிருந்தாள். மன்மோகன் அவளை புகழ்ந்து தள்ளிவிட்டார். அஜய் வியந்ததை வாயில் வார்த்தைகளாகச் சொல்லவும் முடியாமல் திகைத்து விட்டான். எப்படிப்பட்ட பெண்! நிர்வாகத் திறமையை வியப்பதா, செய்யும் வேலையில் கொண்ட விவேகத்தை போற்றுவதா? அவனுக்கு டாக்டர் ஆர்எம் மீது பொறாமையே வந்து விட்டது.

மன்மோகன் குடும்பத்தாரை ஓட்டலுக்கு அனுப்பி வைத்துவிட்டு அவள் களைப்புடன் நாற்காலி ஒன்றில் அமர்ந்தபோது அவள் எதிரில் சூடாகப் பால் நிறைந்த டம்ளர் நீட்டப்பட்டது அந்தக் கரத்துக்கு உரியவன் யாரென்று நிமிர்ந்து பார்த்தாள். ''ம்...'' பாலைக் குடிக்கச் சொல்லி அவன் தலையசைத்தபோது, புன்முறுவலுடன் பாலைக் குடித்தாள். அன்பைத் தேக்கின தேன் நிற விழிகளிடம் தான் தோற்றுப் போய் விட்டதை அவள் புரிந்து கொண்டாள் என்று தெரிந்து விட்டது. யார் பேசினாலும் அடுத்தவர் தன்னிலையை இழக்கப் போவது நிச்சயம் என்ற நிலை உருவாகி விட்டது தெரிந்தது.

அதற்குள், ''மேடம்'' சேகர் வேகமாக வந்து அவளை அங்கிருந்து அழைத்துச் சென்று விட்டான். போகும்போது அவளது விழிகள் அவனிடம் மன்னிப்புக் கேட்டன. அவன் தலையசைத்து அனுப்பி விட்டு அங்கேயே உட்கார்ந்து விட்டான். விழாவின் ஆரவாரம் குறைந்து, மறைந்து

விட்டிருந்தது. அந்த பிரம்மாண்டமான பந்தல் மனிதர்கள் இல்லாமல் நாற்காலிகளோடு தங்க ஆரம்பித்திருந்தது.

அவள் மீது தனக்குள் எப்போது இப்படி ஒரு பாசம் ஏற்பட்டது. அந்தக் குளிரில் அவன் சிந்திக்கலானான். அதைக் காதல் என்று சொல்லவும் அவன் வெட்கப்படவில்லை. வரவேண்டிய வயதில் வரும் தூய்மையான பிரியம்தானே, இது எப்படித் தவறாகும்?

அது எப்படி வளர்ந்தது? அவள் மீது மதிப்பு, மரியாதை, வியப்பு என்று ஏற்பட்டதில் தொடங்கியது. தன்னுடைய பழைய நிலையைப் பற்றி வெளிப்படையாக அவள் பேசிய அன்று அவன் வியந்தான். தாயும், தந்தையும் இல்லாமல், உடன் பிறந்தவர்களும் இல்லாமல் தனி ஒருவளாக இந்த பரந்த உலகத்தில் சவால்களை ஏற்கிறாள், பாசத்திற்கு அவள் மனம் எப்படி ஏங்கும். தனிமை மிகக் கொடியது அல்லவா. இதுதானா அவளது கண்களில் நிரந்தரமாகத் தெரியும் சோகத்தின் கதை... அவளை அன்போடு அணைத்து அந்த இமைகளில் முத்தமிட்டு நானிருக்கிறேன் உனக்கு என்று சொல்ல வேண்டும் போல் மனது தவித்தது. நாளாக நாளாக இந்த எண்ணம் விஸ்வரூபம் எடுத்தது. உயிரைத் தவிக்க வைத்தது.

அவளது விழிகளில் ஒளிரும் காதலை மறைக்க முயன்றும் தோற்று விடுகிறாள் என்பது புரிகிறது. இனியும் தள்ளிப் போடக் கூடாது. பொங்கும் தன் மனதை அவளிடம் சமர்ப்பித்து விட வேண்டியதுதான். அவள் சொல்லா விட்டாலும் முதலில் நாம் சொல்லி விட்டால் போகிறது. இதில் என்ன கவுரவம். இந்த முடிவு மனதிலிருந்த பெரிய பாரத்தை



இறக்கியது போன்ற உணர்வைத் தந்தது. நிம்மதியாக வீட்டிற்குப் புறப்பட்டான்.

## 9

நள்ளிரவு தாண்டின நேரத்தில் வீட்டில் இறங்கியபோது பிரபாவும், வள்ளியும் கையில் ஆரத்தித் தட்டோடு நின்றிருந்தார்கள். ஆரத்தி சுற்றி பொட்டு வைத்த போது அவளுக்கு சிரிப்பு வந்தது. வள்ளி சொன்னாள். ''எம்மாம் பேரு கண்ணு உங்க மேல பட்டிருக்கு. கல்லடி பட்டாலும் கண்ணடி படக் கூடாதும்மா...''

தன்னோடு இரவென்றும், பகலென்றும் பாராமல் அலைந்த சேகருக்கு தனியாக நன்றி சொல்லி அவனை அனுப்பி விட்டு அலுப்பாக உட்கார்ந்தாள். அப்போதுதான் தூக்கம் கலைந்து வந்த அத்தை, ''ஏண்டி உலகத்துக்கே பத்திரிகை கொடுத்து விழா பண்றே. உங்கப்பாக் கூட பொறந்தவ நான். எனக்கு சொல்லத் தோணலே. பேப்பரில் பார்த்துட்டு வரேன். உனக்கே இது நல்லா இருக்கா'' என்று பொரிந்து தள்ளினாள். இதுவரை இருந்த பொறுமை எப்படித்தான் போயிற்றோ தெரியவில்லை.

அலுத்துக் களைத்தவளை அன்பாய் ஒரு வார்த்தைக் கூட கேட்கத் தோணாத அந்த வயதான ஒட்டுண்ணி உறவை உறுத்துப் பார்த்தாள். கோபம் தலைக்கேறியது.

''ஆமாம், எனக்கு கருமாதி பண்ணிக்கிட்டேன். இல்லே.. உங்களுக்கு பத்திரிகை அனுப்பலேன்னு அழுவறீங்க.. நான் ஒருத்தி இருக்கிறதுதானே உங்க கண்ணை உறுத்துது.. இதுவரையிலும் என் அப்பா கூடப் பொறந்தவங்கன்னு

பார்த்தேன். இனி முடியாது. பிரபா காலையில இந்தம்மாவை பஸ் ஏத்தி அனுப்பிட்டு காபி கொண்டுவா'' அவளது குரல் சிங்கம் போல எதிரொலித்தது. அத்தை ஏதோ பேச வாயெடுக்கும் முன் போன் கூப்பிட்டது.

பிரபா எடுத்தாள். ''ஆமாம் சார் ஜஸ்ட் இப்பத்தான் வந்தாங்க, இன்னும் தூங்கலே. மன்மோகன் சார் மேடம்'' போனுக்கு கை நீட்டினாள்.

''ஏம்மா இன்னுமா நீ தூங்கலே.. நாங்க கிளம்பறோம்னு சொல்லத்தான் போன் செய்தேன். நீ வரவேண்டாம். அடுத்த வாரம் நான் திரும்ப வரேன். அப்பப் பார்க்கலாம். நாளை யிலிருந்து பாக்டரி வேலையை ஆரம்பிச்சிடட்டும். நீ தூங்கி ரெஸ்ட் எடு.. குட்நைட்.''

மன்மோகன் சொல்லிவிட்டாலும் அவள் சட்டென எழுந்து அவர்களை வழியனுப்ப கிளம்பினாள். தானே காரை வேகமாக ஓட்டிச் சென்றவளைக் கண்டு அத்தை அலமலண்டு போனாள்.

''என்ன சொல்லிட்டன்னு இப்படி கோவிச்சுக்கிட்டா.. ஏண்டி பிரபா இப்படி சொல்லிட்டா?''

நண்டு கொழுத்தா வளையில தங்காது. அத்தையம்மா. போய் சாப்பாட்டுக்கு கஷ்டப்படுங்க. அப்பத்தான் உங்களுக்கும் மேடத்தோட அருமை தெரியும். மணி இப்பவே நாலாகிட்டுது. ஐந்து மணிக்கு உங்களை பஸ் ஏத்தலேன்னா எனக்கு சீட்டு கிழிஞ்சிடும். இனிமே தூங்க முடியாது. இன்னிக்கு சிவராத்திரிதான் போய் கிளம்பற வழியைப் பாருங்க.''



வீட்டிற்குத் திரும்பி குளித்து தயாரானவுடனே புது தொழிற்சாலையின் தொழிலாளர்கள் வரவும் சரியாக இருந்தது. மாலையணிவித்து அவர்கள் பாராட்டியதை மவுனமாக ஏற்றுக் கொண்டு எல்லோருமாக அப்பாவின் சமாதிக்கு சென்றார்கள். கனத்த நிசப்தம் நிலவ அந்த உத்தமருக்கு அஞ்சலி செய்து வணங்கினர்.

''அப்பா உங்க ஆசியினால் இந்த புது தொழிற்சாலை உருவாகி உள்ளது. இதையெல்லாம் நிர்வகிக்கும் திறமையை யும், தைரியத்தையும் நீங்கதான் எனக்குக் கொடுக்கணும்'' அவள் மவுனம் கலையும் வரை அவர்கள் காத்திருந்தார்கள்.

அதன் பிறகு பட்டாசு வெடித்து மகிழ்வோடு புது தொழிற்சாலையைத் தன் முதல் நாளைத் தொடங்கியது. தன்னறைக்குச் சென்று உட்கார்ந்ததும் போன் மணியடித்தது. ''ஹலோ'' என்று அவள் குரல் கொடுத்ததும், ''குட்மார்னிங் மேடம்.. உங்க கூட கொஞ்சம் பேசணும். எனக்காக அரை மணி நேரம் ஒதுக்க முடியுமா.. ப்ளீஸ்..''

காதலின் கனிவில் குழைந்து ரகசியம் போல் ஒலித்த அந்தக் குரல்... ஒரு கணம் தனக்குள் ஆடிப் போனாள். அந்த வினாடியே தன் மனதை அவன் காலடியில் காணிக்கையாக்கி விட வேண்டும் என்ற தவிப்பு எழுந்தது. பதில் சொல்ல தனக்கு அருகதை இல்லை என்ற எண்ணம் தோன்றியது. பதிலேதும் பேசாமல் போனைக் கீழே வைத்தாள்.

அவன் உன்னை விரும்ப வேண்டும் என்று தவித்தது உண்மைதானே என்று மனது குத்திக் காட்டியது. அது வெளிப்படும் நேரம் தவிப்பாகிறது. எப்படியும் அவன் நேரில் வருவது உறுதி. இதற்கு மேல் அவனால் தாங்க முடியாது.

நேரில் அவனைப் பார்த்து விட்டால் அவ்வளவுதான். இதை எப்படியும் தவிர்க்க வேண்டும்.

எல்லா வேலைகளும் ஓரளவுக்கு முடிந்து விட்டன. தானும் ஓய்வெடுத்து நாளாகி விட்டது. உடனடியாக ஜி.எம்.மை அழைத்து அலுவலக சம்பந்த குறிப்புகளைச் சொன்னாள். சேகரிடம் பத்து நாளைக்குரிய வேலைகளின் விவரங்கள் கூறினாள். எங்கே போயிருக்கிறாள் என்ற விவரம் யாருக்குமே சொல்லப்படக் கூடாதென்று மிகவும் கண்டித்து சொல்லி விட்டுக் கிளம்பினாள்.

வீட்டிற்கு வந்ததும் பிரபாவிடம் பத்து நிமிடத்தில் ஒரு வாரம் ஊருக்குப் போவதற்குத் தயாராகச் சொன்னாள். மேனேஜரிடம் செக் புத்தகத்தில் கையெழுத்துப் போட்டுக் கொடுத்தாள்.

அடுத்த இருபதாவது நிமிடத்தில் அவளது கண்டாஸா நகர எல்லையை விட்டு பறந்து விட்டது. பின் இருக்கையில் சாய்ந்து படுத்துக் கொண்டவள் எதற்காக இந்த தப்பித்தல் என்று தன்னையே நொந்து கொண்டாள். தன்னைக் கண்டே தான் பயப்படுவது புரிந்தது.

பயம்.. அர்த்தமற்ற பயம். யாருக்குமே பயப்படாத அப்பா கூட இந்த சமுதாயத்திற்குப் பயந்தார். ஆண் பிள்ளை போல வளர்ந்தவளாயினும் பெண் திருமணத்திற்கே ஏற்பட்டவள் என்று பிறர் சொல்லிச் சொல்லி அவரை பயம் காட்டினார்கள்.

தனது பிஸினஸ் வட்டார நண்பரின் மகனை அருமை மகளுக்கு மணமுடிக்க ஏற்பாடு செய்தார். பையன் வெளிநாட்டில் இருந்தாலும் பெற்றவர் சொல்வதை மீறாதவன். நல்ல வேலையில் கை நிறைய சம்பாதிக்கவும் செய்தான்.



தன்னருமை மகளுக்கு நிறைவானவன். திருமண ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. திருமண நாளையொட்டி ஒரு வாரம் முன்பு வருவதற்கு ஏற்பாடு செய்து கொண்டான். வரும் நாளை தந்தி மூலம் தெரிவித்திருந்தான். அவனை வரவேற்க கையில் மாலையோடு முதல் ஆளாய் அப்பா நின்று கொண்டிருந்தார். விமான நிலைய பரபரப்பில் அவள் புத்தகத்தை புரட்டியவாறு உட்கார்ந்திருந்தாள். ஆனால் அவன்தான் வரவில்லை. அவன் வந்த விமானம் இயந்திரக் கோளாறு காரணமாக வெடித்துச் சிதறி விட்ட சேதிதான் வந்தது.

யாருக்கு யார் ஆறுதல் சொல்வது என்று விளங்காத நிலையில் அப்பா தைரியமாக நின்று நண்பரை ஆசுவாசப் படுத்தி ஆக வேண்டியதைக் கவனித்தார். அவளுக்கென்று அதிக எதிர்பார்ப்பு இல்லாததால் அவள் ஒடிந்து விடவில்லை. சமாளித்துக் கொண்டு தன் வேலையில் கவனமானாள்.

அதன் பிறகு அத்தை மூலம் கல்யாணப் பேச்சு எடுக்கப் பட்டது. எப்படியும் அண்ணனை சந்தோஷப்படுத்தி நல்ல பெயர் வாங்க வேண்டுமென்ற முடிவுடன் மாப்பிள்ளை பார்த்தாள். நல்ல பையன் என்று வரிந்து கட்டிக் கொண்டு நின்றாள். நல்லவன் என்று மற்றவர்களும் சொன்னார்கள். பத்திரிகை அடித்தாயிற்று. ஊர் கூடி விட்டது. மணமேடை அலங்காரத்திற்கு என்று பெங்களூரில் இருந்து வந்தவர்கள் மாயன் உலக அழகை மண்டபத்தில் காட்டியிருந்தார்கள்.

கழுத்தில் மாலையோடு மணமேடையில் மாப்பிள்ளை உட்கார்ந்தாயிற்று. பெண் அழைத்துவரும் நேரம் வாசலில் காவல் துறை அதிகாரிகள் ஜீப்பில் வந்து இறங்கினார்கள். அவர்களோடு வந்த பெரியவர் அவனை அடையாளம் காட்டி

வங்காள மொழியில் பேசினார். ஊரே பார்க்க அவனைக் கைது செய்து அழைத்துச் செல்வதாக சொன்னபோது அப்பா தவிப்புடன் காரணம் கேட்டார்.

பல புனைப் பெயர்களில், பல வட இந்திய நகரங்களில் பல பெண்களைத் திருமணம் செய்து கொண்டு ஏமாற்றிய காதல் மன்னன். பல நாள் தப்பித்தவன் இந்த திருமணப் பத்திரிகை மூலம் மாட்டிக் கொண்டான். பத்திரிகையிலிருந்த அவன் புகைப்படத்தின் மூலம் கொல்கத்தா நகரிலிருந்தவர் அவனை அடையாளம் கண்டு கொண்டார். சட்டத்தின் துணையை நாடினார்.

மை எழுதிய கண்ணும் மலர் சூடிய குழலுமாய் அவள் பிரமை பிடித்து நிற்க, அப்பா மார்பை பிடித்துக் கொண்டு மயங்கி விழுந்தார். அத்தை ஆளே தலைமறைவாகி விட்டாள்.

இதற்குப் பிறகுதான் அப்பா அவளை தொழிற்சாலை நிர்வாகத் துறையில் ஈடுபடுத்தினார். அவளும் அதில் தீவிரமாக ஈடுபட்டு தன்னை மறந்தாள்.

மூன்று ஆண்டுகள் சென்று அம்மா வழி சொந்தத்தில் மாப்பிள்ளை ஒருவன் வந்து சேர்ந்தான். அப்பா அவனைப் பற்றி துப்பறிய ஒரு படையே வைத்திருந்தார். தானே இறங்கி விசாரித்தார். விசாரணையில் அவன் மிகவும் நல்லவன் என்று தெரிய வந்தது. வீடு கல்யாணக் களை கட்டியது. இந்த முறை எல்லாமே நல்ல முறையில் ஒத்து வந்தது.

நல்ல நேரத்தில் திருமணம் முடிந்தது. மணமக்களை மாலையில் தேன்நிலவுக்கு அனுப்பிவிட்டு கல்யாண சத்திரத்தைக் காலி செய்வதில் மும்முரமாக இறங்கினார்.



இரண்டு மணி நேரத்தில் இடியென செய்தி வந்தது. கார், லாரி ஒன்றோடு மோதி அப்பளமாக நொறுங்கிப் போனது. டிரைவரும், புது மாப்பிள்ளையும் இடத்திலேயே மாண்டு போனார்கள். அவள் சிறு காயங்களுடன் தப்பித்துக் கொண்டாள். செய்தியைக் கேட்டு நெஞ்சைப் பிடித்துக் கொண்டு விழுந்தவர் இந்த முறை எழுந்திருக்கவே இல்லை.

காலையில் மாலை சூடி மாலையில் மாண்டவனுக்காக வாழுவதா அல்லது அதிர்ச்சியினாலே மாண்டு கிடக்கும் அப்பாவுக்காக அழுவதா, அவள் அல்லாடிப் போனாள். 'எதற்கும் எப்போதும அழாதே' என்று அப்பா கூறிய வார்த்தைகளை உணர்வில் உணர்ந்தாள். சட்டென தலை நிமிர்ந்து நின்றாள். எல்லா காரியத்தையும் நல்லவர் உதவி யோடு தனியாக நின்று முடித்தாள்.

அப்பாவை ஈர மண்ணில் இறக்கி அந்த பாச முகத்தில் மண்ணை அள்ளிப் போட்டு, அதையும் கண்ணால் கண்டு கல்லாய் நின்று விட்டு வந்தவளை அத்தை போலித்தனமான அழுகையோடு வரவேற்றாள்.

பலர் காதுபட, ''சரியான துக்கிரிப் பெண்ணா இருக்கியே. கல்யாண மாலைக்கு கொடுத்து வைக்காதவளா இருக்கியே, உங்கம்மா மாதிரியே நீயும் வாழறதுக்கே லாயக்கில்லாம போயிட்டியே'' என்று குத்திக் காட்டினாள். அப்பா இருந்தவரை அதிர்ஷ்டத்தின் குழந்தை என்று போற்றப்பட்ட அவள் துக்கிரி ஆனது அன்றுதான்.

அவள் தனக்குள் சிந்திக்க ஆரம்பித்தாள். ஒருவேளை தான் மற்ற பெண்களைப் போல கொடியாய் மற்றவரை சார்ந்திருக்க பிடிக்கவில்லையோ... தனியாய் நின்று பிறர் சார்ந்திருக்கும்

வகையில் மரமாய் வாழத்தான் பிறந்திருக்கிறோம் போலிருக்கிறது. இனிமேல் யாரையும் தன் வாழ்வில் இணையாகவோ, துணையாகவோ சேர்த்துக் கொள்ள நினைப்பதில் அர்த்தமில்லை. நம் வழி தனி வழி என்று முடிவெடுத்து நடந்துக் கொண்டிருக்கிறாள். இதுவே நிம்மதியாகவும், சுகமாகவும் இருந்தது. சில மணி நேரம் தோழமைக்காக ஏக்கம் வரும். சட்டென்று அந்த எண்ணத்தை தள்ளி விட்டு மேலே சிந்திப்பதுதான் அவள் வழக்கம்.

அவனது நினைவு வரும் வரையில் மனதில் எந்தவிதமான சலனமும் இல்லை. அவனும் தன் மேல் பிரியம் வைத்து விட்டிருக்கிறான் என்று தெரிய வந்தபோது மனதில் மத்தாப்பூ பூக்கிறதென்னவோ நிஜம். ஆனால் தன்னுடைய கசப்பான முன் அனுபவம் இப்போது தடுக்கிறது. அவன் நீண்ட ஆயுளுடன் இருக்க வேண்டும். தன்னைப் பற்றி என்ன நினைப்பான். இதயமில்லாதவள் என்பானோ, போகட்டும். அது ஒன்றும் பெரிய வருத்தமில்லை. கண்களை மூடிக் கொண்டாள். காரின் ஓட்டம் மென்மையாகத் தாலாட்டியது.

## 10

மலை குளிர் தெரிய ஆரம்பித்தது. ஊட்டி நெருங்க நெருங்க எதுவோ தன்னோடு இல்லை. எதை விட்டு விட்டு வந்தோம் என்று குழம்பிப் போனாள். மிக முக்கியமான எதையோ விட்டு விட்டு வந்தது புரிந்தது. அது எது என்றுதான் புரியவில்லை. மூளியான அந்த எண்ணத்தை ஒதுக்கி விட முயன்று கொண்டே மாளிகையினுள் நுழைந்தாள்.



முன் ஹாலில் அவளும், அப்பாவும் இருக்கும் படம் மாட்டியிருந்தது. அவளுடைய இருபதாவது பிறந்த நாளில் எடுத்தது அது. அந்தப் பங்களாவை விலைக்கு வாங்கும்போது அவள் வேண்டாம் என்று தடுத்தாள். ஆனால் அப்பாதான் பிடிவாதமாக இருந்தார். தன் மகளும் மருமகனும் விடுமுறையில் வந்து தங்க வேண்டும் என்று கூறி விட்டார். ஒவ்வொரு மூலையையும் கவனித்து அலங்கரித்தார். வாங்கின வருடம் பத்து நாள் அப்பாவோடு வந்து தங்கிச் சென்றதோடு சரி. அதன்பிறகு வேலைக்காரர்களின் மேற்பார்வையில் மூடிக் கிடக்கிறது.

மாடியறையில் முதல் நாள் தூங்கி விழித்தாள். மறுநாள் பிரபாவுடன் மலைச் சரிவுகளில் காலை பனியை ரசித்தவாறு வாக்கிங் போனாள். கீழே தூரத்தில் தெரிந்த பஞ்சுப் பொதி மேகங்கள் இங்கே பக்கத்தில் வந்து தட்டித் தழுவிப் போகின்றன. இதமான இளம் குளிர். வகை வகையான மலர்கள் பச்சைப் புல்வெளி.

பிரபா எதையோ பேசிக் கொண்டே வரும் போதில் அவளுடைய கவனம் தூரத்தில் ஓட வரும் குழந்தைகளிடம் சென்றது. பூச் செண்டுக்கு கை கால் வைத்தது போல் உல்லன் ஸ்வெட்டர்களில் பொதிந்து ஓடி வரும் அழகான குழந்தைகள். குறும்பை மட்டும் பிரதிபலிக்கும் கண்கள். விஷமம் செய்யத் தவிக்கும் துறுதுறுப்பு. குழந்தைதான் எத்தனை அழகான பொருள்... தனக்குப் பின்னால் ஒரு தங்கையோ, தம்பியோ இருந்திருந்தால் எத்தனை நன்றாக இருந்திருக்கும். அதற்குக் கூட கொடுத்து வைக்கவில்லையே...

மதியம் சாப்பிட்டதாகப் பெயர் செய்து விட்டு எழுந்தாள். கையில் புத்தகத்தைப் பிரித்துக் கொண்டதும் கண்கள்,

எழுத்துக்களை விழுங்கவில்லை. மெதுவாக தத்தின. எழுந்து தோட்டத்திற்குச் சென்றாள்.

தோட்டத்தில் அசைந்தாடும் வண்ணப் பூக்கள் நடுவே ரோஜா ஒன்று அவளைப் பார்த்தது. இமைப் பொழுதில் அவன் நினைவு வந்தது. ரோஜா மலர் போன்ற உதடுகளால் அவன் பேசும்போது எத்தனை அழகாக இருக்கும். ஊரிலே எதை விட்டுவிட்டு வந்தாயிற்று என்று இப்போது புரிந்து போனது.

மனது... தன்னுடைய மனது. அதை அவனிடமே விட்டு விட்டு வந்து விட்டது புரிந்தது. அதனால்தான் சீராக சிந்திக்கவோ சிந்தனை ஒன்றி காரியம் எதிலும் லயிக்கவோ முடியவில்லை. கரகரவெனக் கண்களில் நீர் வழிந்தது.

வாய்விட்டே அழுதாள். ''அப்பா.. அப்பா எனக்கு நிம்மதி வேண்டும். இப்படி காதலில் கனிவதும் அதை வெளியிட பயந்து ஒளிவதும் என் வாழ்வில் ஏன் ஏற்பட்டது. காதல் என்பது தப்பா. அவன் நினைவு என் மனதில் வேர் பிடித்து வளர்ந்து விட்டது. பிரிந்து வந்தபோதும் கூட அது அசையாத கற்பக விருட்சமாய் நிலைத்திருக்கிறது. அவன் விழிகளை நினைத்தாலே உடல் நடுங்கி உயிர் தவிக்கிறது. இனியும் முடியாது. இந்த காதல் பாரம் தாங்காது. குழந்தை இறந்த தாயின் நெஞ்சில் கட்டிய பாலாய் இந்தக் காதல் ஒவ்வொரு அசைவிலும் என்னை வேதனைப்படுத்தியது போதும். தாங்காது. தூரத்திலிருந்தாவது ஒரே ஒரு முறை அவன் முகத்தைப் பார்த்தே ஆக வேண்டும். பேச வேண்டும். ஒரே ஒரு முறை அந்த சிரிப்பை கேட்காத தூரத்தில் நின்றாவது பார்க்க வேண்டும்.''



CPL 647582

''பிரபா'' அவளது குரல் பங்களாவையே அலற வைத்தது. மூன்று மணிக்கே மாலையின் இருட்டு படரத் தொடங்கி யிருந்தது. கண்டாஸா தயாராகி விட்டது.

காரில் ஏறுவதற்கு யத்தனித்தபோது திறந்து வைக்கப் பட்டிருந்த கேட்டில் வேகமாக நுழைந்த மோட்டார் பைக்கின் சப்தத்தால் நிமிட நேரம் தாமதித்தாள்.

பைக்கில் வேகமாக கையை ஆட்டியபடியே நெருங்கி வந்து ஹெல்மெட்டை அவிழ்த்தது. அவனா.. அவனேதான்.

கிட்டத்தட்ட முன்னூறு மைல் தூரம் பைக்கில் வந்த களைப்பிலும், அசதியிலும் முகம் கன்னித் தெரிந்தாலும் தேன் நிற விழிகள் காதலில் மின்னின. ரோஜா இதழ் விரித்து சிரித்தபடியே போட்டிருந்த கிளவுசை உருவி விட்டு கையை அவளை நோக்கி நீட்டினான்.

647582

தாமரை இதழ் போல் சிவந்து தன்னை நோக்கி நீட்டப்பட்ட அந்தக் கையை சட்டென இறுகப் பற்றிக் கொண்டாள். அவன் முகத்தில் ஜொலித்த அந்தக் காதல் அவள் முகத்திலும் பிரதிபலித்தது கண்டு அவன் மண்ணில் விண்ணின் சொர்க்கம் கண்டான்.

891.8113
MEK

ஒரு கப் சூடான காபி குடித்து ஆசுவாசப்படுத்திக் கொண்ட பின், பயண அலுப்பு தீர முதலில் குளிக்கச் சென்றான். சுடச் சுட தண்ணீர் உடம்பில் ஊற்றியதும் சுகமாக இருந்தது. குளித்து முடித்த பிறகுதான் மாற்றுடைக்கு என்ன செய்வது என்று உரைத்தது. அரை மணி நேரம் குளித்த சுகம் மறந்து போனது.

அவளைப் பார்த்தே தீர வேண்டும் என்ற வேகத்தில் நர்சிங் ஹோமிலிருந்து கிளம்பி வந்திருந்ததால் மாற்றுடையாவது

CONNEMARA PUBLIC LIBRARY

மண்ணாங்கட்டியாவது.. வெறும் டவலைக் கட்டிக் கொண்டு வெளியே வரவும் வெட்கமாக இருந்தது. அவளை எப்படிக் கூப்பிடுவது... அவளிடம் எப்படி.. என்ன சொல்வது... அட காதலே.. இப்படியெல்லாம் நீ குறும்பு பண்ணுவே.. வேறு வழி தெரியாமல் மெதுவாக குளியலறையின் கதவைத் திறந்து எட்டிப் பார்த்தான். டிரசிங் டேபிள் மீது புது லுங்கியும், காலர் வைத்த பனியனும் வைக்கப்பட்டிருந்தது. ஹாலுக்கு வரு முன்னே டைனிங் டேபிளில் சூடான உணவு காத்திருந்தது.

சாப்பிட உட்கார்ந்தான். வெள்ளித் தட்டில் சாதம் போட்டு, நெய் ஊற்றி குழம்பு ஊற்றினாள். அவன் எதுவும் சொல்லா திருப்பதைக் கண்டு நிமிர்ந்து பார்த்தாள். அவன் அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டாள். வெட்கமும் சிணுங்கலுமாய் ''சாப்பாடு தட்டில் இருக்கு'' என்றாள். அவன் சிரித்துக் கொண்டே சாதத்தைப் பிசைந்தான்.

பார்த்து பார்த்து பரிமாறினாள். அள்ளி, அள்ளி வைத்து ஆனந்தப்பட்டாள். சாப்பிடும் அழகை ஓரக் கண்ணால் பார்த்து ரசித்தாள். ''போதும்'' என்றபோது கோபித்துக் கொண்டாள்.

சுற்றும் முற்றும் யாருமே இல்லை. அவன் பரிமாறிய கையை மெதுவாகப் பிடித்தான். ஒற்றை முத்து வளையல் தவித்தது. ரத்தம் தெரியும் உள்ளங்கையில் முகம் பதித்துக் கொண்டான். அந்த அன்பில் கனிந்து போனவளாய் அவனையே பார்த்துக் கொண்டு நின்றாள். அவளது கண்களில் திரண்ட நீரில் தன்னுருவம் தத்தளித்தது தெரிந்ததும் அவன் விழிகளிலும் நீர் ஏனோ சுரம் கட்டியது.

CONNEMARA PUBLIC LIBRARY



## 11

**மா**டியறையில் கணப்பருகே எதிர் எதிராக உட்கார்ந்து கொஞ்ச நேரம் வார்த்தைகள் இல்லாத மவுனத்தில் கரைந்தது. ஒருவரை ஒருவர் பார்த்த பார்வையில் இத்தனை நாளைய பிரிவு மறைந்தது. என்ன பேசவேண்டும் என்று விரும்பினார்களோ அது அத்தனையும் பேசி தீர்ந்தது போல நிம்மதி உண்டாயிற்று. விழிகளில் மின்னின காதல் சுகமாய் உடலைத் தழுவினது. அவனுடைய விழிகளைத் தொடர்ந்து பார்க்க முடியாமல் அவள் பார்வையை நிலத்தில் வீழ்த்தினாள். பாதி இதழ் விரிந்த அவனது மென் சிரிப்பு அவளுடைய நாணத்திற்கு பரிசாய் அந்த அரையிருளில் மின்னி அவள் உயிரில் இறங்கியது.

விளக்குப் பூக்கள் ஊட்டியின் அழகை அதிகப்படுத்த ஆரம்பித்தது. வெளியில் போயிட்டு வருவதாக அவன் கிளம்பியபோது ஸ்வெட்டர் ஒன்றை நீட்டினாள். சிரித்தபடி அணிந்து கொண்டு கிளம்பியவன் உள்ளே நுழையும் போது விசிலடித்தபடி கையில் பார்சலுடன் வந்தான். புடவை பார்சல் என்பது தெரிந்ததும்,

''எதுக்குங்க இப்ப புதுசு.. இருக்கறது போதாதா'' என்று சிணுங்கினாள். ''இந்தச் சிணுங்கலைப் பார்க்கறதுக்குத்தான், வேற எதுக்கு? பிரிச்சுப் பார்க்கறது..''

சாக்லேட் வண்ணத்தில் முத்து முத்தாய் வெள்ளைப் புள்ளிகள் மின்னிய புடவை.

''எப்படி செலக்ஷன்.. ஓ.கே.யா?.. ம்..'' என்று தலையசைத்த வளைப் பார்த்து, ''அப்ப கட்டிக்கிறது?''

''நான் கலர் புடவை கட்டறதே இல்லேங்க.''

''நான் கூடத்தான் புடவை கடைக்குப் போனதில்லே..''

''அதுக்கில்லே..'' இழுத்தவளைக் கையமர்த்தினான்.

''புதுப்புடவை கட்டிக்கிட்டு மேடம் கீழே வராங்கன்னு திருஷ்டி கழிக்க ஏற்பாடு செய்யறேன்..''

உல்லாசமாக சிரித்தபடி போகும் அவனைப் பார்த்தாள். புடவையைப் பிரித்தாள். ஆறு வருடம் சென்று வண்ணப் புடவை கட்டிக் கொண்டு கண்ணாடியில் பார்த்தபோது யாரோ புது உருவமாய்த் தெரிந்தது. தலையைத் தளரப் பின்னி முகத்தைக் கழுவிக் கொண்டு நிமிர்ந்தபோது ரோஜாப் பூவும், சிகப்பு ஸ்டிக்கர் பொட்டும் பிரபா மூலம் வந்தது.

பூவும், பொட்டும் வைத்து வெட்கமும், தவிப்புமாக அவள் கீழே இறங்கி வந்தபோது உண்மையாகவே ஆரத்தி கரைத்து வைக்கப்பட்டிருந்தது. வியப்பில் விரிந்த விழிகளுடன் பிரபாவும், தோட்டக்காரன் மனைவியும் ஆரத்தி சுற்ற அவன் கைதட்டினான். மணி எட்டாகியும் தோட்டத்தில் இருந்து உள்ளே வர மனமில்லாமல் அவள் அழகைப் பார்த்துக் கொண்டே உட்கார்ந்திருந்தான். சாப்பிட கூப்பிட்டபோது அவள்தான் சமைக்க வேண்டும் என்று அவன் சொன்னபோது அவள் சரியென்று தலையசைத்தாள்.

சாப்பாட்டு மேசையில் அவன் தாளம் போட்டுக் கொண்டு, உட்கார்ந்திருக்க, தோசைக் கல்லில் ஊற்றிய தோசையை முழுமையாக எடுக்க முடியாமல் அவள் தவித்துக் கொண்டிருந்தாள்.

நீண்ட போராட்டத்திற்குப் பின் தன் முன் வைக்கப்பட்ட தோசையைப் பார்த்தவனுக்குச் சிரிப்பு பொங்கியது.,



''தோசை அரசனைப் புறமுதுகிட்டு ஓடச் செய்து பீஸ் பீஸாகக் கொண்டு வந்திருக்கும் உங்கள் முன் யோசனையைப் பாராட்டி ஜான்ஸி ராணி என்ற பட்டத்தை அளிக்கிறேன்.''

அவளுக்கும் சிரிப்பு பொங்கிற்று.

''மேடம் ஜான்ஸி ராணி அவர்களே சிரித்தது போதும், சாம்பாரை ஊற்றுங்கள்.'' ஒரு கரண்டி ஊற்றியதுமே அவன் கத்தினான். ''கொதிக்கற சாம்பாரை இப்படி கை மேல் ஊத்திட்டீங்களே... எப்படி சாப்பிடறது?''

அவள் தவித்தாள். ''சாரிங்க..''

''அதெல்லாம் தெரியாது. ஸாரி சொல்லிட்டாப்பல.. ஆச்சா.. கையைப் புண்ணாக்கிட்டோமேன்னு பரிதாபப்பட்டீங் களா? ஊட்டி விடறேன்னு சொல்ல வாய் வருதா பாரு. தோசையை சாம்பாரில் நல்லா நனைத்து ஊட்டி விடுங்க'' அவள் முறைக்கும் போது கண்ணடித்து நாக்கை துருத்தி அழகு காட்டினான்.

''ரொம்ப நல்லாயிருக்கு. ஒரு டாக்டர் இப்படி கண்ணடிச்சு நாக்கைத் துருத்தி அழகு காட்டறது ரொம்ப அழகா இருக்கு.''

''நல்லாயிருக்கே... டாக்டர்னா கண்ணடிக்கக் கூடாதுன்னு ஏதாவது சட்டமிருக்கா? பாவம் ரொம்ப வேலை செய்து டென்ஷனா இருக்கீங்களே.. இப்படி ஏதாவது செய்து உங்களை சிரிக்க வைத்தால் பரிசு, பட்டம் கொடுப்பீங்கன்னு பார்த்தேன். இப்படி கோபப்படறீங்களே..?''

''பட்டம்தானே வேணும்.. அறுவைத் திலகம்னு பட்டம் தரேன்.. திருப்திதானே.. ஸார்..''

''பட்டம் சரி.. பரிசு?''

''என்ன வேணும்?''

''கேட்டதைத் தருவீங்களா?''

''என்னவோ குறும்பு பண்றீங்கன்னு தெரியுது. ஆனா சரியா புரியலே.. ஒழுங்கா சாப்பிட்டுவிட்டு எழுந்திருங்க..''

அவன் தலையாட்டி மறுத்தான். ''முடியாது கை புண்ணானது ஆனதுதான். நீங்கதான் ஊட்டி விடுங்க.''

''உங்களோட வம்பாப் போச்சு..'' வாயளவில் சொன்னாலும் மனது என்னவோ குதியாட்டம் போட்டது. குதூகலித்து பூப் பூவாய் பூத்தது. வெட்கமும் ஆசையுமாக ஊட்டி விட்டாள்.

அவன் சாப்பிட்டதே வயிறு நிறைந்தாற் போல் மனதுள் தோன்றி விட்டதால் வெறும் பாலோடு அவள் எழுந்து விட்டாள். ''சரி.. பைக்கில வந்தது ரொம்ப டயர்டா இருக்கும். தூங்கி ரெஸ்ட் எடுங்க'' என்று எழுந்தாள்.

''தினமும்தான் தூங்கறோம்.. தென்னிந்தியாவின் தலை சிறந்த பிஸினெஸ் மேக்னட் கூட இப்படி பேசிக் கொண்டிருக்கிறது சாத்தியமா? அட.. அட. என்ன சுகமா இருக்கு.

இதெல்லாம் வாழ்க்கையில் சுலபத்தில் கிடைக்கறது சுகமா என்ன? உங்க கையால செய்து ஊட்டி விட்டு அப்படியே இந்த வினாடியே உங்க மடியில தலை வைச்சு செத்திடணும் போல இருக்குங்க.. உலகத்திலேயே இந்த வினாடியில சந்தோஷமான மனிதன் நான்தான். இப்ப போய் தூங்கச் சொல்றீங்களே.''

பேசிக் கொண்டே போகும் அவனை நீர் வழிய பார்த்துக் கொண்டிருந்தாள் அவள். தன்னுடைய அன்பு அவனுக்கு இப்படியொரு உன்னத இடத்திலா இருக்கிறது.. அப்பா..



அப்பா.. உங்கள் கருணையை என்னவென்று சொல்வேன். இது எனக்கு நிலைக்குமா...? பயத்திலும், தன்னிரக்கத்திலும் அழுகையும், ஆத்திரமும் திமிறிக் கொண்டு எழுந்தது. தன்னை அவன் தெரிந்து கொண்டு விடக் கூடாது என்று அப்படியே விழுங்கினாள்.

## 12

நீலகிரி மலையின் கறுப்புத் தோற்றம் ஜன்னல் வழியாகத் தெரிந்தது. அவன் அவளிடம் ''தூங்க முடியும்னு தோணலே மேடம், ஏதாவது பேசலாம்.''

''என்ன பேசறது?'' அவள் கேட்டாள்.

''உங்க மனம் திறந்து பேசுங்களேன், நான் கேட்கறேன்.''

''நான் மனம் திறந்து பேசினா அது சுவையா இருக்காது. கேட்கற உங்களுக்கு கூட வலிக்கும்.''

''வலிக்கட்டும். மேடத்தோட சுமையில எனக்கும் பங்குன்னு நினைச்சுக்கிறேன்.''

கொஞ்ச நேரம் அமைதியாக இருந்தார்கள். அவள் மெதுவாக பேச ஆரம்பித்தாள். தன்னுடைய கடந்த கால வாழ்க்கையைச் சொல்லிக் கொண்டே வந்தபோது அவனுடைய விழிகளில் ஏனோ நீர் கலங்கியது.

அவன் வந்து சேர்ந்த பிறகு சுவாரசியம் வந்தது போல் ஆரவாரம் செய்தான்.

காயத்திற்கு தையல் போடும்போது அவன் கன்னத்தைக் கிள்ள வேண்டும் என்று தோன்றியதைச் சொன்னபோது ''அன்னிக்கு தோணியதை இன்னிக்கு செய்யறதில் எனக்கு எந்தவித மறுப்பும் இல்லை. எந்த கன்னத்தைக் கிள்ளணும்னு தோணிச்சு.. வலது கன்னமா அது எப்பவும் அதிர்ஷ்டம் பண்ணினது. சின்னதா ஒரு குழி விழுது பார்த்தீங்களா?'' கன்னத்தை அருகில் காட்டினான்.

இப்ப முடியாது என்பது போலத் தலையாட்டினாள்.

மனதுக்கு ரொம்ப நெருங்கினவனா நினைச்சதாலதான் தேங்க்ஸ் சொல்லத் தோணலை. அதுதான் அவனுக்கு அவள் தேங்க்ஸ் சொல்லவில்லை என்றபோது அவன் ஆச்சரியப் பட்டான். விழிகள் விரிய சொன்னான்.

''பாருங்களேன். இதுல இத்தனை இருந்திருக்கு. நான் என்னடான்னா வாத்து மடையனாட்டம் இந்தம்மா நமக்கு தேங்க்ஸ் சொல்லிச்சா பாருன்னு மனசுக்குள்ளே திட்டிக் கிட்டேன். என் பிரண்டுங்க எல்லாம் இதனாலதான் அமுல் பேபின்னு கிண்டலடிக்கிறது வழக்கம்.''

தன்னை அவனிடம் வெளிக் காட்டிக் கொள்ள முடியாமல் அவதிப்பட்டது... அவனாக முன்வந்தபோதும் பயந்து ஒதுங்கி ஊரை விட்டுக் கிளம்பி வந்தது.. முழுவதும் கேட்டுவிட்டு அவளைக் கேட்டான்.

''என்னை எதனால உங்களுக்குப் பிடிக்குது. இந்தப் பிரியத்துக்கு என்ன பெயர்?'' அவள் தவித்தாள்,

''ம்.. உங்க சின்ஸியாரிட்டி பிடிக்குது. ட்யூட்டில நீங்க காட்டும் அக்கறை.. முகம் கோணாத சேவை.. இதெல்லாம்



ரொம்பப் பிடிக்குது. இந்தப் பிரியத்துக்கு என்ன பெயர்னு எனக்கு சொல்லத் தெரியலே.. எனக்கு தூக்கம் வருது குட்நைட்.''

''அ.. இதுதானே வேணாங்கறது. பாதியில் பேசிட்டு போறதெல்லாம் வேணாம், வாயைத் திறந்து உண்மையைச் சொல்றது! மனம் விட்டு ஒரு வார்த்தை சொல்லக் கூடாதா?'' அவள் புன்முறுவலித்தாள்.

''சரியான ஆளா இருக்கீங்களே... எனக்கு எதுவும் சொல்லத் தெரியாது. இந்த ஒரு நாள் மறக்க முடியாத நாளாக இருக்கட்டும். குட் நைட்...'' அவள் எழுந்தாள்.

அவள் எதிரில் மறிப்பது போல நின்று கொண்டான். அவள் வலது கை நடுவிரலை பிடித்துக் கொண்டான். ''ஸ்.. இதென்ன விடுங்க விரலை'' அவள் இழுத்தாள். ''விரலையே எடுக்கலாம்னு பார்க்கிறீங்களா?'' அவள் இழுக்க அவன் இன்னும் இறுக்கினான்.

அவள் மவுனம் சாதித்தாள்.

''சொல்லுங்க, உண்மையைச் சொல்லுங்க. ப்ளீஸ் உங்க வாயால சொல்லி என்னை பெருமைப்படுத்துங்க'' தாபத்தோடு சொல்லிவிட்டு அவளையே பார்த்தான். அவள் மீண்டும் அமைதி காத்தாள்.

பிறகு மெதுவாக மிக மெதுவாக பூக்கள் மீது முகத்தை எறிந்தார் போல சொன்னாள். ''ஐ லவ் யூ..'' காரணமின்றி அவளுக்கு அழுகை வந்தது. மறுகணம் அவன் தோளில் முகம் புதைத்துக் கொண்டாள். கொஞ்ச நேரம் ஆன பின் அவன் தோளைத் தட்டி சமாதானப்படுத்தினான்.

''மனசில இருக்கிற பாரம் பூராவும் இறக்கியாச்சா? இப்ப படுத்துக்கப் போகலாம். குட் நைட்'' அவளுடைய அறையில் விட்டு விட்டு தனக்கு ஒதுக்கப்பட்ட அறைக்கு வந்தான்.

''உலகத்திலேயே மிகச் சிறந்த பெண் ஒருத்தியைக் காதலிக்கும் பாக்கியம் எல்லோருக்குமா கிடைக்கிறது. எத்தனை அன்பை மனதில் தேக்கி வைத்திருக்கிறாள். பாவம் முன் அனுபவங்களால் மனம் நொந்து அதை பொய் திரையிட்டு மூடியிருக்கிறாள். மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் அவதி அனுபவித்திருக்கிறாள். அன்பான அண்மைக்கும், காதலுக்கும் எத்தனை ஏங்கியிருக்கிறாள். அந்தக் கண்கள்தான் எத்தனை பிரியத்தையும், ஏக்கத்தையும் பிரதிபலிக்கின்றன.

இவளோடு என் வாழ்வு இணைவது எத்தனை சுகமானது. நான் இத்தனை அதிர்ஷ்டம் பண்ணியிருக்கேன்.. இறைவா இந்த நிலை நீடிக்க வேண்டும்.''

இரவு முழுவதும் தூக்கம் இன்றி விழித்திருந்தான். மனமெல்லாம் சுகமான எதிர்காலத்தை எதிர்பார்த்து கனவுகளாய் மனத்திரையில் விரிந்தன.

## 13

மறுநாள் காலையில் அவன் கீழே இறங்கி வரும் முன்னே குளித்து விட்டு மஞ்சள் வண்ணத்தில் சிகப்பு பூக்கள் போட்ட புடவையைக் கட்டி தலையில் மல்லிகைப் பூ வைத்து கால் முளைத்த நிலவாய் எதிர் கொண்டாள்.



அவனும் குளித்து முடித்ததும் இருவருமாக காரில் ஏறி ஊட்டியைச் சுற்றினார்கள். படகு ஓட்டி மகிழ்ந்தார்கள். திடீரென பெய்த பூ மழையில் நனைந்தார்கள். வீடு திரும்பி சூடாக சாப்பிட்டார்கள். தூங்கும் முன்னே ரெட்டை சோபாவில் உட்கார்ந்தவள் ஏதோ புத்தகத்தைப் பிரித்துக் கொண்டாள். அவளருகில் உட்கார்ந்தவனை நிமிர்ந்து பார்க்கும் தைரியம் அவள் விழிகளுக்கு ஏனோ இல்லை. எதையோ தேடும் மனம் அதையே வேண்டும் இளமை. ஆனாலும் தடுக்கும் நாகரீகம், தயங்கும் கண்ணியம், படரத் துடிக்கும் பெண்மையும் தழுவத் துடிக்கும் ஆண்மையும் அருகருகே இருந்தும் ஏனோ தயங்கிய நிமிடங்கள்.

இந்த நெருங்கிய அண்மை இன்னும் எத்தனை நாட்களுக்கு சாத்தியம் என்று எண்ணும் போது ஏனோ அழுகை வந்தது. அவனும் அப்படித்தான் நினைக்கிறான் என்பது அவனது உடல் நெகிழ்ச்சியிலிருந்தும் புரிந்தது. வெறும் எந்திரம் போல வாழ்ந்து வந்த வாழ்வில் ஒரு வசந்தம் இந்த இரண்டு நாட்களும். அவனை எப்படிப் பிரிவது என்று நினைக்கையில் பயமாக இருந்தது. அவன் தனக்கே தனக்கு வேண்டும். அவனை அப்படியே உயிரில் ஏந்திக் கொள்ள முடியுமானால் எத்தனை சுகமாக இருக்கும். இனியும் ஒன்றாக உட்கார்ந்திருந்தால் அது வீண் ஆசைக்கும், ஆதங்கத்திற்கும் இடம் கொடுத்து விடும் என்ற பயத்தில் எழுந்து ''குட்நைட்'' என்றாள்.

''மேடம் ஜஸ்ட் எ மினிட் ப்ளீஸ்'' அவளை உட்காரச் சொல்லி விட்டு தன்னறைக்குச் சென்றான்.

''உங்க அன்புக்கு நான் கொடுத்து வைச்சிருக்கேன். எந்த ஜென்ம பந்தமாவோ நாம இணைஞ்சிருக்கோம். இது வாழ்க்கைப் பயணமா தொடரணும்னு நான் விரும்பறேன்.

நேத்து இங்க வரும் போதே நான் இதை உங்களுக்காக வாங்கி வந்தேன். இதை ஏத்துக்கிட்டு என்னை பெருமைப் படுத்தணும்.''

அவன் கையிலிருந்த வெல்வெட் பெட்டியில் அழகான எனாமல் பதித்த மோதிரம் பளீரிட்டது. அவள் கையை நீட்டவும் அவன் போட்டு விட்டான். கச்சிதமாக அது பொருந்தியது.

அவன் பேசினான். ''மேடம் நாம் சீக்கிரம் திருமணம் செய்து கொள்ள வேண்டும். பொறுமை எல்லா நேரமும் கைவரு மென்று சொல்ல முடியாது.''

அவன் எதை மறைமுகமாக சொல்ல வருகிறான் என்று புரிந்ததும், முகம் சிவக்க அவள் தலைகுனிந்தாள். பிறகு சொன்னாள். ''எனக்கு யாரும் இல்லை. நானே முடிவெடுக் கலாம். ஆனா நீங்க அப்படியில்லை. உங்களுக்குப் பெற்றவங்க இருக்காங்க. தங்கையும் இருக்கா.. அதனால இது நாம சம்பந்தப்பட்ட காரியம் மட்டுமில்லே..''

''நீங்க வேற மேடம்... எங்க வீட்ல நான் சொல்றதை தட்டவே மாட்டாங்க. சொன்னா போதும்.. அப்பா கல்யாணத் துக்கு நாள் பார்க்க ஆரம்பிச்சிடுவார்.''

அவள் மென்மையாகச் சிரித்தாள். ''நீங்க சொல்றது மத்த பொண்ணுங்களுக்கு பொருந்தும். ஆனா நான்.. நான்.. ஒரு விதவைன்னு சமுதாயம் முத்திரை குத்தியிருக்குங்க.. உங்களுக்கு அனுபவம் போதாது. என்னோட பணமும், அதிகார வாழ்வும், உங்க குடும்பத்திற்கு பிரமை ஏற்படுத் திடும். நாம இணையறது ரொம்ப சிரமமான காரியம். அதுவும் என்னோட கல்யாண கதையை உங்கம்மா கேட்டாங்க..



அவ்வளவுதான். இளமை வேகமும், உள்ளத் தூய்மையான காதலும் நம்மை இணைக்கலாம். ஆனால் உலகம் ஏற்றுக் கொள்ளும் வாழ்வு நமக்கு கிடைக்குமா என்று நினைத்தால் பயமாக இருக்குங்க.

கைகளில் முகம் புதைத்து தனக்குள் உடைந்து அவள் அழவே கிளம்பி விட்டாள். அவன் விக்கித்து விட்டான். எத்தனை எத்தனை பிரச்சினைகள் இருக்கின்றன. அவள்தான் எவ்வளவு யதார்த்தமாகச் சிந்திக்கிறாள். அவள் சொன்ன எந்த ஒரு வார்த்தையையும் அவனால் அலட்சியப்படுத்த முடியவில்லை. பார்க்க வேண்டும் என்று தோன்றியதும் வாங்கின சம்பளத்தோடு பைக்கில் ஏறி வருவது தன் இஷ்டமாக இருக்கலாம். மோதிரம் வாங்கிப் போட்டு விடுவதும் தன் இஷ்டமாக நடத்தலாம். வாழ்க்கைப் பயணத்தில் அவர்கள் இணைவது நிச்சயம் பெரியவர்கள் பார்த்து செய்யும் காரியம். அவளை இப்போது கூட பார்க்க முடிகிறது. ஆனால் மனதில் நினைப்பது போல கட்டியணைத்து முத்தம் கொடுக்க முடிகிறதா, தன்னாலேயே அவளது ஆளுமைக்கு முன் நிற்க முடியவில்லையே. எதுவுமே அறியாத தன் தாய்க்கோ, தங்கைக்கோ அது எப்படி சாத்தியப்படும். மிகச் சாதாரணமான வேலையில் இருக்கும் தன் தந்தைக்கு இது எப்படி ஜீரணிக்கக் கூடியதாக இருக்கும். அவன் தவித்துப் பதில் சொல்ல முடியாமல் அவளது காலடியில் உட்கார்ந்தான். அவள் நிமிர்ந்தாள்.

அவளது மடியில் தலை சாய்த்துக் கொண்டான். அவனது கண்களில் இருந்து புறப்பட்ட நதிப் பிரவாகம் அவள் மடியை நனைத்தது.

இண்டர்காம் கூப்பிட்டது. அவள் எடுத்தாள். மேனேஜர் போனில் கூப்பிடுகிறார் என்று பிரபா சொன்னபோது, அவளையே செய்தியைக் கேட்டுக் கொள்ளச் சொல்லிவிட்டாள். ஆனாலும் பிரிவின் முதல் கட்டம் ஆரம்பித்து விட்டது என்பதை அவர்கள் புரிந்து கொண்டார்கள். அவள் பிரிவை நினைத்து ஏங்கும்போது அவன் எப்படி தன் பெற்றோரை சமாதானம் செய்வது என்று சிந்திக்கலானான்.

பிரபா எழுத்தில் கொண்டு வந்த செய்தி மிக அவசரம் என்றது. டெல்லியில் இருந்து அதிகாரிகள் ஆய்வுக் குழு இரண்டு நாளில் புது தொழிற்சாலையை பார்வையிட வருகிறார்கள். அவள் முகம் மாறினாள். அவன் ஏனென்று விழிகளால் வினவினான்.

''சென்ற முறை வந்தப்பவே இவங்க தொல்லை அதிகமாக இருந்தது. ஏகப்பட்ட டென்ஷனை உண்டாக்கிட்டுத்தான் போனாங்க. இப்ப புதுசா இருக்கிற தொழிற்சாலையை அக்கு வேறா ஆணி வேறா அலசிடுவாங்க..'' அவன் இமைக்காமல் பார்த்தான். ''இவளை காதல் மனைவி என்று பார்க்கத் தோன்றுமா.. சந்தேகம்தான்.''

அவள் உடனடியாக சேகருக்கு போன் செய்தாள். அவன் லைனில் கிடைத்ததும், மளமளவென உத்தரவுகளைச் சொன்னாள். மறுநாள் நான் வருவதற்குள் அவன் செய்ய வேண்டிய சில ரகசிய உத்தரவுகளைக் கொடுத்தாள். மனம் சமாதானம் ஆகாமல் அறையின் குறுக்கும், நெடுக்குமாக சிந்தனையோடு நடக்கலானாள்.

அவன் தடுத்தான். ''நோ.. நோ.. டென்ஷனாகாதீங்க.. நாளைக்கு அங்கே நேரில் போய் பார்க்கலாம். வீணா ஒர்ரி



பண்ணாம தூங்குங்க.. உங்களுக்கு இது பெரிய காரியமே இல்லை, வாங்க..''

ஸாரி.. எப்பவும் நான் இப்படித்தாங்க. உடனே ஏதாவது ஸ்டெப் எடுத்து பிரச்சினையை முடிக்கணும்னு ஏகப்பட்ட டென்ஷனாகிடுவேன்... இப்படி ஆறுதல் சொல்ல யார் இருக்காங்க.. சரி நீங்க தூங்கப் போங்க.. நாளைக்கு விடியற் காலையில் புறப்படலாம். குட் நைட்.''

அவள் தூங்க மாட்டாள் என்று புரிந்ததும் அவன், ''எனக்கு தூக்கம் வராது. நானும் முழிக்கிறேன். நீங்க பேசுங்க, இல்லே நான் ஜோக் அடிக்கிறேன். கேளுங்க'' என்றான். இருவருமாக சிரித்துக் கொண்டே தூங்கிவிட முடிவு செய்துக் கொண்டு அவரவர் அறைக்குள் நுழைந்தார்கள்.

மறுநாள் காலையில் டிரைவரை அவனுடைய பைக்கை லாரி ஏதும் பிடித்து எடுத்துக் கொண்டுவரச் சொல்லிவிட்டு, பிரபாவை பஸ்ஸில் ஏற்றி விட்டாள். கார் அம்பு போல பறந்த வேகத்தைக் கண்ட அவன் பயந்து போனான். ''மேடம், மெதுவா ஓட்டுங்க... நான் நம்ம கல்யாணத்துக்கப்புறம் ஐந்து பிள்ளைங்க பெத்துக்க வைக்கணும்னு இருக்கேன்.''

அவளுக்குச் சிரிப்பு வந்தது. ''என்னது ஐஞ்சா.. சீ.. வேணாம். ரெண்டு பேர் போதும்.. அதுவும் ஆண் பிள்ளைங்க தான். ஒருத்தன் உங்களைப் போல டாக்டர். இன்னொருத்தன் வக்கீலா வரணும்..'' அவன் சிரித்தான் பலமாக.

''இத்தனை ஆசை மனசிலே இருக்கு. ஆனா காட்டிக்க மட்டும் மாட்டீங்க, அப்படித்தானே.. ரொம்ப ஆள் அழுத்தம் மேடம் நீங்க...''

''ஆமாம் என்னோட பேரே மேடம்னு வைச்சிட்டீங்களா? எனக்குன்னு பெயர் இருக்கு சார்... என் பிறந்த நாள் தெரியுது.. யாருக்குமே சொல்லாம நான் வந்த இடம் தெரியுது.. என் பெயர் மட்டும் தெரியாதா?''

உங்க பிறந்த நாளை எனக்கு எங்க சீப் டாக்டர் சொன்னாரு மேடம். நீங்க வந்த இடத்தை பிரபாவோட புருஷன் சொன்னான். ஆனா உங்க பேரு ரொம்ப பேருக்கு தெரியலே.. நீங்கதான் சொல்லுங்களேன் கேட்டுக்கறேன்.''

அவள் உல்லாசமாக சிரித்தாள். ''இப்ப சொல்ல மாட்டேன். அப்புறமா சொல்றேன். அதுக்குள்ளே கண்டுபிடிச்சி முயற்சி பண்ணுங்களேன்.''

சென்னை நெருங்க, நெருங்க இந்த உல்லாசமெல்லாம் மறைந்து போனது. அவன் சொன்னான், ''நாம ரெண்டு பேரும் காலேஜ் ஸ்டுடண்ட்ஸ் இல்லே. பார்க்கில பார்க்கிறதோ இல்லே பீச்சிலே மணல்ல உட்கார்ந்து பேசவோ முடியாது. சினிமாவுக்குப் போய் லூட்டி அடிக்க முடியாது. நாம மெச்சூர் ஆனவங்க.. வாழ்வின் பலவிதமான படிகளைக் கடந்தவங்க..''

''மொத்தத்திலே நாம ரெண்டு பேரும் கிழம்னு சொல்றீங்க அப்படித்தானே'' அவள் சிரிதும் சிரிக்காமல் கேட்டபோது அவன் சிரித்து விட்டான். அவள் சொன்னாள்.

''சமுதாயத்தில் நாம் அங்கீகாரம் பெற்றவர்களாக வளர்ந்து விட்ட போது இதெல்லாம்தான் நடக்கும். நாலு பேர் எதிரில் நாம சந்தித்துக் கொள்ளும்போது பேசக் கூட முடியாமல் போகலாம். பார்த்தும் பார்க்காமலும் போகக் கூட நேரலாம். எந்த நேரத்திலும் நாம் ஒருவருக்கு ஒருவர் இன்னொரு உயிரோ உடலோ இல்லை. நாம் ஓருயிர் ஈருடல்.''



அவன் தலையசைத்து விட்டு அடுத்து வந்த ஆட்டோ ஸ்டாண்டில் நிறுத்தச் சொல்லி இறங்கிக் கொண்டான். யாரும் பார்க்கும் முன்னே கார் பறந்தது.

## 14

கையில் சூட்கேஸ்களுடன் உள்ளே நுழைந்தவனைக் கண்டவுடன் அம்மா பிடித்துக் கொண்டாள்.

''என்ன பிள்ளையடா.. நீ.. மூணு நாளா எங்கே போயிட்டேன்னு தெரியலியே... மாத்து துணிக் கூட எடுக்காம என்ன தலைபோற அவசரம்னு இப்படி ஓடியிருக்கே... சீப் டாக்டர் நேரிலேயே நேத்து வந்து போனார். வண்டி எங்கேடா... இது என்ன கையிலே சூட்கேஸ்.. இது என்னடா புதுப் பழக்கம். மூணு நாளா உன்னைக் காணோம்னு அழுது, சாப்பிடாம கலங்கிப் போய் கிடக்கிறோம். நீ எங்களைப் பத்தி நினைக்கக் கூட இல்லே... எங்கேயோ போயிட்டு பிக்னிக் போய்வரா மாதிரி வரே..''

குற்ற உணர்வுடன் நிற்பனைப் பார்த்து அப்பா பரிதாபப் பட்டார். ''சரி.. விடு.. உள்ளே நுழையறதுக்கு முன்னாடி ஏன் இப்படி பேசிட்டே... உன் மகன் என்ன எல்.கே.ஜி. படிக்கிற குழந்தைன்னு நினைப்பா.. அவன் ஒரு டாக்டர். அவனுக்குப் பொறுப்பு இருக்கு.. அவசரமா போயிருந்தா ஏதோ முக்கிய மானதுதான்னு முடிவு பண்ணு. முதல்லே சாப்பிட ஏதாவது கொடு.. போப்பா.. போய் குளிச்சிட்டு சாப்பிடு..''

விட்டால் போதுமென்று உள்ளே ஓடி விட்டான். சுடச் சுட தண்ணீரில் குளித்ததும் சுறுசுறுப்பாகியது. சாப்பிட உட்கார்ந்த

வன் முன் தட்டில் தோசையை வைத்துவிட்டு அம்மா உள்ளே சென்று விட்டாள். வட்ட வடிவமாக முழு நிலவு போன்ற தோசை. அவன் அதையே பார்த்துக் கொண்டிருந்தான். துண்டு துண்டான தோசை . அதை வாயில் ஊட்டிய பட்டுக் கை நினைவுக்கு வந்தது. காதலும் கொஞ்சலுமாக அந்தப் பேச்சு நினைவுக்கு வந்தது ஒற்றை முத்து வளையல் தத்தி, தத்தி உருண்டது மனதில் சிலிர்த்தது. சட்டென எழுந்து விட்டான்.

''ஏனப்பா சாப்பிடலே...'' அம்மா கேட்டபோது தலையை அசைத்தான். ''பசிக்கலே.. நான் மனோகரைப் பார்த்திட்டு வரேன்..''

வெளியே போகும் மகனை ஆச்சரியத்துடன் பார்த்த அம்மா, அப்பாவிடம் வந்தாள். இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். ''இது என்னங்க புதுசா நடந்துக் கறான்.'' அம்மா பெருமூச்சுடன் புலம்பியபோது, ''இந்தா வயசு பிள்ளை... ஏதோ காரியமா மூணு நாள் வெளியே போயிட்டு வந்தான். பசிக்கலே போலிருக்கு. அதுதான் சாப்பிடலை. ஏன் உடனே இப்படி புலம்பறே. ரொம்பப் பாசம் வைச்சுட்டு பின்னாடி அவதிப்பட்டாதே. பொசசிவ்னஸ் எப்பவும் பிரச்சனையை உண்டாக்கி விடும். அவன் போக்குல விட்டுப்பிடி. இதுவரையிலும் நம்ம பிள்ளை மற்றவங்க மாதிரி எந்த கெட்ட பழக்கமும் இல்லாம நல்லவனா இருக்கான். நாமே அவனை எதுக்கும் தூண்டி விடக் கூடாது. போய் வேலையைப் பாருடி'' அப்பா திட்டினார். அம்மா உள்ளே போனதும் அவர் மனதுள் நினைத்தார். ''பையன் வளர்ந்துட்டான். கொஞ்சம் கண்காணிப்பு தேவைப்படுது. கடவுளே என் பிள்ளையை எதனாலும் எங்ககிட்டேயிருந்து பிரிச்சிடாதே.''



மனோகர் வீட்டில் அவன் கையில் காபி கோப்பையுடன் உட்கார்ந்திருக்க மனோகர் நன்றாகத் திட்டிக் கொண்டிருந்தான். ''ஏண்டா இப்படி மூணு நாளா ஆளே இல்லாம எங்கே போயிட்டே... முக்கியமான ஆபரேஷன் நேத்து நடந்தது. அதுதான்டா உன் வார்டுல இருந்த வயித்து வலி கேஸ். நீ இல்லாம போனது சீப்புக்கு ரொம்ப கோபம். பாவம் அந்த பேஷண்டோட பெண்டாட்டிக்கு ரொம்ப வருத்தம். நான்தான் ஏதோ சொல்லி சமாளித்தேன். நீ காதல் வம்பில மாட்டிக் கிட்டியோன்னு எனக்கு சந்தேகமா இருக்கு. காதலி வேணாங்கலே. ஆனா வீண் பிரச்சனை இல்லாம பார்த்துக்க.''

அவனுக்குப் பகீர் என்றது. அந்த வயிற்றுவலி பேஷண்ட் கிராமத்து ஆள். மிகவும் நல்லவன். அவன் மீது பக்தியே வைத்திருந்தான். அறுவை சிகிச்சைக்கு நாள் குறிப்பிட்டவனே அவன்தான். எப்படி மறந்து போயிற்று. மனோகர் அவன் தோளைத் தட்டினான். ''நாளைக்கு காலையிலே ஓ.பி.க்கு போகறதுக்கு முன்னாடி சீப்பை பார்த்திட்டு கிளம்பு, வீணா மனதை அலட்டிக்காம போய் தூங்கு. வண்டி எங்கேடா.. பஸ்சிலயா வந்தே.. சரி வா நான் டிராப் பண்ணிடறேன்.''

படுக்கையில் விழுந்தபோது பதினோரு மணி அடித்து ஓய்ந்தது. ஹாலிலிருந்த பழைய கடிகாரம். ஐந்து நிமிடங்கள் சென்று உடலெங்கும் ஏதோ ஒரு குளிர் அடித்தது. மனதுள் மத்தாப்பு ஜாலம் போல குறுகுறுவெனும் உணர்வு பொங்கி விழுந்தது. அந்த சுகத்திலேயே தூக்கம் உயிரைத் தழுவியது.

மறுநாள் காலையில் பெரிய டாக்டரின் அறையில் அவனுக்கு சரியான திட்டு கிடைத்தது. வாயைத் திறக்காமல் கேட்டுக் கொண்டிருந்தான். நேராக வார்டுக்குச் சென்று அந்த நோயாளியைப் பார்த்து, ஆறுதல் சொன்னான். ''நீங்க

வந்துட்டீங்க டாக்டர் ஐயா... இனிமே பயம் இல்லை'' அவர்களின் அன்புக்குப் பதில் சொல்ல முடியாமல் அவன் விடைபெற்றான்.

ஒபி முடிந்து வீட்டிற்கு திரும்பும்போது அவளைப் பார்க்காமல், அவள் குரலைக் கேட்க முடியாமல் முழுதாக ஒரு நாளாகி விட்டது என்ற எண்ணம் எழுந்தது. நெஞ்சை வலிப்பது போல் இருந்தது. போனில் தொடர்பு கொள்வதற்காக முற்பட்டான். ஏனோ லைன் கிடைக்கவில்லை. வெறுப்புடன் வீட்டிற்குத் திரும்பினான். வீட்டின் முன் இருந்து லாரியொன்று புறப்பட்டு போனது. வாசலில் அவன் பைக் நிறுத்தப்பட்டி ருந்தது. வியப்போடு உள்ளே போனவன் மூச்சடைக்க நின்று விட்டான்.

புத்தம் புது சோபா செட், அழகான டிரெசிங் டேபிள், பெரிய, பெரிய காட்ரெஜ் பீரோக்கள், போம் மெத்தைப் போட்ட ரோஸ்வுட் கட்டில், டைனிங் டேபிள், சேர்கள்.

ஒவ்வொன்றிலும் அவளுடைய அன்பு முகம் நிழலாடியது. உடனே அவளைப் பார்க்க வேண்டும் என்று தவிப்பாகியது. இந்த பொருட்களெல்லாம் அம்மாவுக்கு பயத்தைக் கொடுத்திருக்க வேண்டும். ''ஏம்ப்பா.. இதெல்லாம் ரொம்ப விலை இருக்குமே.. எதுக்கு இப்ப வீண் செலவு பண்றே..''

அவனால் பதில் சொல்ல முடியவில்லை. அமைதியாக உள்ளே நுழைந்து கொண்டான். மதிய சாப்பாடும் அமைதி யாகவே நடந்தது. அம்மா மட்டும் சஞ்சலத்துடன் வேலைகளை செய்து கொண்டிருந்தாள். அப்பா வந்தால் இன்னும் பிரச்சனை என்று பயந்து நைட் டூட்டி வாங்கிக் கொண்டு இரவு நர்சிங் ஹோமிலேயே தங்கி விட்டான்.



மறுநாள் அவளுக்குப் போன் செய்தான். டெல்லியிலிருந்து இன்ஸ்பெக்ஷனுக்காக வந்திருக்கும் அதிகாரி குழுவுடன் இருக்கிறாள் என்ற பதில் கிடைத்தது. நீங்கள் யார் என்று கேட்டதற்கு பதில் சொல்லாமல் வைத்து விட்டான். அவளை அருகில் இனிமேல் பார்ப்பது முடியாத காரியம் என்பது புரிந்து போனது. விரக்தியுடன் வீட்டிற்குத் திரும்பினான்.

வீட்டில் தங்கையும், அவள் கணவரும் வந்திருந்தார்கள். மாப்பிள்ளை அவனிடம், ''ரொம்ப தேங்க்ஸ், எப்படி அவ்வளவு சரியாக அனுப்பி வைச்சீங்க'' என்று கூறியபோது, தங்கையும் அவனோடு சேர்ந்துக் கொண்டாள். ''என்னண்ணா திடீர்னு சஸ்பென்ஸா இருக்கட்டும்னு அனுப்பினாயா? ரொம்பப் பெருமையா இருந்தது எங்களுக்கு.''

எதைப் பற்றிப் பேசுகிறார்கள் என்பது புரியாமல் அவன் விழிக்க, அம்மா உதவிக்கு வந்தாள். அவனைத் தனியாக அழைத்துச் சென்று, ''உன் தங்கை வீட்டுக்கும் இதேபோல பர்னீச்சரும், ஒரு ஸ்கூட்டரும் போயிருக்காம். இப்பவாவது வாயைத் திறந்து சொல்லு. இதெல்லாம் நீயா ஏற்பாடு பண்ணினது.. என் மனசிலே ஒரு சந்தேகம் வந்திருக்கு.. அப்படி இருந்திடக் கூடாதுன்னு கடவுளை வேண்டிக்கிறேன்.''

அவன் குறுக்கிட்டான். ''ஏம்மா உன் சந்தேகம் சரியா இருந்ததுன்னே வைச்சுக்கோயேன், என்ன பண்ணுவே?''

''பளார்'' என்று ஒரு அறை அவன் கன்னத்தில் விழுந்தது. பொறி பறந்தது போல அவன் தடுமாறிப் போனான். ''போடா.. போய் எல்லாத்தையும் திருப்பியனுப்பிட்டு வா... சந்தேகம் சரியா இருக்குமா? எவ்வளவு தைரியம். உயர உயர பறந்தாலும் குருவி பருந்தாக முடியாது. கவனமா இரு.

இன்னொரு தரம் வேண்டாதவங்க நட்பை பெரிசா நினைச்சுக்கிட்டு பேசினே.. நடக்கறதே வேற'' தங்கை இதுவரை மறைந்து அவர்கள் பேச்சைக் கேட்டிருக்கிறாள், அவள் மெதுவாக வெளியே வந்தாள்.

''அம்மா உங்க கோபம் சரிதான். இதையெல்லாம் யார் அனுப்பினதுன்னு நான் சந்தேகப்பட்டதும் சரியாதான் இருக்கு. ஆனா இதையெல்லாம் திருப்பியனுப்பினா வீண் மனக் கசப்பும், விரோதமும்தான் மிஞ்சும். அண்ணன் சின்ன பிள்ளையில்லே, வாழ்க்கையை அமைச்சுக்கற பக்குவம் அவருக்கு வந்திருக்காதா? வீணா நீங்க ஆத்திரப் பட்டு அண்ணனோட வெறுப்பை வாங்கிக்காதீங்கம்மா... வாங்கம்மா, காபி கலந்து கொடுங்க. அண்ணா நீங்களும் டிபன் சாப்பிட வாங்க. இதை இதோட விட்டிடலாம்.''

அம்மா கலங்கியவளாக சமையலறைக்கு நுழைந்துக் கொண்டாள். தங்கை அவனைப் பார்த்து சமாதானமாக புன்னகைத்தாள். வயதில் சிறியவளாக இருந்தாலும் அவளது விவேகம் அவனை வியப்பிற்குள்ளாக்கியது. புன்னகையுடன், ''வாம்மா டிபன் சாப்பிடப் போகலாம்'' என்றபடி வெளியே வந்தான்.

அதற்குள் அப்பா வரவே பேச்சு பல நிலைகளிலும் மாறி சந்தோஷ சூழல் உண்டானது. இரவு சாப்பாட்டிற்குப் பின் அப்பா அவனை தனியாக மாடிக்கு அழைத்துச் சென்றார். ''தம்பி.. நாம் ரொம்ப சாதாரணமானவங்க. உனக்கு நட்பு பல இடங்களில் இருக்கலாம். ஆனா வாழ்க்கை பயணத்துக்கு அதெல்லாம் ஒத்து வராது. சூரியகாந்திப் பூ சூரியனுக்காக பூக்கறதா நாம் நினைச்சா அது அறிவீனம். தூர இருந்து வணங்க



வேண்டியதை நம்ம காலடியில் விழுந்து வணங்க வைக்க லாம்னு நினைக்கக் கூடாது. உனக்கு மேடம் அம்மாவோட நட்பு எல்லைக்குள் நிற்கிற வரைக்கும் எனக்கு ஆட்சேபணை இல்லை. அம்மா மேல வருத்தப்படாதே. அவளுக்கு உலகம் புரியாது. கொஞ்ச நாளைக்கு அவங்களை பார்க்காம இருக்கறதுக்கு முடிவு செய்துடு. இது வெறும் ஆணுக்கும், பெண்ணுக்கும் இடைப்பட்ட கவர்ச்சியாக இருக்கும் பட்சத்தில் முட்டாள்தனமாக்த் தோணிடும். உண்மையான அன்பா இருக்கும் பட்சத்தில் பின்னாடி யோசிக்கலாம். போய் தூங்கு, குட்நைட்..''

எதுவும் பேச முடியாதவனாக அவன் தலை குனிந்தபடி அமைதியாக தன்னறைக்குள் நுழைந்து கொண்டான். ரோஸ்வுட் கட்டில் அவனை வரவேற்றது. அந்தப் புதுப் படுக்கையில் படுத்து அதை அலுங்க வைக்க விரும்பாமல் அப்படியே தரையில் சரிந்து படுத்துக் கொண்டான்.

## 15

**கா**லையில் எழுந்தவுடன் அம்மா காபியுடன் மாடியறைக்கு வந்தாள். ''ஏம்மா சிரமம் எடுத்துக்கிறீங்க. நானே கீழே வருவேன் இல்லே..'' என்றபடி காபியை வாங்கிக் கொண்டான். ''இருக்கட்டும் ராஜா.. இன்னிக்கு மதியம் சாப்பிட சீக்கிரமா வந்துடு. மாப்பிள்ளை கிளம்பறார். வரும்போது பழமும் பூவும் வாங்கிட்டுவா..''

மாப்பிள்ளையை வழியனுப்பி விட்டு உள்ளே நுழைந்தவனை தங்கை கூப்பிட்டாள்.

''நாளைக்கு மேடத்தை பார்க்க முடியுமாண்ணா, எனக்குப் பார்க்கனும் போல இருக்கு. கொஞ்சம் பேசனும்.,''

அவனுக்கு சிரிப்பு வந்தது. ''அவங்களை நேரில பார்த்தா பேசவே தோணாது அகல்யா. ரொம்ப பிஸியா வேற இருப்பாங்க. முன் கூட்டியே அப்பாயிண்ட்மெண்ட் வாங்கியிருக்கணும். இல்லேன்னா முடியாது.''

''எங்கண்ணிய பார்க்கனும்னா கூடவா'' குறும்புத்தனம் மிக்க அவளுடைய வார்த்தைகளை அவன் ரசிக்கவில்லை. ''அகல்யா... இப்படி யெல்லாம் வெளிப்படையாக பேசாதே. அவங்க ரொம்ப பெரியவங்க. அவங்க கவுரவத்துக்கு இழுக்கு எதுவும் நம்மால வந்திடக் கூடாது. நானே அவங்களைப் பார்த்து நாலு நாளாகி விட்டது. முடிஞ்சா சாயங்காலமா போகலாம். நம்முடைய எந்த சின்ன அசைவும் அவங்களுக்கு தொல்லையா இருந்திடக் கூடாது. ப்ளீஸ் புரிஞ்சுக்குவேன்னு நினைக்கிறேன்.''

''ஸாரிண்ணா.. ஏதோ ஒரு வேகத்தில் சொல்லிட்டேன்.''

''முடிஞ்சா போகலாம். நான்தான் இன்னும் 10 நாளைக்கு இருக்கப் போறேன்.. பாவம்.. அவங்களுக்கு ஏதாவது தரணும்னு தோணுது. அதான் சொன்னேன்..'' அவன் போன் செய்யப் போனான். போனில் பி.ஏ.தான் கிடைத்தார். முக்கியமான போர்டு மீட்டிங் நடப்பதாகவும், பேச முடியாது என்றும் சொன்னார்.

உடனடியாக அவளுடைய பேக்டரிக்குப் புறப்பட்டு விட்டான். எதை சொல்லி அவளைப் பார்ப்பது என்று புரியாமல் வாசலில் வாட்ச்மேனிடம் சென்றான். அவனை வரவேற்ற வாட்ச்மேன் உள்ளே பி.ஏ.வுடன் தொடர்பு



கொண்டான். அவரோ, ''எதற்காகப் பார்க்க வேண்டும். மேடம் வரச் சொல்லி இருக்காங்களா, வேலை அதிகம் உள்ள நேரம். தொல்லை தரும் விதமாக வெறும் பேச்சென்றால் வேண்டாம்'' என்று பலவிதமான கேள்விகளைக் கேட்டு திணறடித்தார்.

ஒரு வழியாக பத்து நிமிடம் ஜூஸ் குடிக்கும் நேரத்தை ஒதுக்கி அவனை உள்ளே அனுப்பினார்.

ஆகாய வர்ணப் புடவையில் தேவதை மாதிரி உட்கார்ந் திருந்தவள், அவனைப் பார்த்தவுடன் எழுந்துவிட்டாள். ''நீங்கதான் வந்திருக்கீங்களா?'' என்று கேட்க நினைத்து தலையசைத்தாள். ''ஆமாம்'' என்று பதில் சொல்வதாக நினைத்து அவனும் தலையசைத்தான்.

உட்காரச் சொல்லி கையிலிருந்த ஜூஸை அவனிடம் நீட்டினாள். பத்தே நிமிடங்களில் அவன் வெளியேறினான். அதன் பின் பார்க்க வேண்டிய வேலைகளை மளமளவென முடித்தவள் மறுநாளைக்கான பேச்சுக் குறிப்பை வீட்டிற்கு அனுப்பி வைக்கும்படி சொல்லிவிட்டு கிளம்பி விட்டாள். டிரைவரை வேண்டாமென மறுத்து விட்டுத் தானே காரை ஓட்டிச் சென்றவளை பி.ஏ. வியப்புடன் பார்த்தார்.,

ஐந்து நட்சத்திர ஓட்டலின் அரையிருள் பரவின ஹாலில் உட்கார்ந்தபோது அவளுக்கு மனது படபடத்தது. கூடிய வரை இருளில் தன்னை அமிழ்த்துக் கொண்டாள். எதிரில் அவன் உட்கார்ந்து அவளையே பார்த்துக் கொண்டிருந்தது வேறு வெட்கமாக இருந்தது. பேரர் வரவும் அவனை நோக்கி விரலை நீட்டி விட்டாள். அவன் என்ன ஆர்டர் கொடுத்தான் என்பதைக் கூட கவனிக்காமல் அவனுடைய விரல்களின் அழகில் லயித்துப் போயிருந்தாள்.

சாப்பிட ஆரம்பிக்கும்போது டேபிள் மீது படிந்திருந்த அவளுடைய இடது கையைப் பிடித்தான். ''ஸ்..ஆ..'' என்று அவள் இழுத்துக் கொண்டாள். ''என்ன'' என்று அவன் கேட்டபோது கையைப் பிரித்துக் காட்டினாள். பால் வண்ண ஓடை போன்ற பஞ்சு பொதிகையில் ரத்தக் காயம்... பார்க்கவே முடியவில்லை. எப்படி எப்படி என்று தவித்தவனையே குறுகுறுவென்று பார்த்தாள்.

அவள் சொன்னதைக் கேட்டபோது அவன் தவித்துப் போனான். அவனைப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. இரவுகளில் தூக்கம் வரவில்லை. வேலை வேலை என்று தலைக்கு மேல் வேலை. பிரிவுத் துயர் தாங்க முடியவில்லை. முந்தின நாள் மாலை அது விஸ்வரூபம் எடுத்துவிட்ட போது ஜன்னலருகில் நின்றாள். அந்த அலங்கார ஜன்னலின் கம்பியை இறுகப் பிடித்து அது வெட்டினதுகூடத் தெரியாமல் நின்றிருக்கிறாள். ரத்தம் ஒழுக, ஒழுக கவனம் இல்லாமல் அவன் நினைவில் லயித்திருக்கிறாள். பிரபா பார்த்துவிட்டுக் கத்தியதும் தான் கவனத்திற்கு வந்தவள் அவளை சமாளித்து அனுப்பி விட்டு நீபாசெல்ப் பவுடரைத் தானே போட்டுக் கொண்டாள். சிரிப்புடன் இதைச் சொல்லிவிட்டு, ''சாப்பிடுங்க, இதெல்லாம் எதுவுமே பெரிசில்லேங்க'' என்றாள். அவனுக்கோ நெஞ்சே வலிப்பதைப் போலிருந்தது. என்னாலா இந்த ரத்தக் காயம் ஏற்பட்டது. ஒண்ணுமே தெரியாம இருந்த உங்களை என் நினைவு இந்தக் கஷ்டத்திற்கு உள்ளாக்கி விட்டது என்றால் தயவு செய்து மன்னிச்சுடுங்க மேடம்'' அவனுக்கு தொண்டைக்குள் எதுவோ அடைத்தது. இத்தனை அன்புக்கு நான் அருகதையானவனா என்று தனக்குள் கேட்டு, கேட்டு மாய்ந்து போனான்.



காரில் திரும்பும்போது கடற்கரை சாலையின் விளக்குப் பூக்கள் மின்னின. ''என்ன மேடம் கொஞ்ச நேரம் இங்கே உக்காந்திட்டுப் போகலாமில்லே'' அவன் விழிகள் கெஞ்சின. வண்டியை மணலில் நிறுத்திவிட்டு பேசிக் கொண்டிருக்கவே இருவரும் விரும்பினார்கள்.

''முக்கியமான ஒன்றை நீங்க கேட்கவே இல்லையே..'' அவன் என்னவென்பதுபோல பார்த்தான். ''நான் கலர்ல புடவைகள் கட்டறது பெரிய விஷயமாகிப் போச்சு. பாதிப் பேர் சந்தோஷப்படறாங்க. மீதிப் பேர் விஷயம் புரியாம தவிக்கிறாங்க. பொதுவாகவே இந்த புது மாற்றம் எல்லோர் மனசிலும் ஒரு எதிர்பார்ப்பை உண்டாக்கியிருக்கு.''

''வீடு பூராவும் புதுசா புசா பர்னீச்சரா இருக்கு. அகல்யா வீட்டுக்கும் ஸ்கூட்டரோட எல்லாம் போயிருக்கு. எதுக்கு மேடம் இதெல்லாம்.''

அவள் உதட்டில் விரலை வைத்து எச்சரித்தாள். ''வேற பேசுங்க. நான் மட்டும் அதையெல்லாம் வீட்டில் உபயோகிக்கும் போது நீங்க சாதாரணமா இருக்கிறதை தாங்கிக்க முடியலேங்க, அதான்.,''

''அதுக்கு எனக்கு என்ன பரிசு கிடைச்சது தெரியுமா? அம்மா கிட்டே பளார்னு அறை..'' சிரித்துக் கொண்டே அவன் சொன்னதும் அவள் துடித்துப் போனாள். அவன் எதைச் சொல்ல வேண்டுமோ அதை மட்டும் சொல்லி அம்மாவின் எதிர்ப்பையோ, அப்பாவின் ஆலோசனையையோ சொல்லாமல் விட்டான்.

பேசப் பேச பேச்சு நீண்டது. அவள் மணியைப் பார்த்தாள். ''அடடே.. மணி பனிரெண்டரை ஆகி விட்டதே கிளம்ப

லாங்க'' அவன் மறுத்தான். ''ம்.. உங்களது ஓட்டை வாட்ச். என்னுதில நேரம் பாருங்க. பத்தரைதான் ஆகுது. முதல்ல நாளைக்கு ரிப்பேருக்கு கொடுங்க.''

அவள் வியந்தாள். வாட்சை மீண்டும் பார்த்து விட்டுப் பேசலானாள். தினமும் பார்த்துக் கொள்ள முடியாவிட்டாலும், போனில் பேசிக் கொள்வது என்று முடிவு செய்தார்கள். இரவு பத்து மணிக்கு போன் செய்தாள் அவளே எடுப்பதாகக் கூறினார்கள்.

அவன் சற்று யோசித்தான். பத்துமணிக்கு போன் செய்தால் எப்படியும் பேசி முடிக்க குறைந்தது ஒரு மணி நேரம் வேண்டும். கடைகளில் முடியாது. மனோகர் வீட்டிற்குதான் போக வேண்டும். அவனைத்தான் தாஜா செய்ய வேண்டும். மணி பனிரெண்டரை ஆனதும் கிளம்பினார்கள். அவனுடைய வீட்டின் தெரு முனையில் இறக்கி விட்டு விட்டு அவள் கிளம்பும்போது அவன் சொன்னான்.

''மேடம் மணி இப்ப ரெண்டரை ஆகுது. நான்தான் வாட்சை மாற்றி வைச்சுக்கிட்டேன். வழக்கமான ரீல்தான். கோபமா? பின்னே என்ன மேடம் ஆளை நேரில் பார்க்க முடியுதா, பேச முடியுதா? அதுதான் இப்படி பண்ணிட்டேன். ஸாரி டார்லிங்..''

சட்டென அவன் மனதிலிருப்பது வார்த்தையாக டார்லிங் என்று வந்தபோது அவள் மயங்கிப் போனாள். ஜன்னல் வழியாக அந்த அரையிருட்டில் பளபளவென மின்னும் அவன் முகத்தையும், சற்றே கலைந்த தலைமுடியும், கொஞ்சம் தூக்கம் மிதக்கும் விழிகளையும் பார்க்க பார்க்க நெஞ்சம் நிறைந்தது. அவனை அடிப்பது போல கையை ஓங்கிக் காட்டி



விட்டு கன்னத்தைப் பிடித்துத் திருகினாள். அவன் மெய் மறந்து நிற்கையில் சட்டென வண்டியைக் கிளப்பி விட்டாள்.

உல்லாசத்தின் உச்சியில் மிதந்தபடி வீட்டிற்குள் நுழையும் போது, அம்மா வாசல் திண்ணையில் உட்கார்ந்திருப்பது தெரிந்தது. கூடவே அகல்யாவும் விழித்திருந்தாள். ''ஏம்மா தூங்கக் கூடாது. மணி ரெண்டு ஆகிட்டுதே...'' அம்மா சலனமில்லாமல் பேசினாள்.

''நைட் டூட்டி போக வேண்டிய பிள்ளையைக் காணோம்னா எப்படித் தூக்கம் வரும்? மனோகர் வந்து பார்த்திட்டு அவனே நைட் டூட்டியும் பார்க்கிறதா சொல்லிட்டுப் போயிருக்கான். போற பிள்ளை இடமும் சொல்றதில்லே.. நேரமும் கேட்டுக்க முடியலே.. இப்படியே இருந்தின்னா கடைசியா தெருவில தான் நிக்க வேண்டியிருக்கும்.''

''ஐயோ இன்னிக்கு நைட் டூட்டியாச்சே.. எப்படி மறந்துப் போச்சு.. நாளைக்கு என்ன செய்யப் போறேன்... சீப் வேற திட்டுவாரே..'' குற்ற உணர்வில் மனம் வருத்தப்பட்டது.

கேசவ் சிங் திறந்த கேட்டில் கண்டாஸாவை நுழைக்கும் போதே சேகர், மேனேஜர், பிரபா, வள்ளி, கந்தன் அனைவரும் காத்திருப்பது தெரிந்தது. அவள் குற்ற உணர்வில் இறங்கும் போது, ''என்ன மேடம் இவ்வளவு நேரம் ஆகிட்டுது. ஏதும் ப்ராப்ளம் இல்லையே'' சேகர் பயந்து கேட்டான்.

''ஒண்ணுமில்லே.. எதுக்காகக் காத்திருக்கீங்க இப்படி? பைலைக் கொடுத்திட்டுக் கிளம்புங்க.. நாளைக்கு காலையில பார்க்கலாம். குட்நைட்...''

முன்பு வருத்தத்தில் தூக்கம் வந்ததில்லை. இப்போதோ ஏக்கத்தில் வரவில்லை. எனக்குக் கூடவா ஏக்கமும், தவிப்பும்

வருகிறது தலையணையில் முகம் புதைத்து சிரித்துக் கொண்டாள். அவனுடைய வலிமை மிக்க மார்பில் சாய்வது போல நினைத்தபடி கண் மூடினாள்.

## 16

பவள மல்லிகை மரத்தின் பூக்களை மிதிக் காமல் கவனமாக நடந்தவன் நர்சிங் ஹோமிற் குள் நுழையும்போது மணி விடியற்காலை நான்கு. மனோகர் அறையுள் நுழைந்தான். படித்துக் கொண்டிருந்த மனோகர் இவனைப் பார்த்ததும் சிரித்தான். ''வாடா காதல் மன்னா நைட் டியூட்டி கூட மறந்து போற அளவுக்கு ஜாலியா? ம்... இந்த பூனையும் பாலைக் குடிக்குமான்னு இருந்தவன் நீ... சும்மா அமுல் பேபியாட்டமா நின்னுட்டு தூங்கிட்டுக் கிடப்பே. போனா போகுதுன்னு உன்னை நேத்து காப்பாத்திட்டேன். உன் சைட்டை கண்ணுல காட்ட மாட்டேங்கிறியே... ஏன் பயமா இருக்கா.. போகுது சீப் கிட்டே உனக்கு வயிற்று வலின்னு பொய் சொல்லிட்டேன். அதையே நீயும் சொல்லி சமாளி... வா.. ரவுண்ட் போகலாம்.''

அடிக்காத குறையாக பெரிய டாக்டர் அவனைத் திட்டி, அறிவுரை சொல்றேன் பேர்வழி என்று அரை மணி நேரம் அறுத்து அனுப்பினார். ஒரு படி விளக்கெண்ணெய் குடித்தது போல் முகத்தை வைத்து வெளியே வந்தவனைப் பார்த்த மனோகர் சிரித்தே விட்டான். அன்று முழுவதும் நர்சிங் ஹோமிலிருந்து அவருக்கு ஐஸ் வைத்துப் பார்த்தான். நைஸ் செய்தான். ஒன்றும் நடக்கவில்லை. அவனே நைட் டூட்டி



கேட்டு வாங்கிக் கொண்டபோது போனால் போகுது என்று சின்னதாக சிரித்து வைத்தார்.

வார்டை விட்டு எங்கும் எழுந்து செல்லாமல் உட்கார்ந்தே இருந்தான். பத்து மணியான போது போன் செய்ய வேண்டும் என்பது நினைவு வந்தது. போன் அருகில் இருந்த நர்ஸை வெளியே அனுப்பி விட்டு அவசரமாக நம்பரைச் சுழற்றினான். ''ஹலோ... என்னங்க நான்தான், பேசுங்க.. கேன்யு ஹியர் மீ'' அவள் பேசினாள்.

''நான்தான்னு எப்படி மேடம் சரியா பேச ஆரம்பிச்சீங்க... ரியலி நீங்க சூப்பர் லேடிதான் மேடம்..''

அவள் சிரித்தாள். ''அசடு ஒண்ணுதான் பேசும்னு எனக்குத் தெரியும். அதுதான் உடனே கண்டுபிடிச்சுட்டேன்.''

''யார் நானா அசடு... நேர்ல பார்க்கும்போது என்ன செய்யறேன்னு பாருங்க...''

''என்ன செய்துடுவீங்க... உங்களால ஒண்ணும் செய்ய முடியாது சார்..''

அந்தப் பட்டுக் கன்னத்திலே ஒரு தட்டு தட்டி, அந்தக் காதை பிடித்துத் திருகி, தலையைத் தடவி விட்டு, அந்த உதட்டிலே..'' மேலே பேச விடாமல் யாரோ முதுகில் தட்டி னார்கள். ''நாளைக்கு நேரில் பார்க்கும்போது கொடுத்துக்கலாம். இப்ப போய் ஊசியப் போடுங்க'' - பெரிய டாக்டர் அசடு வழிந்து கொண்டே ''சாரி சார்.. என்னோட பிரண்ட்ஸ் சேர்ந்து ஒரு டிராமா போடறோம்... அந்த டைலாக்கை பேசிப் பார்த்தேன். வேற ஒண்ணுமில்லே..'' போனை கீழே வைத்து விட்டு அசடு வழிந்தான். அவர் போவதையே பார்த்துக்

கொண்டிருந்து விட்டு போனைக் காதில் மீண்டும் வைத்துக் கொண்டான்.

''நல்லா டோஸ் விழுந்துதா.. முகத்திலே வழியற அசடை துடைச்சுக்குங்க.. குறும்பு அதிகமா போச்சு. இப்படித்தான் பேசறதா..'' அவள் குரல் குதூகலித்தது. அதன் பிறகு சாப்பிட்டாச்சா, நேத்து தூக்கம் வந்துதா, இன்னிக்கு என்ன கலர்ல சேலை போன்ற உலகத்தை உய்விக்கும் மிக முக்கியமான கேள்விகளைக் கேட்டுக் கொண்டு பேசி முடிக்க ஒரு மணி நேரம் ஆகிவிட்டது.

இரண்டு நாட்கள் அவன் பெரிய டாக்டரின் அருகிலேயே இருந்து நல்ல பிள்ளையாக நடந்து கொண்டான். அவர் பாவப்பட்டு விட்டார். அடுத்த வாரத்தில் நடக்கப் போகிற முக்கியமான அறுவை சிகிச்சை ஒன்றுக்கான ஏற்பாடுகளை அவனிடம் ஒப்படைத்தார். வீட்டிலும், மருத்துவமனையிலும் அவனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. இந்த அறுவை சிகிச்சையை நல்லபடியாக முடித்து விட்டால் அது மிகவும் பெரிய சாதனையாக அமையும். வாழ்வின் முக்கிய திருப்பு முனையாகவும் இது மாறும். இப்போதே இதை அவளிடம் சொல்லி விடக் கூடாது. அறுவை சிகிச்சை நெருங்கும் போதில் சொல்லி வியப்பில் ஆழ்த்த வேண்டும். அவள் விழிகள் வியப்பில் எப்படி மின்னும், நினைக்கையிலேயே நெஞ்சில் உல்லாசம் கூடு கட்டியது.

அன்று விடுமுறை எடுத்துக் கொண்டு வீட்டில் இருந்தான். முக்கியமான புத்தகத்தில் குறிப்பு எடுக்க வேண்டிய வேலை இருந்தது. அகல்யா அவனைக் கூப்பிட்டாள். தொலைபேசி இலாகாவிலிருந்து வந்திருந்தார்கள். அவன் வீட்டிற்கு தொடர்பு வந்து விட்டதைத் தெரிவித்துக் கையெழுத்து



வாங்கிக் கொண்டு சென்றார்கள். இன்னும் மூன்று நாளில் முடிந்து விடும் என்று சொன்னபோது அவனுக்கு தலையை சுற்றியது.

மூன்றாம் நாள் மாலையில் அழகான சாக்லேட் வர்ண போன் அவன் அறையில் உட்கார வைக்கப்பட்டது. இரவு பத்து மணிக்கு மணியடித்தது. அவன் எடுத்தவுடன் ''என்னங்க நான்தான்... பேசுங்க.. நாலு நாளா பேசக்கூட முடியாம என்ன பண்றீங்க?'' அவள் குரல் கெஞ்சியது. அவன் சட்டென நெகிழ்வுற்று, ''எனக்கு என்ன சொல்றதுன்னே தெரியலே. மேடம்.. ஐ காண்ட் எக்ஸ்பிரஸ் மைசெல்ஃப்'' என்றான்.

''வேணாம் ஒண்ணும் சொல்ல வேணாம். நாளைக்கு அகல்யாவை அழைச்சுக்கிட்டு சாயங்காலமா வாங்க..''

அதன் பிறகு பேசி முடித்து புத்தகத்தை திறக்க முடியாமல் மயங்கி படுத்துக் கொண்டான்.

விடியற்காலையில் அஜய் போன் செய்து அவசர காரியமா புறப்பட்டு வருவதாகக் கூறினான். உறவினர் வீட்டுத் திருமணத்திற்கென மாயா தேவியும் உடன் வருகிறாள் என்று மன்மோகனும் பேசினர். காபி குடித்தபடி பேப்பரில் ஆழ்ந்திருந்தவள், பிரபாவின் குரலால் களைந்தாள்.

''அத்தையம்மா வர்றாங்க மேடம்..''

பஞ்சத்தால் அடிபட்டவளாக அத்தை உள்ளே நுழைந் தாள். பார்க்கையிலே அவளுக்கு வருத்தமாகி விட்டது. ஏதோ கோபத்தில் அன்று விரட்டினாளே தவிர வேறு ஏதுமில்லை. கிட்டத்தட்ட பல நாட்களாக பணம் அனுப்பவில்லை. பல வேலைகளில் அது மறந்தும் போயிற்று. உறவு வேண்டாம்,

மனிதாபிமானம் என்ற விதத்திலாவது, உதவியிருக்க வேண்டும். பரிதாபத்தைக் காட்டி விட்டால் அத்தை அதையே பெரிதாக எடுத்துக் கொள்வாள் என்று எண்ணி, ''உள்ளே போய் குளிச்சிட்டு சாப்பிடுங்க. பிரபா.. அத்தையைக் கவனி.''

''அத்தை விறுவிறுவென உள்ளே நுழைந்தாள். மேனேஜரைக் கூப்பிட்டு உடனடியாக அத்தை ஊருக்கு சென்று அவள் வாங்கி வைத்திருக்கும் கடனையெல்லாம் தீர்த்து விட்டு வரும்படி சொன்னாள்.

விமான நிலையத்திற்குத் தானே சென்று மாயாதேவி யையும், அஜயையும் வரவேற்று அழைத்து வந்தாள். நீண்ட நாட்களாக பார்க்காத ஆதங்கத்தில் மாயாதேவி அவளை கட்டியணைத்துக் கொண்டாள். அஜய் வணக்கம் சொல்லி விட்டு, ''மேடம் முதல் முதலாக கலர்ல புடவை கட்டிக்கிட்டு வாவ்... பியூட்டிபுல். ஏதாவது ஆர்எம் மந்திரமா? முகம் கூட கலகலன்னு தெளிவா இருக்கு.. மாஜி நம்ம மேடத்துக்கு கல்யாண களை வந்திருக்கு பார்த்தீங்களா?'' என்று கேலி செய்தான். மாயாதேவியும் அவனோடு சேர்ந்து கொண்டாள். ''என்ன பேட்டி.. அப்படியா விஷயம்?'' வெட்கத்துடன், ''உங்களுக்கெல்லாம் தெரியாமலா போகும். அஜய் சும்மா சொல்றார் அம்மா..'' என்றபடி காரருகே சென்றுவிட்டாள்.

''மாடியில இருக்கிற அந்த அம்மா யாருடி. இத்தனை வயசுக்கு எத்தனை நகை போட்டிருக்கா. புடவையைப் பார்த்தியா காசிபட்டுடி. அந்தப் பையன் அவங்க மகனா, எதுக்கு வந்திருக்காங்கடி..'' பிரபாவை அத்தை துளைத்து எடுத்தாள். பிரபா காதில் வாங்காதவள் மாதிரி அந்த இடத்தை விட்டு நகர்ந்து விட்டாள். அத்தைக்கு ஆத்திரம் தலை வெடித்து விடும் போலிருந்தது.



மாலை நேரம். சிலு சிலுப்பான ஏசியின் குளிர் மனத்தைத் தழுவியது. வேலைகளை பரபரவென முடித்தாள். மாலை போட்ட புகைப்படத்திலிருந்து அப்பா சிரிப்பது போலத் தோன்றியது. ''அப்பா வாழ்வின் வசந்தம் மெதுவாக என்னை நெருங்குகிறது. இது நிலைக்க வேண்டுமென நீங்கதான் வாழ்த்த வேண்டும்.''

சேகரைக் கூப்பிடும் போது கையில் ஜூசுடன் அஜய் உள்ளே நுழைந்தான். ''மேடம் முதல்ல ஜூஸ், அப்புறம் மறுபேச்சு..'' சிரித்தபடியே அவன் கொடுத்த ஜூஸைக் குடித்தவள் கிளம்பத் தயாரானாள்.

இருவருமாக வெளியே வந்தபோது அஜய் மீண்டும் உள்ளே சென்று பார்க்க விரும்பினான். இருவருமாக தொழிற்சாலைக்குள் நுழைந்தார்கள். தாங்கள் அனுப்பும் நூல் அழகான புடவைகளாக உருவாகின்ற விந்தையைப் பார்த்த அஜய் சொக்கிப்போனான்.

வேறொரு அறையில் புடவைகளின் வர்ணச் சேலைகளுக்கு ஏற்ப டிசைன்களையும், மாற்றங்களையும் தரும் ஓவியர்கள் பத்து பேர் தங்கள் வேலையில் கவனமாக இருந்தார்கள். அவள் பார்த்து சரி சொல்ல ஏற்கனவே ஐந்து டிசைன்கள் தயாராக இருந்தன. ஒன்றை ஒன்று மிஞ்சும் விதமாக அவை பளிச் சிட்டன.

''மேடம் நீங்க சொன்ன இந்த டிசைன் ரொம்ப நல்லா வந்திருக்கு'' என்ற ஒரு ஆர்ட்டிஸ்ட் கூப்பிட்டார். வெள்ளை வர்ணத்தை அடிப்படையாகக் கொண்டு சாக்லேட் வர்ணப் பூக்கள் மின்னிய அந்த அழகான டிசைன் மனதைக் கொள்ளை கொண்டது.

''தொழிற்சாலை ஆரம்பித்து முதல் தீபாவளி வர இருக்கே. நம் திறமை முழுசும் காட்ட வேண்டிய நேரம். அதுதான் இந்த மாதிரி அசுர உழைப்பு எனக்கும் ரொம்ப டென்ஷன். வீட்டுக்குப் போகவே தோன்றவில்லை.''

''உங்களைப் பார்த்து எனக்கு பொறாமையா இருக்கு. அப்பா எப்ப பார்த்தாலும் உங்களைப் பத்தியே புகழ்ந்து பேசறார். நான் தீனி திங்கிறதுக்குத்தான் லாயக்காம். உங்கிட்டே என்னை டிரெயினிங் அனுப்ப போறாராம்'' அஜய் சொன்ன போது அவளுக்கு சிரிப்புத்தான் வந்தது.

''நானே இன்னும் சரியா என்னை வெளிப்படுத்திக் கொள்ளலே. நான் நினைச்சுக்கிட்டிருக்கிற 'எய்மை' இன்னும் என்னால எட்ட முடியலே அஜய்... அது ஒரு கனவு. கற்பனையா மனசிலே உருவாகியிருக்கு. உங்க எல்லார் உதவியும், ஆசியும் இருந்தா என்னால அதை சுலபமா எட்ட முடியும்.''

''அது என்னதான் கற்பனைன்னு சொல்லுங்களேன்.'' அவள் ஒரு நிமிடம் பரந்த ஆகாயத்தைப் பார்த்தாள். கண்களில் தீரம் மின்னியது. ''இந்த இடத்தையே பெரிய தொழிற்பேட்டையாக்கணும். பத்தாயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் விதமா அது உருவாகணும். எல்லோருக்கும் குடியிருக்க வீடு, பள்ளிக்கூடம், ஆஸ்பத்திரி, முதியோர் இல்லம், கல்யாண மண்டபம், பால் பண்ணை கட்டணும். இந்த இடம் எப்பவும் கலகலன்னு மனிதர்களின் அசைவுகளோடு இருக்கணும். இது எங்க அப்பாவோட கனவு. என் காலத்திலாவது இது நடக்கணும். இந்தத் தொழிற் பேட்டை எங்க அப்பா பேரால நடக்கணும்.''



அஜய் சிலிர்த்துப் போனான். எத்தனை பேர் இப்படி சிறந்த எண்ணத்தை நடைமுறை செயலாக்கத் தயாராக உள்ளார்கள். நல்ல மனம் இருந்தால் எதுவும் சாத்தியமாகும்.

''கையை நீட்டுங்க மேடம். என்னோட உதவி எப்பவும் உங்களுக்கு உண்டு. அம்மா டிபனுக்கு கூட்டிக்கிட்டு வரச் சொன்னாங்க.. போகலாமா?''

''ஆமா.. நான் கூட முக்கியமான விஷயத்தை மறந்திட் டேன். கிளம்பலாம்.'' பின்னால் வந்த சேகரிடம் சொல்ல வேண்டியவற்றை சொல்லிவிட்டுக் காரில் ஏறினாள்.

## 17

தோட்டத்தில் ரோஜா பதியங்களைப் பார்த்துக் கொண்டிருந்தாள் மாயாதேவி. தங்கள் வீட்டில் ரோஜா இப்படி வளர்வதில்லை என்ற குறை அவளுக்கு எப்போதும் உண்டு. கந்தனின் கைவண்ணம் என்று மன்மோகன் சொல்லிக் கொண்டே இருப்பார். அத்தை மெதுவாக வெளியே வந்தாள். மாயாதேவியிடம் தன்னை எப்படியோ அறிமுகம் செய்து கொண்டாள். அவர்கள் சகஜமாகப் பேச ஆரம்பிக்கும் முன்னே கண்டாஸா உள்ளே நுழைந்தது. அத்தை புற்றுக்குள் ஒடுங்கும் அரவம் போல மறைந்து விட்டாள்.

வெளியே போட்டிருந்த நாற்காலியில் உட்கார்ந்து பேசிக் கொண்டே அவள் வாயில்கேட்டையே பார்த்துக் கொண்டி ருந்தாள். மாயாதேவி சாப்பிடலாம் என்று கூப்பிட்டபோது கொஞ்சம் ஆகட்டும் என்று கூறி விட்டாள். கேட்டில் நுழைந்த

பைக்கைப் பார்த்ததும் முகம் பூவாய் விகசிக்க எழுந்து அவர்களை வரவேற்கப் போனாள்.

மாயாதேவிக்கும், அஜய்க்கும் அறிமுகம் செய்துவிட்டு உள்ளே அழைத்துச் சென்றாள். சாப்பாட்டு மேசையில், அவளே பரிமாறினாள். அகல்யா வியப்பில் விரிந்த விழிகளை இமைக்கவும் மறந்தாள். சுடச்சுட தோசை வந்தபோது அஜய், 'டாக்டருக்கு வையுங்க மேடம்'' என்றான். ''வேண்டாம்.. நான் கொஞ்ச நாளா தோசை சாப்பிடறதில்லே'' என்ற பதிலால் அவள் நிமிர்ந்து பார்த்தாள். இருவருக்கும் அந்த இன்பமான தினம் கண்ணில் நிழலாடியது. ஒருநிமிடம் தவிப்பாகியது. மறுகணம் இருவரும் சமாளித்துக் கொண்டனர்.

மாயாதேவி புறப்பட்டு திருமண வீட்டிற்குப் போனாள். அஜயும் அவளோடு சென்றுவிட்டான். அதன் பின் யாரையுமே அனுமதிக்காத தன்னறைக்குள் அவர்களை அழைத்துச் சென்றாள். ''என்ன அகல்யா, பேசவே மாட்டியா, ஏன் என்னைப் பார்த்தா பயமா இருக்கா?'' என்று சிரிப்புடன் வினவினாள். அகல்யா தடுமாறினாள். ''அப்படியில்லே, பிரமிப்பா இருக்கு. கைகூப்பி கும்பிடணும் போல இருக்கு.''

சிரித்துக் கொண்டே அலமாரியைத் திறந்தாள். விலை உயர்ந்த புடவைகள் கொண்ட பெரிய பார்சலைக் கையில் எடுத்தாள். லாக்கரை திறந்து நகைப் பெட்டி ஒன்றையும் கொடுத்தபோது அகல்யா அவனைப் பார்த்தாள்.

''என்னம்மா.. உங்கண்ணனைப் பார்க்கிறே.. ஓஹோய்யா உங்கம்மாவுக்கு பிடிக்காதோன்னு பார்க்கறியா? இதெல்லாம் சும்மான்னு யார் சொன்னா? கடன்னு வச்சுக்குங்க... கடனை அப்புறமா அடைச்சிடுங்க.''



அவர்களின் தனிமைக்கு வசதியாக அகல்யா இங்கிதமாக பால்கனி பக்கமாகப் போய் விட்டாள்.

''இப்படியே மேலே மேலே என்னை அடிமையாக்கிடறதா எண்ணமா டார்லிங்?''

''இந்த ஒரே ஒரு வார்த்தைக்கு நான் கொடுத்ததெல்லாம் ஈடாகுமா? இதெல்லாம் உங்களதுதானேங்க..''

''பேச்சில ஜெயிக்க முடியுமா... அப்படியே வர்ற வேகத்துக்கு..'' கண்ணின் காதல் மின்ன அவன் சொன்னபோது அவள் உல்லாசமாகச் சிரித்தாள். ''என்னமோ செய்யப் போறதா போனில் வீரம் பேசினீங்க..'' அவன் மெல்ல அருகே வந்தான். ''ஒரு நாளைக்குத் தனியா வந்து அந்த வீரத்தைக் காட்டறேன்'' என்று முணுமுணுத்தான். அவளுக்கு வெட்கமாகி விடடது. 'சீ' என்று செல்லமாக சிணுங்கினாள். இண்டர்காம் கூவியது.

அகல்யாவை அழைத்து பார்சலைக் கையில் திணித்தாள். அகல்யா அண்ணனைப் பார்த்தாள். அவன் தலையசைக்க எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டாள். சட்டென அவள் கன்னத்தில் முத்தமிட்டு விட்டு காதில் 'போய்ட்டு வரேன் அண்ணி' என்று சொன்னாள்.

மளமளவென படிக்கட்டில் இறங்கியவளைக் கண்டு அவன் ஒரு நிமிடம் திகைத்துப் போனான். ''என்ன தைரியம் பார்த்தீங்களா? அவளுக்கு. என் ஜான்ஸி ராணியோட பட்டுக் கன்னத்தில் முதல் முதலா அவ முத்தம் குடுத்திட்டுப் போயிட்டாளே..?''

''அசடு வழியுது.. வாங்க பேசாம'' இருவரும் ஒன்றாக படியிறங்கி வருவதை அத்தைப் பார்த்தாள். ஏற்கனவே

பலவித யூகங்களில் இருந்தவள் சந்தேகமற புரிந்து கொண்டாள். ஏனோ பொறாமையும் வயிற்றெரிச்சலுமாக வந்தது, விருட்டென்று அறைக்குள் நுழைந்தாள்.

ஹாலில் உட்கார்ந்து ஏதோ பேசிக் கொண்டு இருந்த போதே ஆடிட்டர் உள்ளே நுழைந்தார். அகல்யாவோட இருட்டு நேரத்தில் பைக்கில் போக வேண்டாம் என்று கூறிவிட்டு காரில் அனுப்பினாள்.

அகல்யா சட்டென நெகிழ்வுற்றாள். ''மேடம்தான் எத்தனை நல்லவங்க. இவங்க எனக்கு அண்ணியா வந்தா எவ்வளவு நல்லாயிருக்கும்.'

''சத்தமா பேசாதே. விஷயம் வெளியே தெரியறதை நானோ, அவங்களோ விரும்பலேம்மா. அதனால நீ கவனமா இருக்கணும். உன் வீட்டுக்காரருக்குக் கூட சொல்லிட வேணாம்.''

அப்பாவும் அம்மாவும் சாப்பிடாமல் காத்திருந்தார்கள். கையில் பார்சலுடன் நுழையும் மகளை அம்மா வியப்புடன் பார்த்தாள். விலை உயர்ந்த புடவைகளையும், நகை செட்டையும் பார்த்துவிட்டு சட்டென எரிச்சலுற்றாள். ''இதையெல்லாம் உன் மாமியார்கிட்டே காட்டு. அடுத்த தடவை வரும்போது கார் வாங்கிக்கிட்டு வரச் சொல்லப் போறா..''

சீப் மறுநாள் ஓபி முடிந்து வரும்போது அடுத்த வாரம் குறிப்பிட்ட அறுவை சிகிச்சை இருப்பதை நினைவூட்டினார். அவன் மிகவும் தீவிரமாக தயாராக கிளம்பினான். அவளுக்கு போன் மூலம் விஷயத்தைச் சொன்னபோது மிகவும் சந்தோஷப்பட்டாள். இதயத்தில் மாற்று வழி அறுவை சிகிச்சையில் வெற்றி பெற்று வர வேண்டும் என்றும் அப்படி



வந்தால் என்ன பரிசு கேட்டாலும் தருவதாகவும் சொன்னாள். மனது குதியாட்டம் போட அவன் கனவுகள் கண்டான். மறுநாள் அந்த முக்கிய நாள்.

அவளிடம் நேரில் சொல்லிவிட்டு வர வேண்டும் என்று மனம் துடித்தது. மாலை மயங்கி இருள் வரத் தொடங்கும் முன்னிரவு. ஏழு கூட மணியாகவில்லை. உடனடியாக தொழிற்சாலைக்குப் போனால் பேச முடியாவிட்டாலும் அந்த முகத்தையாவது பார்த்துவிட்டு வரலாம். வில்லிலிருந்து புறப்பட்ட அம்பு போல பைக் பறந்தது. பரிசு தருவேன் என்று சொன்னதுதான் நினைவிற்கு வந்தது. எச்சரிக்கை விளக்கையும், மனது தடுத்ததையும் மீறிய வேகம் எதிரில் வந்த லாரியின் மோதலில் முடிந்தது.

## 18

கையில் பிடித்திருந்த பால் டம்ளரைக் கீழே தவறியது என்னவோ மதியத்திலிருந்தே எடுக்கும் பொருட்கள் எல்லாம் கை தவறியது. மனது வேலையில் பதியவில்லை. அவன் நினைவு அதிகமாக வந்தது. மேசையிலிருந்த காலண்டரில் பார்வை தற்செயலாகப் பட்டது. அட.. நாளைக்கு தானே அந்த முக்கியமான அறுவை சிகிச்சை என்று சொன்னான்...

போனில் பேசிக் கூட மூன்று நாளாகி விட்டது. உடனே பார்க்க வேண்டும் என்று தோன்றியது. எதிரில் மேசையைப் பார்த்தாள். நெஞ்சளவு பைல்கள் நிறைந்திருந்தன. தீபாவளி நெருங்கி விட்டதால் வேலைகள் அதிகமாகின. ஏனோ

ஆபீஸிலிருந்து அவனோடு போனில் பேச பிடிக்கவில்லை. நேரில் பேசுவதை விட போனில் வசதியாக இருக்கிறது. நாணமும், வெட்கமும் பேச்சைத் தடுப்பதில்லை. அவன் அழகு முகத்தைப் பார்த்து மயங்கிப் பேச வருவதை மறந்து விட்டுத் தடுமாறுவதும் கிடையாது. ஒருவேளை சற்றே கொஞ்சல் பேச்சாக இருந்து விட்டால் பிரச்சினையாகி விடும் என்று அவளுக்குத் தயக்கமாகவும் இருந்தது.

தீபாவளிக்கு முதல் வாரம் தொழிற்சாலையில் ஒரு விழா நடப்பது வழக்கம். புதிய தொழிற்சாலையும் சேர்ந்து விட்டதால் விழா பிரம்மாண்டமானதாகக் கொண்டாட்டம் இருந்தது. ஒவ்வொரு தொழிலாளிக்கும் தித்திப்பு பார்சல் ஒன்றும், பட்டாசு பார்சல் ஒன்றும் வழங்கப்படும். இந்த ஆண்டு மன்மோகன் குடும்பத்தாரை அழைத்து அவர் கையால் பரிசுகளை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

''ஊகும்'' இன்னிக்கும் வீட்டுக்குப் போக ரொம்ப நேரமாகி விடும். காலையில் முதல் வேலையாக போனில் பேசி விட்டுதான் மறுவேலை.''

மறுபடி பைலை பிரித்துக் கொண்டாள். அறைக்கு வெளியே ஏக பரபரப்பு.. சேகரும், ஆபீஸ் பையனும், தடுக்கத் தடுக்க யாரோ உள்ளே வேகமாக ஓடி வந்தார்கள். கலைந்த தலையும் ரத்தமாய் சிவந்த கண்களுடன் உள்ளே ஓடி வந்தது அகல்யா. அந்தக் கோலத்தில் அவளைக் கண்டதும் உயிரே நடுங்கி விட்டது. ''என்ன அகல்யா?''

''அண்ணனுக்கு ஆக்ஸிடெண்ட் ஆகிட்டுது மேடம். ரொம்ப, ரொம்ப சீரியஸா ஆஸ்பத்திரியில் இருக்கார்.''



கையிலிருந்த பைல் கீழே சிதறியது. தன்னிச்சையாக எழுந்து விட்டாள். சேகரும் மற்ற கிளார்க்குகளும் அகல்யாவை வெளியே அப்புறப்படுத்த உள்ளே ஓடி வந்தார்கள். அகல்யா கதறினாள். ''மேடம் எங்களுக்கு என்ன செய்யறதுன்னே தெரியலே. நீங்க வாங்க ப்ளீஸ்.''

மற்றவர்கள் எதிரில் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்வது மிகவும் பிரயத்தனமாகியது. சட்டென சுதாரித்துக் கொண்டு ''ஜி.எம். சார் நான் ஹாஸ்பிட்டல் வரைக்கும் போயிட்டு உடனே வந்துடறேன்'' என்று போட்டது போட்டபடி கிளம்பினாள். சேகர் பின்னால் ஓடி வந்தான்.

காரில் போகும்போது பேச்சு மறந்து போனது. அமைதியாக உட்கார்ந்திருந்தாள். மனதுள் பிரளயம் பொங்கியது. கண்ணீர் இதயச் சுவர்களில் மோதி, மோதி வெளிவரத் தவித்தது. எதற்கும் கலங்காத மனம் தவிக்க ஆரம்பித்தது.

''அப்பா.. நீங்கள் தந்த வாழ்வின் முடிவு இப்படி முடிய வேண்டுமா, என்னுடைய வழக்கமான துரதிர்ஷ்டம் தன்னுடைய முதல் அடியை வைத்து வந்து விட்டதோ. இதுதான் நான் அனுபவித்த சந்தோஷங்களின் விலையா? அவரை இழந்து விட்டு நான் வாழ முடியுமா? கடவுளே இதுவரை எனக்காக எதுவும் கேட்டதில்லை. இன்று முதல் முதலாகக் கேட்கிறேன். அவரைக் காப்பாற்று.''

மேலும், மேலும் தனக்குள் தவிக்கும் முன் கார் நர்சிங் ஹோமில் நுழைந்தது. உள்ளே நுழையும் போதே அவனுடைய அம்மாவும், அப்பாவும் ஆபரேஷன் தியேட்டர் வாசலில் உட்கார்ந்திருப்பது தெரிந்தது. நேராக டாக்டர்களின் அறைக்குச் சென்றாள். அங்கிருந்த டாக்டர்களிடம் அவனது நிலையைக்

கேட்டாள். ஆபரேஷன் நடப்பதாகவும் நிலைமை மோசம் என்றும் பெரிய டாக்டர் வெளியே வந்தால் உண்மை தெரியும் என்றும் கூறினார்கள்.

அகல்யாவை அம்மா திட்டுவது கேட்டது. ''எதுக்குடி அவங்களை கூப்பிட்டுக்கிட்டு வந்தே? நீ எங்கே காணோம்னு தவிச்சா இந்த வேலையா பண்ணியிருக்க?''

காதில் விழுந்ததும் விழாத மாதிரி அந்த வராண்டாவில் ஜன்னல் மீது சாய்ந்துக் கொண்டு நின்றாள். பெரிய டாக்டர் வெளியே வரும்போது மூன்று மணி நேரம் முடிந்து விட்டிருந்தது. அதுவரையிலும் வாயைத் திறக்காமல் அசையாமல் நின்றிருந்தாள். பெரிய டாக்டர் யாரையும் பார்க்காமல் விறுவிறுவென தன்னறைக்குப் போய்விட்டார்.

''குட் ஈவினிங் டாக்டர்'' என்ற குரலில் அவர் நிமிர்ந்து பார்த்தார். கண்கள் லேசாகக் கலங்கியிருந்தன. எழுந்து நின்று வரவேற்றார். ''வாங்க மேடம், எதுவும் அவசரம்னா போன் பண்ணியிருந்தா வந்திருப்பேனே..''

''நோ.. நோ... எனக்கு எதுவும் இல்லை டாக்டர்.. டாக்டர் ஆர்.எம்.முக்கு எப்படி இருக்கு. ஏதாவது ஹெல்ப் வேணும்னா சொல்லுங்க சார்.''

டாக்டர் ஒரு நிமிஷம் மவுனமானார். பின்னர் கண்ணாடியைக் கழற்றியபடி, ''ஆபத்தைத் தாண்டிட்டதா சொல்ல முடியாது. எங்களால் முடிஞ்சதை செய்திருக்கோம். தலையில் அடிபட்டதால் ரொம்ப பிளட் வேஸ்ட் ஆகிட்டுது. அவரோட பிளட் குருப் ஏபி நெகட்டிவ். ரொம்ப ரேர் குருப். பிளட் பேங்க்ல சொல்லியிருக்கேன். இன்னும் வந்து சேரலை. நினைவு வந்தவுடன் ஒரு ஊசி போட வேண்டியிருக்கு. ரொம்ப டிரை பண்ணினோம். ஆனா அப்னார்ச்சுனேட்லி அது நம்ம நாட்டிலேயே நாட் அவைய்லபிள். நியூயார்க்கில் தான் கிடைக்குமாம். அது வந்துட்டா ஓரளவுக்கு நம்பலாம். நல்ல கெட்டிக்காரன். மருத்துவத்துறையில் ரொம்ப எக்ஸலண்ட்டா வருவான். பாவம்.. எங்களால எதுவும் செய்ய முடியலே. பிளட்டாவது வருதா பார்க்கலாம்.''



அவள் அசந்து உட்கார்ந்துவிட்டாள். இது என்ன இவர் இப்படி சொல்லிட்டார். அந்த நேரம் மனோகர் பதட்டத்துடன் உள்ளே நுழைந்தான். ''பிளட்பேங்க்ல டோனர் மூலம் டிரை பண்ணாங்க சார். அவர் பெங்களூர் போயிட்டாராம். இன்னொருத்தருக்கு ஜாண்டிஸ் அட்டாக்காம். பெங்களூருக்கு மெசேஜ் பாஸ் பண்ணறதா சொல்லியிருக்காங்க. வேற விதத்திலேயும் டிரை பண்றதா சொன்னாங்க. எனக்கு பயமா இருக்கு சார்.''

பெரிய டாக்டர் முகத்தில் அந்த பயம் பிரதிபலித்து விட்டது. அவனைக் காப்பாற்ற வேணும். என்ன செய்வது.. இலக்கில்லாமல் மனதை அலைய விட்டவள் சட்டென பாய்ந்து எஸ்டிடி இணைந்த அந்த போனை எடுத்தாள்.

''ஹலோ.. அஜய்.. எஸ்.. நான்தான்.. ரொம்ப முக்கியமான மருந்து எனக்கு உடனடியாக வேணும். நியூயார்க்குலதான் கிடைக்கும்னு சொல்லிட்டாங்க. உங்க சிஸ்டர் வினுவோட ஹஸ்பெண்ட் மூலமா ஏற்பாடு பண்ண முடியுமா? பிளீஸ்... எனக்காக உடனே பண்ணுங்க. மும்பையில் இருந்து நீங்களே நேரில் கொண்டு வந்தா நல்லாயிருக்கும். ஓ..கே.. நாளைக்கு உங்களை மருந்தோட எதிர்பார்க்கிறேன்'' டாக்டர் தந்த மருந்தைப் பற்றின குறிப்பைச் சொல்லி போனைக் கீழே வைத்துவிட்டு மீண்டும் நம்பரைச் சுழற்றினாள்.

''ஹலோ டாக்டர் பட்டேல். நான்தான்.. ஐயம் பைன் எனக்கு ரொம்ப அவசரமா ஏபி நெகட்டிவ் குரூப் ரத்தம் ஐந்து பாட்டில் வேணும். உங்களால ஏற்பாடு செய்ய முடியுமா? ப்ளீஸ்.. உடனேயே அனுப்பினா நல்லாயிருக்கும். தேங்க்யூ..''

சேகரை அழைத்து பிளட்டுடன் வருபவரை வரவேற்று அழைத்து வர அவனையே விமான நிலையத்திற்குப் போகச் சொன்னாள்.

நிம்மதி பெருமூச்சுடன் ''டாக்டர் பிளட் இன்னும் நாலு மணி நேரத்தில் டெல்லியிலிருந்து வந்துவிடும். மருந்தும் நாளைக்கு மதியத்துக்கு மேலே வந்துடும்னு நினைக்கிறேன்'' என்றாள்.

நடக்காது என்று அவர்கள் நினைத்ததை விரல் நுனியிலேயே அவள் நிகழ்த்தி விட்ட அற்புதம் புரிந்தது. மளமளவென உத்தரவுகள் பிறப்பிக்கும் அந்த பிறவி ராணியை பெரிய டாக்டர் திறந்த வாய் மூடாமல் பார்த்துக் கொண்டிருந்தார். மனோகருக்கு ஏனோ ஒரு சின்ன சந்தேகம் வந்தது. ''அப்படியும் இருக்குமோ.. இவளா.. நம்ப முடியவில்லையே.. நடக்குமா?''

பெரிய டாக்டர், ''ரொம்ப தேங்க்ஸ் மேடம்.'' என்றபோது அவள் சட்டென மறுத்தாள். ''எங்க தொழிலாளிகளுக்கு டாக்டர் எவ்வளவு உதவி செய்தார். அதுதான் என்னோட நன்றியை இப்படிக் காட்டிக்கறேன். வேற ஒண்ணுமில்லை... டாக்டர் நான் அவரைப் பார்க்கலாமா?''

''இன்டென்ஸிவ் கேர் யூனிட்ல இருக்கார். தூர நின்னு பார்க்கலாம். டெஸ்ட் எல்லாம் முடிஞ்சிட்டது. நோ பால்ட் இன் த ஸ்கல் ஸ்கயகிராம். ஸ்கேனிங் ரிசல்ட்டும் ஒ.கே.தான். ஆனா



விபத்து நடந்த அதிர்ச்சியில் கோமா மாதிரி இருக்கு. மருந்து வந்து உடனடியா கொடுத்திட்டா நினைவு வரலாம்.''

இன்டென்ஸிவ் யூனிட்டுக்குள் நுழைந்தாள். வெள்ளை வெளேர் என்று இருந்த படுக்கையில் வெள்ளை துணி மூட்டைக்குள் கிடந்த உருவத்தைக் கண்டதும் அவளுக்கு தாங்க முடியவில்லை. பக்கத்தில் சென்று மடியில் படுக்க வைத்து முகத்தைத் தடவிக் கொடுக்க வேண்டும் போல் இருந்தது. ''கண்ணை முழிச்சுப் பாரு என் கண்ணே... குறும்பா சிரிச்சு பேசு...'' என்று கத்த வேண்டும் போலிருந்தது. மனதை அடக்கியவளாய் வெளியே வந்து வராண்டா ஜன்னலருகில் நின்று கொண்டாள். நிலவில்லாத வெறுமையான வானம் பயம் காட்டியது. ஆள் நடமாட்டமில்லாத நீள நீள வராந்தாக்கள் இரவின் அமைதியை இன்னும் அதிகமாக்கின.

வராந்தா படிக்கட்டில் அம்மாவும், அகல்யாவும் மழையில் நனைந்த பறவைகளாய் பயத்தில் அழுது கொண்டிருந்தனர். அப்பா பெரிய டாக்டரிடம் ஓடினார். அகல்யா அவளிடம் வந்தாள். ''மேடம் எனக்கு பயமா இருக்கு.''

அவள் சட்டென எரிச்சலுற்றாள். ''ஸ்.. நீ படிச்ச பொண்ணு. நீயே பயப்படலாமா? இந்த மாதிரி நேரத்துலதான் தைரியமும், விவேகமும் இருக்கணும். அழுதா உங்கண்ணன் எழுந்துக்கு வாரா? அழாம இருங்க. ப்ளீஸ். நீங்க அழுவறதுதான் எனக்கு பயத்தைத் தருது. உங்கண்ணனுக்கு ஒண்ணும் ஆகாது. நானிருக்கேன்.. பயப்படாம போய் உட்காரு.''

விடிவதற்கான அறிகுறிகள் கிழக்கில் தோன்றலாயின. திடீரெனத் தன்னெதிரே நின்றவனைக் கண்டு அவள் வியந்து போனாள். டாக்டர் பட்டேல்.

''குட்மார்னிங் மேடம். அவசரம்னு பிளட் கேட்டீங்க. உங்க குரல் எனக்கு என்னவோ பயத்தைக் கொடுத்தது. அதுதான் புறப்பட்டு வந்தேன். யாருக்கு என்ன உடம்பு எந்த விதத்திலாவது உதவ முடியுமா? பை தி பை இவர் மிஸ்டர் ஷியாம். ஏபி நெகட்டிவ் டோனர். எதுக்கும் இருக்கட்டும்னு அழைச்சுக்கிட்டு வந்தேன்.''

நன்றி சொல்ல முடியாமல் தவித்துப் போனாள். உடனடியாக பெரிய டாக்டரிடம் அழைத்துச் சென்று அறிமுகப்படுத்தினாள். டாக்டர் பட்டேலுடன் பெரிய டாக்டரும், மனோகரும் இன்டென்ஸிவ் கேர் யூனிட்டுக்குள் நுழைந்தார்கள். அவளுக்கு மனதில் சற்றே நிம்மதி ஏற்பட்டு விட்டது. சேகருக்கு பெரிய வியப்பு ஏற்பட்டது. மேடம் எதற்காக இப்படி அவதிப்படுகிறார்... புதிதாக இருக்கிறது.

''சேகர் டாக்டர் பட்டேலுக்கும், அவர் கூட வந்திருக்கும் மிஸ்டர் ஷியாமுக்கும் ஹோட்டல் இண்டர் நேஷனலில் ரூம் போட்டிருங்க. மிஸ்டர் மன்மோகன் குடும்பத்துடன் பத்து மணிக்கு வருவதாக உள்ளார். அவரை நீங்களே ரிஸீவ் செய்து வீட்டில் விட்டுவிட்டு பேக்டரிக்கு போய் ஆக வேண்டியதை கவனியுங்கள்.''

டாக்டர் பட்டேலும், பெரிய டாக்டரும் ரத்தம் கொடுப்பதை ஏற்பாடு செய்து விட்டு வெளியே வந்தார்கள். பட்டேல் அவள் முதுகில் தட்டிக் கொடுத்தார். ''கவலைப்பட ஏதுமில்லை. சீக்கிரம் நல்லாகிடுவார்.'' அவள் நிம்மதி பெருமூச்சு விட்டாள்.

''தேங்க்ஸ் டாக்டர். உங்களுக்கு இண்டர்நேஷனில் ரூம் போட்டிருக்கு. நீங்களும் மிஸ்டர் ஷ்யாமும் ரெஸ்ட் எடுங்க.



மருந்து வந்ததும் கார் அனுப்பறேன். சேகர் டாக்டரை அழைச்சுக்கிட்டு போங்க'' பட்டேலும் ஷியாமும் விடை பெற்றார்கள். எட்டு மணி நேரம் நின்று கொண்டே இருந்தாலும் முகம் என்னவோ பறிச்ச பூதான்.

தலையசைத்து அகல்யாவைக் கூப்பிட்டாள். ''உங்கண்ணனுக்கு ஒண்ணுமில்லே. எல்லோரும் நிம்மதியா வீட்டுக்குப் போய் குளிச்சிட்டு சாப்பிட்டுட்டு வாங்க, நீங்க வந்தப்புறம் நான் கிளம்பறேன்.''

கிளம்ப மறுத்த அம்மாவை அப்பா சமாதானப்படுத்தி அழைத்துச் சென்றார். அவர்கள் சென்றதும் ஆயாசமாகக் கண்களை மூடிக் கொண்டாள். மனது மட்டும் அல்லோகலப் பட்டுக் கொண்டிருந்தது.

''விடமாட்டேன்.. உங்களை விடமாட்டேன். என் உயிரைக் கொடுத்தாவது காப்பாற்றுவேன் அன்பே..''

''பேட்டி'' என்ற குரல் அன்பாய் தடவியது. விழிகளை திறந்தாள். மாயாதேவியும், மன்மோகனும் நேராக வீட்டிற்குப் போகாமல் வந்திருந்தார்கள்.

''மருந்தோட மாப்பிள்ளையே புறப்பட்டு வர்றதா கேபிள் வந்திருக்கு. அஜய் மதியம் ரெண்டு மணிக்கு வந்திடுவான். நைட்லேயிருந்து இங்கேயே நின்னுக்கிட்டிருக்கேன்னு சேகர் சொன்னாரே.. வாம்மா... வீட்டுக்குப் போய் குளிச்சுச் சாப்பிட்டுட்டு வரலாம்'' மாயாதேவி கூப்பிட்டாள்.

''இல்லேம்மா. அஜய் வந்திடட்டும். நீங்க வீட்டுக்குப் போய் சாப்பிட்டு ரெஸ்ட் எடுங்க. சாயங்காலம் நான் வந்து அழைச்சுக்கிட்டுப் போறேன்.''

சேகரிடம் ஒரு மணிக்கே காரோடு விமான நிலையத்திற்குச் சென்று அஜயை அழைத்து வரும்படி கூறினாள். வரும்போது டாக்டர் பட்டேலையும் அழைத்து வந்துவிடும்படி கூறி அவர்களை கார் வரை சென்று வழியனுப்பினாள்.

டாக்டர்களும், நர்சுகளும் அவரவர் வேலையில் மிகவும் பரபரப்பாக இயங்கும் ஓபி முடிந்து ஓய்வெடுக்க வரும் நேரம். மனோகர் ரெஸ்ட் ரூமுக்குள் நுழைந்து தயாராக இருந்த காபியை கையில் எடுத்துக் கொண்டு ஜன்னல் வழியாகப் பார்த்தான். எதிர் வராண்டாவில் அவள் நின்ற இடத்தை விட்டு அசையாமல் இன்டென்ஸிவ் கேர் யூனிட்டின் வாசலையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவனுக்கு சந்தேகம் இன்றி புரிந்து விட்டது. "இவள்தான் அட.. அமுல் பேபி நீ இத்தனை அதிர்ஷ்டக்காரனா.. ம்... இந்த மாதிரி ஒரு உத்தமக் காதலி கிடைக்கும் போது உலகமே மறந்து போவது என்ன விந்தை.."

அவளைப் பார்த்தால் பாவமாக இருந்தது. காபியை ஒரு கோப்பையில் ஊற்றிக் கொண்டு கையில் மடிப்பு நாற்காலி ஒன்றை எடுத்துக் கொண்டு அவளருகே சென்றான். "குட்மார்னிங் மேடம், பணி பத்தாகுதே இந்தாங்க காபி... ப்ளீஸ்.. முதல்ல உட்காருங்க."

"குட்மார்னிங் டாக்டர்.. காபிக்கு என்ன அவசரம் ஹௌ இஸ் ஹீ... எனி இம்ப்ரூவ்மெண்ட்?"

"பிளட் கொடுக்க ஆரம்பிச்சுட்டதாலே பயம் கொஞ்சம் குறைஞ்சிருக்கு மேடம். மருந்து வந்துட்டா ப்ராப்ளமே இல்லை" அவளையே வைத்த கண் வாங்காமல் பார்த்தான்.

காதல் இத்தனை உயர்ந்ததா? அதற்கு அந்தஸ்து பேதம் கிடையாது என்று அவன் படித்திருக்கிறான். இதோ கண்ணெ



திரில் பார்க்கிறான். எத்தனைக்கு எத்தனை மென்மையானதோ அத்தனைக்கு அத்தனை எஃகு போல உறுதியானதும் கூட. இந்த தவ நிலையை இந்த உன்னத நிலையை கலைப்பது மிகவும் பாவம். அவளைத் தொல்லை செய்யாமல் அவன் விலகினான்.

அகல்யா கையில் பிளாஸ்குடன் வந்தாள். கொஞ்சம் தெளிவான முகத்துடன் வந்தவர்களை அவள் வரவேற்று மருந்து இரண்டு மணிக்கு வந்து விடும் என்று கூறினாள். அப்பாவும், அம்மாவும் உலகத்து கடவுளையெல்லாம் துணைக்கு கூப்பிட்டபடி உட்கார்ந்தார்கள். வெய்யில் முதுகைத் துளைப்பதைக் கூட பொருட்படுத்தாமல் நின்றவளுக்கு காபியைக் கொடுக்க அகல்யா எத்தனையோ முயன்றாள். காபியை மறுத்துவிட்டு கையிலிருந்த வாட்சைப் பார்த்தாள். "உங்களது ஓட்டை வாட்ச்.." என்று அவன் கேலி செய்வது கேட்டது.

ரெண்டு மணியானது. அஜய் இன்னும் வரவில்லை. அவள் தவித்துக் கொண்டிருந்தாள். மோசமான வானிலை காரணமாக பிளேன் ஒரு மணி நேரம் தாமதமாக வந்தது. மூன்று மணிக்கு அஜய் மருந்துடன் வந்தபோதுதான் உயிரே வந்தது. மருந்துடன் டாக்டர் பட்டேலும், பெரிய டாக்டரும் உள்ளே ஓட மனோகர் பின் தொடர்ந்தான்.

"அஜய்.. அஜய்.. தேங்க்ஸ்ன்னு சொல்றதெல்லாம் வெறும் வாய்ப்பேச்சு.. என் உயிர் உள்ளளவும் உங்களை மறக்க மாட்டேன்... நீங்க என்னைக் காப்பாத்திட்டீங்க அஜய்.." அவள் விழிகளில் நிம்மதிக் கண்ணீர் துளிர்த்தது.

CONNEMARA PUBLIC LIBRA

"என் மைத்துனனைக் காப்பாத்தறது என்னோட கடமை இல்லையா? உட்காரக் கூட இல்லாம, தண்ணிக் கூட குடிக்காம இப்படியே நிக்கணுமா? வாங்க சொல்றேன், முதல்ல இந்தக் காபியைக் குடிங்க.."

'வேணாம் அஜய். முதல்ல அவர் கண் விழிக்கட்டும். அப்புறம்தான் எதுவும் ப்ளீஸ். நீங்க புரிஞ்சுக்குவீங்கன்னு நம்பறேன்."

"ஓ..கே.." அதற்கு மேல் அஜய் வற்புறுத்தவில்லை. டாக்டர்கள் திருப்தியான முகங்களுடன் வெளியே வந்தார்கள். "இனிமேல் பயமில்லை மேடம். அனேகமாக நாளைக்கு நினைவு திரும்பிடும்னு நினைக்கிறேன்" டாக்டர் பட்டேலும், பெரிய டாக்டரும் மகிழ்வுடன் சொன்னபோது சிரிப்பு சின்னதாக எட்டிப் பார்த்தது. டாக்டரின் அனுமதியுடன் அவளும் அஜயும் உள்ளே போனார்கள்.

ரத்தம் சொட்டுச் சொட்டாக உடலுக்குள் இறங்கிக் கொண்டிருந்தது. வெளிறிக் கிடந்த அந்தப் பொன்முகம் அசையாமலிருந்தது. "உன்னைக் காப்பாற்றி விட்டேன் என்னுயிரே" என்ற மன ஆவேசம் வார்த்தைகளில் வெளி தெறித்து விடாமலிருக்க மிகுந்த பிரயத்தனம் எடுத்துக் கொண்டாள். அஜய் அவளைக் கையைப் பிடித்து வெளியே அழைத்து வந்து விட்டான்.

மனோகரிடமும், அகல்யாவிடமும்எந்த நேரமும் நினைவு வந்தாலும் தனக்கு போன் பண்ணச் சொல்லிவிட்டு வீட்டிற்குக் கிளம்பினாள். போகும் போதே டாக்டர் பட்டேலையும் ஷியாமையும் தொழிற்சாலை விழாவுக்கு அழைத்தாள்.

CONN



நின்று கொண்டே இருந்தது காலை செயலிழக்க வைத்தது தண்ணீர் கூட குடிக்காதது தலையைச் சுற்றி உடலைத் தவிக்க வைத்தது. ஆனாலும் மனதின் வலிமையும், முகத்தின் பூரிப்பும் மாறவே இல்லை.

வீட்டிற்குள் நுழையும்போதே அத்தை மாயாதேவியுடன் ஏதோ பேசிக் கொண்டிருப்பது தெரிந்தது. அவளுக்கு தமிழ் தெரியாது. இவளுக்கு இந்தி தெரியாது. ஆனாலும் தீவிரமாக பேசிக் கொண்டிருந்தார்கள். பத்து நிமிடத்தில் குளித்துக் கிளம்பி கீழே வந்தாள்.

பிரபா கொண்டு வந்த ஜூசை மறுத்து விட்டு, மாயா தேவியுடன் தொழிற்சாலைக்குப் புறப்பட்டவள் தன்னையும் கூப்பிடுவாள் என்று எதிர்பார்த்த அத்தை ஏமாந்து போனாள். முணுமுணுவென திட்டிக் கொண்டே இருந்தாள்.

காரில் போகும்போது மாயாதேவி, "பேட்டி உன் அத்தை சரியில்லை. என்னை யாரென்றே அவளுக்குத் தெரியாது. உன்னைப் பற்றி என்னிடம் தேவையில்லாதவற்றைக் கூறும் அவசியம் என்ன? திருமண வாழ்க்கைக்கு நீ கொடுத்து வைக்காதவள் என்று கூறி அஜய்க்கும், உனக்கும் திருமணம் பேச வேண்டாம் என்று சொல்லுகிறாள். இந்த மாதிரி சொந்தங் கள் நம்மை ஒட்டி உயிர் வாழ்ந்தாலும் நம்மை அழித்து விடும். கவனம்" என்று மென்மையாக கூறினபோது அவளுக்கு கோபம் வரவில்லை. மவுனமாக தலையாட்டினாள்.

தொழிற்சாலை அழகான விளக்கு அலங்காரத்தில் மின்னியது. தொழிலாளர்கள் மகிழ்ச்சியில் குதூகலமாக இருந்தார்கள். அவர்கள் மத்தியில் தன்னை லாவகமாய்

மறைத்துக் கொண்டு விருந்து நேரத்தில் அவளே ஓடி, ஓடி எல்லோரையும் உபசரித்துக் கொண்டிருந்தாள்.

விழா முடிந்து எல்லோரையும் வழியனுப்பி விட்டு அஜயோடு நர்சிங் ஹோமுக்குப் பறந்தாள். இன்னும் நினைவு திரும்பவில்லை என்று தெரிந்ததும் மவுனமாக ஜன்னலருகில் நின்று கொண்டாள். மவுனமே இந்த நேரம் நிம்மதியாக இருந்தது. அவனோடு பேசிய ஒவ்வொரு வார்த்தையையும் மனதில் கொண்டு வந்து படமிட்டுப் பார்ப்பது மட்டும்தான் சுகம் என்று தோன்றியது. கண்களை மூடிக் கொண்டாள். அகல்யாவுக்கு வியப்பாக இருந்தது. ''காதல் இத்தனை பெரிய விஷயமா?''

## 19

**சு**வரோடு சுவராக சாய்ந்திருப்பவளை, அகல்யா வியப்போடு பார்த்தாள். ''எத்தனை பெரிய பணக்காரி. விரல் அசைவில் அமெரிக்காவிலிருக்கும் மருந்தை வரவழைத்தாள். அவளது கட்டளையை தலைமேல் ஏற்று செயல்படுத்த உலகமே காத்திருக்கிறது. அவள் இந்த உயிரை உலுக்கும் குளிரில் இரண்டு முழு நாட்களாக பச்சைத் தண்ணீர் கூட குடிக்காமல், உட்காராமல் கிடக்கிறாள் என்றால் அவள் என் அண்ணன் மீது வைத்திருக்கும் காதல் எப்படிப்பட்டது. அண்ணன் இதற்கு அருகதையானவனா என்று சந்தேகமே வருது. கடவுளே அவளுக்காக என் அண்ணனை பிழைக்க வைத்து விடு.''

நான்குபுறமும் திறந்த வராண்டாவில் குளிர் காற்று அடித்தது. அஜய் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.



நிதானமான அமைதியில் நடக்க இருப்பது நல்லதாகவே இருக்க வேண்டும் என்று காத்திருந்தார்கள்.

திடீரென்று இன்டென்சிவ் கேர் வார்டுக்குள்ளிருந்து நர்ஸ் ஓடி வந்தாள். ''மேடம்.. டாக்டருக்கு நினைவு வந்துவிட்டது'' அத்தனை பேரும் ஓடினார்கள். அவள் மெல்ல பின்வாங்கினாள். உள்ளே அறையில் அவன் மெதுவாகக் கண் திறந்து, திறந்து மூடினான். பக்கத்தில் நின்றவர்களையும் வெளியே கண்ணாடிக்கு பின் நின்றவர்களையும் அடையாளம் கண்டு கொண்டான். அம்மா, அப்பா, அகல்யா, சீப், மனோகர்..''

அதன் பிறகு பரிசோதனைகள் முடிந்து ஸ்பெஷல் வார்டுக்கு அவன் கொண்டு வரப்பட்டபோது விடிந்து வெளிச்சம் உலகின் இருட்டைக் கழுவிக் கொண்டிருந்தது.

படுக்கையில் இருந்தவன் விழிகளை யாரும் அறியாமல் சுழல விட்டான். ''மேடம் வரவில்லையா?'' என்று கேட்கத் துடித்தான். ஏனோ அமைதியாகிறான். அவனது தவிப்பை அவள் ஜன்னல் வழியாகப் பார்த்துக் கொண்டிருந்தாள். இதுபோதும்.. யாரிடமும் சொல்லாமல் அஜயை கூப்பிட்டுக் கொண்டு வெளியேறினாள்.

உதிரிப்பூ வாங்கிக் கொண்டு அப்பாவின் சமாதிக்குச் சென்றாள். பூவைக் கொட்டி விட்டு காலடியில் மடிந்து உட்கார்ந்தாள். இரண்டு நாளைய ஜீவ மரணப் போராட்டம் நல்ல முறையில் முடிந்தது. எப்போதும் அப்பா அவனோடு இருந்து காப்பாற்றுங்கள்.. அரை மணி நேரத்துக்கும் மேலாக உட்கார்ந்து கிடந்தாள்.

வீட்டின் போர்டிகோவிலேயே மாயாதேவி குளுக்கோஸ் போட்ட ஜூசுடன் காத்திருந்தாள்.

''இப்ப குடிக்கலாமில்லே.. பேட்டி ப்ளீஸ்'' மன்மோகன் அவளைக் கெஞ்சினார். கையைத் தூக்கி ஜூஸை வாங்கிக் கொள்ள முடியாதவளாய் மாயாதேவி தோளில் சாய்ந்து சரிந்தாள் அவள்.

மெதுவாக கண் விழித்தபோது தன்னறையில் படுக்க வைக்கப்பட்டிருப்பது தெரிந்தது. டாக்டர் பட்டேலும், பெரிய டாக்டரும் எப்போது வந்தார்கள். மன்மோகனுடன் பேசிக் கொண்டிருந்தவர்கள் அவள் கண் விழித்தவுடன் அவளருகில் வந்தார்கள்.

பிரபாவும், வள்ளியும் ரத்தம் கட்டிப் போயிருந்த கால்களில் இளஞ் சூடான நீரில் நனைத்த துணியை ஒத்திக் கொண்டிருக்க, தலையில் ஒடிக்கோலனைத் தடவி அழுத்திவிட்டுக் கொண்டி ருந்தாள் மாயாதேவி.

டாக்டர் பட்டேல், ''என்ன மேடம் எப்படி இருக்கீங்க? ஏதாவது சாப்பிடுங்க'' என்று அன்பாகச் சொன்னார். அஜய் சுடச்சுட பால் கஞ்சியோடு வந்தான். ஸ்பூன் ஸ்பூனாக மாயாதேவி அதை ஊட்டினாள். மனது தைரியமாக இருந்தாலும் உடம்பு ஆயாசமாக வந்தது.

ஆனாலும் சமாளித்துக் கொண்டாள். கண் ஜாடையில் வள்ளியும், பிரபாவும் வெளியேறினார்கள். பெரிய டாக்டரிடம் ''நீங்க செய்த உதவிக்கு ரொம்ப நன்றி சார். டாக்டர் ஆர்.எம்.முக்கு செய்யற ட்ரீட்மெண்ட் எல்லாத்துக்கும் நான் பில் செட்டில் பண்ணிடறேன், ப்ளீஸ்.'' என்றாள்.

பட்டேலிடம், ''என் அப்பாவோட நீங்க கொண்ட நட்பை இன்னும் நினைச்சு இத்தனை தூரம் வந்தீங்களே டாக்டர். தேங்க்யூ வெரிமச். நாளைக்கு காலையில பிளைட்டுக்கு



ரெண்டு டிக்கெட் புக் பண்ணச் சொல்லியிருக்கேன்'' என்றபடி இண்டர்காம் அழுத்தி மேனேஜரிடம் பேசினாள். ஐந்தாவது நிமிடம் பிரபா கொண்டு வந்த கவரை வாங்கி அவரிடம் கொடுத்தாள்.

வாங்கிப் பிரித்தவர் அசந்து போனார். அவர் பெயருக்கு தொகை குறிக்காத செக் ஒன்றும், ஷியாம் பெயருக்கு இருபதாயிரம் ரூபாய்க்கான செக் ஒன்றும் இருந்தது. பட்டேல் சிரித்துக் கொண்டே தன் பெயருக்கான செக்கில் ரூபாய் ஒன்று என்று எழுதினார். பின்னர் விடைபெறும்போது அவளை கவனமாக இருக்கும்படிச் சொல்லி விட்டுப் போனார். பெரிய டாக்டரும் தலையசைப்பில் விடை பெற்றார். மாயாதேவியும், மன்மோகனும் அவளை ரெஸ்ட் எடுக்கச் சொல்லிவிட்டு கீழே சென்று விட்டனர்.

அவள் இலக்கில்லாமல் ஜன்னல் வழியே வானத்தைப் பார்த்தாள். மனமெல்லாம் அவனோடு இருக்க உயிர் அவனருகில் உட்கார்ந்து அவனைத் தடவி விட்டு 'வலிக் கிறதா' என்று கேட்க வேண்டுமெனத் துடித்தது. இனியும் இப்படியே இருந்தால் தாங்க முடியாதென்று அவள் கீழே இறங்கி வந்தாள்.

''என்ன பேட்டி எங்கே கிளம்பிட்டே?'' மன்மோகன் வியப்புடன் கேட்டார்.

'இன்னிக்கு தீபாவளி விற்பனைக்கு நாம் எடுத்த ஆர்டரின் பேரில் அனுப்பும் புடவைகள் போகுது. அதை நானே நேரில் சரிபார்த்து அனுப்பிட்டு ஒரு மணி நேரத்தில் வந்துடறேன்... நீங்களும் கூட வாங்களேன்.''

வேன்கள் நின்று கொண்டிருக்க எல்லோரும் தயாராக இருந்தார்கள். கண்டாஸாவிலிருந்து சிரிப்புடன் இறங்கும் அவளைக் கண்டதும் கைதட்டி வரவேற்றார்கள். வகை வகையான புடவைகள் நிறைந்த இந்த பண்டல்கள் தான் அந்த தொழிற்சாலையின் எதிர்காலத்தை நிர்ணயிக்கப் போகின்றன. கடவுளை வேண்டி திருஷ்டி கழித்ததும் பெரும் ஆரவாரத் துடன் வேன்கள் நகர்ந்தன. வீட்டிற்குத் திரும்பியவள் அமைதியாக தன்னறையில் முடங்கிக் கொண்டாள்.

அவனது நினைவைத் தரும் பொருள் எது எங்கே இருக்கிறது. கைவிரலில் தட்டுப்பட்ட மோதிரம் நானிருக் கிறேன் என்றது. அவன் உருவம் இதயத்திலிருந்து நான் இருக்கிறேன் என்றது. ரத்த நாளங்கள் அவன் பெயரில்தானே பட்டா கொண்டிருக்கின்றன. அவனோடு இருக்க வேண்டும் என்ற எண்ணத்தை மிகவும் கஷ்டப்பட்டு மாற்றிக் கொண்டு வலுக்கட்டாயமாக விழிகளை மூடிக் கொண்டாள்.

இரவும், பகலும் மாறி மாறி வந்து சென்றன. நினைவு திரும்பியும் களைப்பும், அலுப்புமாகத்தான் இருந்தது. தூக்கத்திற்கு மருந்து கொடுத்து, கொடுத்து தூங்க வைத்ததில் இரவா பகலா என்பதே தெரியவில்லை. நினைவு வரும் ஒரு சில வினாடிகளில் கூட அவன் கண்டது அம்மா... அப்பா வோடு காலடியில் அகல்யாவைத்தான். யாரைத் தேடி அவன் விழிகள் தோற்றன என்பது குறிப்பால் தெரிந்தாலும் யாரும் பதில் சொல்லவில்லை.

எதிரிலிருந்த காலண்டரைப் பார்த்தான். கிட்டத்தட்ட பத்து நாட்களாகி விட்டது புரிந்தது. வரவில்லையே, மேடம் வரவில் லையே, பார்க்கணும் என்ற எண்ணமே வரவில்லையோ, நான்



மட்டும்தான் இப்படி தவிக்கிறேனா? மறந்து போறது இத்தனை சுலபமா? விழிகளில் நீர் வழிந்தது.

''இன்னிக்குத்தான் முகம் தெளிவா இருக்கு. என்ன பயம் காட்டிட்டே நீ'' மனோகர் கலகலவெனப் பேசியபடி நாற்காலி யில் உட்கார்ந்தான். அம்மா அவனிடம் சொல்லிக் கொண்டு வெளியே போனாள்.

''டேய் அமுல் பேபி. உன்னைப் பார்த்தா எனக்கு பொறாமையா இருக்குடா?''

''என்னைப் பார்த்தா பொறாமைப்படறே. நான் அதிர்ஷ்டம் இல்லாதவன்டா, சில பேருக்கு மறந்து போறது எத்தனை சுலபமா இருக்கு தெரியுமா?''

மனோகர் அவனையே பார்த்தான். ''நியூயார்க்குல மட்டும் கிடைக்குற மருந்து விரல் நுனியாலே இந்தியாவுக்கு இருபது மணிநேரத்துல வர்றதும், உன்னோட ஏபி நெகடிவ் குரூப் பிளட் டெல்லியிலிருந்து ஒரு டோனரோட நாலு மணி நேரத்தில் மெட்ராஸ் வர்றதும் சுலபம்னா மறந்து போறதும் சுலபம்தான். இப்படிப்பட்ட உன்னதமான அன்பு எனக்கெல் லாம் கிடைக்கலியடா.. வாத்து மடையா நீதானேடா.. அந்த அதிர்ஷ்டம் பண்ணியிருக்கே...''

''மனோகர்...'' அவன் தவித்தான்.

''எஸ்.. ஷீ.. ஷீ.. ஷீ. ஒன்லி டிட் இட். உன்னை அறைக்குள் வந்து பார்த்து வேற ஏதாவது பிரச்சனை ஆகிடக் கூடாதுன் னுதான் தினமும் ஜன்னல் வழியாக பார்த்திட்டுப் போயிட றாங்க..'' அவன் தவிக்க தவிக்க அவனுக்கு நினைவு வரும் வரை இரவையும் பகலையும் கவனிக்காது ஊண், உறக்கம் துறந்து

பனியையும் வெயிலையும் தாங்கி அவள் நின்ற தவக் கோலத்தை மனோகர் சொல்லியபோது அவன் மலைத்துப் போனான்.

இந்தப் புனிதக் காதலுக்குத்தான் அருகதையா என்னும் எண்ணம் அவனுக்குள் பொங்கியது. உடனே அவளைப் பார்க்கணும். அந்தப் பூப் பாதங்களை முத்தமிட வேண்டும். எதற்காக சாப்பிடாமல் இருந்தாய் என்று கன்னத்தில் தட்ட வேண்டும். உன்னை உட்காராமல் நிற்க வைத்ததற்காக தோப்புக்கரணம் நான் போடுகிறேன் எண்ணிக் கொள் என்று கூற வேண்டுமென்று மனம் தத்தளித்துப் பதைத்தது.

அவன் அழக் கிளம்பும் நிலையில் பழக்கப்பட்ட கண்டாஸாவின் ஹாரன் ஒலி கேட்டது. வழக்கம் போல் ஜன்னலருகில் வந்தாள். அவன் விழித்து உட்கார்ந்திருப்பதைக் கண்டு உள்ளே நுழைந்தாள். அவளைப் பார்த்தபோது அவன் அயர்ந்தே போனான்.

உடம்பு எப்படி இருக்கிறது என்று கேட்க நினைத்து அவள் தலையை அசைத்தாள். நன்றாக இருக்கிறேன் என்று அவன் தலையை அசைத்தான்.

அஜயும், மனோகரும் வெளியே போய் வராந்தாவில் நின்று கொண்டார்கள். அவள் அருகில் சென்று நின்றாள். அவள் கையை எடுத்து தன் நெஞ்சில் வைத்துக் கொண்டு அவள் நெஞ்சில் சாய்ந்து கொண்டான். அவனைக் குழந்தையை அணைப்பதைப் போல அணைத்துக் கொண்டாள். காதல் கனிந்து, கண்ணீர் பிறந்து அவன் தலையை நனைத்து அவள் நெஞ்சையும் நனைத்து அவர்கள் சொந்தத்தைச் சொல்லியது.



கதவை மென்மையாகத் தட்டும் சத்தம் கேட்டது. எல்லோரும் கூட்டமாக உள்ளே நுழைந்தார்கள். ஒரு நிமிடம் யாரும் பேசவில்லை. இந்த இக்கட்டான சூழ்நிலையில் அம்மாவின் மனோபாவம் எப்படி மாறும் என்று பய உணர்வு மட்டும் அவர்களின் விழிகளில் தெரிந்தது.

அம்மா நேராக உள்ளே சென்றாள். அலமாரியைத் திறக்கும் சத்தம் கேட்டது. வேகமாக வெளியே வந்து தன் கையிலிருந்த குங்குமத்தை அவளுக்கு வைத்து விட்டாள். அவள் கையை அவன் கையோடு சேர்த்தாள்.

"இவன் இப்ப மறுபிறப்பு எடுத்திருக்கிறான். உன்னாலதான் இந்தப் பிறப்பு. இவன் இனிமேல் உனக்குத்தான் உரியவன். உன்னுடையதை உன்கிட்டே ஒப்படைக்கத்தான் காத்திருந்தேன். இனிமேல் இவனோட வாழ்வும் சந்தோஷமும் உன் கையில்தான் இருக்கு."

அந்தக் கணங்கள் உன்னதமானவை. அவர்கள் இருவருக்கு மட்டும் உரியவை. இணைந்த கைகள் இன்னும் இறுக்கிக் கொண்டன. நாணத்தில் அவள் செந்தாமரையாய் சிவந்து சிலிர்க்க, அவன் மெய் மறந்து மயங்க அத்தனை பேரும் தங்களையும் மீறி கைதட்டினர்.

## 20

அம்மா தானே அனுமதி கொடுத்து விட்டாலும், திருமணத்திற்கு ஜாதகம் பார்க்க வேண்டும் என்பதும் அவளது விருப்பமாக இருந்தது. ஜாதகங்கள் பொருந்தி இருந்தாலும் ஒரு வருடம் சென்று திருமணம் வைத்துக்

கொள்வதுதான் நல்லது என்று குடும்ப ஜோதிடர் சொல்லி விட்டார்.

பெரியவர்கள் அனுமதி கிடைத்து விட்ட பின்னே அவனுக்கு பொறுமை இல்லாமல் போயிற்று. தனக்காக அவள் பட்ட வேதனைகளை அறிந்த பின்னும் அவள்பால் கொண்ட காதல் இன்னும் அதிகமாயிற்று. இரவும் பகலும் அவளைத் தவிர வேறு எண்ணமே இல்லாமல் போயிற்று.

நேரத்துக்கு பேசியது போக நேரம் காலம் இல்லாமல் போனில் பேசுவான். எதிரில் யாரும் இருந்து விட்டால் அவள் 'ராங் நம்பர்' என்று கூறிவிடுவாள். அதன் பின் அவளே மீண்டும் போன் செய்வாள். அதுவரையிலும் நெருப்பு மீது நிற்பது போலிருக்கும். அவள் அலுவலகக் காரியமாக மும்பை, டெல்லி என்று போகும் போது மூன்று நாட்கள்தான் ஒப்புக் கொள்வான். அதற்கு மேல் ஒரு நாள் ஆகி விட்டால் கூட தவித்துப் போவான். அப்பா ஜாடையாக எடுத்துக் கூறினார். அம்மா வெளிப்படையாகவே கூறி விட்டாள். "நீ ஆண், அவ பெண், உன்னால எந்தவிதத் தொல்லையும் வந்திடாம கவனமா இரு தம்பி" அவனுக்குத்தான் முடிய வில்லை.

மதிய வேலைகள் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டி ருந்தன. அலுப்புடன் கையிலிருந்த பைலை மூடினாள். காலையில் அவளைப் பார்க்க வந்த மனோகர் கூறிய வார்த்தைகள் மனதை வண்டாய்த் துளைத்தன.

"மேடம், பல நாளா சொல்லணும்னு நினைச்சு தயங்கினதை உங்ககிட்டே சொல்றேன். நம்ம ஆர்.எம் முந்தி மாதிரி வேலையில் கவனம் செலுத்தறது இல்லை. நைட்டூட்டிக்கு



பொதுவா வர்றதில்லை. அடிக்கடி லீவு போட்டுடறார். நேத்து அவரோட வார்டில் இருந்த பேஷண்டை கவனிக்காம வீட்டுக்குப் போயிட்டார். காலையில அந்த பேஷண்ட் இறந்து போயிட்டார்.

ரெண்டு வாரத்துக்கு முன்னே வாஷிங்டனிலிருந்து புற்று நோய் அறுவை சிகிச்சையில் சிறப்பு பயிற்சி பெற அழைப்பு வந்திருக்கு. மூணு வருட கோர்ஸ். யாருக்குமே சுலபத்தில் இந்த வாய்ப்பு கிடைக்காது. ஆர்எம் ரொம்ப ஆர்வமா இருந்தார். இப்ப பிடிக்கலியாம். போக மாட்டாராம். இதைக் கூட யார் கிட்டேயும் சொல்லாமல் இருக்கார். நான் போஸ்ட் பண்றதா சொல்லி அவரோட மறுப்பு கடிதத்தை வாங்கிட்டு வந்துட்டேன்.

மருத்துவத் துறையில் ரொம்ப பெரிய ஆளா வர்றதுக்கு வாய்ப்பு இருக்கு. இந்த நேரத்தில் இப்படிக் கவனச் சிதைவு ஏற்பட்டு விட்டது ரொம்ப துரதிர்ஷ்டம். நாளைக்கு ஒரு ஹார்ட் பைபாஸ் சர்ஜரி இருக்கு. எப்பவும் சீப் இவரைத்தான் கூட வச்சுக்கறது வழக்கம். காலையில் செத்துப் போன அந்த பேஷண்ட்டோட மரணம் அவரால் தாங்கிக்க முடியலை. அதனால இவரை வேணாம்னு சொல்லிட்டார். உங்களைத் தவிர அவருக்கு அட்வைஸ் பண்றதுக்கு இல்லை ப்ளீஸ்.."

மனோகர் போன பின் வெறுமையாக இருந்தது. தண்ணீர் குடித்து ஆசுவாசப்படுத்திக் கொண்டாள். என்ன செய்யலாம் என்று நினைத்தபோது போன் கூப்பிட்டது. "ஹலோ.. மேடம் நான்தான் என்ன செய்யறீங்க?"

அவன் குரலைக் கேட்டதும் மனது பாகாய் உருகியது. வேதனை அதைவிட அதிகமாயிற்று. "நான் முக்கியமான

மீட்டிங்கில் இருக்கிறேன். நாளைக்கு டெல்லி போறேன். வர ஒருவாரமாகும்'' அவன் மேலே பேசு முன்னே போனைக் கீழே வைத்து விட்டாள். பல முறை போன் கதறிய போதும் எடுக்காமல் உட்கார்ந்திருந்தாள்.

வேலைகளையெல்லாம் முடித்தாள். மனம் ஒரு முகப் பட்டது. என்ன செய்ய வேண்டும் என்று மனதில் முடிவெடுத்து அவனுடைய மறுப்புக் கடிதத்தைக் கிழித்துப் போட்டாள். அவனுடைய தொழிலில் பாராமுகமும், கவனச் சிதைவும் நிகழத்தான் தான் காரணம். ஆனால் ஒரு உயிர் போகும் அளவுக்கு தன் காதல் அவனைக் கட்டி விட்டிருக்கிறதா, அப்படியானால் இது முறையல்லவே. யாருக்கும் கிடைக்காத அமெரிக்கா அழைப்பைப் பற்றின பெருமிதமோ, மகிழ்வோ ஏன் அவனுக்குள் ஏற்படவில்லை. தன்னிடம் கூட மறைத்து விட்டிருக்கிறானே, இந்த நேரத்தில் இப்படி தன்னுடைய பாராமுகம் அவனை நேர்வழிப்படுத்துமா? அல்லது மன வருத்தம்தான் மிஞ்சும். தன்னுடைய உயிரின் உயிர் அவனல்லவா. அவனை நேர்வழிப்படுத்துவது தன் கடமை. அதையும் அன்பும் பாசமுமாக முடிக்க வேண்டும். உடனே போன் செய்தாள்.

''என் மேலே ஏதும் கோபமா மேடம்'' பொன் முகம் ரத்தமாய் சிவக்க விழிகள் கலங்க காலடியில் உட்கார்ந்து மடியில் முகம் புதைத்து கேட்டவனைக் கண்டால் குழந்தை போலத் தோன்றியது.

வழவழத்த அவன் கன்னங்களைத் தடவி விட்டு ''கோபம் ஒண்ணுமில்லே, எனக்கு ரஷ்யாவிலிருந்து அழைப்பு வந்திருக்கு. மூணு வருஷம் ஒரு டிரெயினிங் எடுக்கணும். அதற்கு நான் போகறதைப் பத்திப் பேசிக்கிட்டிருந்தேன்.''



''என்னது மூணு வருஷமா?'' அவன் திகைத்தான். ''ம்.. எனக்கு ஒரு பெருமைன்னா உங்களுக்கு இல்லையா? இப்படி முகம் சுளிக்கிறீங்களே.. அய்ய.. அவ்வளவுதானா? நீங்க...ம்.. இதே நானா இருந்தா சிரிச்சுக்கிட்டே வழியனுப்பி வைப்பேன் தெரியுமா?'' தன் விரல்களால் அவன் தலைமுடியை அளந்து கலைத்தாள்.

''ம்.. புரிஞ்சுப் போச்சு. அந்த மனோகர் பயல் வந்து போனானா?''

''என் கிட்டே சொல்லாம மறைச்சிட்டீங்க இல்லே.. எதுக்காக மறைக்கணும்?''

ஒரு நிமிடம் அவளையே பார்த்தான். ''ம்.. சொன்னா நீங்க போகணும்னு கட்டளையில்ல போட்டுடுவீங்க..''

''இதுக்கு என்ன தண்டனை தெரியுமா? நீங்க ஒரு வாரத்துக்கு என்னைப் பார்க்கவே கூடாது. போனும் பண்ணக் கூடாது.''

அவன் முணுமுணுத்தான். ''உடம்புக்குள்ளே மட்டும் பல் சக்கரம் இல்லே. வெளியேயும் கத்தி கத்தியாகத்தான் இருக்கு'' பிறகு சத்தமாக, ''ஏன் மேடம்.. நெசமாவே பார்க்க வரக் கூடாதா?... போன் செய்யக் கூடாதா.. பண்ணினத் தப்புக்கு தோப்புக் கரணம் போடட்டுமா..?'' என்றான்.

முகத்தை யாசிப்பது போல் வைத்துக் கொண்டு அவன் பேசுவதை கவனிக்காதவள் போல் பேசினாள்.

''நாம ரெண்டு பேரும் வாரத்திலே ஒரு நாள் கூட சந்திக்கிறதில்லே, நீங்க நைட் டூட்டிக்குப் போகாம என்ன பண்றீங்க?''

வெட்கத்தில் அவன் காது மடல்கள் ரத்தமாய் சிவந்து போயின. ''உங்களைப் பார்க்கறதுக்கு முன் நாள் என்ன பேசணும்னு நெனைச்சுக்குவேன். பார்த்ததுக்கு மறுநாள் என்னென்ன பேசினேன்னு நெனைச்சுக்குவேன். வேற வேலை ஓடறதில்லை. டூ பீ பிராங்க் வித் யூ உங்க நினைப்பைத் தவிர வேறு எதுவும் என் நினைவில் இல்லை. எங்க பார்த்தாலும் நீங்க நிக்கிறா மாதிரி தோணுது. சிரிக்கிறா மாதிரி தோணுது. ராவும் பகலும் இம்சையா இருக்கு. என்னைத் தவிக்க வைக்கிற ஏக்கத்தை வார்த்தையிலே விளக்க முடியாது. இரவும் பகலும் நான் நெருப்புக்கிடை வைக்கப்பட்ட கற்பூரம் போல வெந்து தணியறது உங்களுக்குப் புரியாது மேடம்.

மனசெல்லாம் காதலை சுமந்துகிட்டு, விரல் நுனி வரை அதை வழிய விட்டு, எதிரில் உட்கார்ந்துகிட்டு தொடாம படாம இருக்கிறது எத்தனை துயரம்னு சொல்லி தெரிஞ்சுக்க முடியுமா? என்னை வெளிப்பத்திடுவேனோன்னு பயந்து கொண்டுதான் நான் ரொம்ப வெளியே வரதில்லை. இது எனக்கு நானே விதிச்சுக்கிட்ட சிறை. மீறி வெளியே வந்தா தவறுகள் நடந்திடுமோன்னு பயமா இருக்கு மேடம். என்னை என்னதான் பண்ணச் சொல்றீங்க?''

அவள் அமைதியாக இருந்து பின் சொன்னாள். ''நீங்க சொன்ன எல்லாம் எனக்கும் உண்டு. என் கஷ்டம் யாருக்கும் தெரியாது. தூக்கம் இல்லை. சாப்பாடு ஒரு நாளைக்கு ஒரு வேளைதான். அது கூட உப்பும், புளிப்பு, இனிப்பு கலக்காத சாப்பாடு. வெளியே சொல்லிக்காம அவதிப்படறேன். நம்முடைய இணைப்பு ரொம்ப நிச்சயமானது. கொஞ்ச கால பிரிவு காதலுக்கு ஒரு பலம்னு நினைச்சுக்கிறேன். நீங்க



மருத்துவத் துறையில் ரொம்ப பெரிய ஆளா வரதுக்கு வாய்ப்பு இருக்கு. எனக்கு அது எவ்வளவு பெருமை தெரியுமா? உங்களோட ஒவ்வொரு வெற்றியிலும் நான் உங்கக் கூட இருக்க விரும்பறேன். உங்க வெற்றிக்காக எந்தத் தியாகம் வேண்டுமானாலும் செய்வேன் உங்களை தோல்வியடைய மட்டும் விடமாட்டேன். உணர்வுகளை பெரிசா மதிக்காம நம்முடைய கடமையை செய்யலாம். உங்க அம்மாவுக்கு நாம காட்டும் நன்றியாகவும் இதை பயன்படுத்திக்கலாம்.

நீங்க கிளம்பறதுக்கு அடுத்த வாரம் புதன்கிழமை நல்ல நாள். அஜயோட சிஸ்டர் கூட அங்கதான் இருக்கா. அவ ஹஸ்பெண்ட் கூட அங்கே டாக்டர்தான். உங்களுக்கு வேண்டிய எல்லா உதவியும் செய்வாங்க. நீங்க கிளம்பி வர்றதா கேபிள் கூட குடுத்திட்டேன். உங்க ரிஜக்டட் லெட்டர் கிழிச்சுப் போட்டாச்சு.''

''இந்த ஏக்கம் ஒரு தலைப்பட்சமானது போல நான் நினைச்சிட்டேன். என் அளவு ஏக்கம் உங்களுக்கு உண்டே. வெரி சாரி டார்லிங். நான் அவசியம் கிளம்பறேன். நீங்க இதுக்காக வருத்தப்படாம இருங்க. போகலாம்.''

கம்பீரமான ஆண் மகனின் அண்மையும், அவன் தீர்க்கமாக எடுக்கும் முடிவுக்குக் கட்டுப்படுவதும்தான் எத்தனை சுலபமாக இருக்கிறது. அவன் முகத்தை நிமிர்த்தினாள். ஒருவரில் ஒருவர் மயங்கினார்கள். பூக்கள் ஒத்துவது போல அவள் முகத்தில் முதல் முறையாக முத்தம் கொடுத்தான்.

## 21

ரோஜா வண்ண சபாரி சூட்டில், கழுத்தில் மாலைகள் புரள, பிரிவுத் துயர் கண்களில் கணக்க அவன் கையாட்டி விடைபெற்றுச் சென்று ஒரு மாதமாகி விட்டது. வாரத்துக்கு ஒரு கடிதம் வருகிறது. போனிலும் பேசினான். புதிய சூழ்நிலை என்றாலும் படிக்க வேண்டும் என்ற ஆர்வத்தில் அவன் அவற்றோடு ஒன்றி விட்டதைப் பற்றி எழுதியிருந்தான்.

மூன்று நெடிய வருடங்கள் என்ன செய்வது? மன ஆயாசத்தை மாற்றிக் கொள்ள அசுர உழைப்பில் ஈடுபட முடிவு செய்தாள். ஒரு வார ஆலோசனைக்குப் பிறகு மன்மோகனை மும்பையில் சந்தித்தாள். அவரது ஆலோசனைப்படி அவருடைய நண்பர்கள் நான்குபேர் அவளுக்கு உதவ முன்வந்தார்கள். அவர்கள் தந்த பணத்தோடு மேலும் பணம் புரட்டிக் கொண்டாள். நிலங்கள் வாங்குவதில் அரசின் ஒத்துழைப்பும் கணிசமாகக் கிடைத்தது. பிற தொழிலதிபர்கள் பலரை அணுகி தொழிற்சாலையை உருவாக்கி உதவும்படிக் கேட்டுக் கொண்டாள். தனது நெடு நாளைய லட்சியமான தொழிற்பேட்டையை உருவாக்குவதில் முனைந்து விட்டாள்.

இரவும் பகலும் அங்கேயே தங்கி விட்டாள். உணவு, உறக்கம் மறந்து ஒரே எண்ணமாக அவள் ஒன்றிப் போனாள். மளமளவென எழுந்த கட்டிடங்கள் அவளுக்கு பெருமிதம் தந்தன. ஒருபுறம் தொழிற்சாலைக்கான கட்டிடங்கள், மறுபுறம் குடியிருப்பு வீடுகள், நடுவில் கூப்பிடு தூரத்தில் ஆஸ்பத்திரி, பார்க், கம்யூனிட்டி ஹால், பஸ் ஸ்டாப், கிழக்கு மூலையில் பால் பண்ணை, வடக்கு புறமாக பள்ளிக்கூடம், கிரிச், நடுநாயகமாக அம்மன் கோவில்.



அவள் இந்தக் கனவை நனவாக்கிப் பார்க்க தீவிரமாக இறங்கினபோது முடியுமா என்று வியந்தவர் பலர். முடியாது என்று குறை சொன்னவர் பலர், ''முடித்துக் காட்டுவேன்'' என்று அவள் மனதில் கொண்ட சபதம் முடிந்தது. தொழிற் பேட்டையின் திறப்பு விழாவுக்கு பெரிய மனிதர்கள் வருவார்கள் என்று பலரும் எதிர்பார்த்தார்கள்.

ஆனால், திறப்பு விழா அன்று அவள் தந்தை காலத்தில் இருந்து அங்கே எந்த எதிர்பார்ப்பும் இல்லாது உழைத்த வாட்ச்மேன் கன்னையனை வைத்து தொழிற்பேட்டையைத் திறக்க வைத்தாள். குடியிருப்பு, வீடுகளை வேன் டிரைவரும் மற்ற கட்டிடங்களை ஆபீஸ் பியூன் துரைசாமியும் திறந்தபோது அத்தனை பேரும் வியந்தார்கள்.

அவளது உடல் இளைப்பும், மன வேதனையும் நாட்களை எண்ணிக் கொண்டிருந்தன. முழுதாக மூன்று வருடங்கள் ஓடி மறைந்தன. அவன் கிளம்பி வருவதாக கேபிள் வந்துவிட்டது.

உறவும், நட்பும் காத்திருக்க விமானத்திலிருந்து அவன் இறங்கினான். அம்மா அணைத்து முத்தமிட அப்பா பெருமிதத்தில் திளைக்க, அகல்யா மகிழ்ந்து சிரிக்க, அவன் கழுத்தில் மாலைகள் புரண்டன. அவன் கண்கள் அவளைத் தேடின. காணோமே. ஏன் வரவில்லை.

சேகரும், மானேஜரும் மாலைகளோடு வரவேற்றனர். காரில் ஏறியும் யாரும் எதுவும் சொல்லவில்லை. ஏனோ ஒரு பயம் மனதுள் கிளம்பியது. மூன்று வருடங்கள் காத்திருந்தது பெரிதாக இல்லை. இந்த முப்பது நிமிட கார் பயணம் பெரிய வேதனையாகியது.

கார் நின்றதும் சுய நினைவு வந்தது. இறங்கியவன் ஆச்சரியத்தில் வாயடைத்துப் போனான்.

புத்தம் புதிய மெருகுடன் நான்கு மாடிக் கட்டிடம் ஜொலித்தது. முகப்பில் 'ஆர் எம். நர்சிங் ஹோம்' என்று போர்டு பளபளத்தது. மாவிலையும் தோரணங்களும் ஆட கையில் ஆரத்தித் தட்டுடன் மாயாதேவி அவளருகில் மங்கல மஞ்சள் உடையில் கையில் மாலையுடன் அவனுடைய அவள் காத்திருந்தாள். மறுபுறம் அஜய், மன்மோகன், மனோகர், சீருடையில் பத்து நர்சுகளும், ஐந்து டாக்டர்களும் நின்றிருந் தார்கள்.

''வெல்கம்..'' என்ற இசை ஒலிக்க அவன் இறங்கினான். அம்மாவுடன் சேர்ந்து கொள்ள மாயாதேவி ஆரத்தி எடுத்தாள். கையிலிருந்த மாலையை அவன் கழுத்திலிட்டு விட்டு நிமிர்ந்து பார்த்தாள். மாலையில் இருந்த ரோஜாவுக்கும், முகத்திற்கும் வேறுபாடு தெரியாமல் மனம் மயங்கியது. விழிகள் அவளைக் கண்ட மகிழ்வில் பளபளவென ஜொலித்தன. அணைக்குள் அடங்கும் வெள்ளம் போல தத்தம் மனங்களை அடக்கிக் கொண்டு இருவரும் புன்னகைத்தபோது, ''வலது காலை வைத்து உள்ளே வா பேட்டா'' என்று மன்மோகன் அவனை அழைத்தார்.

இரவு விருந்து முடிந்ததும் இருவரும் தனியாக காரில் கடற்கரைக்குக் கிளம்பினார்கள். காரை நிறுத்தி விட்டு அமைதியாக இருந்தார்கள். பேச்சே இல்லாத மவுனம் சுகமாக இருந்தது. அவன் மெதுவாக தன் கையை அவள் கையில் வைத்தபோது கைகள் பின்னிப் பிணைந்தன. அவன் தோளில் சுகமாய்ச் சாய்ந்து கொண்டாள். மூன்றுவருட அசுர உழைப்பு தந்த களைப்பால் அந்த தோளே அடைக்கலமானது. பூப்பந்து



ஒன்று சேலை கட்டிக் கொண்டு தன்னருகே உட்கார்ந்து உடலோடு இணைந்திருப்பது போலத் தோன்றியது. அவன் முகத்தோடு முகம் சாய்த்துக் கொண்டாள். மறுகையால் முகத்தை வருடினாள்.

''எத்தனை பெரிய பணியை முடிச்சிருக்கே டார்லிங். இத்தனை புத்திசாலித்தனமும் எனக்கே எனக்கான்னு மலைப்பா இருக்கு. பேச மாட்டியா.. பேசேன் ப்ளீஸ்..''

''மூணு வருஷமா பேசி பேசி திட்டம் போட்டு வேலைகளை முடிச்சது அலுப்பா போச்சு, பேசவே தோணலை.. நீங்க நிறைய பேசுங்க.. உங்க வார்த்தையெல்லாம் பூக்கள் மேல முத்துக்கள் கொட்டறா மாதிரி என் மேல் விழுது. நான் மடி நிறைய, மனம் நிறைய அந்த தேன் சொட்டுக்களை ஏந்திக்கிறேன்.''

அவன் மெய் சிலிர்த்தான். ''என்ன சொல்றதுன்னே தெரியலே. டார்லிங், அதிர்ஷ்டவசமாக எனக்குக் கிடைச்ச அதிர்ஷ்டம் இது. என் உடல், உயிர், உணர்வு எல்லாத்திலும் வியாபித்து என் வாழ்வாகிப் போன என் செல்வமே நீதான். உன் விழி ஓரம் கூட வருத்தப்படவோ, கலங்கவோ விடமாட்டேன். உன்னுடைய சந்தோஷத்துக்காக எந்தத் தியாகத்தையும் செய்யத் தயங்க மாட்டேன்.''

அந்த அரையிருளில் அவர்கள் காதலில் உருகி, கரைந்துக் கொண்டிருந்தார்கள்.

மறுநாள் காலையில் அம்மாவும் அகல்யாவும் முதன் முதலில் அந்த மாளிகைக்கு வந்தார்கள். மாயாதேவியும் மன்மோகனும் தாய், தந்தையாய் நின்று அவர்கள் தந்த பட்டுப் புடவையையும், தங்க நெக்லசையும் வாங்கிக் கொண்டார்கள். பிரபாவும், தவிசுப் பிள்ளையும் இந்த எதிர்பாராத

விருந்தினர்களைக் கண்டதும் திகைத்து அவசரமாக விருந்து செய்ய ஆரம்பித்தார்கள்.

திருமணத்திற்கான தேதி ஆறு மாதம் கழித்துக் குறிக்கப் பட்டது. அகல்யா ஐந்து மாதம் குழந்தை உண்டாகி இருந்ததால் இந்த ஏற்பாடு. நாணத்தில் தவித்தவளுக்கு திருமண தேதியை சொல்லிவிட்டு அஜய் கேலியைத் தொடங்கி விட்டான். மனதுள் வருத்தம் கொஞ்சம் எட்டிப் பார்க்கத்தான் செய்தது. ஆனாலும் அவர்களிருவரும் ஏற்றுக் கொண்டு தங்கள் பணிகளில் ஈடுபட்டார்கள்.

நான்கே மாதம்தான் நர்சிங் ஹோமின் புகழ் பெருமளவில் வளர்ந்தது. அவனது அயராத உழைப்பு இந்த வெற்றியைத் தேடித் தந்தது. அகல்யாவுக்கு சிங்கக்குட்டி போல ஆண் குழந்தை பிறந்து விட்டது. அம்மா மகன் கல்யாண ஏற்பாட்டில் முழு மூச்சாய் இறங்கினாள்.

கோவில் சிலையொன்று எதிர் நிற்பது போல் தன்னெதிரில் நாணத்தில் தவித்தபடி நின்றவளைப் பார்த்தான். தலை நிறைய மல்லிகைப் பூ உடம்பு தழுவி நிற்கும் சாக்லேட் வர்ண பட்டுச் சேலை கண்ணை உருத்தாத அடக்கமான நகைகள்.

''இனிமேல் தொடறதுக்கு எந்த தடையுமில்லை இல்லையா மேடம்'' குறும்புத்தனமாய்க் கேட்டவனை அவள் நிமிர்ந்துப் பார்த்தாள். முதல் முதலாக பட்டு வேஷ்டியும், முழுக்கை சட்டையும் அணிந்து வாழ்விக்க வந்த தேவனாய் அவன் தோன்றினான். பேசக் கூடத் தெரியாத சுகம் மனதை நிறைத்தது. இளமையும் இனிமையும் நிறைந்து சுகத்தை அள்ளிக் கொடுக்கக் காத்திருந்தது. இரவு பகலாக வெளிச்சத் தைத் தந்த விளக்கை நிறுத்தி விட்டு இரவு விளக்கைப்



போட்டான். அருகில் அவளைப் பார்த்துக் கொண்டே இருந்ததில் உலகே தன் கைகளில் வந்தது போலிருந்தது. அந்த சுகத்தைக் கலைப்பது போல் இண்டர்காம் கூப்பிட்டது.

அகல்யா பேசினாள். ''ஸாரி அண்ணி, டாக்டர் மனோகர் வந்திருக்கார். அண்ணனை உடனே பார்க்கணுமாம்.''

இருவருமாக கீழே இறங்கி வந்தபோது மனோகரோடு ஒரு பெண்ணும் வந்திருப்பது தெரிந்தது. அந்தப் பெண் அழுது வீங்கின முகத்துடன் நிலை கொள்ளாமல் உட்கார்ந்திருந்தாள். மனோகர் பதட்டத்துடனும் உண்மையான வருத்தத்துடனும் ''ஸாரிடா.. திடீர்னு ஒரு ஹார்ட் பேஷண்ட் எமர்ஜென்ஸி கேசா வந்திட்டுது. உடனடியா ஓப்பன் ஹார்ட் சர்ஜரி பண்ண வேண்டியிருக்கு. செயற்கை முறையில் இதயத் துடிப்பை ஆரம்பித்து வைக்கிற கண்டக்டரை பொருத்தணும். உன்னை தொல்லை செய்ய வேணாம்னு டாக்டர் ராஜகோபாலை டிரை பண்ணினோம். அவர் டெல்லி போயிட்டாராம். நீ வந்தாத்தான் முடியும். சீப் உன்னை உடனே அழைச்சிக்கிட்டு வரச் சொன்னார். பைதபை இவங்க பேஷண்டோட மனைவி மிஸஸ் லலிதா'' என்றாள்.

அந்தப் பெண் சட்டென அவன் கால்களில் விழுந்து, ''டாக்டர் தயவு செய்து வாங்க என் வாழ்வே உங்க கையில்தான் இருக்கு. உங்களை இன்னிக்குத் தொல்லை செய்யறதுக்கு என்னை மன்னிச்சிடுங்க'' என்று அழுதாள்.

பத்தே நிமிடத்தில் அவன் கிளம்பி வரவும் கண்டாஸா தயாராக நின்றது. டிரைவர் இல்லாதாதல் அவளே காரை ஓட்டினாள். இரவெல்லாம் லலிதாவுக்கு ஆறுதல் சொல்லிக்

கொண்டு அவளோடு அறுவை சிகிச்சை தியேட்டர் முன் உட்கார்ந்திருந்தாள்.

விடியும் போதில் முகத்தில் களைப்போடும், வெற்றிப் புன்னகையுமாக வந்த டாக்டர்களின் கூட்டத்தில் அவனைக் கையெடுத்துக் கும்பிட்டாள் லலிதா. தன் கணவனின் முகத்தை பெருமிதம் பொங்கப் பார்த்தவள் கண்களில் காதலும், பெருமிதமும் நீர்த்திவலைகளாய் துளிர்த்து நின்றன.

வீடு திரும்பும் வரை அந்த நிலை மாறவேயில்லை.

''நீங்க தூங்கி ரெஸ்ட் எடுத்துக்குங்க. நான் பேக்டரி வரைக்கும் போயிட்டு வரேன். முடிஞ்ச வரை லஞ்ச்சுக்கு வரப் பார்க்கறேன். இல்லேன்னா சாயங்காலம் பார்க்கலாம்'' அவள் கிளம்பிச் சென்று விட்டாள்.

படுக்கையில் படுத்தவனுக்கு உடல் அலுப்பாக இருந் தாலும்கூட தூக்கம் வரவில்லை. காதலனாகவும், தொட்ட தில்லை...ம்.. கணவனாகவும் கூட தொட முடியவில்லையே.. சிரிப்புதான் வந்தது. அவள் இல்லாத வெறுமை வெறுப்பாக இருந்தது.

எட்டு மணியானதும் நர்சிங் ஹோமிற்குக் கிளம்பிச் சென்று விட்டான். மதியம் இருவருமே சாப்பாட்டிற்கு வீட்டிற்குச் செல்ல முடியாத நிலையாகி விட்டது. வீட்டிலிருந்து பிரபா மூலம் சாப்பாடு வந்தது.

மாலையில் அவளை அழைத்துவர அவனே கிளம்பிச் சென்றான். சுற்றிலும் இன்ஜினியர்களும், கட்டிட தொழிலாளர் களும் நிற்க தீவிரமாய் பேசிக் கொண்டிருந்தாள். சிக்கலான பிரச்சனை போலிருக்கிறது. வாதப் பிரதிவாதமாக இருந்தது.



இறுதியாகப் பேசி முடித்துவிட்டு வியர்வைத் துளிகள் முத்து முத்தாய் வடிய வந்தவளை நெஞ்சோடு கட்டியணைத்துக் கொள்ள வேண்டும் போல் மனம் தவித்தது. இன்றைய பொழுது சுகப் பொழுதாக இருக்கவேண்டுமென மனம் ஆசைப்பட்டது. காரில் போகும் போது அவளும் அப்படித் தான் நினைக்கிறாள் என்பது தெரிந்தபோது ஒரு எதிர்பார்ப்பு உருவாயிற்று.

வீட்டிற்குச் சென்று குளித்து சூடாக சாப்பிட்டு கொஞ்ச நேரம் காற்றாட தோட்டத்தில் உட்கார்ந்து கொண்டபோது நிம்மதியாக இருந்தது. அகல்யாவின் மகன் வினு அந்த நேரத்தை இன்னும் இனிமையாக்கிக் கொண்டிருந்தான். அந்த உல்லாசத்தைக் குலைப்பது போல காரொன்று வந்து நின்றது.

அதிலிருந்து இறங்கியவரைக் கண்டதும் ஒரு வினாடி தயக்கத்தின் பின் ''ஹலோ, டாக்டர் பட்நாகர் என்ன பிளஸண்ட் சர்ப்ரைஸ்.. வாங்க வாங்க..'' அவன் எழுந்து வரவேற்றான்.

டாக்டர் பட்நாகர் மும்பையில் இருகிறவர். அவரை ஒரு மருத்துவ மாநாட்டில் சந்தித்திருப்பதை அவளிடம் கூறினான். அதற்குள் சூடான டீயும், பிஸ்கட்டும் வந்தது. பட்நாகர் ஒரு முக்கியமான கேசைப் பற்றி விவாதிக்க விரும்பினார். அது ஒரு 'போன் கேன்சர் கேஸ்' மிகவும் அவசரமாக இருந்ததால் தானே புறப்பட்டு வந்ததாகக் கூறினார்.

நர்சிங் ஹோமில் பேச வேண்டியிருந்ததால் அவன் கிளம்பி னான். அவளும் அவர்களோடு கிளம்பினாள். அவர்கள் விவாதிக்க, விவாதிக்க அவளும் ஆர்வமாகக் கேட்கலானாள்.

ஒருவேளை இப்படிப்பட்ட சிறந்த மருத்துவ வசதி இருந்திருந்தால் என் அம்மா கூட பிழைத்திருப்பாள் என்ற ஆதங்கம் வந்தது. தனது தாய்க்குக் கிடைக்காத இந்த மருத்துவ வசதியைத் தன்னால் தன் கணவன் மூலம் பலருக்குத் தர முடிந்தது பற்றி அவளுக்கு மிகவும் பெருமையாக இருந்தது.

நோயாளியின் கிளீனிக்கல் ரிப்போர்ட், பெத்தாலஜி ரிப்போர்ட், பயாப்ஸி ரிப்போர்ட் மூலம் அது கால் எலும்பில் கேன்சர் என்பது புரிகிறது. அவர்களின் தற்பேதைய சிகிச்சை சரியாகவும் உள்ளது. ஆனாலும் 'போன் மரோவை' மாற்றி சிகிச்சை தந்தால்தான் நோயாளி பிழைக்க முடியும். நோயாளியின் இரட்டை சகோதரன் போன் மரோ தர ஒப்புக் கொண்டிருக்கிறான். இந்த போன் மரோவை மாற்றும் சிகிச்சையில் அவன் நிபுணன் என்பதால் கருத்து கேட்க வந்திருக்கிறார். அப்படித் தர வேண்டிய முறைகளைப் பற்றி கருத்து சொன்னால் மட்டும் போதாது. அவனும் உடனிருந்து அந்த அறுவைச் சிகிச்சையை செய்தால் நன்றாக இருக்கும் என்று கேட்டுக் கொண்டார். அந்த தேதியை அவன் வசதிப்படி வைத்துக் கொள்ள அவர் தயாராக இருக்கிறார்.

அவன் மறுவாரம் மும்பைக்கு வருவதாக ஒப்புக் கொண்டபோது பட்நாகர் மகிழ்வோடு கிளம்பினார். அவரை வழியனுப்பி விட்டு நர்சிங் ஹோமைச் சுற்றிப் பார்த்துவிட்டு வீடு திரும்பும்போது ஏறக்குறைய விடிந்து விட்டிருந்தது.

அதன் பிறகு ஒரு மணி நேரம் ஓய்வெடுத்து விட்டு இருவருமாக அவரவர் வேலைக்கு ஓடத்தான் நேரம் இருந்தது.

ஒரு வாரமாகியும் அவர்களால் மண வாழ்வின் இன்பத்தைப் பகிர்ந்து கொள்ள முடியவில்லை. எல்லாமே



முக்கியமான வேலைகள் என்பதால் இரவுகள் அவர்களுக்கு சொந்தமாகவில்லை. திருமணத்திற்கு வந்தவர்கள் எல்லாம் ஊர் திரும்பியிருந்தார்கள். வீட்டில் தாங்கள் இருவரும் மட்டுமே என்னும் எண்ணமே அவனுக்கு இனித்தது.

அன்றிரவு படுக்கையறைக்குள் நுழையும் முன் போன் இணைப்பை எடுத்து விட்டான். யாரையும் உள்ளே விடக் கூடாது என்று கேசவ்சிங்கிடம் கண்டிப்பான உத்தரவு போட்டுவிட்டுதான் மாடியேறினான்.

விடியற் பொழுதின் மென்மையானக் காற்றில் கண் விழித்தவள் அருகில் பார்த்தாள். ஆண்மை மின்னும் அவன் அருகில் படுத்திருந்தான். தூக்கத்திலேயே சின்ன சிரிப்பைக் காட்டினான். இரவு முழுவதும் இந்தக் காலச் சக்கரமே தங்களுக்காக தன் இயக்கத்தை நிறுத்தியதைப் போலத் தோன்றியது. நாணமும் நிறைவுமாக சத்தமிடாது எழுந்தாள். கட்டிலின் அசைவில் கண் விழித்தவன் அவளை இழுத்து அணைத்துக் கொண்டான். விலகிக் கொள்ளாமல் அவனோடு ஒண்டிக் கொண்டு கண்களை மூடிக் கொண்டாள்.

இரவும், பகலும் அவள் தன்னோடு இருக்க வேண்டும் என்று எண்ணினான். உலகத்தையே மறந்தவர்கள் தங்களின் சுகம் ஒன்றையே உலகமாக எண்ணினார்கள். அவன் நர்சிங் ஹோமுக்குப் போவது குறைந்து போனது. ஏதாவது சாக்கு சொல்லி அவளைத் தன்னோடு வைத்துக் கொள்வதில் முனைந்தான். ஒரு கணம் கூட பிரிவுக்கு அவன் தயாரில்லை.

அவள் நர்சிங் ஹோமுக்குப் போகவில்லையா? என்று கேட்டால் மட்டும் கிளம்புவான். அப்போது கூட ஒரு மணி நேரமோ, இரண்டு மணி நேரமோதான் இருப்பான். அறுவை

சிகிச்சைகளை தான் செய்யாமல் உதவியாளர்களிடம் தள்ளி விடுவான். மிகவும் பிரச்சனையான கேஸ்களை நர்சிங் ஹோமில் சேர்த்துக் கொள்வதில்லை. கொஞ்சம், கொஞ்சமாக நர்ஸிங் ஹோம் தன் களையை இழந்துவந்தது. ஆனால் அவன் அதை முடிந்தவரை அவள் காதுக்கு எட்டாமல் பார்த்துக் கொண்டான். அப்படி ஏதும் அவள் கேட்டால் அதை பலமாக சமாளித்து விடுவான்.

நர்சிங் ஹோமிலிருந்து வரும் போன்களை அவனே எடுப்பான். ''ஏன் கூப்பிட்டீர்கள்?'' என்று சிடுசிடுப்பான். இல்லையென்றால் கோபத்துடன் மருந்துகள் பெயரைக் கூறி அவற்றைக் கொடுக்கச் சொல்வான். அறுவை சிகிச்சைக்கான கேஸ்கள் வந்தால் வேறு நர்சிங் ஹோமிற்கு அனுப்பி விடச் சொல்லுவான். அவனது போக்கு பற்றி அவளிடம் யார் சொல்வது என்று மற்றவர்கள் பயந்தனர். என்ன இருந்தாலும் அவளுடைய கணவன் என்ற மதிப்பும், பயமும் அவர்களின் வாயைக் கட்டிப் போட்டன.

அமெரிக்காவில் அவன் படித்த வகுப்பு பேராசிரியரும் வேறுசில வகுப்பு நண்பர்களும் டெல்லிக்கு வருவதாகவும் முடிந்தால் சந்திக்கச் சொல்லி கடிதம் வந்திருந்தது. இத்தனை தூரம் போக முடியாது அவளை விட்டு எப்படிப் பிரிவது என்று அவன் தூக்கி எறிந்து விட்டான்.

அவளுக்கு வருத்தமாக இருந்தது. அவனிடம் எடுத்துச் சொல்லி கிளம்பச் சொன்னாள். மூன்று நாள் சென்று தானும் டெல்லி வந்து அவனோடு சேர்ந்து கொள்வதாகவும் கூறி சத்தியம் செய்தாள். அதன் பிறகு தான் அவன் அரைகுறையாக ஒப்புக் கொண்டு கிளம்பிச் சென்றான்.



டெல்லிக்குப் போகும் நாளன்று கிளம்பி கீழே வந்தவள், மேனேஜரிடம் பத்து நாட்களுக்கு செய்ய வேண்டிய வேலைகளைக் கூறினாள். பிரபாவிடம் அவசரம் என்றால் மட்டும் தன்னைத் தொடர்பு கொள்ளும்படியும், மற்றவற்றை அவர்களே பார்த்துக் கொள்ளச் சொன்னாள். மனோகருக்கு போன் செய்து ஒருவேளை நர்சிங் ஹோமில் அவசரமான அழைப்பு வந்தால் உடனடியாக வந்து உதவும்படி கேட்டுக் கொண்டாள்.

அவனைப் பார்க்கும் ஆர்வத்தில் பெட்டியுடன் பிரபாவும், சேகரும் பின் தொடர மளமளவென படிக்கட்டுகளில் இறங்கினாள். கண்டாஸா தயாராக நின்றிருந்தது. காரில் ஏறி கதவைச் சாத்தியவள், ''இந்தா.. டாக்டர் ஐயா இல்லே நில்லும்மா.. அம்மா வெளியே கிளம்பறாங்க.. நில்லும்மா'' என்று கேசவ்சிங் போட்டக் கூச்சலில் கதவைத் திறந்தாள்.

''டாக்டரய்யா.. டாக்டரய்யா என் புள்ளையைக் காப்பாத்துங்கய்யா..'' என்ற கூக்குரலுடன் தன்னெதிரே வந்தவளைக் கண்டு தீயை மிதித்தவள் போல இறங்கினாள்.

கலைந்த தலையும், அழுது கன்றிய முகத்துடனும் வற்றாத கண்ணீர் சுவடும் தோளில் போடப்பட்ட குழந்தையுமாக நின்ற அவளது கோலம் உலகத்து அவலம் முழுவதும் ஒருருவாக நிற்பது போலத் தோன்றியது. இந்த சோகம் நெஞ்சைப் பிழிந்து உயிரையே உருக்கியது.

## 22

காரிலிருந்து இறங்கி உள்ளே நுழைந்தவனை சேகரும், மேனேஜரும் மவுனமாகப் பார்த்தார்கள். பிரபாவும், வள்ளியும் கண்களைத் துடைத்துக் கொண்டனர். வாசலில் கண்டாஸா நின்று கொண்டிருந்தது. அந்த பிரம்மாண்டமான மாளிகை மவுன ராகம் பாடுவது போலத் தோன்றியது. காற்று கூடத் தயங்கி, தயங்கி திரைச் சீலைகளைத் தொட்டு ஆடியது.

என்னவோ நடந்திருக்கிறது. டெல்லிக்கு வருவதாகச் சொன்னவள் வரவில்லை. அதுதான் போகட்டும். வாசலுக்கு வந்து வரவேற்கக் கூடவா கூடாது. பலவிதமான குழப்பத்துடன் மாடியறைக்குப் போனான். சந்தன மாலைகளுக்குள் சிரித்துக் கொண்டிருந்த அப்பாவின் படத்தருகில் ஒரு கவர் இருந்தது. முகவரி அவனுக்கு எழுதப்பட்டிருந்தது. அவள் கையெழுத்து. அவசரமாகப் பிரித்தான்.

*''என்னுயிரின் உயிரே மது.*

*இந்தக் கடிதத்தை நீங்கள் படிக்கும்போது நான்வெகு தூரம் பிரிந்து சென்று விட்டிருப்பேன். எதற்காக இந்தப் பிரிவு என்று நீங்கள் உள்ளத்தில் கலைந்துபோவீர்கள். நானோ உயிரையும் உள்ளத்தையும் உங்களின் காலடியில் வைத்துவிட்டு வெறும் உடற் பிணமாய் பிரிந்துவிட்டேன்.*

*இந்தப் பிரிவுக்கு காரணம் புரியாமல் தவிப்பீர்கள். இந்தப் பிரிவு என் அன்பே உங்கள் நன்மைக்காக. நம் காதலை உலகம் வாழ்த்துவதற்காக. என்னையுமறியாமல் உங்களின் இயக்கங்களை நான் முடக்கி விட்டிருக்கிறேன். என் மீதுள்ள காதல் ஈடுபாட்டால்*



*உங்கள் மருத்துவப் பணியை சரிவர செய்வதில்லை என்ற கசப்பான உண்மை சற்று நேரத்துக்கு முன்தான் எனக்குத் தோன்றியது.*

*தெய்வமாய் வந்த ஏழைத்தாய் ஒருத்தி பேசியதை இப்போது நினைத்தாலும் என் ரத்தம் உறைந்து போகிறது.*

*''ராவும், பகலும் உன் கூடவே இருக்கணும்னு டாக்டர் ஐயா ஆஸ்பத்திரிக்கே வரதில்லையா? அங்க வந்து பாரு, கோவிலா இருந்த ஆஸ்பத்திரி இப்ப சுடுகாடா போச்சும்மா. தினமும் சாவுதான். பேருதான் இலவச ஆஸ்பத்திரி. அங்க வேலை செய்யற எல்லாரும் அவங்க, அவங்க சம்பாதிக்கிறதைத்தான் பார்க்கிறாங்க. இவன் எனக்கு தவமா தவமிருந்து பெத்த பிள்ளை. போன தரம் இந்த மாதிரி இழுப்பு வந்தப்ப நம்ம டாக்டர் ஐயாதான் சும்மாவே வைத்தியம் பார்த்தாரு. இந்த தரம் ஐயா இல்லாததால பார்க்க ஆளில்லை. பத்து மைல் தூரம் நடந்தே ஓடியாந்தேன். காசு கேக்கிறாங்கம்மா, என்னை மாதிரி ஏழை காசுக்கு எங்கம்மா போவேன்.*

*அம்மா உன்னை ஒண்ணு கேக்கறேம்மா, கோவிச்சுக் காதே, நீ நல்லவ. உலக துக்கம் புரிஞ்சவ. எத்தனையோ நல்ல காரியம் பண்ணினவ. டாக்டர் ஐயாவை எங்களுக்காக விட்டுக் குடும்மா. இந்த ஏழைகளுக்காக, எங்க மேல கருணை வைச்சு டாக்டர் ஐயாவை விட்டுக் குடும்மா..*

*டாக்டர் ஐயாவை அனுப்பி வையும்மா.. எங்க கண்ணீரைத் தொடச்சி வீட்டுல விளக்கேத்தி வையும்மா?''*

ஒரு நிமிடம் இமைக்கவும் மறந்து போனேன். எனக்கு சுகம் தரும் உங்க அண்மை எத்தனை உயிர்களுக்கு உயிர்ப்பு தரும் வல்லமை படைத்தது. என் ஒருத்தியின் இன்பத்துக்காக எத்தனை உயிர்களைப் பலியிட்டு விட்டேன். வாழ்நாள் முழுவதும் ஈடு செய்ய முடியாத மிகப் பெரிய தவறை செய்திருக்கிறேனே. தாங்க முடியாத துக்கத்தில் அழுதேன். இறுதியாக எப்போதும் கைகொடுக்கும் என் மனதைரியம் இப்போதும் வந்தது. அழுவதை நிறுத்தி ஆக்கப்பூர்வமாக சிந்தித்தேன்.

நீங்க எனக்கு மட்டும் உரியவரல்ல. உங்க பணி இந்த மனித குலத்திற்கே உரியது. உங்க வாழ்வில் நீங்க சாதிக்க வேண்டியது ஏராளம். மருத்துவத் துறை உங்களால் பெருமை அடைய காத்திருக்கிறது. இந்த நேரத்தில் எந்த வகையிலும் உங்கள் கவனம் சிதைக்கப்படுவதை நான் அனுமதிக்க மாட்டேன். அது மனித குலத்துக்கே நான் இழைக்கும் பெரிய கொடுமை.

உங்கள் கவனச் சிதைவை எவ்வாறு தடுப்பது என்று தீவிரமாகச் சிந்தித்தேன். மனம் தெளிந்து நிம்மதி யாயிற்று.

முடிவாக உங்களை விட்டுப் பிரியும் முடிவுக்கு வந்து விட்டேன். முடியுமா.. என்னாலா.. நினைக்கும் போதே உயிர் பிரிவது போல் இருந்தது. ஆனாலும் இந்த வெற்றுடல் எங்கே இருந்தால் என்ன? உயிரைத்தான் உங்களுக்கு காணிக்கையாக்கி விட்டேனே, எங்கே போகிறேன் என்று யாருக்குமே சொல்லாமல் என் நெடும் பயணத்தைத் தொடங்கி விட்டேன்.



உங்களோடு இருந்து இந்த மாறுதலை உங்களுக்குள் ஏற்படுத்தியிருக்கலாமே என்று நீங்கள் நினைக்கலாம். அது முடியாது என்பதே நிதர்சனமான உண்மை. முன்பே இரண்டு முறைகள் நாமிருவரும் இந்த மாதிரியான கவனச் சிதைவில் சிக்கினோம். அந்த நேரங்களில் நாம் திருமண பந்தலில் இணையாமல் இருந்தோம். அதனால் ஓரளவுக்கு மாறிக் கொள்ள முடிந்தது. இப்போதோ உறவும் உரிமையுமாக இணைந்து இருக்கிறோம். இந்நிலையில் நாம் கடமைக் காக பிரிவதோ, கடமை செய்வதோ நடக்கக்கூடிய காரியம் அல்ல. இதை நாம் மனதாலும், அறிவாலும் உணரவே செய்வோம். அதனால்தான் இந்த முடிவை நான் எடுத்தேன்.

அன்பே நான் உங்கள் விழிகளின் ஒளியில் கலந்திருப் பேன். உங்கள் உயிருக்கும், உணர்வுக்கும் பார்வையாக நானிருப்பேன்.

பிரிவைப் பற்றி நினைக்கையில் உயிர் உருகி, உடல் நடுங்கி, தவித்தாலும் எடுத்த பிறவியை பிறருக்குப் பயன்படுத்துவதில் தான் அதன் பயனே உள்ளது. என் அப்பாவும் அதைத்தான் எனக்கு சொல்லிச் சென்றார். என் பணிகள் யாவும் முடிந்து விட்டன. நான் ஏற்படுத்திய தொழிற்பேட்டை நல்ல முறையில் நடை பெறும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. என் மீது பெரும் மதிப்பு வைத்திருக்கும் தொழிலாளிகளும், நிர்வாகிகளும் அந்தப் பணியை செவ்வனே செய்வார்கள்.

உங்களின் வாழ்வுக்காகவே உங்களைப் பிரியும் எனக்கு உங்கள் மடியில் தலைவைத்து உயிர்விடும் ஒரே ஒரு பேரு மட்டும் போதும். என் வாழ்நாளின் முடிவுகளில் உங்களை நானே தேடி வருகிறேன். அதுவரை என்னைப் போக அனுமதியுங்கள். நம் காதல் மெய்யென்றால் என்னைத் தேடாதீர்கள்.

என்றும்

உங்கள்

மதுரா

விழிகளிலிருந்து தெரிந்த நீர் காகிதத்தில் ஊற்றியது. மை கலங்கி, தவித்து ஓடியது. மதுராவின் அப்பா படத்தின் முன் படுத்துக் கொண்டு அவன் கதறி அழுதான்.

''ஐயா.. உங்க மக என் வாழ்வின் இன்பம். என் வாழ்வின் ஒளி. என்னை விட்டுப்போக மனம் வந்ததே ஆனால் இது மிகச் சிறந்த காரியத்துக்காக நடந்த உயிர் மரணம். என் மதுரா எனக்குக் காட்டிய வழியிலிருந்து இனி மாற மாட்டேன். என் பணி இனிமேல் மனித குலத்துக்கு உழைப்பதுதான். என் மதுராவின் முக தரிசனத்திற்காகக் காத்திருப்பதுதான் நானியற்றும் தவம்.''

சேகர் இண்டர்காமில் கூப்பிட்டார். ''சார் வக்கீல் சார் வந்திருக்கார். உங்களைப் பார்க்கணும்னு கூப்பிடறார்.''

அமைதியாக கீழே இறங்கி வந்தான். வக்கீல் எழுந்து வணங்கினார்.

''சார், மேடம் மூணு நாளைக்கு முன்னாடி என்னை வந்துப் பார்த்தார். அப்ப அவர் எழுதிய உயிலை உங்ககிட்டே



ஒப்படைச்சுட்டுப் போக வந்தேன். இந்தாங்க, கையை நீட்டி உயிலை வாங்கிக் கொண்டவன் அதை பக்கத்தில் வைத்தானே தவிர படிக்கவில்லை. வக்கீல்தான் பேசினார்.

''சார் உயிலின் ஷரத்துக்களை நானே சொல்லி விடறேன். மேடம் இந்த சொத்து முழுவதையும் உங்க பெயருக்கு எழுதி விட்டிருக்கார். நிர்வாகத்துக்காக டிரஸ்ட் ஒண்ணும் ஏற்படுத்தி யிருக்கார். டிரஸ்டில் உங்க அப்பா, அகல்யா, மிஸஸ் மாயாதேவி, அஜய் இவங்களை டைரக்டர்ஸா போட்டிருக்கார். மேலும் தொழிலாளிகளுக்கும் வாய்ப்பு கொடுத்து அவர் களையும் அவற்றில் பங்குதாரர்களாக ஆக்கி இருக்கிறார். மிஸ்டர் மன்மோகனும், நீங்களும் அவர்களோடு இணைந்து தொழிற்சாலைகளைப் பிரச்சனையின்றி நடத்த வேண்டும் என்பது மேடத்தோட விருப்பம். என்னோட ஆலோசனையும், உதவியும் எப்பவும் உங்களுக்கு உண்டு.

வக்கீல் போய் வெகுநேரமாயிற்று. மது அசையாமல் உட்கார்ந்திருந்தான். எல்லோரும் போய் விட்டார்கள். இந்த நிர்வாகம் தன்னால் முடியுமா? தன் மீது மதுராவுக்கு இருக்கும் அசைக்க முடியாத நம்பிக்கையைக் காப்பாற்றியே ஆக வேண்டும். மனமெல்லாம் பொங்கி வழிந்தது. மதுராவின் நிர்வாகத்தையே சிந்தித்தது. இது உலகமே போற்ற வேண்டிய உன்னதம். வாழும் உயிர்கள் யாவும் போற்ற வேண்டிய காதல். கைகூப்பி மதுராவின் நினைவை வணங்கினான்.

உடலெங்கும் புத்துணர்வு ஏற்பட்டது. மதுராவின் தைரியமும் மனோதிடமும் தனக்குள்ளே வந்து விட்டதுமே ஒரு சிலிர்ப்பு வந்தது.

போன் மணியடித்தது. அதை எடுக்க வந்த சேகரைக் கையமர்த்தி விட்டு அவனே எடுத்தான்.

''எஸ்.. டாக்டர் மது ஸ்பீக்கிங்... உடனடியாக விபத்தில் சிக்கினவங்களை அட்மிட் பண்ணிடுங்க. ஆபரேஷன் தியேட்டரை ரெடி பண்ணிடுங்க. ஐந்தே நிமிடத்தில் வரேன்.''

கழுத்தில் ஸ்டெதஸ் அசைய காரில் ஏறிக் கிளம்பினான். கண்டாஸா நர்சிங் ஹோம் நோக்கிப் பறந்தது. கார் போகும் பாதையெங்கும் விளக்கு பூக்கள் மினுங்கத் தொடங்கின. கேட்டருகில் கேசவ்சிங் விழிகளில் மின்னிய நீரைத் துடைத்துக் கொண்டு கேட்டைத் திறந்தான்.

★

# வாலைக் குமரியடி!



1

மேக வீதியில் விளையாடிக் கொண்டிருந்த நட்சத்திர சிறுவர்கள் நிலவு விளக்கு ஏற்றியதும் வான வீட்டிற்குள் ஓடிவரும் முன்மாலைப் பொழுது.

பகல்பொழுதின் வேகத்தையெல்லாம் வியர்வையாக வடித்து சோர்ந்துபோன மனிதர்கள் குளிர்ச்சியாக ஓடிக் கொண்டிருந்தார்கள்.

பனிமலர் பனிக்குழைவு விற்பனை நிலையத்தில் கூட்டம் தெரிந்தது. பணியாளர்கள் பம்பரமாக சுற்றிக்கொண்டிருந்த பரபரப்பான வியாபார நேரம்.

குனிந்து கவனமாக கணக்கெழுதிக் கொண்டிருந்த செல்லக் கிளியை விலாவில் இடித்தாள் லதா. ''அதோ பார்த்தியா.... பஞ்சபாண்டவர் வந்தாச்சு... ரெண்டு மாசமா அவங்க தொடர்ந்து தினமும் வர்றதுக்கு ஏதோ காரணம் நிச்சயம் இருக்கு. நான் நினைக்கிறது மட்டும் சரியா இருந்தா நீ ரொம்ப கொடுத்து வைத்தவன்தான்.''

செல்லக்கிளி தலையில் அடித்துக் கொண்டாள். ''உனக்கு எத்தனை முறை சொல்லி இருக்கேன். இப்படி உளறாதேன்னு.

நாம் இங்கே வேலை செய்யத்தான் வந்திருக்கோம். இப்படி யெல்லாம் புலம்பிக்கிட்டிருக்க இல்லை. நினைவு வைச்சுக்க. கையிருப்பு கணக்கு எழுதிட்டியா? மாட்டியே... கொஞ்ச நாளாவே உனக்கு பைத்தியம்தான் பிடிச்சிருக்கு. வேலையை ஒழுங்கா பாரு இல்லை... சீட்டு கிழிஞ்சிடும்.... சொல்லிட் டேன்..."

"உன்கிட்டே சொன்னேன் பாரு... என் புத்தியை எதால் அடிச்சுக்கறது?"

"அதை அப்புறமா முடிவு பண்ணிக்கலாம். முதலில் வேலையைப் பாரு... அங்கே பாரு மேலாளர் சந்தேகமா பார்க்கிறார்...." செல்லக்கிளி எச்சரித்தாள்.

"சரிடி... கிழவி.. அவர் முறைக்கிறாரோ இல்லையோ உன் தொணதொணப்பு தாங்க முடியலை. கையிருப்பு கணக்கு பட்டியலை எடு. சரிபார்த்திட்டு வரேன். பஞ்சபாண்டவர் என்ன பேசிக்கறாங்கன்னு வேவு பார்த்த மாதிரியும் இருக்கும்."

நண்பர்கள் குழு தன்னைப் பார்த்துவிடாமல் சுற்றிக் கொண்டு சென்றாலும் காதுமட்டும் அவர்களிடம் சென்றது. அங்கே காரசாரமான விவாதம் நடந்து கொண்டிருந்தது.

"இதோ பாரு தமிழரசு உன் எண்ணம் நிறைவேறப் போவதில்லை பொண்ணு ஒண்ணும் அசைஞ்சு கொடுக்கற மாதிரி தெரியலியே..."

"நானும் அதையேத்தான் நினைக்கிறேன். அதனால் நாளையிலிருந்து நான் உன் கூட வரமாட்டேன். இந்த ரெண்டு மாசமா தொடர்ந்து பனிக்குழைவு சாப்பிட்டு பல்லு எல்லாம் ஆட்டம் கண்டுபோச்சு..."



"நீங்க வேறண்ணே.. இந்த மன்மதனைப் பார்த்து மயங்கி பின்னால் வர அவள் ஒண்ணும் பைத்தியக்காரி இல்லை..."

"உங்க பிரச்சினை இருக்கட்டும். தமிழரசு அவளை விரும்பறதை அந்தப் பொண்ணுக்கிட்டே என்னிக்காவது சொல்லி இருக்கானா? அட அதுகூட வேணாம்ப்பா... தைரியமா அவள்கிட்டே போய் ஒருவார்த்தை... ஒரே ஒரு வார்த்தை பேசியிருக்கானா வர்றது.. பனிக்குழைவு திங்கறது.. பார்த்துக்கிட்டே உட்கார்ந்திருக்கறது... எழுந்துபோயிடறது... இப்படி இருந்தால் முடிவுதான் என்ன ?"

தமிழரசுக்கு ஆவேசம் வந்தது பேசி முடிச்சிட்டீங்களா? இப்ப என்ன? நான் போய் அவள்கிட்டே பேசணும். அவ்வளவுதானே! என்னை என்ன பயந்தாங்குளின்னு நினைச்சீங்களா? பாவம், சின்னப் பெண்ணா தெரியுது. நான் போய் பேசினால் பயந்திடுமேன்னு விட்டுவைச்சிருக்கேன்...

"ஆமாம் ... உன் வீரம் எங்களுக்குத் தெரியாது? பொண்ணுங்கக் கிட்டே போய் நின்னாலே கை, கால் உதறும். உனக்கெதுக்கு வாய்?"

தமிழரசு பதில் ஏதும் பேசாமல் எழுந்தான். வேகமாக செல்லக்கிளியை நோக்கி நடந்தான். நண்பர்கள் திறந்த வாய் மூடாமல், பார்த்துக்கொண்டிருந்தார்கள். செல்லக்கிளியிடம், சிரித்து சிரித்து தமிழரசு பேசுவதும் அவள் புன்னகையுடன் பதில் சொல்வதும் தெரிந்தது. தமிழரசு வெற்றிப் புன்னகை யுடன் திரும்பினான்.

"இப்ப என்ன சொல்றீங்க? பேசிட்டேன் பார்த்தீங்களா?"

"பேசினே சரிப்பா... என்ன பேசினேன்னு சொன்னாத்தானே ... நாங்க ஏதாவது முடிவுக்கு வரமுடியும்?"

''ஆ... ஆசை .. ஆசை.... என் காவியக் காதலிகிட்டே முதன் முதலில் பேசினதை உங்ககிட்டே சொல்லுவேன்னு பார்த்தீங்களா? அது மட்டும் நடக்காது நான் கிட்டே போனதுமே பளீர்னு மின்னல் அடிச்சுதே... பார்க்கலை நீங்க? எங்காளு சிரிச்சது சார்... என்ன பிரமிச்சு உட்கார்ந்திட்டீங்க இன்னிக்கு நான் ஏக மகிழ்ச்சியில் இருக்கேன். இரவு சாப்பாடு முனியாண்டி விலாசில் என் கணக்கில்.... புறப்படுங்க போகலாம்....''

நால்வரும் நம்ப முடியாமல் அவனைப் பின்தொடர. லதா தன் இடத்திற்குத் தாவி வந்தாள்.

''பெரிய ஆளா இருக்கியேடி. நீ... என்ன விசயம்? அந்த அழகன் அர்ச்சுனன்கிட்டே அப்படி என்னதான் பேசினே? அந்த ஆளு மாய்ந்து போகிறாரே. இரண்டு வினாடி பேசினதுக்கு பஞ்சபாண்டவர் கூட்டத்துக்கு பிரியாணி சாப்பாடாம்... நான் உன் உயிர்த்தோழி இல்லையா? அவர் அளவு நீயும் மகிழ்ச்சியாத்தானே இருப்பே? உன் கணக்கில் ஒரே ஒரு பனிக்குழைவு எடுத்துக் கொடுடி...''

செல்லக்கிளி குழப்பத்துடன் அவனைப் பார்த்தாள்.

''என்ன சொல்றே? எனக்கு ஒண்ணும் புரியலியே... அர்ச்சுனன்கிட்டே பேசினேனா? யாரு அது?'' லதா கடுங் கோபத்துடன் முறைத்தாள்.

''என்னது புரியலியா? ஏண்டி தெரியாமத்தான் கேட்கிறேன்... நீ நிசமாகவே இளம்வயது பெண்தானா? இல்லை ஏதாவது ரோபட்டா? இப்படி மண்ணாந்தை போல விழிக்கிறியே.... நான் சொன்ன ஆளு உனக்குத் தெரியாது? பஞ்சபாண்டவரில் உன்னை கணக்கு பண்ற ஆளு. செக்கச்செவேல்னு ஒரு நிறம். எத்தனை உயரம். பார்க்கிற



வளுங்க எல்லாம் திரும்பவும் பார்க்கமாட்டானான்னு ஏங்கறாங்க... நீ என்னடான்னா ரொம்ப பிகு பண்ணிக்கிறியே.... உனக்காக வந்து தவம் இருக்கான் பாரு... அவனைச் சொல்லணும். பாவி... என்னத்தைடி பேசித் தொலைச்சே.. இப்படி உருகுறான்? உண்மையை சொல்லலை இங்கே ஒரு கொலை விழும்....'' செல்லக்கிளி சலித்துக் கொண்டாள்.

''என்ன தெரியணும்னு நீ இப்படி குடையறே? அந்த ஆளுக்கிட்டே நான் எதுவும் பேசலைடி... ''கசாட்டா'' வகை நேத்து இல்லைன்னு சொன்னீங்களே இன்னிக்காவது வந்திட்டுதான்னு கேட்டார். நானும் இல்லை சார் நாளைக்குத் தான் வரும்னு பதில் சொன்னேன். இதுதான் நடந்தது. உன்மேல ஆணை... என்னை நம்புடி...''

''என்னது.... இதுதான் நடந்ததா....'' என்ற லதா அப்படியே மயங்கிச் சரிந்தாள்.



## 2

''எந்த நேரத்தில் பிறந்தேனோ தெரியலை இந்தத் துன்பப்படறேன். நீங்க மட்டும் அப்பப்ப உதவி செய்யலேன்னா நாங்க போன இடத்தில் புல்லு முளைச்சிருக்கும். நம்ம நிலைமையே சட்டி ஏந்தாத நிலை. இதில் இந்த துப்புகெட்ட மனுஷன் அக்காகாரி சாவுக்கு போனவர் சும்மா வரவேண்டியதுதானே. அவள் பெத்த மூணையும் இழுத்துக்கிட்டு வந்திட்டார். பெத்த மூணு. வந்த மூணுன்னு ஆறுக்கும் முழுவயிறு இல்லேன்னாலும் கால் வயிறாவது கஞ்சி ஊத்தணும். துணிமணி

வாங்கித் தரணும். திருமணம் கருமாதின்னு செய்துத் தொலையணும்... கொடுத்தா வைச்சிருக்கோம்?உங்களை அடிக்கடி தொந்தரவு செய்ய?''

குட்டை மேசை மீது காபி ஏடுகட்டி ஆறிக்கொண்டிருந்தது. வடிவாம்பாளின் பிலாக்கணம் முடியாமல் நீண்டது.

''சிங்கப்பூர் போயிட்டு ஆறு மாதம் கழிச்சு இப்பதான் வந்திருக்கார். அதுக்குள்ளே நம்ம துன்பத்தைச் சொல்லணுமா? அவரை காபி குடிக்கறதுக்கு விடு வடிவு ...'' சன்னாசி பயந்துகொண்டே முணுமுணுத்தார். குரல் நடுங்கியது.

''நீங்க வாயை மூடுங்க... ஏதாவது சொல்லிடப் போறேன். எல்லாம் உங்களால் வந்தது. சித்தப்பா... காபி ஆறிப்போகுது. நீங்க குடிங்க...''

தேவநாதன் ஒரே ஒரு மிடறு குடித்துவிட்டு கோப்பையை கீழே வைத்தார். வடிவு ஏதோ தூரத்து சொந்தம். வறுமையிலும், பேராசையிலும் சிக்கித் தவிக்கும் ஒரு சராசரி பெண் அவள். மனைவி இறந்த பிறகு தனியாளாய் இருக்கும் தேவநாதனைத் தேடி வருவாள். தன் குறையை சொல்லி அழுது புலம்பி நூறோ. இருநூறோ வாங்கிக் கொண்டு போவாள். பத்து நாளைக் கொருதரம் இப்படித்தான் இடையில் வியாபார சம்மந்தமாக தேவநாதன் சிங்கப்பூர் சென்று விட்டால் வடிவுவின் பாடு துன்பம் தான். அவர் ஊர் திரும்பும் நாளை எதிர்பார்த்து காத்திருப்பாள். வந்துவிட்டால் புலம்பித் தள்ளி ஆயிரம் ரூபாய் வரையில் கறந்துவிடுவாள்.

இந்த முறை புலம்பல் புதுமாதிரி இருக்கிறது. தேவநாதன் அமைதியாக இருப்பதைப் பார்த்த வடிவு மீண்டும் ஆரம்பித்தாள்.



''வந்திருக்கறதுங்க லேசுபட்டதுங்க இல்லை சித்தப்பா. எடுக்கறது பிச்சைன்னாலும் கவுரவம் பார்க்குது பாருங்க... உங்களால் நம்பமுடியாது. பெரியவள் செல்லக்கிளி கடையில் வேலை பார்க்க ஏற்பாடு செய்துக்கிட்டாச்சு. நடுபையன் பிரபு படிக்கிறான். ஆனால் காலையில் தினசரி பத்திரிகை வினியோகம் பண்றான். சின்னபெண் சாயங்காலத்தில் நூலகத்தில் புத்தகம் ஒழுங்கு பண்ணி வைக்கிற வேலை செய்கிறாள்.''

தேவநாதன் வியப்பில் விழி உயர்த்தினார். 'சன்னாசி குடும்பத்தில் இப்படி கயகவுரவம் பார்க்கக்கூட ஆள் இருக் கிறதா? தங்களால் பிறருக்கு துன்பம் ஏற்படக்கூடாது என்கிற எண்ணம் கொண்ட பிள்ளைகளா? அவசியம் பார்க்க வேண்டுமே.'

''அவங்களை கூப்பிடேன் வடிவு நானும் பார்க்கிறேன்...''

''எல்லாம் எட்டு மணிக்குத்தான் வரும்... அதுகளுக்கு ஆக்கிக் கொட்டத்தான் நான் இருக்கேனே....'' வடிவு அலுத்துக் கொண்டாள்.

தேவநாதன் சற்று ஏமாற்றமானார். அதைக் காட்டிக் கொள்ளாமல், ''சரி வடிவு நான் கிளம்பறேன்...'' என்றபடி எழுந்தார். வடிவு வளைந்து குழைந்தாள். தேவநாதன் கண்டு கொள்ளாமல் காருக்கு விரைந்தார்.

கார்க் கதவை திறக்கும் போது வடிவின் குரல் கேட்டது ''அதோ வராளே.... செல்லக்கிளி.. என்னடி இன்னிக்கு இவ்வளவு சீக்கிரமா வந்திட்டே...''

அலட்சியமாக திரும்பிய தேவநாதன் ஒரு கணம் வியந்தார். இத்தனை அழகான பெண்ணா கை தன்னையுமறியாமல் பைக்குள் நுழைந்தது.



3

"இந்த பொம்பளைங்களுக்கு வேற வேலையே இல்லைப்பா திருமணம் செய்துக்க சொல்லி ஒரே தொந்தரவு. தினமும் கடிதம் எழுதி இம்சை பண்றாங் களே..." தமிழரசு அலுத்துக் கொண்டான்.

"அது யாருப்பா உன்னை அப்படி தொல்லை செய்யற பொம்பளைங்க? சொல்லேன்.... நாங்களும் தெரிஞ்சுக்க றோம்?" நமச்சிவாயம் கேட்டார்.

"எங்கம்மாவும் பாட்டியும்தான் தொல்லை செய்ய றாங்க...?"

"அதானே பார்த்தேன். வேற யாரு உன்னை திருமணம் செய்துக்க துடிப்பாங்க? அந்த பனிக்குழைவு பெண் என்னாயிற்று? ரெண்டுநாளா அமைதியா இருக்கே?"

"நீங்க வேறண்ணே.... இந்தப் பயல் அன்னிக்கு நம்மக்கிட்டே பொய் சொல்லி சமாளிச்சிருக்கான். அந்தப் பொண்ணுக்கிட்டே இவன் நிச்சயமா தன் காதலைப் பத்தி பேசலை..." ரவி தீர்மானமாய் சொன்னான்.

"எனக்குக்கூட சந்தேகம் தான். காதலிகிட்டே காதலை சொன்னவன் இப்படி அமைதியா இருப்பானா? அவள் பதிலை எதிர்பார்த்து ஏற்படற அவதி எதையும் இங்கே



காணோமே... ஏதோ இடிக்குதே..." ராமு சந்தேகத்தை கிளப்பினான்.

தமிழரசன் கடுப்பானான். "ஏம்பா ஜோசப் நீ எதுவும் சொல்லலியா? நீயும் சொல்லிடுப்பா.... குறை எதுக்கு?"

ஜோசப் அவன் தோளைத் தட்டினான். "முதலில் என் கேள்விக்கு பதில் சொல்லு... ரெண்டு மாசமா அந்தப் பொண்ணுக்காக இப்படி தவம் புரிஞ்சு அலையறியே. அவள் பேரு தெரியுமா உனக்கு, அவளைப் பத்தி ஏதாவது தெரியுமா? உன் முகரைக்கெல்லாம் காதல் ஒரு கேடு... ஏண்டா கிடந்து அலையறீங்க?"

முகத்தில் அறை வாங்கினது போல தமிழரசு அதிர்ந்தான். "அதுதானே...தற்செயலாக பனிக்குழைவு நிலையத்தில் பார்த்ததில் இருந்து பைத்தியமாகிப் போனதோடு சரி. வேற எதுவும் அறிவுப் பூர்வமாக சிந்திக்கவே இல்லையே இப்படி கிறுக்குத்தனமாக புலம்பிக்கிட்டிருந்தா அதுக்கு பெயர் காதலாகிப் போகுமா? தப்பை தம் மீது வைத்துக் கொண்டு அடுத்தவர்களை எரிஞ்சு விழுவானேன். இன்றே இதுக்கு ஒரு முடிவு பண்ணிட வேண்டியதுதான்... அவளோட ஒப்புதல கேட்குமுன்னே அவளைப் பற்றிய எல்லா விவரங்களையும் சேகரித்துவிட வேண்டியதுதான்..."

வேகமாக வெளியேறினான். நண்பர்களின் சிரிப்பொலி பின்தொடர்ந்து கேட்டது. பைக்கை கோபத்துடன் உதைத்தான்.

நேராக "பனிமலர் பனிக்குழைவு" விற்பனை நிலையத்துக்கு வந்தான். வழக்கமாக உட்காரும் நாற்காலியில் உட்கார்ந்தான். அங்கிருந்து பார்த்தால் செல்லக்கிளி இருக்கும் இடம்

தெளிவாகத் தெரியும். அவள் யாரோடோ பேசி சிரிப்பது தெரிந்தது. தமிழரசுக்கு கோபம் எகிறியது.

''இளிக்கறதைப்பாரு... கோலி சோடா உடைச்ச மாதிரி ரெண்டு மாசமா ஒரு ஆண்பிள்ளை அதுவும் என்னை மாதிரி ஒரு அழகன் எதிரில் உட்கார்ந்து உருகிக்கிட்டிருக்கிறானே என்ன விசயம் என்று ஏதாவது கவலைப்படுகிறாளா பாரு எல்லாம் என் நேரம்.... ஆளு மட்டும் அழகா இருந்தா போதுமா? தெண்டமா இருக்காளே...''

தமிழரசு தனக்குள் புலம்பித் தளும்பிக் கொண்டிருக்கும் போது லதா அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

'என்ன... அர்ச்சுன மகாராஜா தன்னந்தனியா வந்திருக்கார்? ஏதும் கோபமா இருக்கானா முகம் சிவந்துகிடக்கே,,, என்னவென்று விசாரிக்கலாமா? அவனிடம் பேசினால் இந்தப் பொண்ணு என்ன சொல்லுவாளோ...?'

லதாவின் எண்ணத்தைப் புரிந்துக்கொள்ளாமல் தமிழரசு இன்னும் கோபமானான்.

'இவள் பார்க்கலைன்னு யாரு அழுதாங்க? பக்கத்தில் நிக்கிறாளே மாவால் செய்த ஒரு மக்கு மரமண்டை அவள் பார்க்கிறாளா பாரு.. அடியே பாவி, என் அவதி புரியாமல் சிரிக்கிறியா? உன்னைச் சொல்லி குத்தம் இல்லேடி.... என்னை சொல்லணும்... கையில் என்ன வைச்சிருக்கே? கோப்புதானே? என் தலையில் போடுடி.... அப்பவாவது எனக்கு புத்தி வருதா பார்க்கலாம்.''

தமிழரசின் நிலைமை புரியாத பணியாள் வந்தார். ''என்ன சார் சாப்பிடறீங்க?''



''கொதிக்கற எண்ணெய் ஒரு கோப்பை கொண்டு வாங்க குடிக்கிறேன். பனிக்குழைவு விக்கற இடத்தில் என்ன சார் சாப்பிட வருவாங்க? எதையாவது கொண்டு வாங்க... போங்க..''

பணியாள் பார்த்த பார்வையில் பைத்தியம் போலிருக்கிறது என்கிற பாவம் இருந்தது. செல்லக்கிளியிடம் போனா, திரும்பி வரும்போது ''கசாட்டா'' பனிக்குழைவு கோப்பையை கொண்டு வந்தார்.

''அம்மா கொடுத்து அனுப்பினாங்க சார். போனமுறை வந்தப்ப கேட்டீங்களாமே.''

தமிழரசு அதிர்ந்து போனான். மலர மலர சிரித்தான். கதாநாயகன் பார்வைப் பார்த்தான். இருபது ரூபாய் தாளை உருவி அவரிடம் நீட்டினான்.

''என் மேல் அவளுக்கு அக்கறை இருக்கு. நான் தான் மடையன். வீணா கோவிச்சுக்கிட்டேன். பாவம் பொண்ணு அது என்ன செய்யும்? நாசூக்காத்தானே எதுவும் காட்டிக்க முடியும்? காதலில் இப்படித்தான் இருக்கணும். இன்னிக்கு பார்த்து அந்த பாவிகள் யாருமில்லையே... என்ன செய்வேன்... எழுந்து நின்று சத்தமாக பாட்டுப் பாட வேண்டும் போலிருக் கிறதே...''

பணியாளை ஒரு பாசப் பார்வை பார்த்தான். ''அந்த வெள்ளைச்சேலை கட்டின அம்மாதானே அனுப்பினாங்க? நன்றி சொன்னேன்னு சொல்லுங்க.''

''இல்லையே.... பக்கத்தில் நிக்கறாங்களே பச்சைச்சேலை அவங்க இல்லை அனுப்பினாங்க...''

தமிழரசு காத்துப்போன பலூனாகி போனான். சட்டென மகிழ்ச்சி வடிய வேகமாக வெளியேறினான்.



4

''மேடம்.... நில்லுங்களேன். பச்சைச் சேலை கட்டியிருந்தா கிளி மாதிரி பறக்கணுமா?''

தன்னையும் மீறி வந்துவிட்ட சிரிப்பை மறைத்தவளாய் லதா நின்றாள்.

''வழிமறிச்சு பேசறேன்னு கோபிச்சுக்காதீங்க மேடம்.. வேற வழியில்லை.... என்னைப் பாருங்க என் பால் வடியும் முகத்தைப் பாருங்க.. என்னைப் பார்த்தா பாவமாக இல்லையா? ஐய்யய்ய...அப்படி பார்க்காதீங்க... ஏதோ பிச்சைக்காரனைப் பார்க்கிற மாதிரி இருக்கு. ஒரு கதா நாயகனைப் பார்க்கிற மாதிரி பாருங்க... இப்ப கொஞ்சம் பரவாயில்லை... உங்கக்கிட்டே ஒரு சின்ன உதவி நாடி வந்திருக்கேன்..''

தன் எதிரே நிற்கும் தமிழரசைப் பார்த்து புன்னகைத்தாள் லதா.

'விசயம் முத்திவிட்டது. நாமாக எதுவும் பேசக்கூடாது. அவனே சொல்லட்டும் கொஞ்சம் அழவைத்துப் பார்ப்போமா...'

''யார் சார் நீங்க? இப்படி நடுவழியில் வழிமறிக்கறீங்களே... யாராவது பார்த்தால் என்ன நினைப்பாங்க? வழியை விடுங்க...''



தமிழரசு இடுப்பில் கைகளை வைத்துக் கொண்டு வீரப்பா பாணியில் சிரித்தான்.

''என்னது.... நான் யாரா? சபாஷ் சரியான கேள்வி... கசாட்டா கொடுத்து அனுப்பினப்போ நான் யாருன்னு தெரிஞ்சுதான் கொடுத்தீங்களா? வீணா நடிக்காதீங்க. எனக்கு கோபம் வந்தா என்ன செய்வேன் தெரியுமா? தெரியாதில்ல அப்ப விட்டுடுங்க.... நான் சொல்றதைக் கேளுங்க.... நான் எதுக்காக வழிமறித்தேன்னு தெரியாது உங்களுக்கு?''

லதாவுக்கு வியப்பாக இருந்தது. 'இப்படி இயல்பானவனாக இவன் இருக்கிறான் அந்த செல்லக்கிளி ஒரு மாதிரியாச்சே... இவனோடு அவள் ஒத்துப் போவாளா? இயற்கை விதியே அப்படித்தானே? எதிரி துருவங்கள்தானே ஒன்றை ஒன்று ஈர்க்கும்? இவன் காதலுக்கு நம்மை ஒரு கருவியாக்கிவிட்டது. முடிந்தவரை உதவி செய்வோம். பாவம் செல்லக்கிளி இவனாலாவது சுகப்படட்டும்...'

''என்ன? வாயை திறந்த பேசமாட்டீங்களா... எங்கே உங்கள் தோழி அந்த மாவு பொம்மையைக் காணோம்? உங்ககிட்டே எதுக்கு மறைக்கணும்? எனக்கு அவங்களை ரொம்ப பிடிச்சிருக்குங்க. திருமணம் செய்துக்கிட்டா அவங்களை மாதிரி ஒரு மாவு பொம்மையைத்தான் செய்துக்குவேன்னு ஒரு வேண்டுதல் பண்ணியிருக்கேன். நீங்க எனக்கு உதவி செய்யணும். என்ன சொல்றீங்க?''

லதாவுக்கு வேடிக்கையாக இருந்தது. ''என்ன சார் நீங்க... நட்ட நடுசாலையில் இந்த இராத்திரி நேரத்தில் காதலுக்கு உதவி செய்யுங்கன்னு கேட்கறீங்க...?''

''அதுசரி... எல்லாம் என் நேரம். சரிம்மா மன்னிச்சிடுங்க... நல்லநேரம் குறிச்சுக் கொடுங்க நாளைக்கு ஒரு லாரி நிறைய பூ பழம், இனிப்பு எடுத்துக்கிட்டு உங்க வீட்டுக்கு வரேன். உதவி கேட்டு நீங்க ஆரத்தி தட்டோட நில்லுங்க சரிதானே? ரொம்பத்தான் பிகுபண்ணிக்கறீங்க? இதுக்குத்தான் சொல்றது. சாமி வரம் கொடுத்தாக்கூட பூசாரி வரம் தரமாட்டான்னு. இப்ப என்னங்கறீங்க நீங்க? ம்... உதவி செய்யறேன்னு ஒப்புக் குங்க...''

லதா புன்னகையுடன் தலையசைத்தாள், ''சரி சார்... இப்ப என்ன செய்யணும் உங்களுக்கு? ஆனால், திருமணம் செய்துக்கற எண்ணத்திலிருந்து நீங்க மாறக்கூடாது. சும்மா சுத்தித் திரியறமாதிரி அரைவேக்காட்டுத்தனமான காதல்னா நான் உதவமாட்டேன்.''

''அடப்பாருடா... எப்பேர்பட்ட சினேகிதி எங்க ஆளுக்கு.. முத்திரைத்தாள் குத்தின காகிதத்தில் கையெழுத்துப் போட்டுத் தரணுமா? நான் தயார்...''

லதா சிரித்தாள்.



5

''கண்டுபிடிச்சிட்டேன்... எங்காளு பேரு தெரிஞ்சுக்கிட்டேனே...'' கத்திக் கொண்டே புயலாய் உள்ளே நுழைந்த தமிழரசை மற்ற நால்வரும் அலட்சிய மாக பார்த்துவிட்டு தத்தம் வேலையில் மூழ்கினார்கள்.



''பொறாமை பிடிச்சக் கூட்டமே.. என்ன வேலை செய்தாலும் அப்படியே விட்டுவிட்டுதான் சொல்றதைக் கேளுங்க... எங்காளு பெயர் சொன்னேன்னு வைய்யுங்க... அப்படியே வாயைப் பொளந்திடுவீங்க...''

ஜோசப் பேசினான். ''அண்ணே... நாம கேட்கலைன்னா இவன் அழுதிடுவான் போலிருக்கு. கேட்டு வைச்சிடுவோம். ஆமாம், வாயைப் பொளக்கற பெயர்னு சொன்னியே... என்னது அது? லட்டா?''

''ஜோசப் எனக்கு வர்ற கோபத்துக்கு உன்னை நாலு உதை கொடுத்திடுவேன். படுவா..அவள் பெயர் என்ன தெரியுமா? செல்லக்கிளிடா... தெரிஞ்சுக்க...?''

ராமு வாய்விட்டு சிரித்தான். ''செல்லக்கிளியா? மூக்கு வளைஞ்சு சிவப்பா இல்லையே...''

ரவி கை தட்டினான். ''உனக்கு வீடு பார்க்க வேண்டிய அவசியமே இல்லை. மரத்திலேயே குடி இருந்திடுவான். நீ கீழே நின்னு குடும்பம் நடத்திடலாம்...''

''அடப் பாவிகளா...என் காதலி பெயரை இப்படியெல்லாம் கேலி பண்றீங்களே... அண்ணே, பார்த்துக்கிட்டு சும்மா இருக்கீங்களே ஏதும் பேசமாட்டீங்களா?'' தமிழரசு அழாத குறையாக சொன்ன போது நமச்சிவாயம் சிரித்தார்.

''ஏய் தமிழ்... என்னடா இது? சும்மா கேலி பண்றாங்கடா ராஜா... உன் காதல் வாழவும் திருமணத்தில் முடியவும் நாங்க உதவுகிறோம். நீ கவலைப்படாதே... பெயர் தெரிஞ்சுக்கிட்ட தோட நிற்காதே. அவளைப் பத்தின விவரத்தையெல்லாம் கேட்டு தெரிஞ்சுக்க. உனக்கு ஒத்துவருமான்னு பார்த்து மேலே ஆகவேண்டியதைக் கவனி...''

''இன்னிக்கு பிரியாணி எங்க செலவு புறப்படு'' ரவி சொன்ன போது தமிழரசு முகத்தை சுளித்து ஒழுங்கு காட்டினான்.



# 6

''ஏண்டி செல்லக்கிளி, குதிர்மாதிரி வளர்ந்திருக்கியே தவிர மூளை இல்லையே... தாத்தா உன்னை வரச்சொன்னார்னு சொன்னேன். இல்லை... காதில் விழலியா?'' வடிவு எட்டு ஊருக்குக் கேட்கிற மாதிரி அலறினாள்.

தலைவாரிக் கொண்டிருந்த செல்லக்கிளி பதில் பேசாமல் இருந்தாள். மீண்டும் வடிவு உறுமினாள்.

''ஏண்டி நான் என்ன தாலாட்டா பாடுறேன். கேட்டுக்கிட்டு சும்மா இருக்கியே... இன்னிக்கு நீ வேலைக்குப் போக வேணாம். தாத்தா வீட்டுக்குப் போய் அவருக்கு வேண்டியதைச் செய்...''

''இல்லை மாமி.... வேலையிலிருந்து திடீர்னு நிக்க முடியாது. பிரச்சினை வரும்...''

வடிவு அவளை முறைத்தாள். ''ஆமாம் அவன் பத்தாயிரம் ரூபாய் கொடுக்கிறான். நின்னுட்டா பிரச்சினை வரும்னு இவள் சட்டம் பேசறா..போடி... நான் சொன்னதை செய்யுடி.''

செல்லக்கிளி தீர்மானமாகச் சொன்னாள். ''இல்லை மாமி.... நான் போக முடியாது. இன்னிக்கு கடையில் முக்கியமான



கணக்கு முடிக்கணும். நான் போனாத்தான் சரிப்படும். வரேன்...''

''அடி... கட்டையில் போறவளே.... நான் சொன்னதுக்கு எதிர்த்துப் பேசற அளவுக்கு துளுத்து போச்சா உனக்கு? உன்னைச் சொல்லிக் குத்தமில்லை.... எல்லாம் இந்த துப்பு கெட்ட மனுஷனால் வந்தது. உன் மாமன் கொடுக்கற இடம்டி.... இடம்....''

செல்லக்கிளி மடமடவென திரும்பிப் பாராமல் படியிறங்கினாள். வடிவின் குரல் விடாமல் துரத்தியது. பயந்து போய் நடையை எட்டிப் போட்டாள். கண்கலங்கியது.

மனதில் தேவநாதனின் முகம் நிழலாடியது. அவரது நடவடிக்கைகள் தோன்றின.

இப்படித்தான் வடிவின் தொல்லை தாங்காமல் போனவராம் விடுமுறை போட்டுவிட்டு தேவநாதனின் வீட்டிற்குப் போனான்.

அவனைப் பார்த்ததும் முகம் மலர்ந்தார் தேவநாதன். ''வா செல்லக்கிளி. அன்னிக்கு பார்த்ததைவிட இளைப்பா தெரியறியே.... வடிவு சரியா சாப்பாடு போடறாளா இல்லையா? வாயாடி ஏதாவது கடுகடுன்னு பேசிக்கிட்டே இருப்பாளே.. பாவம் நீ சின்னப் பொண்ணு... வாழவேண்டியவள். ரொம்ப தொல்லை கொடுத்தால் நீ இங்கே வந்திடு. நான் மட்டும் தனியாத்தானே இருக்கேன்.''

செல்லக்கிளி தலையாட்டி மறுத்தாள். ''அதெல்லாம் இல்லை தாத்தா, மாமி என்னை எதுவும் சொல்றதில்லை. நல்லாத்தான் வைச்சுக்கிறாங்க...''

தேவநாதன் முகம் சுளித்தார். ''என்ன நீ என்னை தாத்தான்னு சொல்றே? அங்கிள்னு கூப்பிடு. எனக்கு ஒண்ணும் அத்தனை வயசாகலை தெரியுதா?''

அறைக்குள் சென்று வந்தவர் கையில் நான்கு ஐநூறு ருபாய் தாள் இருந்தது. அவள் கையைப்பிடித்து அதை திணித்தார்.

''செலவுக்கு வைச்சுக்க. வடிவுக்குத் தெரிய வேண்டாம். எப்பலாம் பணம் தேவைப்படுகிறதோ என்னைக் கேளு தரேன். இந்த வீடு உன்னுடையதுதான்னு வைச்சுக்கயேன்.''

அவர் கையை மெதுவாக தள்ளினாள் செல்லக்கிளி. ''எனக்கு செலவு எதுவும் இல்லை. மாமி ரொம்ப நல்லவங்க... நல்லாத்தான் வைச்சுக்கறாங்க.நான் கிளம்பறேன்.''

வீட்டுக்கு வந்தும் கூட அவளுக்கு படபடப்பும், அவதியும் குறையவில்லை. தேவநாதன் நடத்தையைப் பற்றி யாரிடமும் சொல்லவும் முடியாது, மாமி கொன்றுவிடுவாள். எத்தனை வயசானால் என்ன? மனவக்கிரம் உள்ளவர்கள் மாறுவதே இல்லை. ஏழைகள் அதுவும் அநாதைகள் என்றால் அவர்கள் தங்கள் வேலையை காட்டிவிடுகிறார்கள்.

பேருந்து நிறுத்தம் வந்துவிட்டது புரிந்தது. கண்களைச் சுழற்றி லதாவைத் தேடினாள்.

''என்ன செல்லக்கிளி இப்படி வியர்த்து விறுவிறுத்து ஓடி வந்திருக்கே... ஏதும் தொல்லையா?'' லதா கேட்டாள்.

''இல்லை லதா...''

லதா அவளை ஒரு நிமிடம் பார்த்தாள். ஏழ்மையான தோற்றத்திலும் ஒரு கம்பீரம் பார்ப்பவர்கள் மனதில் ஒரு



மலைப்பை ஏற்படுத்தும் அழகு. நல்ல அறிவு. இவளிடம் தமிழரசு தன்னை இழந்ததில் தவறு ஏதும் இல்லை.

தமிழரசைப் பற்றி பேசிப் பார்க்கலாம். அவனைப் பற்றி மனதில் என்ன நினைத்திருக்கிறாள் என்று தெரிந்துக் கொள்ளலாம்.

''செல்லக்கிளி நான் அன்னிக்கு சொன்னேனே அர்ச்சுன மகராசன்... அவர் நேத்து என்கிட்டே பேசினார்டி.. என்னன்னு கேளேன்... தெரியுமே... எதுவும் பேசமாட்டியே நானே சொல்றேன். உன்னைப் பற்றித்தான் விசாரணை போயேன். உன்னை விரும்புவது போலத் தெரியுது. உன்கிட்டே பேசறதுக்கு தயக்கமா இருக்கு போலிருக்கு... நான் வேணுமானா பேசிப் பார்க்கட்டுமா?''

செல்லக்கிளி அவளைப் பார்த்த பார்வையில் கோபம் இருந்தது.

''என்னடி பேசறே நீ... என் நிலமை புரியாமல் எதை யாவது பேசி இக்கட்டில் மாட்டிவிட்டுவிடாதே. அழகான பெண்ணைப் பார்த்ததும் பின்னால் இளித்துக் கொண்டு ஓடும் ஒரு இளைஞனை நம்பி எதுவும் தலையிடாதே. என் வயதுக்கு இப்படி எத்தனை சம்பவங்கள் பார்த்திருக்கிறேன்.''

லதா மறுத்தாள். ''இல்லை செல்லக்கிளி... உன் கணிப்பு தவறாக இருக்கலாம். அவர் நல்லவராகத்தான் தெரிகிறார். பெத்தவங்களை இழந்த உனக்கு எதிர்காலத்தில் ஒரு பிடிப்பு வேண்டும். நீயும்வாழ வேண்டும் இல்லையா... அதனால்தான் நான் பேசினேன்... என்னவென்று விசாரிப்போமே...''

செல்லக்கிளி இடைவெட்டினாள். ''இந்தப் பேச்சை இதோடு விட்டுவிடு லதா. பெத்தவங்க இல்லாமல் ஓரிடத்தில்

அண்டி இருக்கிறோம். அவங்க கவுரத்துக்கு ஏதும் பங்கம் வந்திடாமல் நடத்துக்கணும். அதோட என் எண்ணம் எல்லாம் என் தம்பி, தங்கைகளின் வாழ்வுதான். அவங்க படிக்கணும். நல்ல வேலையில் சேரணும். திருமணம் செய்துக் கொண்டு வாழணும். அதைப் பார்த்தே நான் நிம்மதியாகிடுவேன். எனக்குன்னு வாழ்க்கை தனியா வேண்டாம்.''

அதற்குமேல் லதா பேசவில்லை. உரிய பேருந்து வந்ததும் அவர்கள் ஏறினார்கள்.

''என்னங்க லதா, எங்காளு ஏதாவது சொன்னாங்களா? என் அழகைப்பத்தி, என் வீரபராக்கிரமத்தைப் பத்தி என்ன நினைக்கிறாங்க? என் மனசு தெரிஞ்சதுமே உங்களைக் கட்டிப்பிடித்து பாட்டுப்பாடி இருப்பாங்களே...''

தமிழரசு தன்பாட்டுக்கு பேசும்போது லதா அமைதியாக இருந்தாள்.

''இல்லை சார்... அவள் பேசினது எதுவும் உங்களுக்கு சாதகமா இல்லை. இதுபத்தி மேல நான் பேசினால் எங்க நட்பு பாதிக்கப்படுமோன்னு பயமா இருக்கு. இனிமேல் இது உங்க பிரச்சினை. நீங்களே முடிவு பண்ணிக்குங்க..''

''என்னங்க நீங்க.. இப்படி பின்வாங்கிட்டீங்க. ஒரு காதலை சேர்த்து வைச்சா உங்களுக்கு திருமணம் உடனே முடியுங்க.. மாட்டிங்களா?''

அவன் முகம் பரிதாபமாகியது லதா ஒருகணம் திகைத்தாள், 'சரி' என்பது போல தலையாட்டினாள்.





7

''என்ன சார் உதவி கேட்டா இப்படி மூக்கால் அழுவறீங்களே... நீங்க போகிற வழியில் என்னை கொஞ்சம் இறக்கிட மாட்டீங்களா... சூப்பர் பைக் வைச்சிருக் கீங்களே...'' பக்கதது இருக்கை ராணி கொஞ்சலாகக் கேட்டபோது தமிழரசு கையெடுத்துக் கும்பிட்டான்.

''இதோ பாரு ராணி, உன் உடைகளை பார்த்த பிறகும் உங்களை வண்டியில் ஏத்தினால் என் கதை அவ்வளவுதான்.''

''இந்த உடைக்கு என்ன சார் குறை? எதையும் கலைக் கண்ணோடு பார்க்கக் கத்துக்கணும் சார். இப்படி தவறாக எடுக்கக் கூடாது.''

உடலில் பாதியை வெளிச்சம் போட்டு வெளிக்காட்டும் உடையை பார்த்த போது தமிழரசுக்கு குமட்டியது.

''தாயே... நான் நல்ல பையன்னு பெயர் வாங்கியிருக்கிறது உனக்கு பிடிக்கலியா? உன்னோடு என்னை என் நண்பர்கள் பார்த்தால் வேற வினை வேண்டாம். என் வீட்டுக்கு மரண ஓலை அனுப்பிடுவாங்க. என்னை விட்டிடும்மா...'' தமிழரசு கெஞ்சினான்.

ராணி கெஞ்சினால், மிஞ்சும் ரகம்.

''என்ன சார், ரொம்பத்தான் அலட்டிக்கிறீங்க, இப்ப என்னை அழைச்சுக்கிட்டுப் போறீங்களா இல்லையானா நீங்க எனக்கு காதல் கடிதம் கொடுத்தீங்கன்னு எல்லார்கிட்டேயும் சொல்லிடுவேன். என்ன சொல்றீங்க..''

தமிழரசு அலறிவிட்டான் ''தாயே... வேண்டாம். இப்பவே பைக்கில் ஏறு. உன்னை எமலோகத்திற்கு கூட அழைச்சுக்கிட்டு போறேன். என்ன பொண்ணுங்கடாப்பா.. ஆண் பிள்ளைகளை சாகடிக்கவே பிறவி எடுத்திருக்குங்கப்பா...''

ராணி வெற்றிச் சிரிப்புடன் வண்டியில் ஏறி உட்கார்ந்தாள். வேண்டும் என்றே தமிழரசின் முதுகை உரசிக் கொண்டு கையை இடுப்பில் போட்டுக் கொண்டாள்.

தமிழரசு நெளிந்தான். ''இதோ பாரு ராணி உன்னை அழைச்சுக்கிட்டுப் போகிறேன்னுதான் ஒப்புக்கிட்டேன். இப்படியெல்லாம் நீ செய்தால் நிச்சயம் நான் உன்னை நடுத்தெருவில் இறக்கி விட்டிட்டுப் போயிடுவேன். நான் கற்புள்ளவன். முதலில் கையை எடு... பின்னாடி பிடித்துக் கொண்டு வா... ஏதாவது ஏடாகூடமா செய்தே அவ்வளவு தான்.''

ராணி முறுக்கிக் கொண்டு நகர்ந்தாள். ''இப்படி பேசாமல் வந்தால் எப்படி எங்கே போகணும்னு சொன்னாத்தானே போக முடியும்?''

ராணி வம்புபண்ண முடிவு செய்தாள், ''நீங்க எங்கே போறீங்களோ அங்கே நானும் வரேன்...''

''யாரு நானா? நான் நேரா கடலுக்குள்ளே போகப் போறேன். எதுக்குத் தெரியுமா? தற்கொலை செய்துக்க... வரியா?''

''எனக்கென்ன சார் தலையெழுத்து? நான் வாழ வேண்டியவள். நான் இறங்க வேண்டிய இடம் வந்திட்டுது நிறுத்துங்க...''



''அடிப்பாவி... இங்கே வரணும்னு நீ சொல்லி இருந்தா உனக்கு கார் அமர்த்திக் கொடுத்திருப்பேனே.. ஐயோ... பழிவாங்கிட்டியேடி... இப்ப என்ன செய்வேன். எங்கே ஒளிஞ்சுக்குவேன். ஹெல்மட்டில் நுழைஞ்சுக்கவா...''

அவனது பதைபதைப்பு வீணானது ''பனிமலர் பனிக் குழைவு'' நிலையத்திலிருந்து செல்லக்கிளி அவர்களைப் பார்ப்பது தெரிந்தது.

''ரொம்ப நன்றி சார். அழகா இருக்கீங்க. அழகா வண்டி ஓட்டறீங்க... அழகா இருக்கற என்னை மட்டும் கண்ணு தெரியலியா? ரொம்ப செல்லப் பையன்... என்னை காதலிங் களேன் தமிழ்...'' என்றபடி அவன் எதிர்பாராத நேரத்தில் கன்னத்தில் சட்டென தட்டிவிட்டு ராணி சிரித்தாள்.

''போடி.. போடி... அறிவுகெட்டவளே... போச்சே... என் வாழ்வே போச்சே உன்னை என்ன செய்யறேன் பார்...'' புலம்பலும், அழுகையுமாக தமிழரசு வண்டியைக் கிளப்பி னான்.



## 8

''என்ன வடிவு... எதுவும் சொல்ல மாட்டேங்கறே? ஏதாவது முடிவு சொல்லு...'' தேவநாதன் கேட்டார்.

வடிவு வாயைப் பிளந்துக் கொண்டிருந் தாள். பதில் சொல்ல முடியவில்லை. தேவநாதன் ஒரு ஈயாக்கஞ்சன். அவர் இப்படி கேட்பது அவளை வியப்பிற்குள்ளாக்கியது. அதற்குள்ளிருக்கும் விவரத்தை தெரிஞ்சுக்க வேண்டுமே என்றும் இருந்தது. பிடி கொடுக்காமல் பேசினாள்.

''எதுக்கு சித்தப்பா உங்களுக்கு வீண் சிரமம். தனியா நிம்மதியா இருக்கீங்க. எங்க பட்டாளம் அங்கே வந்தால் சரியா வராது. பார்க்கிறவங்களும் தப்பா பேசுவாங்க. பிள்ளை இல்லாத சொத்துக்கு வடிவு வந்துட்டான்னு சொந்தமும் பேசும். வேண்டாம் சித்தப்பா..''

தேவநாதன் சிரித்தார். ''இது பூராவும் என் சொந்த சம்பாத்தியம் வடிவு. அதனால் எவனும் ஒரு வார்த்தை பேசமாட்டான். நீ எதுக்கு இந்த சின்ன வீட்டில் கொசுவிலும். நாத்தத்திலயும் இருக்கணும். அங்க பங்களாவுக்கு வந்தா ஒரே குடும்பமா இருக்கலாமில்லே? அதுக்குத்தான் சொல்றேன்...''

வடிவு பிடிவாதமாக மறுத்தாள். ''இருக்கட்டும் சித்தப்பா. இது பழக்கமானது தானே வேண்டாம்...''

தேவநாதன் பேசாமல் விட்டுவிட்டார். நாசூக்காக கேட்டார். ''எங்கே யாரையும் காணோம்?''

''எல்லாம் அதது வேலைகளுக்கு போயிருக்கு. பறந்து, பறந்து பாடுபட்டாலும் செலவு தலைக்குமேல ஓடுதே...''

தேவநாதன் கற்றை பணத்தை அவளிடம் நீட்டினார். ''நல்ல சாப்பாடு சாப்பிட்டு நாளாகிட்டுது வடிவு. சமையல் காரன் சமைக்கிறது எதுவும் வாய்க்கு ருசியா இல்லை. மீன் குழம்பும், கோழி வருவலும் செய்து கொடுத்து அனுப்பறியா?''

தேவநாதன் போய் வெகு நேரமாகியும் வடிவுக்கு வியப்பு அகலவில்லை. 'இந்தக் கிழவன் பத்து ரூபாய் பணம் கொடுக்க மூக்கால அழுவார். திடீர்னு என்ன கரிசனம் வந்திட்டுது? பணமா அள்ளி விடறார். சாப்பாடு கேட்கிறார். எல்லாத்துக்கும் மேலே தன் பங்களாவுக்கு வரச்சொல்லி கூப்பிடறார்.



இத்தனை நாளா இல்லாத உறவும் பாசமும் இப்ப எப்படி திடீர்னு வருது இவருக்கு? நம்ப முடியலியே... இவர் ஓடற பாம்புக்கு செதில் எண்ணுகிற சாதி... இந்த தாராளத்துக்குள்ளே ஏதோ காரணம் இருக்கு. அது என்னவா இருக்கும்?'

வடிவின் எண்ணத்துக்கு முற்றுப்புள்ளி வைப்பது போல செல்லக்கிளி படியேறி வருவது தெரிந்தது. மகா கெட்டிக்காரி யான வடிவு உடனே புரிந்துக் கொண்டாள். 'அந்த சபலக்கார கிழவனின் இலக்கு செல்லக்கிளியா? இனி அந்த ஆளை விடக்கூடாது. சோற்றுக்கு திண்டாடின போது பத்து ரூபாய் தர மேலும் கீழும் பார்த்தவர். இன்னிக்கு ஆயிரம் ஆயிரமாக அள்ளிவிடுகிறாரே... முடிந்தவரை இவளை வைத்து கறந்துவிட வேண்டியதுதான்.' துருப்புச்சீட்டு கையிலிருக்கும் தெம்பில் வடிவு எழுந்தாள்.



## 9

''ஏன் சார் உங்களுக்கு அறிவு இருக்கா? வாய் மட்டும் இருக்கே இந்த காதுக்கும் அந்தக் காதுக்கும் நீளுவது மாதிரி... எனக்கு இப்ப உங்கமேல சந்தேகம் வருது. நீங்க நிச்சயம் நல்லதொரு காதலரா, கணவரா இருக்கமாட்டீங்க. நேத்து காலையில் செல்லக்கிளியிடம் உங்க அன்பைப் பற்றி சொன்னப்ப அவள் மறுத்திட்டா. அது சரிதான்னு நீங்க சாயங்காலம் நிரூபிச்சிட் டீங்க. இனிமேல் தயவு செய்து என்னைத் தேடிவராதீங்க. போயிடுங்க.''

தமிழரசு கைகளைப் பிசைந்தான். தலையில் அடித்துக் கொண்டான். ''இதோ பாருங்க லதா மேடம். நான் அந்த

சனியன்கூட.. வந்தது உண்மைதான் மறைக்கலியே... ஆனா அதைப்பத்தி என்னுடைய மேலான கருத்தை நீங்க தெரிஞ்சுக் கணுமா? வேணாமா? நீங்க காதல் தூதுவர் வேலைக்கே லாயக்கில்லை. நீங்களே என் கனவெல்லாம் வீணாக்கிடுவீங்க போலிருக்கே."

லதா கைகளைத் தூக்கி கும்பிட்டாள். தமிழரசுக்கு எரிச்சல் வந்தது.

"இதுக்குத்தான் சொல்றது. காதலுக்கு யாரையும் தூதுவிடக் கூடாதுன்னு... இந்தாங்க லதா. இனி உங்களைத் தேடி வரமாட்டேன். தாயே. நானே எங்க செல்லக்கிளியை பார்த்து நேரில் பேசி தோப்புக்கரணமும் போட்டு காக்கா பிடிச்சு. அழுது ஆளை ஒழுங்கு செய்திடறேன். வரேன்."

பைக்கின் ஒலி தேயும் வரை லதா பார்த்துக் கொண்டிருந் தாள். 'இனி யாரையும் நம்பக்கூடாது. நாமே நேரில் சென்று அவள் என்னை ஏற்றுக் கொள்ளாவிட்டால், மனம் மாறும் வரை காத்திருக்க வேண்டியது தான்.'

நேராக பைக்கை "பனிமலர் பனிக்குழைவு" நிலையத்திற் குத் திருப்பினான். செல்லக்கிளி தனியாக உட்கார்ந்திருப்பது தெரிந்தது. நேராக அவளிடம் சென்றான்.

அவள் நிமிர்ந்து பார்க்குமுன் கடகடவென பேசினான். "இதோ பாருங்க செல்லக்கிளி. உங்க சினேகிதிக்கிட்டே நான் சொன்னதெல்லாம் உண்மை. சத்தியம். உங்களை நான் விரும்பறேன். உங்களையே திருமணம் செய்துக்கவும் விரும் பறேன். உங்களுக்கு இப்ப என்னைப் பிடிக்காவிட்டாலும் இன்னொரு நல்ல நாளுக்காக காத்திருக்கிறேன்."



"இப்ப நான் சொல்ல வந்தது இன்னொரு முக்கியமான விசயம். நேற்று நான் ஒரு பிடாரிகூட வந்ததைப் பார்த்துவிட்டு தப்பா நினைச்சுக்கிட்டீங்களாமே.. அப்படியா? அட... என்னங்க... நீங்க விவரம் புரியாதவங்களா இருக்கீங்களே.. அந்த ராணிக்கு என் மேல ஒரு இது...எனக்கு அது மேல எந்த இதுவும் இல்லை. சனியன் அப்பப்ப இப்படித்தான் எங்கேயாவது கொண்டு விடச் சொல்லி "லொள்ளு" பண்ணும். நானும் கடனெழவேன்னு செய்து தொலைவேன். வேற ஒண்ணுமே இல்லைங்க... நம்புங்க.. மாட்டீங்களா?"

செல்லக்கிளிக்கு மூச்சுமுட்டியது. தமிழரசு தன்னிடம் நேராகவே வந்து இப்படி பேசுவான் என்று அவள் கனவிலும் நினைக்கவில்லை. என்ன பதில் சொல்வது என்று திணறிப் போனாள். மேலாளர் பார்ப்பது தெரிந்தது.

செல்லக்கிளி வெள்ளை காகிதத்தை எடுத்து நீட்டினாள்.

"இதென்னது? வெள்ளை காகிதம்..?" ஒரு வினாடி யோசித்து தமிழரசு சிடுசிடுத்தான். "ஓகோ... வெள்ளைன்னா சமாதானம். ஏன் அதை வாயை திறந்து சொல்லமாட்டீங்களா? நாங்களா அர்த்தம் புரிஞ்சுக்கணுமோ.. இந்த "டகல்" வேலையெல்லாம் என்கிட்டே வேணாம். நான் ரொம்பக் கெட்டவன். சொல்லிட் டேன். வாயைத் திறந்து பேசினாத்தான் ஒப்புக்குவேன். சீக்கிரம்... பேசுங்க."

செல்லக்கிளி வினாடி மவுனத்திற்குப் பிறகு "என்ன சார் சாப்பிடறீங்க? பனிக்குழைவு எல்லா வகையும் இருக்கு" என்றாள்.

தமிழரசு தலையில் அடித்துக் கொண்டான். ''தாயே விட்டிடுங்க என்னை. தயவு செய்து என்கூட பேசாதீங்க. இந்த வார்த்தைகளைத் தாங்கள் பேசாமலே இருந்திருக்கலாம்...''

செல்லக்கிளி அவனை நிமிர்ந்து பார்த்தாள். ''வீணான ஆசைகளை மனதில் வைத்துக் கொண்டு இவன் தவிக்கிறான். முதலில் அந்த நினைவுகளை மாற்ற வேண்டும். அவசரப்பட்டால் எதுவும் முடியாது. நம் நிலையை தெளிவுப்படுத்திவிட வேண்டும்.''

தொண்டையை செருமிக் கொண்டாள்.

''நாளைக்கு மாலை கடற்கரைக்கு வந்தால் பேசலாம். கண்ணகி சிலை அருகே ஐந்து மணிக்கு காத்திருப்பேன். இப்ப சமாதானமாகப் போங்க. நிம்மதியா தூங்குங்க. நாளைக்கு சந்திக்கலாம்.''

தமிழரசு நம்ப முடியாமல் நின்றான்.

''மேலாளர் பார்க்கிறார். நீங்க கிளம்பினால் நன்றி உள்ளவளாக இருப்பேன்.''

''மறந்திடாமல் வந்திடுங்க. இராத்திரி எங்கே தூக்கம் வரப்போகுது? விடிய விடிய சிவராத்திரிதான். அப்புறம் முக்கியமான விசயம். மறக்காமல் சுண்டலுக்கு பணம் கொண்டு வந்திடுங்க. ஏன்னா நீங்கதான் முதலில் பேச கூப்பிட்டீங்க. அதனால் முதல் சுண்டல் உங்களது'' செல்லக்கிளி தன்னையும் மீறி சிரித்தாள்.

''சிரிப்பு.. சிரிப்பு.. உயிர்க் கொள்ளைப்போகும் சிரிப்பு... அப்படியே எடுத்துக்கிட்டுபோய் பத்திரமா அலமாரியில் பூட்டி வைக்கிறேன் வரேன்.''





## 10

''உங்களைத்தான்.. இப்படி இடிச்சபுளி மாதிரி உட்கார்ந்திருந்தா எப்படி? சித்தப்பா ரொம்ப தொல்லைப் பண்ணக்கிளம்பிட்டார். எப்ப பார்த்தாலும் வீட்டுக்கு வந்திடச் சொல்றார். சாப்பாடு கொடுத்து அனுப்பச் சொல்றார். இதெல்லாம் கூட்டிக் கழித்துப் பார்த்தால் என் கணக்கு செல்லக்கிளிகிட்டேதான் நிக்குது. ஒருவேளை அந்தக் கிழவன் அவளை திருமணம் செய்துக்கவோ இல்லை யாருக்கும் தெரியாத உறவா வைச்சுக்கவோ விரும்பறேன்னு சொல்லிட்டா என்ன பண்றது?''

வடிவின் பேச்சு சன்னாசிக்கு பெரும் கோபத்தை உண்டாக்கியது. இதுவரை அவ்ளை எதிர்த்துப் பேசியறியாதவர் கத்தினார்.

''இதோ பாரு வடிவு, அந்த ஆளு ஒரு சபலக் கேசுன்னு தெரிஞ்சும் உனக்கு உறவுங்கறதால வீட்டுக்குள் விட்டேன். அவன் பணம் அவனோட. நம்ம பெத்த பெண்ணுடைய எதிர்காலத்தையே நாம முடிவு செய்ய முடியாது. யாரோ பெத்தப் பொண்ணு அது. வீணா அவளுக்கு நன்மை செய்யறதா எதையாவது உளறி வைக்காதே.

பாவம், தாய் தகப்பனை ஒரே நாளில் பறிகொடுத்திட்டு பித்தியாய் வந்து சேர்ந்தது. நமக்கு பாரமா இருக்க விரும்பாமல் வேலை செய்து பணம் தருது. வாலிப வயசு தம்பியும், சின்ன தங்கையும் இருக்காங்க. அதுங்க பாவத்தைக் கொட்டிக்காதே. இனி அந்தக் கிழவன் அது இதுன்னு உள்ளே வந்தான் நான் சும்மா இருக்க மாட்டேன். செருப்பைக் கையில் எடுத்திடுவேன். சொல்லிட்டேன்.''

வடிவு வியந்து போனாள். இதுவரை சன்னாசி இப்படியெல்லாம் பேசியவரில்லை. வடிவுக்கு கோபம் வந்தது. 'அநாதைக் கழுதைகளுக்கு பரிஞ்சுக்கிட்டு என்னை எதிர்த்துப் பேசிட்டாரே' என்று தனக்குள் குமைந்துப் போனாள். 'இவர்கிட்டே சொன்னதால்தானே இப்படி பேசறார். இவருக்கும் மறைத்து நாம நம்ம வேலையைக் காட்டிட வேண்டியதுதான். கிழவரை சும்மா விடறதாவது. பணம் கறந்திட வேண்டியதுதான்.'

பேருந்து நிறுத்தத்தில் இறங்கி வீட்டுத் தெருவில் நுழையும் போதே வாசலில் கார் நிற்பது தெரிந்தது.

''இதோ வந்திட்டாளே செல்லக்கிளி நான் சொன்னதை அவள்கிட்டே சொல்லிடு வடிவு. நான் புறப்படறேன் சன்னாசியையும் அழைச்சுக்கிட்டு வந்திடு...''

தேவநாதன் போகிற சாக்கில் செல்லக்கிளி மீது மோதினார் யாருமறியாமல். அதைக் காட்டிக் கொள்ளாமல் செல்லக்கிளி உள்ளே சென்றாள்.

'தேவநாதன் என்ன சொல்லியிருப்பார்? மாமி ஏதாவது குண்டைத் தூக்கி போட்டுவிடப் போகிறாள். இந்த சங்கடத்திலிருந்து எப்படித் தப்பிப்பது...' செல்லக்கிளி கலங்கி நின்றாள்.' வழக்கமான வேலைகளை கை செய்தாலும் மனம் ஒன்றவில்லை.

படுக்கும்போது வடிவு சொன்னாள்... ''நாளைக்கு சித்தியோட நினைவு நாளாம். வீட்டில் பத்து பேருக்கு சாப்பாடு போட்டு. பட்டுச் சேலை வைத்து படையல் செய்யறது வழக்கமாம். அதுக்கு நம்மை வரச்சொல்லியிருக்கார். நீ நாலு



மணிக்கெல்லாம் சொல்லிட்டு வந்திடு முடியாதுன்னு சொல்லாதே...''

செல்லக்கிளிக்கு திக்கென்றது. 'நாளைக்கு ஐந்து மணிக்கு கடற்கரைக்கு வருவதாகச் சொல்லிவிட்டிருக்கிறோமே... தமிழரசு அங்கே வந்து காத்திருப்பாரே... மாமியிடமிருந்து தப்பித்தாலும், தாத்தாவிடமிருந்து தப்பிக்கவே முடியாது போலிருக்கிறதே... என்ன செய்வது?'

தூக்கம் இமை சேர மறந்தது செல்லக்கிளி தவிக்கலானாள்.



## 11

''என்ன விசயம் தமிழ். கால் தரையில்படாமல் குதியும் கும்மாளமுமாய் இருக்கே?'' ரவி வியப்புடன் கேட்டான்.

''என்ன விசயமாக இருக்கும்? ராணி காதல் கடிதம் கொடுத்திருப்பாளா இருக்கும். செல்லக்கிளிதான் இவனைத் திரும்பிக்கூட பார்க்கலையே..'' ராமு சொன்னான்.

''நண்பர்களே? இப்ப நான் சொல்றதைக் கேட்டு மயக்கமாகி நீங்கள் விழுந்தால் நான் பொறுப்பில்லை. நான் இன்னும் கொஞ்ச நேரத்தில் சந்திக்கப்போவது யாரைத் தெரியுமா? டொட்... டோடய்ங்...''

''என்ன இசை ஞானின்னு மனதில் நினைப்பா? இசையமைக்காமல் சொல்லுப்பா...''

''என் செல்லக்கிளியை சந்திக்கப் போறேன். கடற்கரையில் சந்திக்கிறோம் எங்க எதிர்காலத்தைப் பற்றி சிந்திக்கிறோம்.

நடுவில் சுண்டல் வாங்கி தின்னுக்கறோம். அப்புறமா வந்திடறோம் எப்படி?''

''சகிக்கலை. உன் தின்னிபுத்தி போவாதே. காதலிகூட பேசப்போறே. சுண்டல் தின்றதை ஒரு முக்கிய விசயமா சொல்றியே. பாவம்டா அந்தப் பொண்ணு. கிளி மாதிரி பொண்ணு.. கோட்டான் கிட்டே மாட்டுதே...'' ஜோசப் உண்மையாகவே கவலைப்பட்டான்.

நமச்சிவாயம் அவர்களை தடுத்தார். ''இருங்கடா பசங்களா. அவனே முக்கி முணகி ஒரு பெண்ணை பார்த்திருக்கான். இப்படியெல்லாம் பேசி அவனைத் தொல்லை செய்யாதீங்க. என்ன தமிழ். எப்ப பார்க்கப் போறே? யார் கூட வராங்க.... அதைச் சொல்லு.''

''அடக்கிழவா! முதன் முதலா என் காதலியை, என் கிளியை சந்திக்கப் போகிறேன். யார் கூட வராங்கன்னு கேட்கறீங்களே. உங்களுக்கு மனசாட்சியே கிடையாதா? நீங்க கேக்கறதைப் பார்த்தா, ஊர் முழுக்க சுவரொட்டி அடிச்சு ஒட்ட சொல்வீங்க போலிருக்கே... உங்களையெல்லாம் வைச்சுக்கிட்டு நானாவது... காதலிக்கறதாவது...''

கேலியும், கிண்டலும் வெடிக்க ஒருவழியாக தமிழரசு கிளம்பி பைக்கில் ஏறியபோது நண்பர்கள் நால்வரும் கைதட்டி வழி அனுப்பி வைத்தார்கள்.

கண்ணகி சிலையை அடையும் போது மாலை நான்கு. வேடிக்கை பார்த்து கண் வலிக்க ஆரம்பித்த போது மணி மாலை ஆறு. இனி வரமாட்டாள் என்று அவன் முடிவு செய்த போது மணி இரவு எட்டு. வேதனையுடன் பைக்கை கிளப்பியபோது மணி இரவு ஒன்பது.



அறைக்குள் நுழைந்தவன் வியந்து போனான். நண்பர்கள் நால்வரும் அவனுக்காக ஆவலோடு காத்திருந்தார்கள். இல்லாத வழக்கமாக இரவு சாப்பாடு அறைக்கே வரவழைக்கப்பட்டிருந்தது. இனிப்பு பெட்டி ஒன்றும் இருந்தது.

முகம் வாட பேச்சு இல்லாமல் அமைதியாக கட்டிலில் உட்கார்ந்து பூட்சுகளை கழட்டத் தொடங்கினான். எப்போதும் கேலி செய்யும் ஜோசப் கூட பேச்சிழந்தான்.

உடைமாற்றி முகம் கழுவி வந்தவனை எதுவும் கேட்கத் தோன்றாமல் உட்கார்ந்திருந்தவர்களை நமச்சிவாயம் உசுப்பினார்.

விவரம் முழுவதையும் கேட்டபிறகு அவர் தீர்மானமாகச் சொன்னார். ''அந்தப் பெண் நல்லவளாகத்தான் தெரிகிறாள். ஏமாற்றோ, கடபமோ தெரியவில்லை. தான் சொன்னதைக் காப்பாற்ற முடியவில்லை என்றால் ஏதோ நடந்திருக்கிறது.

அவளைப் பற்றி நமக்கு முழுவதுமாகத் தெரியவில்லை. அவள் சினேகிதியை நம்பிப் பயனில்லை. இதில் நானே முழுமூச்சாக இறங்க வேண்டியதுதான். உனக்கு நாங்க இருக்கிறோம். வீணாக கவலைப் படாதே... சின்ன காரியத்துக் கெல்லாம் துவண்டுவிடக்கூடாது சாப்பிட வா... பார்த்திடலாம் ஒரு கை. எப்பவும் போல சிரிடா...''

பழைய கலகலப்பு வந்தது. ஜோசப் சொன்னான். ''இவன் சிரிப்பைப் பார்த்துதான் அந்தப் பொண்ணு வரலை. பயந்து போயிருக்கும், பாவம்...''

''இப்ப நீயும் ஓடப்போறே பாரு...'' வீரப்பா போல தமிழ் சிரித்தான். அந்த சிரிப்பு எல்லோருக்கும் தொத்திக் கொள்ள அறை கலகலத்தது.

"வீடு இப்படி கலகலப்பா இருந்து எத்தனை ஆண்டு களாகுது. எல்லாம் செல்லக்கிளி வந்த நேரம்" தேவநாதன் சொன்ன போது வடிவின் முகம் சுருங்கியது.

"செல்லக்கிளிக்கு இத்தனை நன்றாக சமைக்க வரும்னு யாரும் சொல்லலியே... என்ன வடிவு நீகூட இத்தனை நாள் மறைச்சிட்டியே..." சன்னாசியின் முகம் கோபத்தில் சிவந்தது.

செல்லக்கிளிக்கோ தாங்க முடியாத வேதனையாகியது. வயதுக்கு தகுந்த பார்வையோ நடவடிக்கையோ இல்லாத இவரிடமிருந்து எப்படித் தப்பிப்பது என்பதே பெரிய கவலையாகியது. அந்த தமிழரசன் பாவம் கடற்கரையில் வந்து காத்திருந்துவிட்டுச் சென்றிருப்பார். யாரையும் அனுப்பக்கூட முடியவில்லை. தம்பி சின்னவன். அவனை இதற்கெல்லாம் அனுப்பினால் அவன் மனம் கெட வாய்ப்பாகிவிடும். லதாவிடம் சொல்லலாம். அவளும் வயதுவந்த இளம் பெண். அது மரியாதையாகுமா? என்ன இது இப்படி சோதனையாக இருக்கு.."

அவனை வடிவு உலுக்கினாள். "என்ன கனவு கண்டுக் கிட்டிருக்கியா? தாத்தா கூப்பிடறார் பாரு..."

தேவநாதன் முகத்தைச் சுளித்தார். "என்ன வடிவு நீயும் தாத்தான்னு சொல்றே... எனக்கென்ன அத்தனை வயசாகிப் போச்சா? செல்லக்கிளி இங்கே வா..."

வடிவுக்கு ஒன்று புரிந்தது. 'தேவநாதன் செல்லக்கிளி மீது பெரும் மோகம் கொண்டுவிட்டிருக்கிறார். அதை எப்படி யாவது நம் பக்கம் வளைத்துக் கொள்ள வேண்டியதுதான்.'

அவள் நினைத்துக் கொண்டிருக்கும் போதே புது பட்டுச் சேலையை செல்லக்கிளியிடம் நீட்டினார் தேவநாதன்.,



செல்லக்கிளி மெல்லத் தலையாட்டி மறுத்தாள். "வேண்டாம் தாத்தா. அதை மாமிக்குக் கொடுங்க. சுமங்கலிக்கு படையல் செய்த சேலையை இன்னொரு சுமங்கலிக்குத்தான் கொடுக் கணும்னு எங்க அம்மா சொல்லுவாங்க. அதுமட்டுமில்லை. இத்தனை விலைமதிப்புள்ள சேலையை நான் கட்டிக்கறதும் சரியில்லை. மாமிக்கே கொடுத்திடுங்க தாத்தா."

மேலும் அவளை தொல்லை செய்து தனக்கு இக்கட்டை உண்டாக்கிக் கொள்ள தேவநாதன் விரும்பவில்லை.

"உன் விருப்பம்தான் என்னுடையதும். இந்தா வடிவு... சேலையை நீ எடுத்துக் கொள்...."

வடிவு கோபத்தின் உச்சிக்குப் போனாள். "தனக்கா கொடுக்க மனமில்லை. இதென்ன பிச்சை மாதிரி. அவள் சொல்லி இவர் நீட்டுவது. இதை வாங்கிக் கொள்வதைவிட சும்மா இருக்கலாம்."

"வேண்டாம் சித்தப்பா நான் பட்டுச் சேலை கட்டறது இல்லை, நான் வரேன். வாங்க பசங்களா கிளம்பலாம்."

வடிவு சட்டென தன் பிள்ளைகளை மட்டும் அழைத்துக் கொண்டு கிளம்பி விட்டாள். செல்லக்கிளி திக்பிரமை யடைந்தாள். இனி தங்களை வீட்டுக்குள் மாமி சேர்த்துக் கொள்வாளா? கண்கலங்கியது. சன்னாசி உதவிக்கு வந்தார். தேவநாதனை எரித்து விடுவது போல பார்த்தார்.

"வயசுக்கு தக்கமாதிரி இருந்தால் பரவாயில்லை. இத்தனை ஆண்டுக்கப்புறம் மனைவிமேல என்ன கரிசனம் உங்களுக்கு? இதெல்லாம் நல்லா இல்லை. அநாதைகளான இந்தப் பிள்ளைகளை நீங்க தொல்லை செய்யாதீங்க. செல்லக்கிளி புறப்படு..."

எல்லோரும் போனபின் வீடு போர்க்களமாகக் கிடந்தது. பத்தாயிரம் ரூபாய்க்கு வாங்கிய பட்டுச்சேலை சீந்துவாரின்றி பளபளத்தது. தேவநாதன் சற்று நிதானித்தார். 'தப்பு தன்மேல்தான். தன் எண்ணம் ஈடேற வேண்டுமானால் வடிவை கிளப்பிவிட்டிருக்கக்கூடாது. முதலில் வடிவை சமாதானம் செய்து தன் பக்கம் இழுக்க வேண்டும். நாளைக்கு பார்த்துக் கொள்ளலாம்.' தேவநாதன் சமாதானம் ஆனார்.



## 12

"உங்களுக்கு என் மீது இத்தனை வெறுப்பு வர அடியேன் செய்த குற்றம் என்ன? என்னை நேற்று திருமதி கோவலன்கிட்டே மாட்டிவிட்டிட்டீங் களே.... கொஞ்ச நேரம் சும்மா இருந்த அந்தம்மா அப்புறமா விரட்ட ஆரம்பிச் சிட்டாங்க. போடா என்பது போல ஒரு விரலை நீட்டி பயம் காட்டினாங்க.... கோபம்னா ரெண்டு அடி போடக்கூடாது? இப்படியா செய்வாங்க.."

தமிழரசின் நியாயமான கோபத்துக்கு தலைசாய்த்து மரியாதை கொடுத்தாள் செல்லக்கிளி. அவன் கோபம் தீர்ந்த பிறகுதான் நிலையை தவிர்க்கலாம் என்று காத்திருந்தாள்.

"மன்னிச்சிடுங்க சார்.... நேத்து ரொம்ப முக்கியமான வேலை வந்திட்டது. அதுதான் வர முடியலை. இன்னிக்கு அவசியம் வரேன்.."

தமிழரசு அலறினான். "திரும்பவும் கண்ணகிக்கிட்டயா? முடியாது. நீங்க ஏன் எங்க அறைக்கு வரக்கூடாது? அட



என்னங்க. ஒரு மாதிரி பார்க்கறீங்க? பயப்படாதீங்க. என் நண்பர்கள் நாலுபேர் இருக்காங்க. நான் உங்களை அரைக் கண்ணால் பார்த்தால் கூட போதும், பெண்டு நிமிர்த்திடுவாங்க. உங்கக்கூட லதாவையும் அழைச்சுக்கிட்டு வாங்க. எல்லோருமா பேசலாம். என் நிலைமை எப்படியாச்சு பார்த்தீங்களா? அந்தக் கிழவர்தான் கேட்டாரே.... கூட யார் வராங்க. அப்படின்னு இப்ப? நாம பேசறதை உலகமே கேட்கப் போகுது..."

செல்லக்கிளி அமைதியாக இருந்தாள். "உங்களுக்கென்ன... வாயைத் திறக்கமாட்டீங்களே... நீங்க எனக்கு பதினைந்து ரூபாய் எழுபத்தைந்து பைசா கொடுக்கணும். மறக்காம சில்லரையா கொண்டு வாங்க. என்ன முழிக்கறீங்க? நேத்து மான் மிளகு வடையும், சுண்டலும் வாங்கித் தின்னசெலவு தனியாத்தான் பேச முடியலை. கணக்கிலயாவது கவனமா இருப்போமே... மறக்காம வந்து சேருங்க. என் முகவரி இதுதான்..."

அலுவலகத்தில் வேலையே ஓடவில்லை. அரை நாள் விடுமுறைக்காக பரலோகம் போய்விட்ட பாட்டியை இழுத்தான். மேலாளர் மேலும் கீழும் பார்த்தார்.

"பையா ... வரவர உன் போக்கு சரியில்லை. அடிக்கடி விடுமுறை கேட்கறே.. தினமும் நேரம் கழிச்சுவரே... என்ன விசயம்? காதல் கீதல்னு பொண்ணுக்கிட்டே மாட்டிக்கிட்டியா? வேண்டாண்டா ராஜா. நான் இப்படித்தான் மாட்டிக்கிட்டு இப்ப முழிக்கறேன். பத்து ஆண்டுகளில் பதினோரு பிள்ளை... எல்லாம் தலையெழுத்து..."

தமிழரசு வாயைப் பிளந்தான். "அது எப்படி சார் பத்து ஆண்டுகளில் பதினொன்று? கணக்கு தப்பா சொல்றீங்களே..."

''இல்லேடா... ஒரு தரம் ரெட்டைப்பிள்ளை நீ இருக்கிற வேகத்தைப் பார்த்தால் உனக்கு ஒரே தரத்தில் மூணு நிச்சயம்...?''

''ஐயோ... ஆளைவிடுங்க சார்...?'' தமிழரசு வேகமாக வெளியே ஓடி வந்து பைக்கில் ஏறினான்.

''தமிழ்... தமிழ்.... ஒரு சின்ன உதவி செய்யுங்களேன்....'' ராணி வழிமறித்தாள், ''வாடியம்மா... மாமா மகளே உனக்கு எப்பவும் ஏதாவது உதவி தேவைப்படும். உடனே ஓடிவருவே. உன்னால் போனமுறை நான் பட்ட துன்பமே போதுண்டியம்மா...''

''என்ன சார்... போகிற வழியில் நகைக்கடைக்கிட்டே இறக்கி விடுங்கன்னு கேட்க நினைக்கறதைத் தெரிஞ்சுக்கிட்டு பேசறீங்க...''

''இதோ பாரு ராணி. இந்த அலுவலகத்தில் எல்லாரும் வண்டி வைச்சிருக்காங்க. யார் கூடவாவது போகவேண்டியதுதானே?''

''சரியான அசடு சார். நீங்க. அவங்கக்கிட்டேயெல்லாம் ஒண்ணு சைக்கிள் இருக்கு. இல்லேன்னா ஸ்கூட்டர்தான் இருக்கு. நீங்க மட்டும் தான் பைக் வைச்சிருக்கீங்க. அதனால் தான் உங்கக்கூட வரணும்னு கெஞ்சறேன். எனக்கு எப்பவும் ஒண்ணைவிட இன்னொண்ணு நல்லா இருந்தால் அதை அடையணும்னுதான் விருப்பம் வரும்...''

''அப்ப நீ இருக்கிறதைவிட்டுப் பறக்கிறதை பிடிக்கிற ரகம். கவனமா இரும்மா. வீணா எங்கேயாவது ஏமாந்திடப் போறே...''



''நான் அப்படியெல்லாம் ஏமாந்திடமாட்டேன் தமிழ்... என்னை என்னன்னு நினைச்சீங்க. சரி. புறப்படுங்க. போகிற வழியில் ராகா நகைக்கடையில் இறக்கிவிட்டிடுங்க...''

''இன்னிக்கு விரலால்கூட உங்களைத் தொடமாட்டேன் தமிழ்.''

வண்டி வேகமாக போய்க்கொண்டிருக்கும்போதே ராணி கத்தினாள். ''தமிழ் கொஞ்சம் நிறுத்துங்க.'' விவரம் புரியாமல் தமிழ் வண்டியை நிறுத்தவும் ராணி குதித்தாள்.

பக்கத்துக் கடையில் நின்றிருந்த காரைக் காட்டினாள். ''தமிழ்... அது எங்க பக்கத்து வீட்டுக்காரரோட கார். துணிக் கடைக்கு வந்திருக்கார் போலிருக்கு நான் அவரோட போய்க்கிறேன். நீங்க புறப்படுங்க...''

பதில் எதிர்பாராமல் சிட்டு போல ராணி பறந்தோடி விட்டாள். கொஞ்ச நேரம் புரியாமல் நின்ற தமிழரசு புரிந்ததும் வாய்விட்டு சிரித்தான்,

''ஓகோ... சைக்கிளைவிட பைக் சிறந்தது. அதைவிட கார் அதிகமில்லையா? நல்ல வேளை நான் தப்பிச்சேன்.''

வழியெங்கும் வேகத் தடைகள் ஆங்காங்கே போக்குவரத்து நிறுத்தல்கள் என்று ஏகப்பட்ட நேரம் ஆகிவிட்டது. செல்லக்கிளி வந்துவிட்டிருப்பாளே என்கிற பரபரப்பு வேறு கூடிவிட்டது. ஒரு வழியாக அறைக்குள் நுழையும் போது செல்லக்கிளி விடைபெற்றுக் கொண்டிருந்தாள். அசடுவழிந்தபடி அவளுக்கு தலையசைத்தான். அவள் போனதுமே பாய்ந்தான்.

''போதுமா கிழவா... என் கிளிகூட நான் பேசணும்னே விதியில்லை போலிருக்கு. எத்தனை இடம் குறிச்சாலும் எனக்கு

அவ்வளவுதான். நான் தான் அவளை காதலிக்கிறேன். நீங்க யாரும் இல்லை. புரியுதா? என்ன பேசினா? அப்படியே பனிக்குழைவு மாதிரி கொஞ்சியிருப்பாளே.. பாவிகளா... பாவிகளா... ஏதாவது பேசித் தொலையுங்களேன். எப்படிடா சொல்லிவைச்சா மாதிரி உங்க எல்லோருக்கும் விடுமுறை கிடைத்தது.''

நமச்சிவாயம் உதடு பிதுக்கினார். ''தமிழ்! நீ இப்படிப் புலம்பினா எல்லாம் வேலையாகாது. எல்லா கதையிலயும் வில்லன் இல்லேன்னா வில்லிதான் இருப்பாங்க. உனக்கு பாவம்... ரெண்டு பேரும் இருக்காங்க. ஒரு வயசான ஜொள்ளு கிழவர், மாமி கிழவி ஒருத்தி. ரெண்டுமே சரியானதா இருக்கும் போலிருக்கு. கூடவே ரெண்டு சிறுசுங்க. தம்பியும், தங்கையும் அவள் திருமணமே செய்துக்கப் போறதில்லை என்று சத்தியம் செய்யறா. அதனால் நீ வேறு ஏதாவது முயற்சி செய்யறது நல்லது.''

''என்னது.. வேற ஏதாவதா? என்னண்ணே பேசறீங்க. இது என்ன துணிக்கடை தேர்வா? பச்சைநிற சட்டை பிடிக்கலேன்னா சிகப்பு நிறத்தை தேர்ந்து எடுத்துங்க ...புறமுதுகிட்டு ஓடச் செய்து வெற்றிபெற வழியைப் பாருங்களேன்.. என்ன செய்யலாம்.''

ஜோசப் அவன் தோளைத் தட்டினான். ''அதுக்கு முன்னாடி நீ உங்காளை சரி செய்யணும். அதை யோசிப்போம். என்ன செய்யலாம்?''





## 13

நேற்று மாலை தமிழரசின் நண்பர்களிடம் தன்னைப்பற்றி எடுத்துச் சொல்லி விட்டு வந்ததிலிருந்து லதாவின் போக்கில் மாறுதலைக் கண்டாள் செல்லக்கிளி. காலையிலிருந்து தன்னோடு அவள் பேசாதது மனவருத்தத்தை தந்தது. லதா திரும்பிக்கூட பார்க்கவில்லை.

தன் நிலைமை புரியாதவளிடம் என்னத்தை மீண்டும் மீண்டும் பேசுவது? செல்லக்கிளிக்கு வெறுப்பாகியது.

தமிழரசின் அழகையும், வேலையையும் மட்டுமே பார்த்தால் அவனை விட மிகச் சிறந்த வாழ்க்கை துணை கிடைக்காது. ஆனால் வாழ்க்கைக்கு அது மட்டும் போதுமா?

'தமிழரசு என்னை ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் அவருடைய குடும்பத்தினர் என்னை எப்படி ஏற்றுக் கொள்ளுவார்கள்? அடுத்த வேளை அன்னத்திற்கே அடுத்தவரை அண்டியிருக்கும் என்னை ஏற்றுக் கொள்ள அவர்கள் பைத்தியக்காரர்களா? அதுவும் என்னை நம்பி என்னோடு கைப்பிடித்து வரும் தம்பியும் தங்கையும் அவர்களுக்கு தேவையா என்ன? என் வாழ்வே இப்படியே போய்விடும். இனி எதற்கு திருமணம்?'

சிந்திக்க, சிந்திக்க மண்டை வலியில் பிளந்தது சூடாக காபி குடித்தால் நன்றாக இருக்கும் என்று தோன்றியது. சொல்லிக் கொண்டு வெளியே வந்தான். காபிக்கடையில் காபி வாங்கிக் கொண்டு நாற்காலியில் உட்கார்ந்தான்.

இளமாலைப் பொழுதும், சிலுசிலுப்பான காற்றும் இதமாக இருந்தது. வானத்தில் சின்னதாக கீற்று போட்ட தேங்காய்த்

அவ்வளவுதான். நான் தான் அவளை காதலிக்கிறேன். நீங்க யாரும் இல்லை. புரியுதா? என்ன பேசினா? அப்படியே பனிக்குழைவு மாதிரி கொஞ்சியிருப்பாளே.. பாவிகளா... பாவிகளா... ஏதாவது பேசித் தொலையுங்களேன். எப்படிடா சொல்லிவைச்சா மாதிரி உங்க எல்லோருக்கும் விடுமுறை கிடைத்தது.''

நமச்சிவாயம் உதடு பிதுக்கினார். ''தமிழ்! நீ இப்படிப் புலம்பினா எல்லாம் வேலையாகாது. எல்லா கதையிலயும் வில்லன் இல்லேன்னா வில்லிதான் இருப்பாங்க. உனக்கு பாவம்... ரெண்டு பேரும் இருக்காங்க. ஒரு வயசான ஜொள்ளு கிழவர், மாமி கிழவி ஒருத்தி. ரெண்டுமே சரியானதா இருக்கும் போலிருக்கு. கூடவே ரெண்டு சிறுசுங்க. தம்பியும், தங்கையும் அவள் திருமணமே செய்துக்கப் போறதில்லை என்று சத்தியம் செய்யறா. அதனால் நீ வேறு ஏதாவது முயற்சி செய்யறது நல்லது.''

''என்னது.. வேற ஏதாவதா? என்னண்ணே பேசறீங்க. இது என்ன துணிக்கடை தேர்வா? பச்சைநிற சட்டை பிடிக்கலேன்னா சிகப்பு நிறத்தை தேர்ந்து எடுத்துங்க ...புறமுதுகிட்டு ஓடச் செய்து வெற்றிபெற வழியைப் பாருங்களேன்.. என்ன செய்யலாம்.''

ஜோசப் அவன் தோளைத் தட்டினான். ''அதுக்கு முன்னாடி நீ உங்காளை சரி செய்யணும். அதை யோசிப்போம். என்ன செய்யலாம்?''





## 13

நேற்று மாலை தமிழரசின் நண்பர்களிடம் தன்னைப்பற்றி எடுத்துச் சொல்லி விட்டு வந்ததிலிருந்து லதாவின் போக்கில் மாறுதலைக் கண்டாள் செல்லக்கிளி. காலையிலிருந்து தன்னோடு அவள் பேசாதது மனவருத்தத்தை தந்தது. லதா திரும்பிக்கூட பார்க்கவில்லை.

தன் நிலைமை புரியாதவளிடம் என்னத்தை மீண்டும் மீண்டும் பேசுவது? செல்லக்கிளிக்கு வெறுப்பாகியது.

தமிழரசின் அழகையும், வேலையையும் மட்டுமே பார்த்தால் அவனை விட மிகச் சிறந்த வாழ்க்கை துணை கிடைக்காது. ஆனால் வாழ்க்கைக்கு அது மட்டும் போதுமா?

'தமிழரசு என்னை ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் அவருடைய குடும்பத்தினர் என்னை எப்படி ஏற்றுக் கொள்ளுவார்கள்? அடுத்த வேளை அன்னத்திற்கே அடுத்தவரை அண்டியிருக்கும் என்னை ஏற்றுக் கொள்ள அவர்கள் பைத்தியக்காரர்களா? அதுவும் என்னை நம்பி என்னோடு கைப்பிடித்து வரும் தம்பியும் தங்கையும் அவர்களுக்கு தேவையா என்ன? என் வாழ்வே இப்படியே போய்விடும். இனி எதற்கு திருமணம்?'

சிந்திக்க, சிந்திக்க மண்டை வலியில் பிளந்தது சூடாக காபி குடித்தால் நன்றாக இருக்கும் என்று தோன்றியது. சொல்லிக் கொண்டு வெளியே வந்தான். காபிக்கடையில் காபி வாங்கிக் கொண்டு நாற்காலியில் உட்கார்ந்தான்.

இளமாலைப் பொழுதும், சிலுசிலுப்பான காற்றும் இதமாக இருந்தது. வானத்தில் சின்னதாக கீற்று போட்ட தேங்காய்த்

துண்டாய் நிலவு புறப்படுவது கண்ணில் பட்டது. பெருமூச்சு வந்தது.

இந்த மாதிரி சின்னச்சின்ன அழகுகளையெல்லாம் ரசித்தது அப்பாவோடு போயிற்று. எதிலுமே ஒரு நல்லதைப் பார்ப்பது அப்பாவுக்கு மட்டுமே சாத்தியம்.

கெடுதல் செய்பவனிடம் கூட சிரித்துப் பேசும் பக்குவமான மனம் அப்பாவுடையது. கடைசிவரை பசியென்று வந்தவருக்கு அன்னமிட்ட அமிர்த தாரை அது, கல்விக்கென்று கையேந்திய வருக்கு கனக மழை பொழிந்த கருணை வள்ளல் அது. சொன்னால் சொன்னதை நிறைவேற்றும் குணம். கடைசியில் அப்படிப்பட்ட அப்பாதான் சொன்னதை நிறைவேற்றா மலேயே போய்விட்டார்.

உறவினர் வீட்டுத் திருமணத்துக்குப் போய்விட்டு நான்கு நாளில் வந்துவிடுகிறேன் என்று சொல்லிவிட்டுப் போனார். காரே எமனாகியது.

மூன்றாம் நாளில் இடிதான் தலையில் இறங்கியது. அப்பா திரும்பி வரவே இல்லை.

கண் கலங்கியது. அப்பா இருந்திருந்தால் இதே தேவநாதன் வீட்டு, வாசலுக்குக்கூட வந்திருக்க மாட்டார். மாமி மட்டும் என்ன? தெருபக்கமே தலைகாட்டி இருக்கமாட்டாள். மாமா மட்டும் நல்லவராக இருந்து என்ன பயன்? இவர்களின் கொடூரப் பிடியில் சிக்கித் தவிக்க வைத்துவிட்டு அப்பாவும், அம்மாவும் போய்விட்டார்கள். இந்த அக்கினி பிரவேசத்தி லிருந்து எப்படி தப்பிப்பது? இந்த அரக்கர்களிடமிருந்து மீளுவது எவ்வாறு?



"ரொம்ப நேரமா கவனிச்சுக்கிட்டு இருக்கேன். என்னவோ தீவிர சிந்தனையில் இருக்கீங்களே... என்கிட்டே சொல்லக் கூடாதா? நானும் சிந்திக்கறா மாதிரி நடிப்பேனில்லே...?"

அன்பை அள்ளித்தரும் அமுத தேக்கமாய் முகம் சிலு சிலுக்க தமிழரசு நின்றிருந்தான். ஒரு வினாடி உடல் விம்மித் தணிந்தது. தன்னைக் காட்டிக் கொள்ளாமல் சமாளித்து புன்னகைத்தாள். தமிழரசு தானாகவே உட்கார்ந்து கொண்டு காபிக்குச் சொன்னான்.

காபி வந்ததும் அவளிடம் ஒன்றை நீட்டினான். இதையும் குடிச்சிட்டு இன்னும் தீவிரமா யோசிக்கலாம்.

"நேற்று நீங்க பேசினது எல்லாம் நானும் ஒப்புக்கறேன். உங்க இடத்தில் நான் இருந்தாலும் அப்படித்தான் பேசுவேன். போகட்டும் விடுங்க. ஒருத்தரைப் பிடித்தால் திருமணம்தான் செய்துக்கணும்னு எதுவும் கட்டாயமில்லை. இதெல்லாம் மனம் சம்மந்தப்பட்டது. நாம் ரெண்டு பேரும் நல்ல நண்பர்களாக இருக்கிறது ஒண்ணும் தப்பில்லையே.. அதுக்கு குடும்பம் எந்த தடையும் விதிக்காதே..."

செல்லக்கிளி அவனை ஒரு வினாடி விழிகளுக்குள் ஊடுருவிப் பார்த்தாள். எந்தவொரு கள்ளத்தனமும் தெரிய வில்லை. தேன்நிற விழிகளுக்குள் நிஜம் மட்டுமே பளபளத்தது. அவளால் மேற்கொண்டு பார்க்க முடியவில்லை. விழிகளைத் தாழ்த்தினாள்.

"அட... என்னங்க செல்லக்கிளி கடமையைச் சொல்லி கதற அடிச்சிட்டீங்க. நண்பர்களா இருப்போம்னு சொன்னா வெட்கப்பட்டு வெறுப்பேத்திட்டீங்களே... அட போங்க. உங்களை என்னால் புரிஞ்சுக்கவே முடியலியே.."

செல்லக்கிளி புன்னகையை உதிர்த்தாள். ''சரி சார்... நான் அனுமதி சொல்லிட்டு வந்த நேரம் முடிஞ்சிட்டுது. கடைக்குள் போகிறேன். மேலாளர் ஒரு மாதிரி. சட்டென சிடுசிடுத்து விடுவார். என்னை சிநேகிதியா ஏத்துக்கிட்டதுக்கு ரொம்ப நன்றி வரேன்.''

தமிழரசு கைதட்டி குனிந்தான். ''நன்றி மேடம் செல்லக்கிளி அவர்களே. வெறும் நண்பர்களாக ஏற்றுக் கொண்டால் மட்டும் போதாது. எந்த உதவி வேண்டுமானாலும் தயங்காமல் கேட்கணும். தப்பு செய்தால் ரெண்டு அடி கொடுக்கவும் தயங்கக்கூடாது, சரியா? நான் வரேன்.''

கடைக்குள் நுழைந்தவளை லதா சிரிப்புடன் வரவேற்றாள். ''என்னடி.. அவரு வந்திருந்தார் போலிருக்கு ஒரே பேச்சா இருந்தது. என்ன பேசினீங்க? சொல்லேன்...''

செல்லக்கிளி ''நாங்க பேசினதைச் சொன்னால் உனக்குப் பிடிக்காது. ஆனால் அவர் ரொம்ப நல்லவர்னு நீ சொன்னது எனக்கு பிடிச்சிருக்கு அவ்வளவுதான்'' என்றாள்.



14

''உனக்கு வேகம் இருக்கிற அளவுக்கு விவேகம் இல்லை வடிவு. ஏதோ வயசில சின்னப்பொண்ணு பட்டுச் சேலையை கட்டிக்கணும்னு ஆசைப்படுவாளோ என்னவோன்னு எடுத்துக் கொடுத்தேன். அதை நீ தவறாய் புரிஞ்சுக்கிட்டா நான் என்ன பண்றது?''

தேவநாதன் பேசப் பேச வடிவு கொஞ்சம் அசைந்து கொடுத்தாள். காபி கொடுத்து உபசரித்தாள்.



''நீ நினைக்கிற மாதிரி உன்னை நான் உதாசீனப்படுத்தலை வடிவு. என்ன இருந்தாலும் நீ என் அண்ணன் மகள் இல்லையா? இத்தனை நாளாய் சிங்கப்பூர் அங்கே இங்கேன்னு அலைஞ்சுக் கிட்டிருந்தேன். இனிமேல் எங்கேயும் போகிறதா இல்லை. இப்படி ஓடி ஓடி சம்பாதிக்கறது யாருக்கு? எனக்கென்ன பிள்ளையா, குட்டியா? இருக்கற ஒரே உறவு நீதான். உன்னை விட்டா எனக்குத்தான் யார் இருக்காங்க?'' தேவநாதன் கண்கலங்கினார்.

வடிவு இளகிப் போனாள். தேவநாதனின் நடிப்பை நம்பியாக வேண்டியிருந்தது. கண்கலங்க மூக்கை உறிஞ்சினாள்.

''அதுக்கென்ன சித்தப்பா.. ஏன் இப்படி கவலைப்படறீங்க? என்னமோ எனக்கு அன்னிக்கு பைத்தியம் பிடிச்சதுன்னு நினைச்சு மன்னிச்சிடுங்களேன்...''

தேவநாதன் வலையை மெதுவாக நழுவவிட்டார்.

''இதோ பாரு வடிவு... சொல்றேன்னு நினைக்காதே சன்னாசி இப்படியே வேலை இல்லாமல் சுத்திக்கிட்டிருந்தா என்னாத்துக்கு ஆகும். பொட்டும் பொடிசுமா மூணு பொண்ணுங்க இருக்கறதையே அவன் நினைக்கறதில்லையா? பொம்பளை நீ, உனக்கு இருக்கற அக்கறையில் நான்கில் ஒரு பங்கு அவனுக்கு இருந்தா எவ்வளவோ நல்லா இருக்குமே.''

''இப்பவும் ஒண்ணும் கெட்டுப் போகலை. நான் சொல்றதைக் கேட்டு நடக்கச் சொல்லு. கேரளாவில் வாங்கி போட்டிருக்கற ஏலக்காய் எஸ்டேட்டைப் பார்த்துக்க ஆள் இல்லாமல் வீணாகிக்கிட்டிருக்கு. எவனெவனோ ஏமாத்தி தின்னுக்கிட்டிருக்கான். பேசாமல் சன்னாசியை அங்கே போய் எஸ்டேட்டைப் பார்த்துக்கச் சொல்லு. தங்கறதுக்கு விருந்தினர்

வீடு இருக்கு. சமையலுக்கு ஆள் போட்டிருக்கேன். எல்லாம் வசதியா இருக்கும். அதுக்கு ஒத்துக்கிட்டா, இந்தா தோட்டத்து சாவிக்கொத்து போகச் சொல்லு...''

வடிவுக்கு வியப்போடு, பேராசையும் கண்களில் மின்னியது. ''நீங்க இவ்வளவு தூரம் சொல்லும்போது போகாம என்ன சித்தப்பா? அவரை நாளைக்கு அனுப்பி வைக்க வேண்டியது என் பொறுப்பு. நீங்க கவலையே படவேண்டாம்.''

''ஆகட்டும் வடிவு. சன்னாசி அங்கே தோட்டத்தைப் பார்த்துக்கும் போது நீ மட்டும் என்ன? வரவர வீட்டில் இருக்கற வேலைக்காரங்களை நம்ப முடியலைம்மா. எல்லாம் திருட்டும் ஏமாத்தும்தான். பாடுபட்டு சம்பாதித்த காசு. கண்ணெதிரே களவு போய்க்கிட்டிருக்கேன்னு கவலையா இருக்கு. எனக்கும் வயசாகிப் போச்சு இந்த குடும்ப பாரத்தை சுமக்க முடியலை கவலையா இருக்கு.''

''நீ வந்து பொறுப்பையெல்லாம் ஏத்துக்கிட்டா எனக்கு ரொம்ப மகிழ்ச்சியா இருக்கும். அந்த செல்லக்கிளியைப் பத்தி யோசிக்கறியா? கிடக்கு கழுதை.. வீட்டுக்குப் பின்னாடி இருக்கற சின்ன வீட்டில் தனியா குடி வைச்சிடு. தொலைஞ்சு போகட்டும். நம்பி வந்திட்டாளே... என்ன சொல்றே வடிவு?''

வடிவு கொஞ்ச நேரம் யோசித்தாள். தேவநாதனின் திட்டம் சரியாக வேலை செய்தது.

''சரி.... சித்தப்பா... எதுக்கும் அவர்கிட்டே ஒரு வார்த்தை சொல்லிட்டு வீட்டுக்கு வந்திடறேன். இல்லைன்னா ஏதாவது சிடுசிடுப்பார். நாளைக்கு போங்க சித்தப்பா...''



''நீ வரேன்னு சொன்னது சாப்பிட்டமாதிரி இருக்கு வடிவு. இந்தா வீட்டுக் கொத்துசாவி. உன்கிட்டே ஒப்படைச்சிட்டேன். இனி அது உன் வீடு. உன் பாடு. நான் வரேன்.''

தேவநாதன் போய் வெகுநேரமாகியும் பிரமிப்பு நீங்காத வளாக வடிவு தடுமாறிப் போனாள். ஒரு கையில் தோட்டத்து சாவி. மறுகையில் மாளிகையின் சாவிக்கொத்து, வெள்ளி மணிகள் சிணுங்கிட கைநிறைக்க இருந்தது. கையில் வந்து விழுந்ததை விடுவானேன்?

வடிவின் சிந்தனை வேறுவிதமானது. அப்படியே சித்தப்பா அந்த மூதேவி மேல ஆசைப்பட்டா நாம கண்டுக்கக்கூடாது. அங்கங்க நடக்காததா இது? எவனுக்காவது திருமணம்னு ஏற்பாடு செய்தா நம்ம பிராணன்தான் போகும். என்ன தலையெழுத்து? எப்படியோ போகட்டும், கூட இருக்கற ரெண்டும் இதனால் சுகப்படும். நாளை மறுநாள் நல்ல நாள். அன்னிக்கு பங்களாவுக்கு புறப்பட்டு விட வேண்டியதுதான்

வடிவு முடிவு செய்துவிட்டாள். இரவு சாப்பாடு முடிந்ததும் எல்லோரிடமும் விவரத்தைச் சொன்னாள். அவள் ஏற்பாடு யாருக்கும் விருப்பம் இல்லை. ஆனாலும் எதிர்த்துப் பேசினால் கேட்கவா போகிறாள்.

பிரபுவும், வாசுகியும் பயந்து போய் செல்லக்கிளியை ஒண்டிக் கொண்டார்கள். செல்லக்கிளிக்கே அச்சமாக இருந்தது. காட்டிக் கொள்ளாமல் பாய் விரித்துக் கொண்டிருந்தாள்.

சன்னாசியின் எந்த வார்த்தையும் எடுபடவில்லை. வடிவு முடித்து விட்டாள்.

''சித்தப்பா தோட்டத்துக்கு தொலைபேசியில் விவரம் சொல்லி இருப்பார். நாளைக்கு விடியற்காலை பேருந்து இருக்காம். புறப்படுங்க. சாவியைப் பிடியுங்க. நீங்க பயப்பட வேண்டாம். உங்க அக்கா மகளை சின்ன வீட்டில் தனியா வைக்கப் போறோம். அவளை யாரும் முழுங்கிட மாட்டாங்க. இனிமேலாவது பிழைக்கற வழியைப் பாருங்க... சீக்கிரம் படுங்க. காலையில் எழுந்திருக்கணும்.''

விளக்கு அணைக்கப்பட்டு இருள் விழுந்தது. செல்லக் கிளியின் மனதிலும் இருள் சூழ்ந்தது.



## 15

''என்ன ராணி நாலு நாளாய் புதுசு புதுசாய் உடைகள். அழகு அணிவகுப்பு வர்றமாதிரி நடக்கறியே என்ன விசயம்?'' தமிழரசு கேட்டான்.

''அப்பாடா... இன்னிக்காவது கேட்கணும்னு தோணிச்சே,, நன்றி. வேற ஒண்ணுமில்லை தமிழ்... அன்னிக்கு பக்கத்து வீட்டுக்காரர் அகப்பட்டார் இல்லே? நைசா பேசி நான்கு ஆயிரம் ரூபாய்க்கு கறந்திட்டேன்.எப்படி என் சாமர்த்தியம்?''

''எம்மாடியோ... உன்னை மாதிரி யாராலும் திட்டம் போட முடியாது. பைத்தியக்காரனாட்டாம் நான்கு ஆயிரம் ரூபாய் கொடுத்திருக்கிறானே...''

''அவன், இவன்னு பேசாதீங்க சார்.. அவருக்கு வயசு ஐம்பதுக்கு மேலிருக்கும். ரொம்ப இளமையா இருப்பார். என்னைப் பார்த்தால் தனிப்பாசம்.''



தமிழரசு தலையாட்டினான். ''இருக்க வேண்டியதுதான் தாத்தாவுக்கு பேத்திமேல் ஒரு அக்கறை இருக்க வேண்டியது தானே...''

ராணி வெகுண்டாள். ''என்னது தாத்தா பேத்தியா? விட்டால் என்னை திருமணம் செய்துக்க அவர் தயார் தமிழ்.. ஆனால் நான் தான் தயார் இல்லை.''

''ஏம்மா... பெரிய பணக்காரராய் இருப்பார் போலிருக்கே?''

ராணி பதில் பேசுமுன் தமிழரசுக்கு தொலைபேசி அழைப்பு வந்தது. ஜோசப்தான் பேசினான். காரணம் எதுவும் சொல்லாமல் உடனே வரவேண்டும் என்று சொன்னபோது தமிழரசு குழம்பினான்.

ஒரே அறையில் நான்கு ஆண்டுகளாக ஒன்றாக இருந்த போதும் இப்படி ஒரு அழைப்பு எப்போதும் வந்ததில்லை. போட்டது போட்டப்படி கிடக்க தமிழரசு பாய்ந்து வெளியே ஓடினான்.

வாயு வேகம். தமிழரசு வேகமாக அறைக்கு வந்தவன் அங்கே செல்லக்கிளியைப் பார்த்து வியந்தான். வழக்கம் போல கேலி செய்ய வாயெடுத்தவன் அவள் முகத்தைப் பார்த்ததும் அடங்கிப் போனான்,

அழுது அழுது முகம் வீங்கியிருந்தது. தலை கலைந்தது. உடை அழுக்காகி உருக்குலைந்து கிடந்தாள்.

''என்னாச்சுங்க செல்லக்கிளி? தயவு செய்து சொல்லுங்க.''

அவன் கேட்கும்போது ஜோசப் சொன்னான். ''இதையே தான் அரை மணி நேரமாகக் கேட்டுக் கொண்டிருக்கிறேன். பதில்தான் வரலை. திடீர்னு அறைக்குள் நுழைஞ்சாங்க.

உடனே உன்னைப் பார்க்கணும்னு அழக் கிளம்பிட்டாங்க. எனக்கு பயமாகிப் போச்சு. அதுதான் உன்னை வரச் சொன்னேன்.''

தமிழரசு அவள் அருகில் சென்றான். தலையை மெதுவாக தடவிவிட்டான். ''என்னம்மா நடந்தது? எதாக இருந்தாலும் சொல்லுங்க. நான் இருக்கேனில்லே? உங்க நண்பன் தானே நான்? என்கிட்டே சொல்லக்கூடாதா? கண்ணு இல்லை? சொல்லும்மா?''

அதுவரை விம்மிக் கொண்டிருந்தவள் வாய்விட்டு அழுதாள். அழுது ஓயும்வரை காத்திருந்தவன் கைக் குட்டையை நீட்டினான். முகம் துடைத்துக் கொண்டவள் ஒரு நிமிடம் வெட்கினாள்.

''தம்பிக்கு... தம்பிக்கு ரொம்ப உடம்பு சரியில்லை. நாலு நாளா கடுமையான காய்ச்சல். மருத்துவர்கிட்டே அழைச்சுக் கிட்டுப் போகணும். கையில் பணமில்லை. மாமிகிட்டே கேட்டேன். அவங்க தரலை. தாத்தாகிட்டே கேட்க சொல்லிட் டாங்க. தாத்தாகிட்டே கேட்கப் போனேன். தாத்தா... தாத்தா...'' மீண்டும் அழத் தொடங்கினாள்.

தமிழரசும், ஜோசப்பும் பார்த்துக் கொண்டு தலையாட்டி னார்கள்.

''அந்த வில்லனைப் பத்தி அப்புறமா பேசிக்கலாம். முதலில் தம்பியை மருத்துவமனையில் சேர்க்க வேண்டும். பணத்துக் காக காத்திருக்க வேண்டாம். நாங்க பார்த்துக்கறோம். ஜோசப் நான் முதலில் போறேன். நீ ஆட்டோவோட கூடவே வா. அண்ணனுக்கு கடிதம் எழுதி வைச்சிட்டு வா அவங்க மூணு



பேரும் பணத்தோட வரட்டும் வாங்க செல்லக்கிளி தாமதிக்கற ஒவ்வொரு வினாடியும் தம்பிக்குத்தான் ஆபத்து.''

வீட்டுத்தெரு முனையிலேயே ஆட்டோவிலிருந்து ஜோசப் இறங்கிக் கொண்டான். தமிழரசு சொன்னான்.

''செல்லக்கிளி நாங்க ரெண்டு பேரும் இப்ப உங்கக்கூட வர்றது சரியில்லை. நீங்க மட்டும் ஆட்டோவில் போய் உங்க தம்பியையும், தங்கையும் அழைச்சுக்கிட்டு வந்திடுங்க. மரியாதைக்கு உங்க மாமிகிட்டே மட்டும் சொல்லிட்டு வாங்க. மருத்துவமனையில் பேசிக்கலாம்.''

அதன் பிறகு வேலைகள் மின்னல் வேகத்தில் நடந்தன. பைக் பாதுக்காப்பாக பின்னால் வர ஆட்டோ மருத்துவமனைக்குப் பறந்தது.

பிரபு இருந்த நிலையைப் பார்த்த மருத்துவர் பதறிவிட்டார். ''ஏம்மா நீங்க படிச்சவங்கதானே? நாலு நாளாய் இப்படி இருந்திருக்கு. கவலைப்படாமல் இருந்திட்டு கடைசி நேரத்தில் எங்க கழுத்தை அறுக்க வந்திட்டீங்களா?''

யாரும் எதுவும் பேசவில்லை. உடனடியாக படுக்கையில் அனுமதிக்க வேண்டும் என்று சொன்னார். முன் பணமாக நான்காயிரம் கட்டச் சொன்னபோது செல்லக்கிளி திடுக்கிட் டாள். இயலாமை கண்ணில் நீராய் வடிந்தது. தமிழரசு தலையசைத்து சமாதானம் செய்தான். பணத்துடன் வந்திருந்த நமச்சிவாயம் பணம் கட்டச் சென்றார்.

பிரபு படுக்கையில் அனுமதிக்கப்பட்டபோது மணி இரவு எட்டைத் தாண்டிவிட்டது. அவனுக்குத் தேவையான குளுக்கோஸ், சாத்துக்குடி பழங்கள் வாங்கி வரப்பட்டன.

மருத்துவர். செவிலியோடு வந்தார். ''உடம்பு மோசமாக இருந்த போது யாரும் வரலை. இப்ப கூட்டமா சுத்திக்கிட்டு நிக்கறீங்களா? ஆபத்து ஒண்ணும் இல்லை. ரெண்டு நாளில் நல்லாகிடுவான். நீங்க எல்லோரும் கிளம்புங்க. நாளைக்கு வந்தால் போதும். யாராவது ஒருத்தர் உதவிக்கு இருந்தால் போதும்.''

நமச்சிவாயம் எழுந்தார். ''என்னம்மா செல்லக்கிளி, மருத்துவர் சொல்றதும் சரிதான். எல்லோரும் கிளம்புங்க. நான் பிரபுவோட தங்கிடறேன். காலையில் வாங்க, தமிழ். இவங்க ரெண்டு பேருக்கும் சாப்பிட ஏதாவது வாங்கிக் கொடுத்து கூப்பிட்டுக்கிட்டுப் போ...''

''மறுத்துப் பேசறதுக்கு மன்னிச்சிடுங்க. தம்பிக்கூட நான் இருக்கேன். வீட்டுக்குப் போனால் நிம்மதியா இருக்க முடியாது. நீங்க எல்லாம் என்னோட நட்பா உறவா வந்து உதவினீங்க. நன்றின்னு சொல்லி உங்களை அந்நியப்படுத்த எனக்கு விருப்பமில்லை.''

பேசப் பேச செல்லக்கிளி அழத் தொடங்கினாள். நமச்சிவாயம் கலங்கின கண்களைத் துடைத்துக் கொண்டார். ''இந்தா பெண்ணே சரியான அழுமூஞ்சியா இருக்கியே... சரி நீயே உன் தம்பிக்கூட இரு.. வாசுகியை வீட்டில் விட்டுவிட்டு நாங்க போகிறோம்...''

வாசுகி அழத்தொடங்கினாள். ''அக்கா... நீ இல்லாமல் நான் வீட்டுக்கு போகலை. மாமியும், தாத்தாவும் திட்டுவாங்க... நானும் இங்கேயே இருக்கேன்.''



செல்லக்கிளி செய்வது அறியாமல் விழித்தாள். இருக்கிற கோபத்தில் தேவநாதன் வாசுகியை கொலை செய்யவும் தயங்கமாட்டார். மாமியும் கூட உடந்தையாகிவிடுவாள்.

''ஜோசப், இந்த குட்டிப் பெண்ணை நம்ம அறைக்கு அழைச்சுக்கிட்டு போயிடலாம். காலையில் வீட்டுக்குப் போகட்டும். மாமி கேட்டால் மருத்துவமனையிலேயே இருந்திட்டதா சொல்லிடலாம்'' என்றான்.

எல்லோரும் ஒப்புக்கொண்டதும் செல்லக்கிளி, ''வாசுகி நீ போய் அண்ணா கூட அறையில் தூங்கிட்டு காலையில் வா.. பயப்பட வேணாம். எல்லோரும் தெய்வத்துக்கு சமமான வங்க'' என்று கூறினாள். வாசுகி சரியென தலையசைத்தாள்.

நமச்சிவாயம் தீர்மானமாகச் சொன்னார். ''செல்லக்கிளி நீ தனியாக இருக்கக்கூடாது. கூட துணைக்கு தமிழ் இருக்கட்டும். காலையில் வரோம்...''

அவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போது ரவி எதிரிலிருந்த உணவு விடுதியிலிருந்து செல்லக்கிளிக்கு பலகாரம் வாங்கி வந்துவிட்டிருந்தான். உணர்வில் பொங்கிய செல்லக்கிளியை தமிழரசிடம் ஒப்படைத்துவிட்டு மற்றவர்கள் வெளியேறி னார்கள்.

•



## 16

**கி**ழிந்த துணியாய் கட்டிலில் கிடந்த பிரபுவை பார்த்தபோது செல்லக்கிளிக்கு தொண்டை அடைத்தது. மாலையிலிருந்து ஏற்பட்ட பரபரப்பும், நான்கு நாளாக அனுபவித்த மனத் துயரமும் அழுகையாகி

கட்டுப்படுத்த முடியாமல் பாய்ந்தது. அழுது தீரட்டும் என்று தமிழரசு அமைதியாக இருந்தான். சத்தம் கேட்டு வந்த செவிலியையும் சைகையால் தடுத்துவிட்டான்.

அழுது தானாக ஓய்ந்ததும், இனிமேல் செல்லக்கிளி அழக்கூடாது. முகம் கழுவிக்கொண்டு சாப்பிட வேண்டியது. அப்புறம் சிரித்துப் பேச வேண்டியது என்று கேலி பாதியும், கண்டிப்பு பாதியுமாக சொன்னான்.

மனம் ஏனோ கனமற்றுப் போயிற்று . 'இத்தனை நல்லவர்கள் உடனிருக்கும்போது பிரபுவுக்கு ஒன்றும் ஆகாது எதிர் காலத்திற்கு நல்ல வேலை வாங்கித் தரவும் இவர்கள் உத்திர வாதமாவார்கள். இனிமேல் அர்த்தமில்லாமல் அழக்கூடாது.'

மனதில் எடுத்த முடிவு சிரிப்பாக வெளி வந்தது. கையி லிருந்த போட்டலத்தைப் பிரித்து அவனிடம் நீட்டினாள். இருவருமாக சாப்பிட்டு முடித்தபோது பிரபுவுக்கு ஊசி போட செவிலி வந்தாள்.

செல்லக்கிளியைப் பார்த்து கேலி செய்தாள். ''நீ சிரிக்கும் போதுதான் அழகா இருக்கே. அழுவறதை நிறுத்திட்டு ஆக்கபூர்வமா சிந்திக்கறதைப் பாரு. இப்படியெல்லாம் நண்பர்களும், நல்லவர்களும் உடன் இருக்கும் போது மனதை தளரவிடலாமா? உன் தம்பி சீக்கிரம் குணமாகிவிடுவான். நிம்மதியா நாற்காலியில் சாய்ந்து தூங்கு.''

அவள் போய் வெகுநேரம் ஆகியும் செல்லக்கிளிக்கு பேச முடியவில்லை. தமிழரசு மருந்து வாங்கிவரச் சென்றிருந்தான்.

அவனை நினைக்கையில் அவளுக்கு வியப்பாக இருந்தது. மாலை மாமியின் நடத்தைக்கு என்ன பொருள் என்பதை தேவநாதன் நடந்து கொண்டது நிரூபித்தது. பணம்



வேண்டுமானால் சொல்வதைக் கேட்க வேண்டும் என்று கூறி மிருகத்தனமாக அவர் கட்டியணைத்தபோது நெருப்பை வாரி முகத்தில் கொட்டியது போலிருந்தது. தப்பித்து ஓடி வந்த போது திக்குதிசை புரியவில்லை,

ஒரு கணம் தற்கொலை செய்துக் கொண்டுவிடலாமா என்று கூடத் தோன்றியது. ஆனால் சட்டென ஒரு மூலையில் தமிழரசின் நினைவு வந்தது. ஒரே ஓட்டமாக ஓடத் தோன்றியது.

முன்பின் தெரியாதவர்களிடம் கிடைத்த அன்பும், பரிவும் தம்பியின் உயிரைக் காப்பாற்றி விட்டது. வாழ்வுக்கே விளக்கேற்றி வைத்த பெருமை அவர்களைச் சேர்ந்தது.

இதே தமிழரசை திருமணம் செய்து கொள்ள முடியாது என்று கூறி மூன்று நாள் கூட ஆகவில்லை. இன்றைக்கு உதவி செய்து மருத்துவமனையில் கண்விழித்துக் கிடக்க வேண்டும் என்று அவனுக்கென்ன வேண்டுதலா?

இதெல்லாம் எதையுமே எதிர்பார்க்காத அன்பும், நட்பும் கொண்ட மனங்களுக்கு மட்டுமே சாத்தியம். எல்லோருக்கும் வாய்ப்பதில்லை.

''என்ன கனவு கண்டு முடிச்சாச்சா? பத்து நிமிடமாய் கத்திக் கதறுகிறேன். காதில் விழலியா?'' தமிழரசு கூப்பிட்டது காதில் கேட்ட போது திடுக்கிட்டுப் போனாள்.

''மருந்தெல்லாம் செவிலியிடம் கொடுத்துவிட்டு வந்திருக் கேன். நீங்க வேணுமானால் கொஞ்சம் தூங்கி விழியுங்க. நான் விழிச்சிருக்கேன், கண் விழிக்கறது எனக்கு பழக்கமானதுதான்.''

''இல்லைங்க... தூக்கம் வராது. உங்களுக்குத்தான் என்னால் சிரமம். பணம் நிறைய செலவாகிட்டது. வீட்டில் ஏதும் சொல்ல மாட்டார்களா? ஏனென்றால் நான் பணத்தைத் திருப்பித்தர கொஞ்ச நாட்களாகும்...''

தமிழரசுக்கு வேடிக்கையாக இருந்தது. பணத்தைத் திருப்பித் தருகிறேன் என்று அவள் சொன்னது அவளுடைய சுயகவுரவத் தைக் காட்டியது. ஆனாலும் பலப்பல சிரமங்களுக்கிடையிலும் திருப்பித்தரும் எண்ணம் வருகிறதே.. இவள் வாழ்க்கைத் துணையாக வந்தால் பெருமைமிகு வாழ்க்கை வாழலாம். நமக்கு கொடுத்து வைக்கவில்லை.

''ஏதாவது தப்பா பேசிட்டேனா?'' செல்லக்கிளி கேட்டாள்.

''அதெல்லாம் ஒண்ணுமில்லை. எங்க வீட்டைப் பத்தி சொன்னீங்க இல்லே? அதுதான் எங்கப்பா எனக்கு ஐந்து வயசிருக்கும் போது இறந்திட்டாங்க. அம்மாதான் என்னை வளர்த்தவங்க. ஊரில் நிலம் நிறைய இருக்கு. அதை பார்த்துக்கிட்டு அங்கேயே இருக்காங்க. சென்னையும் இதன் பரபரப்பும் அவங்களுக்கு ஒத்துக்கறதில்லை.''

''என்னையும் கிராமத்துக்கு வரச்சொல்லி தொல்லைதராங்க. எனக்கு அது சரிப்படாது. இங்கே கைநிறைய சம்பாதித்து, மகிழ்ச்சியா செலவு செய்துக்கிட்டிருக்கேன். திருமணத்தை என் விருப்பப்படி விட்டிருக்காங்க. அதனால் அதுவும் எனக்கு பிரச்சினை இல்லை. இந்த வினாடியில் உலகத்தின் மகிழ்ச்சி யான மனிதனே நான் தான். என் கதை இவ்வளவு தான்.''

செல்லக்கிளி அவனைப் பார்த்த பார்வையில் மதிப்பும், மரியாதையும் கூடியது. தன்னுடைய மறுப்பை எந்த இடத்திலும் சுட்டிக்காட்டி மனதை துன்பப்படுத்தவில்லையே. எத்தனை



நல்லவன். நமக்கும் உறவும், சொந்தமும் இருக்கிறதே எதற் காகும்? இப்படிப்பட்ட நல்லவர்கள் உறவு இல்லையென் றாலும் நட்பாவது கிடைத்ததே..

இரவு முழுவதும் இருவரும் தூங்காமலே விழித்துக் கிடந்தார்கள். செல்லக்கிளிக்கு மாமியின் நினைவும், தேவநாதனின் கோபமும் ஒரு ஓரத்தில் திகிலை கிளப்பிக் கொண்டே இருந்தன.

நாளைக்கு வாசுகியை மட்டும் தனியாக வீட்டிற்கு அனுப்பக்கூடாது. சீக்கிரமே வேறு வேலை பார்த்துக் கொண்டு அங்கிருந்து கிளம்பி விடும் வழியைப் பார்க்க வேண்டும். தமிழரசைக் கேட்டால் என்ன?

''சார்... எனக்கு ஒரு உதவி செய்ய வேணுமே...'' தமிழரசு சரியென தலையசைத்தான்.



## 17

''நீங்க சாப்பிடுங்க சித்தப்பா. நேரமாகுதே...'' இதுவரை பத்துமுறை வடிவு கூப்பிட்டு விட்டாள். தேவநாதன் அசைவதாக இல்லை. வடிவுக்கு பசி வயிற்றைக் கிள்ளியது. மணி இரவு பத்தாகி விட்டது. எரிச்சலடைந்த வடிவு...

''எனக்கு தூக்கம் வருது சித்தப்பா நான் தூங்கப் போறேன். சாப்பாடு மேசை மீது இருக்கு. எப்ப பசிக்குதோ அப்ப சாப்பிடுங்க'' என்றபடி தன் அறைக்குள் நுழைந்துவிட்டாள்.

தேவநாதனுக்கு கோபம் கிளைவிட்டுப் படர்ந்தது. சாப்பாடு வேண்டியிருக்கவில்லை. 'சோத்துக்கு அடுத்தவரை அண்டி யிருக்கிற கழுதைக்கு என்ன திமிர்....' கையைப் பார்த்தார்.

செல்லக்கிளியின் பல்பட்ட இடம் கன்னி இரத்தம் கசிந்து உறைந்து போயிருந்தது. வலியில் விண்ணென்று தெறித்தது. மனம் வன்மமாய் சிந்தித்தது. கன்னத்தில் சுறுசுறுவென்றது. கையால் தடவினார். நகத்தினால் கீறிவிட்டிருக்கிறாள் போலிருக்கிறது. தேவநாதன் கோபத்தின் உச்சிக்கே போய்விட்டார்.

'விடக்கூடாது.... அவளை எப்படியாவது அடைந்தே தீரவேண்டும். அதுவும் அவளே விரும்பி வர்றமாதிரி நிலமையை மாற்ற வேண்டும். தீவிரமாகத் திட்டமிட்டு செயல்பட வேண்டும். கொஞ்சம் ஏமாந்தாலும் கைவிட்டுப் போயிடுவாள். வடிவை பக்கபலமாக வைத்துக் கொண்டால் வேலை சுலபமாக முடியும்.'

மறுநாள் காலையில் வழக்கம் போல எட்டு மணிக்கெல்லாம் குளித்துத் தயாராகி உணவு மேசைக்கு வந்தார். வடிவு அவரைப் பார்த்ததும் பரபரத்தாள்.

''இராத்திரி கூட சாப்பிடலை. முகமெல்லாம் வாடிக்கிடக்கு உடம்புக்கு ஏதும் வந்தா யார் பார்க்கறது முதலில் சாப்பிடுங்க.''

இரண்டு இட்லி சாப்பிட்டு ஒரு கோப்பை பால் குடித்ததும் தெம்பாகியது. வடிவு மீண்டும் ஆரம்பித்தாள்.

''சொல்றதுக்கே கேவலமா இருக்கு சித்தப்பா. எல்லாம் அந்த ஓடுகாலி கழுதையைப் பத்திதான். தம்பிகாரனுக்கு உடம்பு சரியில்லை பணம் வேணும்னு கேட்டா. என்னதான் என்கிட்டே நீங்க பொறுப்பை கொடுத்திட்டாலும் உங்க அனுமதியில்லாமல் நான் பணத்தை தரமுடியாது? அதுதான் உங்கக்கிட்டே கேட்டுச் சொன்னேன். அது ஒரு தப்பா? அப்படி விழுந்தடிச்சுக் கிட்டு ஓடறாளே...''



''இப்ப எங்கே அவள்? கூப்பிடு ... என்னன்னு கேட்டிடலாம்...''

''அவள் எங்கே இருக்கா? நேத்து சாயங்காலம் ஆட்டோவில் வந்தது தம்பியையும் தங்கையையும் அழைச்சுக்கிட்டு போனவதான். இதோ மணி எட்டாகிட்டுது. இன்னும் வரலை. அவளை யார் தட்டிக் கேட்கறது?''

தேவநாதன் அவளை முறைத்தார். ''ஏன் நான் கேட்கறேன். இது என்ன சந்தைமடமா? நினைச்ச நேரத்தில் வந்து தங்கிக் கறதுக்கும், கிளம்பிப் போறதுக்கும்? நல்ல குடும்பங்கள் இருக்கிற பகுதி... நான் கவுரவமாக வாழ்ந்துக்கிட்டிருக்கேன். என் பெயரைக் கெடுத்திடாதீங்க...''

வடிவு வாயில் அடித்துக் கொண்டாள். ''என்ன சித்தப்பா இப்படி சொல்லிட்டீங்க.. கழுதை வரட்டும் அவள் கொண்டு வந்த ஓட்டைப் பெட்டியைத் தலைமேல் வைத்து வீட்டை விட்டே விரட்டிடறேன்... எங்கேயாவது போய் பிச்சை எடுத்துப் பிழைச்சுக்கட்டும்....''

தேவநாதன் காரியத்தில் முனைப்பானார்.

''நீ வேற.. அப்படியெல்லாம் செய்திடாதே. நம்ம அவமானப்படுத்தின அவளை விடக்கூடாது. ஏதாவது செய்தே தீரணும். அழகா இருக்கோம்னு திமிர் அவளுக்கு... அதை அடக்கணும்.''

வடிவு அங்கலாய்த்தாள். ''ஆமாம்... அந்த கர்வம்தான். என்ன செய்யலாம்னு நீங்கதான் சொல்லுங்க சித்தப்பா. அவளோட மாமா கூட இல்லை. செய்யறதை இப்பதான் செய்ய முடியும்.''

தேவநாதன் விகாரமாக இளித்தார். ''அப்படிக் கேளு... அவளை நான் வீட்டோட வைச்சுக்கறேன். தாலி கட்டாத பெண்டாட்டியா இருக்கட்டும். இதுதான் அவளை பழிவாங்கறதுக்கு சரியான ஒரே வழி. என்ன சொல்றே?''

''மகராஜனா வைச்சுக்குங்க. அநாதைக் கழுதைக்கு கொடுத்து வைச்சிருக்கணுமே. இப்பவே சொன்னால் மறுத்துப் பேசிடுவா. வீட்டைவிட்டு வெளியே போனாலும் போயிடுவா. நேரம் காலம் பார்த்துதான் சொல்லணும். விசயம் உங்க வாயில வரணும்னுதான் காத்திருந்தேன். இனிமேல் நான் பார்த்துக்கறேன். நீங்க கவலையை விட்டுட்டு உங்க வேலையை பாருங்க...''

வடிவு உற்சாகமாக சொல்லவும் தேவநாதன் நிம்மதியடைந்தார்.

தனக்கு எதிராக மிகப்பெரிய துரோகம் திட்டமிடப்படுவதை, அறியாத செல்லக்கிளி மலர மலர சிரித்தாள். பிரபு எழுந்து உட்கார்ந்து பழச்சாறு குடித்தான். காய்ச்சல் விட்டு முகம் தெளிவாக இருந்தது. தமிழரசைக் கண்டு யாரென வினவினான்.

செல்லக்கிளி பதில் பேசு முன்னே தமிழரசு சொன்னான். ''நான் உங்கக்காவின் நல்லதொரு நண்பன். நீ அதிகம் பேசாமல் ஓய்வு எடுத்துக் கொள். அக்கா வீட்டிற்கு போய் வரட்டும்.''

அவர்கள் பேசிக்கொண்டிருக்கும் போது ஜோசப் வாசுகியை அழைத்து வந்தான்.

''தமிழ், நீயும் செல்லக்கிளியும் புறப்படுங்க. நான் இங்கே இருக்கேன். குளித்து ஓய்வு எடுத்துக் கொண்டு வாங்க.''



மூவருமாக வெளியே வந்தபோது தமிழரசு சொன்னான். ''வீட்டில் கவனமாக பேசுங்க. பிரபுவை நீங்க லதா உதவியுடன் மருத்துவமனையில் சேர்த்திருக்கிறதா சொல்லிடுங்க. எங்களை அவங்கக்கிட்டே காட்டிக்காதீங்க. இன்னிக்கு ஒரு நாளைக்கு மருத்துவமனையில் இருக்க வேண்டியிருக்கும். அதுக்கும் சேர்த்து ஏதாவது புளுகிட்டு வாங்க.''

''லதாவுக்கு விவரம் தெரியப்படுத்தணும். விடுமுறை எடுக்கறதுபத்தி கடையில் கடிதம் தரணும்.'' செல்லக்கிளி இழுத்தாள்.

''லதா வீட்டு முகவரி மட்டும் கொடுங்க.. நான் பார்த்துக்கறேன். ஆட்டோவில் போய் இறங்கிக்குங்க.''

வாசுகியுடன் வீட்டுக்குள் நுழைந்தபோது, ''நில்லுடி.. எத்தனை தைரியம் இருந்தா உரிமையா உள்ளே நுழைவே? நேத்து இராத்திரி முழுசும் எங்கேடி போயிருந்தே... ஓடுகாலி'' வடிவின் குரல் கூவியது.



## 18

''**சொ**ன்னா கேட்க மாட்டேங்கறீங்களே சார்... அந்தப் பொண்....ணு எனக்கு தூரத்து உறவு. பாவம் ரொம்ப துன்பத்தில் இருக்கு. நம்ம அலுவலகத்தில்தான் வரவேற்பாளர் வேலை காலியிருக்கே... அதைக் கொடுத்து உதவுங்களேன். புண்ணியமாப் போகும்....''

மேலாளர் சிரித்தார். ''பொண்ணா? நம்ம ராணி மாதிரி இருப்பாளா?''

''உங்க தலையில் இடிவிழ... மூடின தலைப்பு நகராது சார்...''

''ஏன் உள்ளே சாக்கிட்டு போட்டுக்கமாட்டாளா? தலைப்பால மூடிக்குவாளா?''

''உங்க தலையில் வெறும் இடிமட்டும் விழக்கூடாது. இடியோட மின்னலும் தாக்கி மூஞ்சி முகரையெல்லாம் எரிஞ்சு கருகணும். ஏன் சார் அத்தனை அடக்கமாக இருப்பான்னா ரொம்பத்தான் 'லொள்ளு' பண்றீங்களே.. வேலை கொடுப் பீங்களா இல்லையா?''

''கொடுக்கறதைப்பத்தி இல்லை. அதுக்கு பத்தாயிரம் ரூபாய் தொகை கட்டணும்னு ஒரு விதிமுறை இருக்கேப்பா... அந்தப் பெண்ணால முடியுமா? அதைப் பார்த்துக்க...''

''பத்தாயிரமா?'' தமிழரசு ஒரு வினாடி சிந்தித்தான். சரி... சார்... அந்தப் பணத்துக்கு நான் பொறுப்பேத்துக்கறேன். ஒரு வாரம் தவணை கொடுங்க. ஆனால் விசயம் நம்மோட இருக்கணும். ஏதாவது உளறி வைச்சீங்க... உங்களை இந்த மூணாவது மாடியில் இருந்து தள்ளிவிட்டிடுவேன்...''

மேலாளர் அவனை விசித்திரமாகப் பார்த்தார். ''நான் ஏன் சொல்லப்போறேன்? இல்லாத வழக்கமா அந்தப் பொண்ணுக் காக நீ இத்தனை வாதாடி பொறுப்பேத்துக்கும்போதே என்னவோ இருக்குன்னு தெரியுது. இன்னும் வேலைக்கு வந்திட்டா நீ செய்யப் போகிற ஆர்பாட்டத்தில் அலுவலகமே தெரிஞ்சுக்கப் போகுது...''

''இந்தாங்க சார்... அது பாவம் நல்லப் பொண்ணு. அதுக் கிட்டே எதுவும் வைச்சுக்காதீங்க. சொல்லிட்டேன். சீக்கிரம் வேலைக்கான உத்தரவில் கையெழுத்துப் போட்டு வைய்யுங்க. நான் கொஞ்சம் வெளியே போயிட்டுவரேன்...''



''பணம் ஏற்பாடு செய்யத்தானே போறே? அப்படியே எனக்கும் ஒரு ஐயாயிரம் ரூபாய்க்கு சேர்த்து ஏற்பாடு பண்ணிட்டுவா...''

''முடியாது... நீங்க என்ன என் ஆளா?'' தமிழரசு வேகமாக ஓடிவிட்டான்.

''ஏய்... தமிழ்...என்ன சொன்னே?'' மேலாளர் கத்தினது அவனுக்கு கேட்டுக்கொண்டே இருந்தது. வேகமாக பைக்கைக் கிளப்பினான்.

''அப்புறம் என்னதான் நடந்தது?'' நமச்சிவாயம் கேட்ட போது செல்லக்கிளி தொண்டைவரை வந்த விம்மலைத் தள்ளினாள். குரலை இயல்பாக்கிக் கொண்டு பேசினாள்.

''வேற என்ன? மாமி மட்டும் கத்தினாள். தாத்தா வெளியவே வரலை. அந்த அமைதிக்குப் பின்னால் ஏதோ ஆபத்து இருக்கறது தெரியுது. அவருக்கு வேண்டாத எண்ணமெல்லாம் ஏன் இப்படி வருதுன்னு வியப்பா இருக்கு.''

''எல்லாம் உன்னை மாதிரி லட்சணமான பொண்ணுங் களைப் பார்த்தா வர்ற சபலம்தான். பணம் மட்டும் இருந்தால் எல்லாத்தையும் சாதிக்கலாம் என்கிற தவறான நம்பிக்கை. வேறு என்ன சொல்றது?''

''அதுக்கு என்னைமாதிரி திக்கற்றவங்களை எதுக்கு தொல்லை செய்யணும்? யார் மனதில் என்ன இருக்கோ எனக்குப் புரியலை.''

''செத்துப் போன என் அப்பாவை நினைச்சு ஒரு வினாடி வாய்விட்டு மனம்விட்டு உயிர் உருகி அழமுடியவில்லை. இவங்கக்கிட்டே வேதனைப் படறதுக்கே எனக்கு சரியா

இருக்கு. எதிர்காலமே இருண்டுகிடக்கு இதில் என்கூட இந்த ரெண்டும்கெட்டான்களையும் அழைச்சுக்கிட்டுப் போயா கணும். நான் என்ன செய்வேன்னே தெரியலை...''

நமச்சிவாயம் அவளை ஒரு நிமிடம் கூர்ந்து பார்த்தார். ''இதுதானே? உன்பலம் உனக்கே தெரியலை. மனஉறுதியும், சாதிக்க வேண்டும் என்கிற வேகமும் உன்னிடம் நிறையவே இருக்கிறது. தம்பி தங்கையை உன்னோடு அழைத்துச் சென்று நல்வாழ்வு அமைத்துத் தர வேண்டும் என்று நினைக்கிற நல்ல மனம் இருக்கிறது. நீ எடுக்கும் காரியம் எல்லாம் வெற்றியாக முடியும் ஐயமில்லை.

வயதில் பெரியவன் என்கிற உரிமையில் ஒரு சின்ன யோசனை சொல்லலாம் என்று நம்புகிறேன். இது கண்டிப்போ அல்லது அறிவுரையோ இல்லை. உன் எதிர்கால வாழ்வுக்கு ஆலோசனைதான்.

கூடப்பிறந்தவங்களுக்கு உன் கடமைகள் முடிந்த பிறகு அவங்க பறந்திடுவாங்க. அப்போ நீ மட்டும் தனியாக நின்னுடுவே. அதை எப்பவாவது யோசிச்சியா? உன் இளமைப் பருவத்தில் ஓடி ஓடி உழைச்சிருப்பே... உனக்கொரு களைப்பு வரும்போது சுற்றிலும் பார்த்தால் யாரும் கூட நிக்கமாட்டாங்க. நீ தனியா நிற்க வேண்டியதுதான். நடக்க முடியாமல், உட்கார முடியாமல் நீ தனியாளாய் போயிடுவே. அப்பதான் உனக்கொரு துணைவேண்டும்னு தோணும். அந்த நேரத்தில் வேண்டி நீ தேடினாலும் யாரும் கிடைக்க மாட்டாங்க.

இந்த நிலையை நீ கண்டிப்பாக தவிர்த்துவிட வேண்டும். தமிழரசு நல்ல பையன். உன் மீது அன்பு அதிகம் உள்ளவன்.



காதல் என்கிற உணர்வு இளமையில் வரும் போகும். பாசமும், நேசமும் நிரந்தரமானவை. நீ வாழ வேண்டிய வயதில் நிம்மதியாக தமிழரசை திருமணம் செய்துக் கொள். உன் கடமைக்கு அவன் கைதான் கொடுப்பான். தடுக்கமாட்டான் நன்றாக யோசித்து முடிவு எடு. என்னடா இது இவர் இத்தனை பேசறார்னு நினைக்கறியா? இது என் சொந்த அனுபவம் தாயே.... இளமையில் உழைத்தேன். முதுமையில் சாய இடமில்லாமல் தனியாக நின்று போனேன்.''

செல்லக்கிளி பதில் ஏதும் பேசாமல் அமைதியாக இருந்தாள். மனதுக்குள் இனம்புரியாத தவிப்பு காரணமில்லாமல் புரண்டு இம்சித்தது. முகம் மாறிவிடாமல் கவனமாக இருந்தாள்.

தூங்குவது போல கண்மூடிப் படுத்திருந்த பிரபு எல்லா வற்றையும் கேட்டுக் கொண்டிருந்தான். கண்களில் வழிந்த நீர் இருபுறமும் தலையணையை நனைத்தது. அக்காவின் அன்பை அவன் அறிந்தவன்தானே. அப்பா மீதும், அம்மா மீதும் அவன் வைத்திருந்த அன்பும், மரியாதையும் அளவிடற் கரியது.

தன் மீதும், தங்கை வாசுகி மீதும் அக்கா வைத்திருக்கும் பாசம் விலைமதிப்பிட முடியாதது. அதிலும் இப்படியொரு கோணம் இருக்குமென அவன் அறிந்ததில்லை. தனக்குக் கிடைக்க இருக்கும் மிக நல்லதொரு வாழ்வையா அவள் உதறித் தள்ளிவிட்டாள்? இந்த அக்காவுக்கு நான் தகுதியா?

காலமெல்லாம் அக்காவை என்னால் பார்த்துக்கொள்ள முடியுமா? அவளை தெய்வமாகக் கொண்டாட முடியுமா? என் வாழ்வு எப்படி அமையுமோ அந்த நேரம் என் குணமும்,

CONNEMARA PUBLIC LIBRA

மனமும் எப்படி மாறுமோ எங்களுக்காக உழைத்து அக்கா உடலும் மனமும் ஓய்ந்துபோக நான் விடமாட்டேன்.

தமிழரசு நல்லவராகத்தான் இருக்கிறார். அவரோடு அக்காவை சேர்த்து வைக்க நான் பாடுபடுவேன். அக்காவுக்கு நல்லதொரு வாழ்வை அமைத்துக் கொடுப்பதுதான் என் முதல் வேலை. அக்காவுக்கு தெரிந்தால் ஒப்புக் கொள்ளமாட்டாள். தமிழரசின் நண்பர்கள் மூலம் எப்படியாவது முடித்துவிட வேண்டும்.

பிரபு மனம் தெளிவாகக் கண்களைத் துடைத்துக் கொண் டான். தமிழரசின் குரல் கேட்டது.

''நீங்க நினைத்தது முடிஞ்சது. இந்தாங்க வேலைக்கான உத்தரவு.''



19

''இப்ப என்னதான் முடிவா சொல்றே? நீ வேலைக்குப் போறது எங்களுக்கு விருப்பம் இல்லை. முன்னால் போனே.. அப்ப நம்ம நிலைமை வேற... இப்ப அப்படி இல்லை. இருக்கிற வீட்டின் கவுரவத்தைக் காக்கிற பொறுப்பு எல்லோருக்கும் இருக்கு. வீணா எதையாவது செய்து சித்தாப்பாவின் பெயரைக் கெடுத்திடாதே...'' வடிவு அடிக்குரலில் எச்சரித்தாள்.

''என்ன கவுரவத்தை பார்த்திட்டீங்க என்ன பேசறீங்க. நேத்து என் தம்பிக்கு மருத்துவமனைக்கு பணம் கேட்டப்ப மறுத்தீங்க. என்னுடைய சினேகிதம் தானே உதவிச்சு. இத்தனை பெரிய

CONNEMARA PUBLIC LIBRA



மாளிகையில் அந்த வினாடி போகாத கவுரவம், நான் வேலைக்கு போகிறதால் போயிடுமா? எனக்கு உங்க மனோபாவமே புரியலை. மன்னிச்சிடுங்க மாமி... நான் வேலைக்கு போவது உறுதி. கொஞ்ச நாளானதுக்கப்புறம் வேற வீடும் பார்த்துக்கிட்டுப் போயிடறேன். என்னை விட்டிடுங்க...''

செல்லக்கிளி முதல்முறையாகக் குரல் உயர்த்தினாள். வடிவு மிரண்டாள். ஆனாலும் காட்டிக்கொள்ளாமல் பதிலுக்குக் கத்தினாள்.

''உன் விருப்பப்படி நீ மேயறதுக்கு என்னால் அனுமதிக்க முடியாது. உங்கப்பனும் ஆத்தாளும் எங்களை நம்பித்தான் உன்னை விட்டிட்டுப் போயிருக்காங்க... உன் மாமாவும் ஊரில் இல்லாதப்ப நீ இப்படி ஆட்டம் போடறது நல்லாயில்லை. அப்படியும் நீ போய்த்தான் ஆகணும்னு முடிவு பண்ணிட்டா அதுக்கு தாத்தாதான் அனுமதி கொடுக்கணும். அங்கே போய் கேட்டுக்க... எனக்கு தெரியாது...''

முடித்துவிட்டு வடிவு தரை அதிர நடந்து சென்றாள். அதுவரை வேகமாகப் பேசிய செல்லக்கிளி நிதானித்தாள். மீண்டும் அந்தக் கிழவனிடம் போய் பேசுவதாவது.

'என் வாழ்வைப்பற்றி நிர்ணயம் செய்ய அவர் யார்?' செல்லக்கிளி அலட்சியமாக வெளியேறினாள்.

பிரபுவை மருத்துவமனையிலிருந்து வீட்டுக்கு அனுப்பி விட்டார்கள். பத்து நாளைக்கு வேண்டிய மருந்துகள் வாங்க வேண்டியிருந்தது. குளுக்கோசும், ஆர்லிக்சும் தேவைப் பட்டது. பழச்சாறு கொடுக்க சாத்துக்குடிபழம் வாங்க வேண்டும். மருத்துவமனைக்கு பணம் கட்டணும்.

செல்லக்கிளிக்கு தலை சுற்றியது. இரண்டு நாளாக தமிழரசு ஏகப்பட்ட பணம் செலவழித்துவிட்டார். கொஞ்சநேர யோசனைக்குப் பின் கழுத்திலிருக்கும் தங்கச் சங்கிலியைக் கழட்டினாள். அப்பா முதன் முதலில் வாங்கிக் கொடுத்தது என அந்த சங்கிலி மீது தனிப்பிரியம்... ஆனால் அதைவிட மானம் முக்கியமாயிற்றே.

தளர்ந்த நடையுடன் மருத்துவமனை வாயில்படியில் இறங்கினவளை தமிழரசின் குரல் நிறுத்தியது.

''ஆட்டோ வந்துவிட்டது. பிரபுவை அழைச்சுக்கிட்டு வாங்க நேரத்தில் வீடு போய் சேரலாம்....''

''கொஞ்சம் இருங்க... இதோ வந்திடுறேன்..'' வேகமாக நடக்கத் தொடங்கியவளை தமிழரசு வழிமறித்தான்.

''என்ன இத்தனை வேகம்...'' கேட்டப்படி நிமிர்ந்து பார்த்த வளை வெறும் கழுத்து நிரடியது. விசயத்தை யூகித்தவன் கையை நீட்டினான்.

''கொடுங்க... கையிலிருக்கறதைக் கொடுங்கன்னு சொல்றேன்...''

தயக்கத்துடன் சங்கிலியை அவன் கையில் வைத்தாள். ''இந்த அளவுக்கு வேற்றுமை பார்க்க ஆரம்பிச்சதுக்கப்புறம் நானும் பார்க்க வேண்டியதுதான். இது விற்கவா இல்லை அடகு வைக்கவா?''

செல்லக்கிளி தலை கவிழ்ந்தாள்.

''எதாக இருந்தாலும் நான் கொடுத்த பணத்துக்கு இது என்கிட்டே இருக்கட்டும் பணம் திருப்பித் தரும்போது இதைத் தரேன். வேற யாருக்கும் தெரியவேணாம்.''



செல்லக்கிளி பதில் பேசமுடியாமல் அமைதியாகப் பின்தொடர்ந்தாள்.

ஆட்டோ வந்த நிற்பதும் பிரபுவைக் கைப்பிடித்து அழைத்துக் கொண்டு செல்லக்கிளி பின்பக்கத்து வீட்டுக்குச் செல்லுவதும் வடிவுக்கு கண்ணில்பட்டது. அவள் பின்னால் பைகளைக் கையில் ஏந்தி வரும் புதுமுகம் யார் என்றுதான் தெரியவில்லை. உறவாக இருக்குமோ?

இத்தனை உயரமாக, சிவப்பாக அவளுக்குத் தெரிந்து யாருமே இல்லை. ஒரு வேளை கூட வேலை செய்பவனாக இருக்குமோ? இதுவரை யாரைப் பற்றியும் அவள் சொன்ன தில்லை, லதாவைத்தான் தெரியும். இவனால் என்ன புதுசாக உருவாகப் போகுதோ, பார்க்கலாம். வடிவு பார்த்துக் கொண்டே இருந்தாள்.

தமிழரசு விடைபெற்று சென்றதும் வடிவு வீட்டிற்குள் நுழைந்தாள். ''யாருடி அது? புது சினேகிதம்? எத்தனை நாளா நடக்குது இது? ஏன் வீட்டில் இருக்கிறவங்களை பிடிக் கலைன்னு இப்பதானே புரியுது. இந்த ஊருக்கு வந்து எத்தனை நாளாவுது. அதுக்குள்ளே இந்த வேலையெல்லாம் செய்யறியா? திமிருடி..... கழுத்தில் இருந்த சங்கிலி எங்கேடி காணோம்...''

''என் தம்பிக்காக அடகு வைச்சிருக்கேன். அது நீங்க போட்டதில்லை. எங்கப்பா தந்தது. நீங்க கேட்கவேணாம். நீங்க முதலில் போங்க. பிரபுவுக்கு இப்ப ஓய்வு தேவை. இன்னும் நாலு நாளைக்கு கண்ணுல வைச்சுப் பார்க்கணும்னு மருத்துவர் சொல்லியிருக்கார்...''

வடிவு எதுவும் சொல்லுமுன் தேவநாதன் கூப்பிடுவது கேட்டது.

''வாசுகி நாளைக்கு நான் வேலையில் சேர வேண்டும். நீ பள்ளிக்கு விடுமுறை போட்டுவிட்டு அண்ணனை கவனிச்சுக்கம்மா...''

சரியென வாசுகி தலையசைத்தாள்.



## 20

''என்ன தமிழ் என் பக்கம் திரும்பிக்கூட பார்க்க மாட்டேங்கறீங்க? உங்களுக்கு ஏது அதுக்கு நேரம்? செல்லக்கிளிகூட பேசத் தான் சரியா இருக்கே'' ராணி அலுத்துக் கொண்டாள்.

தமிழரசு தலையில் கைவைத்துக் கொண்டான். ''உனக்கு என்ன வேணும்? எங்கேயாவது கொண்டு விடணுமா? வா, கொண்டு தள்ளிட்டு வந்திடறேன்.''

''என்னை ஒழிக்கிறதிலயே இருங்க.... அதோ உங்க ஆளு வருது.. என்னன்னு கேளுங்க...''

செல்லக்கிளிக்கு சங்கிலி விவகாரத்தில் இருந்து தமிழரசிடம் பேசுவதற்கு தயக்கமாகிப்போனது. உடன் இருப்பவர்களுக்குக் கூடத் தெரியாமல் மெல்லிய தடுப்பு உண்டாகிவிட்டது போல ஒரு உணர்வு. தமிழரசுக்கும் அது புரிந்தது. இருந்தாலும் காட்டிக் கொள்வதில்லை. பார்த்து வணக்கம் சொல்வது, சிரித்துக் கொள்வது என்று விலகிக் கொண்டிருந்தார்கள்.

வேலைக்கு சேர்ந்த ஒரு வாரத்தில் கண்ணாடி சன்னல் வழியாக பார்க்கச் சொல்லி சைகை காட்டினாள். தமிழரசு எட்டிப் பார்த்தான்.



கீழே தேவநாதன் காரிலிருந்து இறங்கி பக்கத்திலிருப்பவர்களிடம் ஏதோ விசாரித்துக் கொண்டிருந்தார். கவலைப்படாதே என்பது போல சைகை காட்டிவிட்டு தமிழரசு கீழே இறங்கினான்.

ராணியும் எட்டிப் பார்த்தாள்.

''யார் அது? உனக்கு உறவா? பார்த்தா பெரிய பணக்காரர் மாதிரி தெரியுதே...அந்தக் கார் அவருடையதா?''

''ஆமாம் ரொம்ப பெரிய பணக்காரர்தான்.'' செல்லக்கிளி தலைகுனிந்தாள். ராணி மேலே பேசுமுன் தமிழரசு திரும்பி வந்தான்.

''யப்பா... யப்பா கிழவரை அசைக்க முடியலை. மனுசன் நகர மாட்டேங்கறார். ஒரு வழியா அனுப்பிட்டேன். நாக்கு வறண்டுபோச்சு... உடனே ஒரு அண்டா குளிர்ந்த நீர் தேவைப்படுதே...''

''என்னால் உங்களுக்குத்தான் வீண் தொல்லை. என்னை மன்னிச்சிடுங்க சார்...'' செல்லக்கிளி கண்கலங்கினாள்.

''இங்கே நான் காப்பாத்திட்டேன். வீட்டில் நீங்கதானே கவனமா இருக்கணும். பார்த்து இருங்க. இதெல்லாம் தொல்லை விளைவிக்கிற ரகமா இருக்கு. எனக்கு இப்பவே குளிர்பானம் வேணும். நீங்கதான் வாங்கித் தரணும்...''

மகாகெட்டிக்காரியான ராணிக்கு விவரம் அரசல், புரசலாகப் புரிந்தது. செல்லக்கிளியை ஒரு ஏளனப் பார்வை பார்த்தாள்.

''பிழைக்க தெரியாதவளா இருக்கியே இந்த தமிழரசால் என்ன செய்ய முடியும் உனக்கு? மிஞ்சிப்போனால் ஆண்டுக்கு ரெண்டு சேலையும் தினமும் ஒரு முழப் பூவும் வாங்கித்

தரமுடியும். வேறு என்ன முடியும்? அதிருஷ்டம் யார் யார் வீட்டுக் கதவையெல்லாம் தட்டுது பாரு...''

செல்லக்கிளி விக்கித்துப் போனாள். இது என்ன இவள் இப்படி பேசுகிறாள்- மனிதர்களின் மனங்களைப் புரிந்து கொள்ளவே முடிய வில்லையே.. உதவி வாங்கிக் கொள்ளவே கை கூசுகிறது. இவளானால் சர்வசாதாரணமாக பேசுகிறாள்.

ராணி தன் இருக்கைக்குப் போனாள். தமிழரசு செல்லக் கிளியை கையசைத்து உணர்வு பெறவைத்தான். கையைத் தலையில் சுற்றிக் காட்டினான். ''அது அப்படித்தான் பேசும் உங்க வேலையைப் பாருங்க... இதையெல்லாம் காதில் போட்டுக் கொண்டால் நமக்குத்தான் தலைசுற்றும்.''

மாலை வேலை முடிந்து வீடு திரும்பியதும் தேவநாதன் அவளைக் கூப்பிட்டனுப்பினார்.

''வேலை நேரத்தில் அலுவலகத்தில் இல்லாமல் எங்கே போய் சுத்திட்டுவரே? அந்தப் பையன் நீ இல்லைன்னு சொன்னானே....''

செல்லக்கிளி சமாளித்தாள். ''பத்தாவது மாடியிலிருக்கிற இன்னொரு அலுவலகத்துக்குப் போயிருந்தேன் தாத்தா. அது அவருக்கு தெரியாது.''

தேவநாதன் எரிச்சலடைந்தார். ''இந்தா செல்லக்கிளி, தாத்தான்னு கூப்பிடறதை முதலில் நிறுத்து. என்னைக் கிழவன்னு சொல்லிக் காட்டறியாடி? ஒரே அறையா அறைஞ்சிடுவேன். போகட்டும். வடிவு கிட்டே நகையெல்லாம் கொடுத்திருக்கேன். பட்டுச்சேலை கட்டி நகையெல்லாம் போட்டுக்கிட்டு சீக்கிரம் தயாராகி வா. வெளியே போகணும்.''



செல்லக்கிளி பயந்து கத்தும் அளவிற்கு அதிர்ந்தாள். ''நான் வரமாட்டேன். எனக்கு ரொம்பக் களைப்பா இருக்கு... மாமியோட போயிட்டு வாங்க...''

''என்னடி நடிக்கறே? உன்னை கற்பழிக்கவா கூப்பிடறேன்? விருந்துக்குத்தானே கூப்பிடறேன். நீ இப்படி சொல்வேன்னு எனக்கு தெரியும். அதனால்தான் ஏற்பாடோட தயாரா இருக்கேன்.''

அவர் கைதட்டினதும் அழகு நிலைய பெண்கள் நான்கு பேர் அறைக்குள்ளிருந்து பாய்ந்து வந்தார்கள். கோழிக்குஞ்சை அமுக்குவது போல அவளைத் தூக்கிக் கொண்டு மறைந் தார்கள். அவளுடைய எந்த எதிர்ப்பும் எடுபடவில்லை. மின்னல் வேகத்தில் வேலை நடந்தது.

ஒரு மணிநேரம் சென்று வெளியே வந்த செல்லக்கிளியைக் கண்டு தேவநாதன் மயக்கம் போடாதக் குறைதான்.

கருநீல பட்டுச் சேலையும் நகைகளும் அவளை சொர்க்க லோக சுந்தரியாக்கிவிட்டிருந்தன.

''அடிப்பாவி... என்னடி இத்தனை அழகா இருக்கே'' வடிவு வியப்பில் விழிவிரித்தாள்.

தேவநாதன் பாய்ந்து அருகில் வந்து நின்றார். விரலால் முகத்தைத் தூக்கினார்.

''இனிமேல் என்னால் காத்திருக்க முடியாது. இன்னும் பத்தே நாளில் திருமணம்தான். வடிவு நாங்க போயிட்டு வரோம். நேரமானால் பயப்படாதே... என்னைப் பத்தி எனக்கே நம்பிக்கையில்லை....''

செல்லக்கிளி மறுக்க, மறுக்க கையைப்பிடித்து இழுத்துக் கொண்டு போய் காரில் ஏற்றினார். அவர் கை இரும்பு போல அவளை வளைத்துக் கொண்டது. கார் பறந்தது.

வாசுகி பின்புற வீட்டில் இருந்து பார்த்துக் கொண்டிருந்தாள். அக்காவுக்கு ஏதோ நடக்கப் போகிறது என்பது மட்டும் தான் அவளுக்குப் புரிந்தது. வேகமாக பிரபுவை எழுப்பினாள். விவரத்தைக் கேட்ட பிரபு பயந்து போனான்.

பலவீனமான நிலையிலும் வெளியே ஓடினான். பக்கத்திலிருக்கும் கடையிலிருந்து தொலைபேசியில் பேச முடிவு செய்தான். தமிழரசு கொடுத்த எண்களை ஒத்தினான்.

மறுமுனையில் பேசிய தமிழரசுக்கு ஒன்றும் விளங்கவில்லை. நான் வருவதற்குள் தேவநாதன் எங்கு போயிருக்கிறார் என்பதை வடிவிடம் கேட்டு வைக்கச் சொன்னான். உடை மாற்றி புறப்பட்டவனுடன் ஜோசப்பையும் போகச் சொன்னார் நமச்சிவாயம்.

தமிழரசும், ஜோசப்பும் கேட்ட போது பிரபு அழத் தொடங்கினான். வடிவு எதுவும் சொல்ல மறுத்ததோடு அடித்தும் இருக்கிறாள். ஒரு நிமிடம் யோசித்தவன் தொலைபேசியை கையில் எடுத்தான்.

''சித்தப்பா ஜாலி உணவு விடுதிக்கு விருந்துக்கு போயிருக்காங்க. கூட யாரும் போகலைங்க...''

''பிரபு பயத்தை விடு. அக்காவோடு வரேன். போய் நிம்மதியா ரெண்டு பேரும் தூங்குங்க.''





21

''அடே தமிழ்.,..... என்னடா மந்திரம் போட்டே... அந்தக் கிழவர் இப்படி அலறிக்கிட்டு ஓடுறார்?'' ஜோசப் வியப்பின் எல்லையைத் தொட்டுவிட்டான்.

''பெரிய காரியம் இல்லை ஜோசப். நேரா போய் வீட்டில் காவல் துறையினரும் சி.பி.ஐயும் சோதனை போட்டுக்கிட்டிருக்காங்க. வீட்டிலிருக்கிற வயசான அம்மா விவரம் புரியாமல் உங்க சொத்து விவரம் அளந்து விட்டிட்டாங்க... சிங்கப்பூர் வியாபாரம் பத்தியும் சொல்லிட்டாங்க போலிருக்கு. சீக்கிரமா ஓடுங்க... இல்லே தீர்ந்தீங்கன்னு சொன்னேன். மனுசன் மிரண்டாரு. ஓடாமல் என்ன செய்வாரு?''

''தன் பணத்தைப் பத்தின கவலை வந்ததும் கூட அழைச்சுக்கிட்டு வந்த பெண்ணைப் பத்திக் கவலைப்படலியே அந்தக் கிழவன். சரி, சரி நேரம் ஆகுது. உங்காளை அழைத்துக்கிட்டு வா. பாவம் அது மிரண்டு போய் நிக்குது பார்.''

தேவநாதன் திடீரென ஓடின விவரம் புரியாமல் மலங்க மலங்க விழித்துக் கொண்டிருந்த செல்லக்கிளியை வெளியே அழைத்து வந்தார்கள். அவளிடம் விவரம் சொல்லி ஆட்டோ ஏற்பாடு செய்தார்கள்.

ஜோசப் சொன்னான். ''நான் பைக்கில் பின்னால் வரேன். நீங்க ரெண்டு பேரும் ஆட்டோவில் கிளம்புங்க.''

ஆட்டோவில் போகும்போது செல்லக்கிளிக்கு பேசவே முடியவில்லை. இவன் யார்? இப்படி ஒவ்வொரு முறையும் ஆபத்பாந்தவனாக அநாதைரட்சகனாக அருட்கரம் நீட்டுகிறானே... உதவி, பணமாக இருந்தாலும் முன் வருகிறான்.

இப்படி உடல் உழைப்பாக இருந்தாலும் தயாராக வருகிறான். என்ன செய்து என் நன்றிக் கடனைத் தீர்ப்பேன்?

என் கடமைகளைச் செய்வதற்கு இவன் தடை செய்யப் போவதில்லை. என் சுமையைத் தன் சுமையென ஏற்றுக் கொள்வான். இப்படி இரவும், பகலும் அலைந்து திரிகிறான். இப்பவே என் ஒப்புதலைச் சொல்லிவிடலாம். ஆனால் ஏனோ தயக்கம் தடுக்கிறது. மனம் மயங்கித் தவிக்கிறது. இப்படிப் பட்ட இக்கட்டை நானாகத்தானே ஏற்றுக் கொண்டேன். அப்பா போனதிலிருந்து புத்தியே சரியாக வேலை செய்யவில்லை.

மனதிலிருப்பதைச் சொல்லவும் முடியவில்லை. சொல் லாமல் இருப்பது சரியா எனவும் தெரியவில்லை. எதற்குத்தான் இப்படி அவதிப்படுகிறேனோ...

தமிழரசு ஆட்டோ ஓட்டுநரிடம் வழி சொல்லிக் கொண்டு வந்தான். வீடு வந்ததும் செல்லக்கிளியைப் பார்த்து கண் சிமிட்டினான்.

''என்ன.. பார்த்து முடிச்சாச்சா? மனதில் என்ன தோணுது? இந்த பையனை திருமணம் செய்துக்கலாம். அதுக்கு முந்தி கொஞ்சம் காதலிக்கலாம்னு மனசு பரபரக்குதா? எனக்கு அப்படியெல்லாம் எதுவும் தோணலை... இந்த அழுமூஞ்சி பொண்ணு பாவம்... இனிமே வேற எந்த சிக்கலிலும் சிக்கிடக் கூடாதேன்னு பயமா இருக்கு... இதுக்கு நல்ல மாப்பிள்ளையா பார்த்து திருமணம் செய்து வைக்கணுமேன்னு கவலை வருது. முதலில் உள்ளே போய் இந்த சேலை, நகை எல்லாத்தையும் கழற்றி அவங்கக்கிட்டே கொடுத்திடுங்க. நிம்மதியா படுத்து தூங்குங்க. காலையில் பார்க்கலாம்.''



அவன் அப்படிச் சொன்னதும் 'குபுக்'கென கண்ணீர் வழிந்தது. அவனறியாமல் மறைத்துக் கொண்டு தலையாட்டி விட்டு உள்ளே ஓடினாள்.

ஜோசப் தலையில் அடித்துக் கொண்டான். ''இப்பதான் உன்னை கொஞ்சம் காதலா பார்த்தாள். அதை இதை பேசி அவளைக் குழப்பணுமா? என்ன தமிழ் நீ காரியத்தைக் கெடுத்திட்டே...''

தமிழரசு சிரித்தான். ''காரியம் கெட்டுப் போச்சா? இப்பதான் காரியம் கான்கிரீட் போட்டா மாதிரி பலமாகிவிட்டது. இரவு முழுவதும் அவள் எங்கே தூங்கப்போறா? நாளைக்குப் பாரு நண்பா...''

ஜோசப் புரியாமல் விழித்தான்.

''புரியலியா? அதெல்லாம் தெய்வீகக் காதலனுக்கு மட்டும் தான் புரியும். உனக்கு சுட்டுப்போட்டாலும் காதல் வரப் போறதில்லை. வா போகலாம்.''

வீட்டிற்குள்ளே பெரிய பூகம்பம் வெடித்துக் கொண்டி ருந்தது.

தேவநாதன் கேட்டது எதுவும் புரியாமல் வடிவு விழித்தாள். ''யாரும் வரலியே... ஒரு தொலைபேசி மட்டும் வந்தது. நீங்க ஜாலி உணவு விடுதிக்குப் போயிருக்கறதை சொன்னேன்.''

தேவநாதன் பாய்ந்தார். ''முட்டாள். காரியத்தையே கெடுத் திட்டியே., வயசு ஆகுது இல்லே... எருமைக்கு ஆகுற மாதிரி.. முண்டம்.. நான் அங்கே போயிருக்கேன்னு ஏன் சொன்னே? எவனோ உன்னை முட்டாளாக்கிட்டு என்னையும் ஏமாத் திட்டுப் போயிட்டான். அவன் எதற்காக இப்படி பொய்

சொல்லணும்? அதன் அடியில் என்ன காரியம் மறைந்து இருக்கிறது? இதை விடக்கூடாது, கூப்பிடு அந்த சாலக்குப் பிடிச்சவளை... அவள்தான் இதுக்குக் காரணம் இருக்கணும்.''

அதுவரை தேவநாதன் அப்படிப் பேசிக்கேட்டறியாத வடிவு அரண்டு போனாள். செல்லக்கிளியைக் கூப்பிட விழுந்தடித்துக் கொண்டு ஓடினாள். அவளுடைய வேகமும், பரபரப்பும் செல்லக்கிளிக்கும் தொத்திக் கொண்டது. ஏற்கனவே பயத்துக்கும் குழப்பத்துக்கும் நடுவில் அல்லாடிக் கொண்டிருந்தவள் நடுங்கிப் போனாள்.

''எல்லாம் உன்னால் வர்றதுதான். இதோ பாரு இப்படி ஒவ்வொன்றாக நடக்க, நடக்க எனக்கு வேகம்தான் வருது. உன்னை நல்லபடியாகத் திருமணம் செய்ய நினைக்கிறது தப்புன்னு படுது. உன்னை எப்படி பார்க்கணுமோ அப்படி பார்த்துக்கறேன். உனக்கு உதவி செய்யறவங்க யாருன்னு கண்டுபிடிக்கறதுதான் என் முதல் வேலை. என்னது கையில அந்த நகைகளையும், பட்டுச்சேலையையும் குப்பையில் தூக்கிப்போடு.. இந்த இராத்திரி நேரத்தில் ஆட்டோ பிடிச்சு தனியா வர்ற அளவுக்கு துணிச்சல் உள்ளவளா நீ?''

தொலைபேசி சிணுங்கியது. எரிச்சலுடன் எடுத்தவர் முகம் மாறினார்.

''வடிவு நாளைக்கு நான் முதல் விமானம் பிடித்து சிங்கப்பூர் போகவேண்டியிருக்கு. இந்த விவகாரமெல்லாம் நான் வந்து பார்த்துக்கறேன். இவளை மட்டும் கண்காணிச்சுக்கிட்டு இரு.''





## 22

'இப்படியெல்லாம் கூட கடவுள் உதவி செய்வாரா? பரவாயில்லையே... செல்லக்கிளின்னா சும்மாவா?'

தமிழரசுவின் கேலியைக் கேட்டு செல்லக்கிளி புன்னகைத்தாள். ''எப்படியோ அந்தக் கிழவன் ஒரு பத்து நாளைக்கு இந்தப் பக்கம் வரமாட்டார். நீங்க நிம்மதியா இருக்கலாம். பயம், எரிச்சல் எல்லாத்தையும் ஒதுக்கிட்டு சிரிச்சுக்கிட்டு இருக்கணும் புரியுதா?''

மேலாளர் எதிரில் வந்து நின்றார். ''ஏம்ப்பா... தமிழரசு இது அலுவலகம் என்பது கொஞ்சமாவது நினைவிருக்கா? வாங்குகிற சம்பளத்துக்கு வேலை செய்யணும் என்பது கூட மறந்து போச்சா.. நல்லா வந்து சேர்ந்தீங்கப்பா எனக்குன்னு?''

தமிழரசு அவரை முறைத்தான். ''ஏன் சார், நான் என்ன இந்த செல்லக்கிளிகூட இருகுரலிசையா பாடிக்கிட்டிருக்கேன், நீங்க வயிறு எரிய? நீங்க சொன்ன எல்லா வேலையும் அழகா முடிச்சு உங்க பார்வைக்குன்னு தனியா எழுதி மேசைமேல வைச்சிட்டு வந்தேன். அதை பார்க்கலியா நீங்க?''

மேலாளர் அலுத்துக் கொண்டார். ''நான் எங்கே பார்த்தேன்? ஐந்து மணிக்கெல்லாம் வீட்டுக்கு வரணும்னு மகாராணி உத்தரவு போட்டு அனுப்பியிருக்காள். வேலை தலைக்கு மேல கிடக்கு எங்கே போகிறது.''

தமிழரசு கண்ணடித்தான். ''என்ன சார், பனிரெண்டாவதுக்கு ஏற்பாடு பலமா நடக்குது போலிருக்கே. பார்த்து சார். இதுவும் ரெண்டா இருந்திடப்போகுது...''

ஒரு வினாடி புரியாமல் விழித்த மேலாளர் மறுநிமிடம் ஆவேசமானார். ''படவா... கேலியா பண்றே? உன்னை என்ன பண்ணினா தகும்? பக்கத்து வீட்டில் நிச்சயதார்த்தம். அதுக்கு வரச்சொன்னாடா.''

தமிழரசு, ''அட போங்க சார்.. இதுக்கா இந்தபாடு பட்டீங்க? உங்க வேலையில் நான் ஏதாவது செய்ய முடியும்னா சொல்லிவிட்டுப் போங்க செய்து வைச்சிட்டுப் போறேன், இதுக்குப்போய் அலுத்துக்கறீங்களே...''

''ரொம்ப நன்றிடா கண்ணா. நான் புறப்படறேன். செல்லக்கிளி உனக்கும் சின்ன வேலை. சிரமம் பார்க்காமல். பத்தாவது மாடியில் இருக்கிற அலுவலகத்துக்குப் போய் இந்தக் கோப்பைக் கொடுத்திட்டு வந்திடறியா? பாவம்.. தயிழரசு மட்டும் எத்தனை வேலை செய்வான்?''

''ஆடு நனையுதேன்னு ஓநாய் அழுததாம். வேலையும் கொடுத்திட்டு பனிக்கட்டியை தலையில் வைக்கறீங்களே... வேண்டாம் சார்... நேரமாகுது புறப்படுங்க., நான் பார்த்துக் கறேன்..''

மேலாளர் கிளம்பினதும் செல்லக்கிளி, ''சார்.. என்கூட பத்தாவது மாடிக்கு வரமுடியுமா? அங்கே யாரையும் எனக்கு தெரியாது'' என்று கூப்பிட்டாள்.

''பார்த்தியா... அவருக்கு செய்யறதே ஒரு உதவி... அந்த உதவிக்குள்ளே இன்னொரு உதவி குட்டி போட்டுச்சா? வாங்க போயிட்டு வந்தப்புறம் மத்த வேலைகளைப் பார்க்கிறேன்.''

இருவரும் மின்தூக்கியில் ஏறினார்கள். உள்ளே சென்றதும் நினைவு வந்தவனாக தமிழரசு சொன்னான். ''சொல்ல மறந்து போச்சே..காலையில் என் கூட படிச்ச மனோகரன் வந்தான்.



அவனைப் பார்த்ததும் உங்க நினைவுதான் வந்தது. மாப்பிள்ளை பார்க்கிற அலைச்சல் மிச்சம். வர்ற வாரம் வீட்டுக்கு அழைச்சுக்கிட்டு வரேன். உங்களுக்குப் பிடிச்சிட்டா அடுத்த நல்ல நாளிலேயே திருமணத்தை முடிச்சிடலாம். கிழவரைப் பத்தி கவலைப்படாதீங்க. சமாளிச்சிடறோம், என்னது... முகத்தில் சிரிப்பைக் காணோம்? கண்ணு கலங்குது? ஓகோ... ஆனந்தக் கண்ணீரா? வரட்டும் .. வரட்டும்...''

பேச்சு சுவாரசியத்தில் மின் தூக்கி பத்தாவது தளத்தில் நிற்காமல் மீண்டும் 'சர்'ரென கீழே இறங்குவதை தமிழரசு கவனிக்கவில்லை. கீழ்த்தளத்திலும் நிற்காமல் மீண்டும் வேகமாக மேலே ஏறியது.

தமிழரசு சிரித்தான். ''பார்த்தீங்களா செல்லக்கிளி.. உங்களுக்குத் திருமணம் என்றதும் மின்தூக்கிக்கூட கும்மாளம் போடுது...''

கொஞ்ச நேரம் மேலும் கீழும் வேகமாக ஓடிய மின்தூக்கி இரண்டு மாடிகளுக்கு நடுவில் நின்றுவிட்டது.

''என்னடா இது.. நின்றுவிட்டது! இதுக்குத்தான் செயற்கையான எதையும் நம்பக்கூடாது என்பது. இத்தனை மாடி இருக்கே, இந்த மின்தூக்கிக்கு ஒரு பணியாளர் வைப்போம்னு எந்த அலுவலகமாவது நினைக்குதா? இப்ப நடுவில் மாட்டிக் கிச்சு... எனக்கு இந்த மின்சார வேலைகள் எதுவும் தெரியாது. எல்லாம் என்னைத் துன்பப்படுத்தத்தான் நடக்குது. நான் எல்லா பொத்தானையும் அழுத்தறேன். அசையுதானு பார்க்கலாம்.''

தமிழரசின் வேலையெல்லாம் மின்தூக்கியிடம் பலிக்க வில்லை. அசைவேனா என்றது. தமிழரசு கீழே உட்கார்ந்துக் கொண்டான்.

''என்ன சார் உட்கார்ந்திட்டீங்க! ஏதாவது செய்யுங்க'' செல்லக்கிளி பதறினாள்.

தமிழரசு உதடு பிதுக்கினான். ''என்ன நீங்க பேசறது. என்னமோ நான் தான் இதை நிறுத்திட்டா மாதிரி சொல்றீங்களே... நான் என்ன செய்யறது அது தானா ஓடினாத்தான். என் கவலையெல்லாம் உங்களையும் உள்ளே உட்கார வைச்சிருக்கேனே என்பதுதான். கட்டிடத்தில் இருக்கிற மத்தவங்களுக்கு விவரம் தெரிஞ்சு இந்த மின்தூக்கி நின்றதுக்கான காரணத்தை அவங்க கண்டுபிடிச்சு, அதற்கான ஆளை அழைத்து வந்து சரிசெய்யச் சொல்லி ஓடவைச்சு... நடக்குங்கறீங்க?

எனக்கு நம்பிக்கையில்லை. நான் சாகிறதைப்பத்தி கவலை இல்லை. நீங்களும் என் கூட துன்பப்படப் போறீங்களே என்றுதான் தவிக்கிறேன்.

ஒண்ணு செய்யலாம்.. உரக்க குரல் கொடுக்கலாம். யாருக்காவது கேட்குதா என்று பார்க்கலாம். குலதெய்வத்தை வேண்டிக்கிட்டு கூப்பிடுவோம்.''

தமிழரசும் செல்லக்கிளியும் கத்திக் கத்தி களைத்துப் போனார்கள். பத்து நிமிடம் கழித்துதான் வெளியில் இருப்பவர்களுக்குத் தெரிந்தது.

''பாவம், மனோகரன் உங்களைத் திருமணம் செய்து கொண்டு மகிழ்ச்சியாக வாழவேண்டும் என்று கனவு கண்டுகிட்டிருப்பான். சும்மா இருந்தவனை நான் தான் கிளப்பி விட்டேன். இப்ப கொஞ்ச முந்தி நீங்களும் மனோகரனைப் பத்தி சின்ன கனவு காண ஆரம்பிச்சிருப்பீங்க. என்னால்தானே எல்லாம்!''



''சாகிற நேரத்தில் இந்தப் பாவமூட்டையை முதுகில் தூக்கிவிட்டுப் போனா எமதூதர்கள் என்னை உள்ளேயே விடமாட்டாங்க. என்னை மன்னிச்சிடுங்க, மனோகரா.. நீயும் என்னை மன்னிச்சிடுடா.''

செல்லக்கிளி அமைதியாக உட்கார்ந்திருந்தாள். அவளை ஓரக்கண்ணால் பார்த்த தமிழரசு மீண்டும் பேசினான்.

''மனோகரன் இருக்கானே... என்ன மாதிரி ஆளு என்க றீங்க.. பார்க்க பார்க்க மனதை அள்ளிவிடும் அழகுங்க. சிரிப்பான் பாருங்க... இன்னிக்கெல்லாம் பார்க்கலாம்.''

''வேண்டாம் ... எனக்கு பார்க்க வேண்டாம். எனக்கு யாரைப் பத்தியும் தெரிஞ்சுக்க வேண்டாம்...''

செல்லக்கிளிக்குக்கூட அத்தனை கோபமாகவும் வேகமாகவும் பேச வருமாவென தமிழரசு அயர்ந்து போனான். மனதுக்குள் சிரித்துக் கொண்டான்.

'வாடி மாமா மகளே... உனக்கு கோபம் வந்தால் விட்டுடுவேனா? இப்ப பாரு...'

''எதுக்கு செல்லக்கிளி இப்படி கோவிக்கறீங்க? எங்க மனோகரனைப் பத்தி நான் சொல்லத்தான் செய்வேன். அவன் எப்படிப்பட்ட நல்லவன் தெரியுமில்லே!''

''எனக்கு யாரைப் பற்றியும் தெரியவேண்டியது இல்லை எனக்கு.. எனக்கு...'' மேலே பேசமுடியாமல் செல்லக்கிளி அழத் தொடங்கினாள் தமிழரசு அவள் தோளைத் தொட்டுத் திருப்பினான்.

''இல்லை.... மனோகரன் என்கிற ஒரு ஆளே இல்லை. அவனுக்காக இப்படி நீங்க அழவேண்டியதில்லை. அவனை விட்டிடுங்க பாவம்..''

செல்லக்கிளி விலுக்கென்று முகத்தைத் தூக்கி அவனைப் பார்த்தாள். கண்களில் நீர் நிறைந்து அவனை மறைத்தது. வியர்வையில் கசகசப்பில் முடிக்கற்றை முகத்தில் ஒட்டிக் கொண்டு உடலையே நீர்ப்பிரளயமாக்கிவிட்டிருந்தது.

தமிழரசு குறும்பாய் கண்சிமிட்டினான். ''மனோகரன்னு ஒரு நண்பனே எனக்குக் கிடையாது. நீங்க 'உம்'னு ஒரு வார்த்தை சொல்லுங்க. புதுசா தயாபரன்னு இன்னொரு நண்பனை வரவழைக்கிறேன்.''

செல்லக்கிளிக்கு எங்கிருந்துதான் அப்படி ஒரு கோபம் வந்ததோ தெரியவில்லை. படபட வென அவன் நெஞ்சில் குத்தினாள்.

''இந்தா...இந்தா.. நீ பாட்டுக்கு வேகமாகக் குத்தாதே... உள்ளே என் காதலி இருக்கா... பனிக்குழைவு மாதிரி மென்மை யானவள். அவளால் தாங்க முடியாது. வாய்விட்டுச் சொல்ல வும் தெரியாது.பேசவும் தெரியாது. அழுதுகிட்டு கிடக்கும். இப்பக்கூட பாரு... ஒரு வார்த்தை... ஒரே ஒரு வார்த்தை வருதா பாரு... தமிழு ... தமிழு நீங்க ரொம்ப அழகா இருக்கீங்க. வீரபராக்கிரமத்தோளன். உங்களை நான் காதலோ காதல்ன்னு காதலிக்கிறேன். ஏக்கத்தில் ஏங்கித் தவிக்கிறேன்னு ஒரு வார்த்தை வருதா பாரு... நமக்கெல்லாம் ராணிதான் சரி...''

அவன் மேலே பேசுமுன் செல்லக்கிளி சட்டென தோளில் சாய்ந்துக்கொண்டாள். விரலோடு விரல் பின்னிக்கொண்டு கண்மூடினாள். தமிழரசு உடல்சிலிர்த்து உயிர் மறந்தான்.

செல்லக்கிளியை வலக்கையால் இன்னும் அருகில் இழுத்து அணைத்துக் கொண்டான். மென்மையாக நெற்றியில் முத்த



மிட்டான். செல்லக்கிளி சிறகிழந்தவளாக அவனோடு ஒண்டிக்கொண்டாள்.

பேச்சற்றுப்போன மோன நிலை. எதையும் நினைக்காத மோகன நிலை. நினைவுகள் கலைந்து உலகமே அழிந்து போனது போல சிலுசிலுப்பு.

செல்லக்கிளியின் முகத்தை விரலால் வருடிய தமிழரசின் விரல் கழுத்தைத் தொட்டது. தன்னைக் கொஞ்சம் தளர்த்திக் கொண்டவன் சட்டைப் பைக்குள்ளிருந்து தங்கச்சங்கிலியை எடுத்தான். அவள் கழுத்தில் போட்டுவிட்டான். செல்லக்கிளி விழித்தாள்.

''இது செல்லக்கிளி என்கிற அழுமூஞ்சிப் பெண்ணுக்காக சட்டை பையிலேயே இருந்தது. தப்பா எடுத்துக்காதே...அதுக்கு நான் கடன் கொடுத்தேன். இனிமே கடனை வசூலிக்க வேண்டியது உன் பொறுப்பு.''

செல்லக்கிளி அழுதாள்.

''எதுக்காக அழறே! உன் பெயரை வெல்லக்கிளின்னு மாத்திடறேன். சரியாப்போகும். இந்தா. நான் ஒண்ணை மறந்திட்டு ஏதோ பினாத்திக்கிட்டு இருக்கேனே. என்னை காதலிக்கிறேன்னு சொன்னியா பார்த்தியா? சொல்லு... சொல்லு.. சொன்னியானா முக்கியமான ஒன்றை நான் செய்வேன். சீக்கிரம்.''

முகத்தை மூடிக்கொண்ட செல்லக்கிளி அவன் காதருகில் முணுமுணுத்தான்.. ''எனக்கு உங்களை கொஞ்சம் கூட பிடிக்கலை.''

தமிழரசு, ''அப்படியா கிளியே.. ரொம்ப மகிழ்ச்சி. இப்ப பாரு ஒன்று... இரண்டு... மூணு...''

மின் தூக்கி சட்டென நகரத் தொடங்கியது.



## 23

''**வா**ங்க.. வாங்க... கையும் ஓடலை... காலும் ஓடலை... உட்காருங்க... என்ன சாப்பிடறீங்க? நான் ஒருத்தி... உங்களுக்குக் கசாட்டாதானே பிடிக்கும். செல்லக்கிளி பனிக்குழைவே சாப்பிடமாட்டா... கேக் வாங்கிக்கிட்டு வரச்சொல்றேன்.''

லதாவின் கும்மாளத்தைப் பார்த்த தமிழரசுக்கு வேடிக்கையாக இருந்தது.

''இருங்க... இருங்க லதா மேடம் இப்படி துள்றீங்களே... என்ன செய்தி?''

''என்ன சார் நீங்க... தெரியாதவங்க மாதிரி கேக்கறீங்களே... நீங்களும், இவளும் ஒண்ணா வந்திருக்கிறதே சொல்லுதே...''

''ஒண்ணா வந்தோமா? யார் உங்கக்கிட்டே சொன்னது? இந்தம்மா ஆட்டோவில் வந்தாங்க. நான் பைக்கில் வந்தேன். போதுமா? ஒண்ணா வந்தோம்னு சொல்லி என் வயித்தெரிச்சலைக் கிளப்பாதீங்க உங்க சினேகிதி அப்படியே பாய்ந்திடுவாங்க...''

லதா தலையில் அடித்துக்கொண்டாள். ''ஏண்டி, உனக்குன்னு எப்படித்தான் ஒரு பயம் வருமோ தெரியலை. அவரோட



மகிழ்ச்சியா வண்டியில் உட்கார்ந்து வராம ஆட்டோவில் வந்திருக்கியே...''

செல்லக்கிளி முணகினாள். ''யாராவது பார்த்து மாமிகிட்டே சொல்லிட்டா... என்ன பண்றதுன்னு பயமா இருக்குடி...''

''மாமி தலையை வாங்கிடுவாளா? போடி பைத்தியக்காரி. காதலிக்கிறதே ஒரு 'கிக்குடி' அதிலயும் பைக்கில் போறது எவ்வளவு சுகம்... என்னையெல்லாம்.. எவனும் காதலிக்கலியேன்னு இருக்கு.. நீயானா கிடைச்ச வாய்ப்பை நழுவவிட்டுக் கிட்டிருக்கே... போவுது., இப்பவாவது பைக்கில் ஏறி கடற்கரைக்குப் போயிட்டுவா..''

செல்லக்கிளி பதில் சொல்லாமல் தயங்கும்போது, தமிழரசு ''வேண்டாம் லதா திருமணம் முடிஞ்சதுக்கப்புறம் போனா போச்சு. வீணா இந்த அழுமூஞ்சியை கிளப்பிடாதீங்க. நாங்க ரெண்டு பேரும் ஒண்ணாகணும்னு விரும்பினவங்க நீங்க, அதனால் தான் உங்களைப் பார்க்க வந்தோம்'' என்றான். லதாவுக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை.

''என் நட்புக்குக் கிடைத்த பரிசுன்னு மகிழ்ச்சியடைகிறேன், எனக்காக நீங்க ரெண்டு பேரும் பைக்கில் உட்கார்ந்து போங்க.''

அதற்கு மேலும் மறுக்க முடியாமல் செல்லக்கிளி ஏறிக் கொண்டாள். லதா கையாட்டிக் கொண்டே நின்றாள்.

''நான் வேகமாக வண்டி ஓட்டுவேன். பத்திரமா பிடிச்சுக்கலைன்னா விழுந்திடும் அபாயம் உண்டு. சரிதானே என் செல்லக்கிளி.''

தமிழரசின் கேலிக்கு செல்லக்கிளி தலையசைத்துவிட்டு அவன் தோளில் மெதுவாக சாய்ந்தாள். உடம்பு வெடவெடுத்தது.

''அடக்கடவுளே உடம்பு இப்படி வெடவெடக்குதே. நீ இத்தனை கிழவின்னு தெரியாமல் உன்னைக் காதலிச்சிட் டேனே.''

தமிழரசின் முதுகில் செல்லமாகக் குத்திய செல்லக்கிளி ''பாதையைப் பார்த்து ஓட்டுங்க'' என்றாள்.

''என்ன நீ கிளின்னு பேரு இருந்தா அப்பப்ப மூக்காலக் கொத்தறா மாதிரி, குத்திக்கிட்டே இருக்கியே. நம்மால் தாங்க முடியலைப்பா...''

செல்லக்கிளி வெட்கத்துடன் அவன் தோளில் பளீரென முத்தம் கொடுத்து விலகினாள்.

''இந்தா செல்லக்கிளி நான் வண்டி ஓட்டணுமா வேண் டாமா? என்னாம்மா திடீர் மகிழ்ச்சி...'' கேலி செய்துகொண்டே வண்டியின் வேகத்தை அதிகப்படுத்தினான்.

சிட்டுக்குருவிகள் போல அவர்கள் செல்வதைப் பார்த்த பலரில் ராணியும் ஒருத்தி. வியப்பில் ஒரு வினாடி மலைத்த ராணி கொஞ்ச நேரம் யோசித்தாள். ஆட்டோவில் வேகமாக எதிர்ப்புறம் சென்றாள். என்னவென்று சொல்லத் தெரியாத கோபம் உருவாகியது. ஆட்டோ ஓட்டுநரிடம் கோபத்தைக் காட்டினாள்.

இறங்கிய இடம் இத்தனை பிரமாண்டமாக இருக்கு மென்று அவள் எதிர்பார்க்கவில்லை. செல்லக்கிளி மீது காரணமில்லாமல் வெறுப்பு வந்தது.

'ஊமைக் கோட்டானாட்டம் இருந்துக்கிட்டு ஆண்களை இப்படி கத்தவைக்கிறாளே... அன்னிக்கு இந்த கிழவர் காரில் தேடி வரார்.. இன்னிக்கு பைக்கில் தமிழரசு இளிச்சுக்கிட்டுப்



போறான். அவளை ஏதாவது செய்ய வேண்டுமே...' ராணி உள்ளே வந்தாள்.

கைநிறைய பைகளுடன் மனம் நிறைய உல்லாசம் ததும்ப வீட்டுக்குள் நுழைந்தாள் செல்லக்கிளி. தம்பியைப் பார்க்கும் போது வெட்கம் வந்தது.

அக்காவின் முகத்தில் நீண்ட நாட்களுக்குப்பின் மகிழ்ச்சி யைக் கண்ட பிரபுவும், வாசுகியும் மனம் விட்டு சிரித்தார்கள்.

பைகளைப் பிரித்த செல்லக்கிளி இருவரையும் பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டாள்.

''உங்க ரெண்டு பேர்கிட்டேயும் பேசணும். நான் நினைச்சிருக்கறதை உங்கக்கிட்டே இப்ப சொல்றேன். நீங்க மனம்விட்டு என்னிடம் பேசலாம். என் முடிவு உங்களுக்கும் பிடித்தால் மட்டும் அதை மேற்கொண்டு செயலாக்கலாம். இல்லேன்னா. விட்டிடலாம்...''

அண்ணனும் தங்கையுமாக கண்சிமிட்டிக் கொண்டார்கள். பிரபு கேட்டான்.

''ஏன்க்கா... இத்தனை வாங்கிட்டு வந்தியே.. இனிப்பு ஏதும் இல்லையே?''

''அண்ணா! இதோ பால்கோவா இருக்கு'' குதூகலத்துடன் வாசுகி கத்திக் கொண்டே இனிப்பு பெட்டியைத் திறந்தாள்.

செல்லக்கிளி வெட்கத்துடன் தலைகுனிந்துக் கொண்டாள். 'நாளைக்கு தமிழரசிடம் விவரம் சொல்ல வேண்டும். மாமாவுக்கு கடிதம் எழுதி தெரிவிக்கணும். அவருடைய ஒப்புதல் இருந்தால் போதும். தாத்தா கொஞ்சம் கத்துவார்.

கவலைப்படாமல் நாம் கிளம்பிவிட வேண்டியதுதான் இனிமேலாவது தம்பியும் தங்கையும் சுகப்படட்டும்.'

உணவுப் பொட்டலத்தைப் பிரித்து சாப்பிடும்போது பேச்சும், சிரிப்புமாக வீடு அமர்க்களப்பட்டது.

வடிவு நொடித்தாள். ''பார்த்தியா கும்மாளத்தை... அன்னக் காவடியை பிடிச்சதுக்கே இப்படி ஆடறாளே.. நிசமாகவே பணக்காரனாக இருந்தால் ஊரே ரெண்டுபட்டுவிடும் போலிருக்கே.''

ராணி வாயிலிருந்த பகோடாவுடன் தலையசைத்தாள். ''இவளை இப்படியேவிட்டுவிடக்கூடாது. சித்தப்பா வரட்டும். அப்ப பேசிக்கறேன். காபி குடி ஆறிடப் போகுது'' ராணி காபியைக் கலக்கினாள்.



## 24

''உங்ககூட சண்டை போட வந்திருக்கேன் மாமா...'' தன் எதிரே வந்து நின்ற பிரபுவை நோக்கினார் நமச்சிவாயம்.

''என்னடாப்பா பெரிய மனுஷா.. என்மேலக் கோபம்?'' நான் எந்தத் தப்பும் பண்ணலியேடா ராஜா...?

''தப்பு பண்ணலேன்னு எப்படி நிச்சயமாச் சொல்றீங்க? நீங்க செய்யறது உங்களுக்கே சரின்னா நான் எதுவும் சொல்ல முடியாது.''

''கோபப்படாமல் விவரத்தைச் சொன்னாத்தானே கண்ணா... என்னன்னு எங்களுக்கும் தெரியும்.''



''அப்படி வாங்க வழிக்கு தமிழரசு மாமா உங்களைத்தானே அண்ணன்னு கூப்பிடறார். அப்ப அவருக்குத் திருமணம் செய்து வைக்க வேண்டியதும் நீங்கதானே! அத்தனை அக்கறை இருந்தா எங்கக்காவைப் பொண்ணு கேட்டு வரணும்னு தோணவே இல்லையா?''

நமச்சிவாயம் அயர்ந்து போனார். இருகரம் தூக்கி அவனை வணங்கினார். ''என் அப்பனே... என் ஐயனே... என் கடமையை சுட்டிக்காட்டினதுக்கு நன்றி சாமி, நாளைக்கே நல்ல நேரம் பார்த்து இந்த பசங்களையும் ஒட்டிக்கிட்டு வந்த பொண்ணு கேட்கறேன் போதுங்களா?''

''பஞ்சபாண்டவராட்டம் வந்து சேருங்க. நான் அக்காவிடம் சொல்லிடறேன். வரேன் மாமா.''

'ஆண் பிள்ளைகள் எத்தனை பேர் தீவட்டிகள் போலிருந்தாலும் பொறுப்பை எடுத்துச் சொல்ல ஆள் தேவைப்படுது... பெண்ணில்லாத வீடு எதுக்காகும்? மூதேவி குடிவர யாரைக் கேட்கணும்.

முதலில் இந்த திருமணத்தை முடிச்சிடணும்.. பெரிய தனி வீடா பார்த்துக்கிட்டு போயிடணும். எல்லோரும் ஒரு குடும்பமா நிம்மதியா இருக்கணும். பொண்ணு பார்க்கப் போகும்போது வெறும்பூவும் பழமும் மட்டும் கொண்டு போகக் கூடாது. புதுமையா ஏதாவது செய்யணும். பட்டுச் சேலை, தங்க நகை ஒன்றும் வைக்கணும், இந்தப் பயலைக் காணோமே.'

''என்னண்ணே. ஏகப்பட்ட யோசனை?'' ஜோசப் கேட்ட போது நமச்சியாயம் தலையசைத்தார். ''ஒண்ணுமில்லேடா... அந்தப் பொடியன் வந்து என்னை ஒரு வழி பண்ணிட்டுப்

போயிட்டான்'' பிரபு சொன்னதைக் கேட்டஜோசப்புக்கு வார்த்தையே வரவில்லை.

''ஆனால், செல்லக்கிளியின் சம்மதம் வேணுமில்லே? அவள் தான் பாறை மாதிரி இறுகிக்கிடக்கறாளே... எதுக்கும் தமிழ்கிட்டே ஒரு வார்த்தைக் கேட்டிடுவோம்...''

நமச்சிவாயத்துக்கும் அது சரியெனப்பட்டது. தமிழரசு வரும்போதே சிரிப்பும் துள்ளலுமாக வந்தான். பாட்டு உச்சக்குரலில் வழிந்தது.

ஜோசப் காதில் விரலை வைத்து அடைத்துக் கொண்டான். ''இந்த இராத்திரி நேரத்தில் ஏண்டா நீ இப்படி இம்சை பண்றே? தூங்கிக் கொண்டிருக்கும் உன் நண்பர்கள். அதுதான் கழுதைகள் எழுந்து வந்துவிடப் போகிறார்கள். கெஞ்சிக்கேட்டுக்கறேன். தயவுபண்ணி உன் ஊளையை நிறுத்துடா...''

தமிழரசு ஓடி வந்து அவன் சட்டையைப்பிடித்தான். ''என்ன சொன்னே? ஊளைன்னா? அடேய்.. என் செல்லக்கிளி எதிரில் இதை சொல்லியிருந்தே... மகனே உன்னைக் கொன்றிருப்பாள். இதே பாட்டை பத்து தரம் பாடச் சொல்லிக்கேட்டு ரெண்டு காதிலயும் நிரப்பிக்கிட்டுப் போறா தெரியுதா?''

''அண்ணே அவன் வாயிலேயே விசயம் வந்திட்டு. இத்தனை நாளா எங்கக்கிட்டே ஏண்டா மறைச்சே! அவளும் நீயும் பாட்டுக்கேட்கற அளவுக்கு ஒட்டிக்கிட்டீங்கன்னு எங்களுக்குத் தெரியவேணாமா?''

''எதுக்கப்பா சொல்லணும்! ஒரு பெண்ணை பார்க்கிறேன்னு சொன்னதுமே தொடையைத் தட்டிக்கிட்டு அத்தனை பேரும் பாய்ஞ்சுக்கிட்டு வந்தீங்க. என்னாச்சு? என் ஆசையெல்லாம்



நடக்கலை.. ஏமாந்தேன். இப்பதான் அவன் கொஞ்சம் என்னைப் பார்க்கறா. இதைச் சொன்னா எல்லோரும் எங்களைப் பார்க்கிறோம்னு வந்திடுவீங்க... அப்புறம் நான்தானே ஏமாறணும்... சொல்லமாட்டேன்.''

நமச்சிவாயம் சிரித்தார். ''ரொம்பதான் பேச்சு கத்துக் கிட்டே... போகட்டும் காலையில் அலுவலகத்தில் செல்லக் கிளிக்கிட்டே சொல்லி அரைநாள் விடுமுறை எடுத்துக்கிட்டுப் போகச் சொல்லு ஆறு மணிக்கு வரோம்னு சொல்லி அனுப்பிடு...''

''அப்பாடா.. இப்பவாவது எனக்குத் திருமணம் செய்ய ணுங்கற பொறுப்பு வந்ததே நானே சொன்னா எனக்கு வெட்கமா இருக்காதா?''

''வெட்கம். யாருக்கு? உனக்கா? எல்லாம் எங்க நேரம்டா... அண்ணே! இவன் திருமணம் முடிஞ்சதும் பெரிய வீடா பார்த்துக்கிட்டுப் போயிடலாம். தங்கச்சி கையால் சமைக்கச் சொல்லி வாய்க்கு ருசியா சாப்பிடலாம். எல்லோரும் நிம்மதியா இருக்கலாம். எப்படி என் யோசனை?''

ரவியும், ராமுவும் சிரித்துக் கொண்டே வந்தார்கள். ''நாலு நாளைக்கு முன்னாடி இவங்க ரெண்டு பேரும் பைக்கில் குழைஞ்சுக்கிட்டுப் போனதை நாங்க பார்த்தோமே...''

இப்போது உண்மையிலேயே தமிழரசுக்கு வெட்கம் வந்துவிட்டது. தலையணையில் முகம் புதைத்துக் கொண்டான்.



25

"என்ன சொன்னீங்க? இந்த வீட்டுப் பெண்ணை பொண்ணு கேட்டு வந்திருக்கீங்களா? இங்கே யாரும் அப்படிப்பட்ட பெண் இல்லையே... அந்நியரை வரச் சொன்னதாக சொல்லும் பெண்ணும் இல்லை..."

நமச்சிவாயம் ஒரு வினாடி திகைத்தார். கைகளில் வரிசைத் தட்டுகளுடன் உடன் நின்றிருந்த மற்றவர்களும் வியந்தார்கள்.

"இவர் என்ன சொல்றார்? செல்லக்கிளி வீடுதானே இது? இந்தக் கிழவர்தான் அவன் சொல்லும் தேவநாதனா? சிங்கப்பூரிலிருந்து எப்ப வந்தார்?"

அவருடைய எண்ணத்தைப் புரிந்தவர் போல தேவநாதன் பேசினார். "நீங்க செல்லக்கிளியைப் பத்தி தப்பா நினைச்சுக்கிட்டு வந்தவங்களா? அவளுக்கு இப்ப திருமணம் செய்கிற எண்ணம் எங்களுக்கு இல்லையே."

நமச்சிவாயம் பேச முனையும் போது தேவநாதன் கையசைத்து தடுத்தார். "நான் சொல்றதுல நம்பிக்கை இல்லையா? அவளையே கேட்டுக்கிட்டுப் போயிட்டா நம்புவீங்க இல்லே?"

முகம் இருள துரியோதனன் சபையில் அவமானப்பட்ட பஞ்சபாண்டவர் போல ஐவரும் நின்றிருந்தார்கள். செல்லக்கிளியின் ஒரே ஒரு வார்த்தையில்தான் அவர்களின் கவுரவமும் மானமும் ஊஞ்சலாடிக் கொண்டிருந்தது.

செல்லக்கிளி வந்தாள். முகம் கன்னி, அழுத விழிகளில் வாசனைப் பொடி பூசி மறைக்கப்பட்டிருந்தது.



"என்னம்மா செல்லக்கிளி, இவங்கள்ளாம் யாருன்னு தெரியலியே... உனக்கு தெரியுதா பாரு.. நீ வரச்சொன்னதா சொல்லிக்கிட்டு நிக்கறாங்களே... என்ன விசயம்? எதாக இருந்தாலும் நீயே தீர்த்து சொல்லிடு... எனக்கு வீட்டில் வீண் கூட்டம் பிடிக்காதுன்னு உனக்கு தெரியுமில்லே..."

"எனக்கு இவங்களையெல்லாம் தெரியாது. நடுவில் நிக்கறவரை மட்டும் எங்க அலுவலத்தில் பார்த்த நினைவு இருக்கு. நான் யாரையும் வரச்சொல்லலியே.. ஏன் சார். உங்களை நானா வரச் சொன்னேன்? என் நிம்மதியைக் கெடுக்கறதுக்காக தட்டு தூக்கிக்கிட்டு வந்திட்டீங்களா? போயிடுங்க சார் இல்லேன்னா மரியாதை போயிடும்.. வந்திட்டாங்க முட்டாளுங்க..."

அதற்குமேல் தாங்க முடியாத ஜோசப் பாய்ந்துவிட்டான். "இந்தா செல்லக்கிளி என்ன ரொம்ப பேசறே நீ... ஒழுங்கா திருமணத்துக்கு ஒப்புக்க.. இல்லே., என்ன நடக்கும்னு உனக்குத் தெரியாது. நான் ரொம்பக் கெட்டவன். இந்த தமிழு மாதிரி என்னையும் ஏமாந்தவன்னு நினைக்கறியா?"

நமச்சிவாயம் சட்டென அவனை இழுத்தார். "வேண்டாம் வா... நாமதான் இடம்புரியாமல் வந்துவிட்டோம். போகலாம்.."

போர்க்களமாகியிருக்க வேண்டிய அந்த இடம் பத்து நிமிடத்தில் அமைதியாகிப் போனது.

"சே, உன்னை என் அக்கான்னு சொல்லவே வெட்கமா இருக்கு. என்னாச்சு உனக்கு இப்படித்தான் அவங்களை மரியாதை இல்லாமல் பேசறதா? உதவிசெய்ய ஓடோடி வந்தவங்களை எட்டி உதைச்சிட்டியே,. நாம நல்லாயிருக்க

முடியுமா? அவர் வேண்டாம்னா எதுக்காக விழுந்து விழுந்து பழகின. இதைவிட எங்க ரெண்டு பேருக்கும் கொஞ்சம் நஞ்சு கொடுத்து கொன்னிருக்கலாம்.''

''இனிமேல் நான் உன்னை அக்கான்னு கூப்பிட மாட்டேன். உன்னோடு நான் பேசவும் மாட்டேன். அண்ணா இவங்களை இங்கே இருந்து போகச் சொல்லு...''

பிரபுவும், வாசுகியும் மாறி மாறி ஏசித் தீர்த்தார்கள். பதில் பேசாமல் ஊமையாக நின்றாள் செல்லக்கிளி. கண்களில் மட்டும் நீர்ப் பிரளயம் நிற்கவில்லை.

''அழுது மாய்மாலம் செய்ய வேண்டாம். தயவு செய்து போயிடு.''

செல்லக்கிளி தள்ளாடும் நடைபோடு வீட்டைவிட்டு வெளியே வந்து திண்ணையில் உட்கார்ந்தாள்.

''செல்லக்கிளி இங்கேயா இருக்கே. வீட்டுக்குள் வந்து பட்டு சேலை கட்டிக்கொள். நகைக் கடைக்குப் போய் வரலாம். அவளுடைய பழைய நகை எதுவும் உனக்கு வேண்டாம். புதுதினசில் வாங்கிடலாம். என்ன முகமெல்லாம் வாடியிருக்கு. இந்த பசங்க ஏதும் பேசிட்டுதுங்களா? சின்னதுங்கதானே? நாளானா சரியாகிவிடும் நீ வா...''

உரிமையாகக் கையைப் பிடித்து இழுத்த தேவநாதனைப் பார்த்த பார்வையில் அக்கினி எரிந்தது.

''இப்ப மகிழ்ச்சிதானே? உங்க மனசு குளிர்ந்து போச்சா? இன்னும் என்ன பாக்கி இருக்கு? அதையும் தூக்கி என் தலையில் போடுங்க. எல்லாருக்கும் தலையை கொடுத்திட்டு நான் எனக்குள்ளே எரிஞ்சு போறேன். நகையும் வேண்டாம் ஒரு இழவும் வேண்டாம். என்னை விட்டிடுங்க...''



செல்லக்கிளியின் குரல் ஆவேசத்தில் ஆரம்பித்து அழுகையில் குழறியது. தேவநாதன் கேலியாகப் பார்த்தார்.

''அப்படிப்போடு.. என்ன நினைச்சுக்கிட்டு பேசறே நானா உன்னைக் கெஞ்சினேன்! நீதானே ஒப்புக்கிட்டே. இப்ப வந்து மாத்தி பேசறியே... எனக்கொண்ணும் இதனால் கெடுதல் இல்லை. உனக்குத்தான் கேடுவரும். கவனமா இரு...''

வடிவு ஓடி வந்தாள்.

''ஏண்டி எதையாவது பேசி என் வயத்தெரிச்சலைக் கொட்டிக் கறே? வாடி உள்ளே. உன் தலையில் எதுவும் விடியலைடி. எல்லாம் என் தலையில்தான் விடிஞ்சிருக்கு. உனக்கென்ன இந்த மாளிகைக்கு மகாராணியா கொத்துசாவி குலுங்க நடக்கப் போறே. கிட்டத்தட்ட 2 கோடி பணமும், நகையும் இருக்கு. நீ உன் வாழ்வை சரி பண்ணிட்டே. என் நிலையை நினைச்சுப் பார்த்தியா?''

''எல்லாம் இருக்கு... கொஞ்சம் நஞ்சும் இருக்கான்னு பார்த்து சொல்லுங்க... நான் ஒரேயடியா போய் சேர்ந்திடறேன்.'' செல்லக்கிளி குமுறினாள்.



## 26

''காதலை ஒரு பொழுதுபோக்கா நினைக்கறவள் கிட்டே ஏமாந்திட்டியே தமிழ்...''

''சும்மா இழுத்துப் போத்திக்கிட்டு இருக்கிற பொம்பளையை நம்பக் கூடாது.''

''எப்பப் பார்த்தாலும் அழுவற அழுமூஞ்சியை கிட்டே சேர்க்கக்கூடாது. எப்படி நடிச்சிட்டா அவளை... என்ன செய்யறேன் பாரு... ரொம்ப அழகுன்னு நினைப்பு... நாளைக்கு மூஞ்சில் திராவகத்தை ஊத்தலேன்னா நீயே கேளு.''

மூன்று திசைகளிலிருந்தும் தன்னை நோக்கி வந்த வார்த்தைக் கணைகளைத் தமிழரசு வாங்கிக் கொண்டிருந்தான். வாய்க்கு வாய் பதில் பேசும் அவன் இன்று ஊமையாகிப் போனான். செவிடனாக உட்கார்ந்து கிடந்தவனைப் பார்த்த மூன்று நண்பர்களும் அருகில் வந்தார்கள்,

''ஏய் தமிழ் என்னவோ மாதிரியாகி போயிட்டியே.. என்ன விசயம்? விடுப்பா ... அவள் என்ன பெரிய இவளா? அருமை தெரியாதவள். நமக்கு அவள் வேணவே வேணாம்?''

''இவள் இல்லாட்டி என்ன தமிழ்.... லட்டு லட்டா பொண்ணுங்க நான் பார்க்கிறேன் உனக்கு... கிடக்கறா நன்றி கெட்டவள். நீ விடு...''

''நல்லவேளை திருமணத்துக்கு முந்தியே இவள் கதை தெரிஞ்சுது... அதுக்கப்புறம் தெரிஞ்ச நாம அவதிப்படறதை விட இதுமேல் இல்லையா?''

குனிந்த தலைநிமிராமல் உட்கார்ந்திருந்த தமிழரசைப் பார்க்கும் போது அவர்களுக்குத் தாங்கமுடியவில்லை. திரும்பவும் ஒரு பாட்டம் பாடத் தொடங்கினார்கள்.

நமச்சிவாயம் இப்போது பேசினார். ''டேய்.... பசங்களா நிறுத்துங்கடா.... அவனே மனம் நொந்து கிடக்கறான். நீங்க வேற அதை அதிகமாக்கறீங்களே... இங்கே வேகம் கூடாதுடா... விவேகம்தான் வேணும். காதலிக்கத் தயங்கினவன் அவன்.



உதவி மட்டும் கேட்டு பணத்தைத் திருப்பித் தரேன்னு சொன்னவள். தம்பியையும், தங்கையையும் காப்பாத்தறதுக்காக திருமணத்தை வெறுத்தவள்: நம் எல்லோர் மீதும் அன்பும் மரியாதையும் கொண்டவள். அப்படிப்பட்டவள் இப்படி பேசுகிறாள் என்றால் அதன் காரணம் என்ன?

நாம் வருவதற்காக வெட்கமும் சிரிப்புமாக காத்திருக்க வேண்டியவள் வீங்கின மூஞ்சியும் அழுத கண்ணுமாக ஏன் இருந்தாள்? அந்தக் கிழவன் எப்படி அந்த நேரம் அந்த இடத்தில் உட்கார்ந்திருந்தான்? அதையெல்லாம் யோசிக்க வேணாமா?''

ஜோசப், ''ஆமாம், பட்டிமன்றம் நடக்குது. தலைப்பு தேர்ந்து எடுக்கறீங்களா? அவளை ரெண்டு உதைக் கொடுத்து இழுத்துக் கிட்டு வரதுக்கு இல்லாமல் என்னமோ தடவறீங்களே...'' என்றான் கோபமாய்.

''இருடா.... கோபக்கார பையா.... எனக்கென்னவோ எங்கோ தப்பு நடந்திருக்குன்னு தோணுது. அதைக் கண்டுபிடிக்கறது மேலுன்னு நம்பறேன்...''

தமிழரசு நிமிர்ந்தான். ''எனக்கும் அதுதான் தோணுது அண்ணே.,. அந்தப் பொண்ணு ரொம்ப நல்லவள். ஏதோ நடந்திருக்கு. அவளுக்கு அப்படி எல்லாம் பேசணும்னு எதுவும் கட்டாயமில்லை. அவளை இப்படி பேச நிர்பந்திச்ச விசயம் என்னன்னு கண்டுப்பிடிக்கணும்..''

ரவி உதட்டைப் பிதுக்கினான், ''நாங்க என்ன சொன்னாலும் உனக்கு ஏறப் போறதில்லை. எப்படியோ போ... பெண்பித்தம் தலைக்கு ஏறிக்கிடக்கு...''

ராமு முகத்தைத் திருப்பிக் கொண்டான். ஜோசப் ''இன்னிக்குத் தேவையில்லாமல் விடுமுறை வாங்கிக்கிட்டு வந்தேன். இன்னொரு நாளைக்கு அதிகப்படி வேலை செய்து ஈடுகட்டணும். சும்மாவா சொன்னாங்க. பெண் எனும் மாயப் பிசாசுன்னு. இனிமேல் எவனாவது பொண்ணு பார்க்கவான்னு என்னைக் கூப்பிடட்டும். என்ன நடக்கும்னு தெரியுமா கொலை விழும். நான் சிறைக்குப் போனாலும் பரவாயில்லைன்னு வெட்டிக் கூறு போட்டிடுவேன்'' என்றபடி படுத்துக் கொண் டான்.

நமச்சிவாயம் மேலே பேசாமல் படுத்து விளக்கை அணைத்தார். தமிழரசு மட்டும் வேறு கோணத்தில் சிந்தித்தான்.

'ஏன் அப்படி பேசினாள்? இந்த விசயத்திலே அவசரப்படக் கூடாது. திரைப்படக் கதாநாயகன் போல கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று திடீர் முடிவெல்லாம் எடுக்கக் கூடாது.

நாமெல்லாம் மனிதர்கள் சதையும் இரத்தமும் இணைந்த எலும்புக் கூடுகள். அதனால் கற்பனை கதாபாத்திரங்கள் போல நடந்துவிடக்கூடாது. செல்லக்கிளிக்கு என்ன துன்பம் என்பதை கண்டறிந்து அவளையே மணக்க வேண்டும். நாளைக்கு அலுவலகத்தில் கேட்டுவிட வேண்டியதுதான்..' தமிழரசு தூங்காமல் கிடந்தான் விடியலை நோக்கி.

''வாய்யா.... தமிழரசு... பார்த்தியா உன் வேலையை என்கிட்டேயே காட்டிட்டியே.... உன் காதலுக்கு உதவி செய்தது நான். உன்னைப் பெண் பார்த்துவிட்டு வரச்சொல்லி விடுமுறை கொடுத்தது நான். ஆனால் உங்காளு... அதான்யா செல்லக்கிளி வேலையைவிட்டு நிக்கறதை மட்டும் என்கிட்டே சொல்ல மாட்டே இல்லே!



இப்படி திடுதிப்புன்னு நின்னுட்டா என்னய்யா அர்த்தம்? நம்ம அலுவலகத்தில் வேலை செய்யறதில் என்னய்யா சிரமம் இருக்கப் போகுது? உன் பேச்சைக்கேட்டு பத்தாயிரம் பாதுகாப்புத் தொகைக்கு நான் முன்னே நின்னேன். முதலாளிக்கு இப்ப இந்த விசயம் தெரிஞ்சா என்னைக் குடைஞ்சிடுவாருய்யா...''

மேலாளரின் நியாயமான கோபத்தைக் கண்ட தமிழரசு அதிர்ந்து போனான். தன் வேதனையைக் கண்டால் மேலாளர் ஊழித்தாண்டமே ஆடினாலும் ஆடிவிடுவார். தன் வேதனைத் தன்னோடு. முகத்தை இயல்பாக வைத்துக் கொண்டான்.

''அந்தப் பொண்ணு ஏதோ விளையாட்டுக்கு எழுதி அனுப்பி இருக்கும். பேசாமல் கிழிச்சுப் போடுங்க சார். ஒரு நான்கு நாளைக்கு விடுமுறை கொடுங்க... புண்ணியமாய் போகும். அடுத்த வாரம் எல்லாத்தையும் பேசிக்கலாம் சார்.... நான் ஏகப்பட்ட குழப்பத்தில் இருக்கேன்... எதுவும் புரியலை...''

''பின்னே திருமணம்னா சும்மாவா? கெட்டிக்காரப்பசங்க, அத்தனை பேரும் முட்டாளாகறது கெட்டி மேளம் கொட்டும் போதுதான். திருமணம் வேண்டாண்டா... செய்துக்காதீங்கன்னு கதறினாக்கூட எவனும் கேட்க மாட்டேங்கறாங்களே....''

''நீங்க சொன்னா எவன் கேட்பான்?''

''அனுபவம் பேசுதுப்பா.... அதுக்காவது மதிப்பு கொடுங்கய்யா...''

''சார்.... காலையில் வந்ததுமே நம்மக் கொஞ்சலையும் குலாவலையும் வைச்சுக்கணுமா? தலைவலி மண்டையை

பிளக்குது சார். நான் இன்னிக்கு ஓய்வு எடுத்துக்கட்டுமா- தயவு பண்ணுங்க சார்...?''

மேலாளர் அவனைப் பார்த்த பார்வையில் பரிவு மிகுந்தது. சரியெனத் தலையசைத்தார்.

பைக்கில் ஏறி மனம்போன போக்கில் சுற்றினான். செல்லக்கிளி வீட்டுப் பக்கம் போகப் பிடிக்கவில்லை.

பனிமலர் பனிக்குழைவு விற்பனை நிலையம் வழியாகப் போன போது லதாவின் நினைவு வந்தது.

இவளை எப்படி மறந்து போனோம்? செல்லக்கிளி இப்போது மாட்டிக்கொண்டிருக்கும். அந்த சிறையிலிருந்து விடுவிக்க லதா ஒரு துணை ஆகுமே... சுலபமாய் அதற்குள் நுழையவும் அவள் ஒருத்தியால் மட்டும் தான் முடியும்.

தமிழரசைக் கண்டு முகம் மலர வரவேற்ற லதா அவன் கூறியவற்றைக் கேட்டு அதிர்ந்தாள்.

''நிச்சயமாக இது செல்லக்கிளி தானாகப் பேசி இருக்க மாட்டாள் சார். இதில் என்னவோ இருக்கு. நாளைக்குக் காலையில் நான் போய் பார்க்கிறேன்...''

''ஏன் இன்னிக்கே போகமாட்டீங்களா? இது உயிர்ப் பிரச்சினைங்க... இப்பவே போறீங்க. மேலாளர்கிட்டே ஒரு வார்த்தை சொல்லிவிட்டு வந்து ஏறுங்க வண்டியில்... சீக்கிரம்...''

லதாவுக்கும் பரப்பரப்பு தொற்றிக்கொள்ள வண்டியில் ஏறிக் கொண்டாள்.





27

''ஏண்டி லதா... இல்லாத வழக்கமா என்னது வீட்டுக்குத் தேடிக்கிட்டு வந்திருக்கே? என்ன விசயம்? உன் சிநேகிதிக்குத் திருமணம் நிச்சயம். ஆகிட்டுது. மாப்பிள்ளை யார்னு நினைக்கறியா? எங்க சித்தப்பாதான். ஒண்ணுக்குள்ளே ஒண்ணா போயிடும் என்று தான் இந்த ஏற்பாடு.''

''இந்த நகையெல்லாம் பார்த்தியா? கூரைச்சேலை மட்டும் ஐம்பதினாயிரத்துக்கு எடுத்திருக்கார் சித்தப்பா. அடிச்சாலும் இப்படி அதிருஷ்டம் அடிக்கணும்...''

வடிவு வாய் ஓயாமல் புலம்பிக்கொண்டு இருக்க லதா அயர்ந்து போனாள். இது மிகப் பலமான இக்கட்டு. இதிலிருந்து செல்லக்கிளி மீள முடியுமா? முயன்று பார்ப்போம்.

செல்லக்கிளிக்கெனத் தனியறை ஒதுக்கப்பட்டிருந்தது. அறை முழுவதும் வைர, தங்க நகைகள் பட்டுச் சேலை குவியல் கண்கள் கூசின. லதா ஒரு நிமிடம் நகர முடியாமல் நின்று விட்டாள்.

'ஒரு வேளை செல்லக்கிளி மனம் மாறிவிடும் வாய்ப்பு வந்துவிட்டிருக்குமோ....மறுகணம் அந்த எண்ணத்தை மாற்றிக் கொண்டாள்.

அவள் அப்படிட்டவளாக இருந்திருந்தால் தேவநாதன் அவளைக் கேட்ட முதல்வினாடியே தலையசைத்து ஒப்புக் கொண்டிருப்பாளே... இதில் என்ன இருக்கிறது என்பதை கவனமாக பார்க்க வேண்டும். செல்லக்கிளி அழுத்தக்காரி... எப்படி அவளிடம் விசயத்தை வரவழைப்பது? தொண்டை அறுத்தாலும் வெளியே சொல்லமாட்டாள்,,, பார்க்கலாம்.

ஏதாவது சின்ன விவரம் சிக்கும். அதை வைத்துக் கொண்டு முடித்துவிட வேண்டியதுதான்...'

வடிவு செல்லக்கிளியிடம் தனியாக ஏதோ பேசுவது கேட்டது. ''கவனமாக பேசுடி... ஏதாவது சொல்லிட்டேன்னு தெரிஞ்சுது.. உன்னை விடமாட்டேன். வராதே போயிடுன்னு சொன்னா அவளுக்கு ஏதாவது சந்தேகம் வரும்னுதான் உள்ளே விட்டேன். புரியுதா?''

செல்லக்கிளி வெற்றுப் பார்வை பார்த்தாள். வடிவைப் பார்க்கும் போதெல்லாம் பற்றி எரிவது போலிருந்தது. இவள் உறவா? தன்னுடைய வாழ்வுக்காக மற்றவரை பலி கொடுக்கிறாள். அதையும் நியாயப்படுத்த எப்படித்தான் முடிகிறது.

இவள் சொன்னதை நம்பும் விதமாகத்தானே எல்லாம் கண்முன் காட்டப்பட்டது. தேவநாதன் தூக்கி எறியும் கரன்சி நோட்டுக்களுக்காக மட்டும்தான் அலைவாள் என்று இருந்தேன். இப்படிப் பஞ்சமா பாதகத்திற்கும் உடந்தையாகிப் போயிருக்கிறாளே...

'நான் எப்பேர்ப்பட்ட பாவி... தமிழரசையும் அவர் நண்பர்களையும் எப்படி அவமானப்படுத்தினேன். திருமணம் செய்வது வேறு... நன்றி கெட்டத்தனமாகப் பேசுவது... சிந்திப்பது வேறு.. அப்படி முகம் முறித்து மனம் முறிக்க என்ன தான் அவசியம்? என் கையாலாகாத்தனத்திற்கு ஒரு சப்பைக் கட்டு...பாவம் தமிழரசு... சிட்டுக்குருவி போல உல்லாசமாகப் பறந்து திரிந்தவர்... அவரை திருமணம் செய்துக் கொள்கிறேன் என்று சொல்லி ஏமாற்றினது போல செய்துவிட்டேன்...



மருத்துவமனையில் அவர் செலவு செய்த பணத்தைத் திருப்பிக் கொடுக்க முடியும். அவர் காட்டின அன்பை, பரிவை, ஆதரவை, மனிதாபிமானத்தை எப்படி ஈடுசெய்ய முடியும்?

இந்த நன்றிகெட்ட செயலுக்கு நான் மறுபிறவி இருந்தால் புழுவாய், புல்லாய், பூண்டாய் சேற்றில் உருளும் பன்றியாய் பிறக்க நேரிட்டாலும் தவறென்ன? பாழாய்ப்போன இந்த வெள்ளைத்தோலும், உயரமும், அழகும் தானே என் வாழ்வை திசை திருப்பிவிட்டன. நானா கேட்டேன். இந்த அழகை? எனக்கு எதற்கு இந்தப்பாடு! சாதாரணமாக இருந்திருந்தால் நானும் மற்ற பெண்களைப் போல வாழ்வை அனுபவித்து மகிழ்ந்திருப்பேன். இனி என்ன செய்வது? இப்படியே இந்த மாளிகையின் அறை ஒன்றில் மக்கி மண்ணோடு மண்ணாகிப் போக வேண்டியதுதான். கிழவனின் காம இச்சைக்கு இந்த உடல் இரையாகி, அழுகி நாறவேண்டியதுதான்.

செல்லப் பெண்ணாக வளர்ந்து செல்லரித்து உளுத்தப் போகவேண்டிய நிலை இருந்திருக்கிறது. உடன் பிறந்த குழந்தைகளுக்கு நான் எதைச் சொல்லி புரியவைப்பேன்... புரிந்துக் கொள்ளும் வயதா அவர்களுக்கு...'

அவளை மேலே சிந்திக்கவிடாமல் லதா உள்ளே நுழைந்தாள்.

''வாழ்த்துக்கள் செல்லக்கிளி... திருமணம் நிச்சயமாகி இருக்காமே... பெரிய கோடீசுவர வாழ்வு உனக்கு கிடைத்தது பற்றி எனக்கு மிகவும் மகிழ்ச்சி. இனி ஏதும் தேவை என்றால் தாராளமாக உன்னைத் தேடி வரலாம். உன் மாமியின் முகத்தில் எத்தனை மகிழ்ச்சி தெரியுமா?''

லதாவின் குத்தல் மொழிகள் தனக்கு இல்லை என்பது போல பிரம்மமாய் உட்கார்ந்திருந்தாள் செல்லக்கிளி. மேலும் பேச வாயெடுத்த லதா நிதானித்தாள்.

''ஏய் ... என்னாச்சடி.... என்கிட்டே சொல்லக்கூடாதா?''

''சொல்லவேண்டியவர்கிட்டேயே சொல்ல முடியாததை உனக்கு சொன்னால் மட்டும் எல்லாம் நடந்துவிடுமா? விட்டுவிடு லதா.. என் தலையெழுத்து எப்படியோ அப்படியே நடக்கட்டும்...''

லதாவுக்கு கோபம் வரவில்லை. மாறாக வேதனை மிகுந்தது. ''செல்லக்கிளி இப்படிவிட்டது போல பேசினால் எப்படியடி? அவன் கிழவன். இன்று இருந்து நாளையே மாண்டு போகிறவன். நீயோ வாலைக்குமரியடி... உன் வாழ்வில் இனிதானே வசந்தம் வரவேண்டும். இந்த வாலைப் பருவம்தானே வாழ்வின் உன்னத பருவம். மனம் விட்டுப் பேசேன். உனக்கு உதவ நாங்கள் இருப்பதை மறந்துவிட்டாயா?''

செல்லக்கிளி உடைந்து அழுதாள்.

''வாலைக் குமரியடின்னு நீங்க எடுத்துச் சொன்னதற்குக்கூட செல்லக்கிளி கதறி அழுதாளா?'' தமிழரசு கேட்டான். முகத்தில் சிந்தனைக் கோடுகள் லதா பெருமூச்சு விட்டாள்.

''அதையேன் கேட்கறீங்க? அவள் உடம்பில் ஒரு சொட்டுத் தண்ணீர் கூட இல்லை என்பது போல அழுது உடம்பே வற்றிப் போய்விட்டாள்...''

நமச்சிவாயம், ''இந்தக் காலத்தில் இப்படி பொண்ணு இருக்கறது வேடிக்கையா இருக்கு. அதது தன் வழியைப் பார்த்துக்கிட்டு போகுது. இது என்னடான்னா வந்தது போனதெல்லாம் இழுத்துப் போட்டுக்கிட்டு வேதனைப் படுதே.. என்ன தமிழ். பேசாமல் அது வழியில் அதை விட்டிட்டு உன் வேலையை நீ பாரு... வேற என்ன செய்யறது?'' என்றார்.



''என்னண்ணே, நீங்களே இப்படி சொல்றீங்க...?''

''அப்பறம் என்னடா.. நாளைக்குச் சாகப் போகிறவனை கட்டிக்கறேன்னு அடம்பண்றவளை நாம போய் பிடிச்சுக்க முடியுமா? எதுக்கு இந்த பொருந்தாத திடீர் திருமணம்னு சொன்னாத்தானே நமக்கு ஏதாவது வழி கிடைக்கும்?''

தமிழரசு சட்டென முகம் மலர்ந்தான். ''கிடைக்கும். ஒரே ஒருத்தராலதான் இதற்கு வழி கிடைக்கும். செல்லக்கிளியின் மாமா சன்னாசி அவரை எப்படியாவது சந்திக்கணும். அப்புறம் என்ன? காரியம் சுலபமாக முடியும்.''

''அந்த ஆளை எங்கேடா தேடிப்போவே? போனாலும் அந்தாள் உனக்கு உதவணுமே...''

''கேட்டுப் பார்க்கிறேன், இல்லேன்னா காலில் விழறேன். அதுவுமில்லேன்னா குண்டுக்கட்டாய் தூக்கிவிட்டு வந்திடுறேன். விடுங்க கவலையை...''

லதா விடைபெற்ற பின் திட்டம் போடப்பட்டது. சன்னாசியின் முகவரிக்காக பிரபுவைப் பிடிப்பது என்று முடிவு செய்யப்பட்டது.

தீர்மானமான முடிவோடு தமிழரசு பைக்கில் ஏறினான். பிரபுவை பிடிப்பது வெகு சுலபம். ஆனால் அவன் வாயிலிருந்து வார்த்தை வரவழைப்பது எத்தனைக் கடினம் என்பதைக் கண்ட தமிழரசு மலைத்தான்.

இதமாகப் பேசினான். இங்கிதமாக நிலையை எடுத்துச் சொன்னான். செல்லக்கிளி ஏதோ இக்கட்டில் மாட்டிக் கொண்டதை புரிந்துக் கொள்ள வேண்டும் என்பதையும் விளக்கினான்.

''நீ ஆண்பிள்ளை வெறும் கோபமும், வேகமும் மட்டும் கொண்டு செயல்படக்கூடாது. வெளி இடத்துக்கு உன்னால் சுலபமாகப் போக முடியும். உங்க அக்கா பெண் பிள்ளை. வீட்டுக்குள் அவங்களை முடக்கி வைச்சிருக்காங்க. எந்தவிதமான வேலையும் செய்ய முடியாது. சிந்திக்கவும் முடியாது கொஞ்சம் புரிந்துக் கொள் பிரபு. உன்னைத் தவிர உன் அக்காவுக்கு யார் இருக்கா?

அக்காவிடம் அன்பாய் பேசி என்ன காரணம் என்பதை விசாரித்துக் கொண்டு வா.. அது தெரிந்த பிறகு நான் நடவடிக்கை எடுத்து உன் மாமாவின் உதவியோடு அவங்களைத் திருமணம் செய்து கொள்கிறேன். நாமெல்லாம் மகிழ்ச்சியாக வாழப் பிறந்தவங்க. இவங்களோடு நம் வாழ்வு முடிந்து போகுமா? இவங்களை உதறிவிட வேண்டும்.

வானத்தை சாலையாக்கி சொர்க்கத்துக்கே போகலாம் கண்ணே.. அதுக்கு கொஞ்சம் அறிவும், சிந்தனையும்தான் வேணும். போ.. அக்காவிடம் பேசி விவரம் தெரிஞ்சுக்கிட்டு வா..''

''அக்கா... என்னையும் தங்கச்சியையும் மன்னிச்சிடுக்கா.. ஏதோ முட்டாள் தனமா உன் கூட சண்டை போட்டுட்டேன். உன் காலில் விழறேன். உன் மனம் புரிஞ்சும் கூட தப்பு பண்ணிட்டேன்க்கா. எங்களுக்காக வாழ்ந்துக்கிட்டிருக்கிற உன்னை திட்டினேனே. என்னை அடிச்சிடு. இல்லேன்னா உன் கையாலேயே கொன்னுடுக்கா...?''



பிரபு மடியில் விழுந்து அழுதபோது செல்லக்கிளி உணர்ச்சிவயமானாள். ஒரு வாரம் சென்று பிரபு பேசினபோது அவளுக்கு பதில் பேச வாய் வரவில்லை.

''சாப்பிடாமலே இருக்கியாமேக்கா. இந்த பாலையாவது குடிக்கா. நாங்க ரெண்டு பேரும் இருக்கும்போது நீ எதுக்கு கவலைப்படறே?''

''நாம நமக்காகத்தான் வாழணும் அக்கா. அடுத்தவங் களுக்காக வாழணும்னு நம்ம வாழ்வை ஈடுவைச்சா காலமெல்லாம் துன்பம்தானே படணும்? நீ எதுக்காக இந்த மாமிக்கும், கிழவனுக்கும் பயப்படறே? நாம இங்கே அண்ட வந்தவங்கதான். இவங்களுக்கு அண்டைக் கொடுத்து தாங்க வரலை. நீ எதுக்காக இந்த அறைக்குள் அடைஞ்சுக் கிடக்கறே? வா.. எழுந்திரு.. நம்ம வழியைப் பார்த்துக்கிட்டு போகலாம்.

கிழவன் என்ன செய்திடுவான் பார்க்கலாம். நாம திருடினோமா இல்லை சட்டவிரோதமானக் காரியம் செய்தோமா? கொலை செய்திட்டோமா? எழுந்திருக்கா...''

செல்லக்கிளி வாயடைத்துப் போனாள். பதினைந்து வயதே நிறைந்த தம்பி பேசியது எல்லாம் நிசம்தான். ஆனாலும் சட்டென உதறிவிட்டு ஓட முடியுமா? நிலமை அப்படி இல்லையே....

அன்பும், பாசமுமாய் அவன் தலையைக் கோதிவிட்டாள். ''ஏன் பிரபு... அவரைப் பார்த்தியா?'' என்று கேட்டாள்.

''ஆமாம் அக்கா... உனக்கு எப்படித் தெரியும்!''

''இப்படியெல்லாம் அறிவுபூர்வமாக சிந்திக்க அவர் ஒருத்தரால் மட்டும்தான் முடியும். ஆனால் இப்ப காலம் கடந்து போச்சு பிரபு...''

பிரபு எழுந்தான். ''இந்த மாதிரி பேசறதை முதலில் விட்டுவிடுக்கா. என்னதான் நடந்தது? பெண் பார்க்க வராங்கன்னு சொல்லிட்டு நீ மகிழ்ச்சியா வீட்டுக்குள் நுழைஞ்சே, அதுவரை தான் எனக்குத் தெரியும்.

ஆறு மணிக்கு அவங்க எல்லாம் வர்றதுக்குள்ளே என்னதான் நடந்தது... நடுவில் இருந்த ஐந்து மணி நேரத்தில் என்ன நடந்தது? நம் வாழ்வின் போக்கையே திசை திருப்பும் அளவுக்கு என்ன நடந்தது?

உன்னுடைய திடீர் முடிவினால் நீ மட்டுமா பாதிக்கப் போறே? உன்னோடு நாங்க ரெண்டு பேரும் பாதிக்கப்படப் போகிறோம். நமக்குத் துளியும் சம்மந்தம் இல்லாத தமிழரசும் பாதிக்கப்பட்டு விட்டிருக்கார். உன்னுடைய பதிலில் எத்தனை உயிர்கள் ஊஞ்சலாடிக் கொண்டிருக்கின்றன என்று நீ உணரவே இல்லையா? சொல்லு. மனதைத் திறந்து பேசிடு... மறைக்காதே.. தயவு செய்து சொல்லு...'' பிரபுவின் கெஞ்சல் பாறையாகிக் கிடந்த செல்லக்கிளியை அசைத்தது. ஆனால் வாய்திறக்க ஏனோ தயக்கமாக இருந்தது. மனதில் ஒரு துன்பம் மேகமாய் கவிழ்ந்து மூடியது.

'பிரபு சொல்வது போல என் வாழ்வை இழந்து மற்றவருக்காக விட்டுக் கொடுத்து வாழ்ந்துவிடுவதால் மட்டும் என் தியாகத்தை யாராவது பாராட்டப் போகிறார்களா?

பணத்தாசைப் பிடித்துதான் வயதானவரைத் திருமணம் செய்கிறேன் என்றுதானே பேராகும்? என்னைப் பற்றி யாராவது கவலைப்படப் போகிறார்களா? இளவயதிலேயே விதவையாகி விட்டால்கூட இந்த பணத்தை வைத்துக் கொண்டு நான் என்ன செய்வது... நான் செய்து கொடுத்த சத்தியம் என் வாயைக் கட்டுதே...'

செல்லக்கிளி இரத்தக் கண்ணீர் வடித்தாள்.





28

''என்னது.. ஐம்பதாயிரத்துக்கு ஒரு சேலை வாங்கியிருக்காரா?''

''ஆமாம்மா... அதையேன் கேட்கறீங்க. வைரத்திலயும், பவுனிலும் இழைச்சுச் கொட்டிக்கிடக்கற நகைக்குவியல் ஒரு பக்கம் பட்டுச் சேலைக் கடல் மறுபக்கம்... நட்டநடுவில் அந்த மூதேவி இல்லை... அவதாம்மா செல்லக்கிளி மூஞ்சைத் தூக்கி வைச்சுக்கிட்டு... முசுமுசுன்னு அழுதுகிட்டிருக்கா...''

''அடிப்பாவி அள்ள அள்ளக் குறையாத கடலைப் போய் வேண்டாம்னு அழுவறாளே... இவள் எல்லாம் ஆயிரம் ரெண்டாயிரம் ரூபாய்க்கு சம்பளம் வாங்கி இருபதாம் தேதிக்கு அஞ்சுக்கும் பத்துக்கும் அலையத்தான் லாயக்கு. இவள் குபேரனுக்கு தகுதியானவளா? அதிருஷ்டம் யார் யார் வீட்டுக் கதவையெல்லாம் தட்டுது.. நம் வீட்டுக் கதவைக் கழுதைக்கூட தட்டமாட்டேங்குது. ஆளு அழகா இருந்து என்னடி பயன்? புத்தியா இருக்கத் தெரியலியே...''

''என்ன என்னம்மா செய்யச் சொல்றே? கடைசியில் தமிழுதான் மாட்டுவான் போலிருக்கு...'' ராணியின் குரல் வெறுப்பில் ஏறி இறங்கியது.

ராஜாம்பாள் கொஞ்ச நேரம் யோசித்தாள்.

''எதையாவது முணகிக்கிட்டு இருக்காதே... இப்பக்கூட காரியம் கெட்டிடலை.. கிழவன் இன்னும் தனியாள்தான். என் கணக்கு மட்டும் சரியா இருந்தா...என்னென்னவோ நடந்துடும். நீ ஒரு வேலை செய்யணும்... நாளைக்கு உனக்கு பிறந்த நாள்னு சொல்லி அந்த தேவநாதனை நம்ம வீட்டுக்கு வரச்சொல்லு...

அப்புறம் கடவுள்விட்ட வழி, கூட யாரையாவது இட்டுக்கிட்டு வந்திடப்போறார். கவனமா இரு..."

தாயின் மனம் புரியாமல் வெறுமையாக தலையாட்டினாள் ராணி. அவள் கண் முன்னால் நகையும் சேலையும் நாட்டியமாடத் தொடங்கி இருந்தன.

வெகு பக்கத்தில் வெண்ணெய் பொம்மை மாதிரி உடலைக் கவ்விப் பிடிக்கும் உடையோடு வந்து நிற்கும் ராணியைப் பார்த்தார் தேவநாதன். மனசு அசைந்தது.

"என்னம்மா.. நீ யாரு? ஏதும் நன்கொடை வேணுமா?"

ராணி சிணுங்கினாள். "என்ன அங்கிள் நீங்க என்னைத் தெரியலையா? வடிவு மாமி சொல்லலியா? நான்தானே இந்த செல்லக்கிளியும் தமிழும் ஊர் சுத்தினதை வந்து சொன்னவள். அவங்க பண்ணின அக்கிரமத்தைப் பார்த்த ஒரே சாட்சி. உங்களை மாதிரி ஒருத்தர் தெய்வமா வீட்டில் இருந்தா நான் கோவில் கட்டி கும்பிடுவேன். அந்த செல்லக்கிளி முட்டாள். அருமை தெரியாதவள் என்ன செய்யறது.

உங்களுக்கு அவளைத்தானே பிடிச்சிருக்கு. போகுது.... அங்கிள்! நீங்க என் பிறந்த நாளைக்கு வரணும். நாளைக்கு சாயங்காலம் சின்ன விருந்து ஏற்பாடு செய்திருக்கோம். நீங்கதான் சிறப்பு விருந்தினர். கண்டிப்பா வரணும். உங்க திருமணத்துக்கு என் முதல் வாழ்த்தோட விருந்துன்னு வைச்சுக்குங்களேன்."

இளமையின் துள்ளலும், சாகசமும் அருகில் பார்க்கும்போது தேவநாதன் மனதை நழுவவிட்டார். சிரித்துக் கொண்டே சொன்னார்.



"நீ இத்தனை சொன்னதுக்கப்புறம் நான் வராமல் இருப்பேனா? கொஞ்சம் இரும்மா. வடிவு... ராணிக்கு இனிப்பும், காபியும் கொண்டுவா..."

தானே எழுந்து போனார் தேவநாதன். திரும்பும்போது கையில் நகைப்பெட்டி. "வந்தவங்களை வெறும்கையோடு அனுப்புற பழக்கம் எனக்கு இல்லை. இந்தா இதை வைச்சுக்க..."

வியப்போடு திறந்து பார்த்த ராணி வியப்பில் விழி உயர்த்தினாள்.

"ஆகா.... எத்தனை அழகான கழுத்தணி.... ரொம்ப நன்றி அங்கிள் இதை உங்கக் கையால் போட்டுவிடுங்களேன்..."

பளபளக்கும் கழுத்தணியைவிட கழுத்து பளபளத்து வழவழத்தது. தேவநாதன் தடுமாறினார்.

அவர் காதருகில் ராணி சொன்னாள். "உங்களுக்கு வயசாகிப் போச்சுங்கறதே நம்ப முடியலியே.. கையெல்லாம் இரும்பு மாதிரி இருக்கே... செல்லக்கிளி கொடுத்து வைச்சவள். எனக்கு ரொம்ப பொறாமையா இருக்கு அங்கிள். நாளைக்கு கண்டிப்பா வந்திடுங்க... நான் வரேன்."

சின்னஞ்சிறு சிட்டுக்குருவி ஒன்று சிலுசிலுவென சிறகசைத்துப்பறந்து உடலெங்கும் தடவிக் கொடுத்துவிட்டு பறந்தோடிப் போனது போல இருந்தது. 'எத்தனை இங்கிதம். எத்தனை பேச்சு. மனம் புரிந்தக் கொஞ்சல். இவளை முதலில் பார்த்திருந்தால்.... நடந்திருப்பதே வேறு. இப்போது செல்லக் கிளியை விடமுடியுமா? எத்தனைப் பொய் சோடனைகள் செய்து அவளை மடக்கி இருக்கிறேன். அத்தனையும் வீணாகிடுமே....'

தேவநாதன் மன ஓட்டத்தைப் புரிந்த வடிவு வாயிலும், வயிற்றிலும் அடித்துக் கொண்டாள்.

'பாவி செல்லக்கிளி... ஒரு நாளைக்காவது இத்தனை சாகசமாக நடந்து கொண்டிருப்பாளா? அங்கிள்னு சொன்ன ஒரு வார்த்தைக்கே வைர கழுத்தணியை தூக்கிக் கொடுத்திட்டாரே.. நாளைக்கு என்னென்ன நடக்கப்போகுதோ...

குடிகெடுக்கறா மாதிரி அவள் செய்யும் சாலக்கில் இவர் தன்னையே மறந்திடுவார் போலிருக்கே.. என் வாழ்வு வீணாகிடுமே... இந்த கிழவன் செல்லக்கிளிக்கு மட்டுமா வெடி வைக்கிறார்? எனக்குமில்லே சேர்த்து ஆப்பு அடிச்சிட்டார். பொம்பளையா பிறக்கவே கூடாது. அதுவும் இப்படிப் பலரை அண்டிப் பிழைக்கும் ஈனபிறப்பு எடுக்கவே கூடாது. கடவுளே... இது என்ன புது முடிச்சு... புது சோதனை.... என்னைக் காப்பாற்றமாட்டியா?'

மனதைத் தேற்றிக்கொண்டு தேவநாதனிடம் சென்றாள். ''நாளைக்கு காஞ்சிபுரம் போகணும்னு சொன்னீங்களே சித்தப்பா... ராணி வீட்டுக்கு வரதா சொல்லி அனுப்பிட்டீங்களே...''

தேவநாதன் அவளை முறைத்தார். ''என் சொந்த விவகாரத்தில் தலையிடாதேன்னு சொன்னா புரியாது உனக்கு? அன்பைக் காட்டறவங்களை மதிக்க வேண்டியது என் கடமை. பேசாமா போடறதை தின்னுக்கிட்டு ஒரு மூலையில் விழுந்துகிட... யாரை எங்கே வைக்கணும்னு எனக்குத் தெரியும். அநாவசியமா அறிவுரை சொல்ற வேலையெல்லாம் வைச்சுக்காதே... போ இங்கே இருந்து...''

முகத்தில் அறைபட்டது போல வடிவு பின்வாங்கினாள். காசாசைப் பிடித்தவளாக இருந்தாலும் கொஞ்சம் நியாய



உணர்வு உள்ளவளாக அவள் உள்ளுக்குள் இருந்திருக்கிறாள். படபடவென வந்த ஆயாசத்தைக் காட்டிக் கொள்ளாமல் அறைக்குச் சென்றாள்.

செல்லக்கிளியின் முகம் தட்டுப்பட்டது. ஏதோ குற்ற உணர்வு தாக்க அவளருகில் சென்று அமர்ந்தாள்.

''செல்லக்கிளி... என்னை மன்னிச்சிடுன்னு வசனம் பேச எனக்கு விருப்பமில்லை. தப்பை செய்திட்டுப் பின்வாங்கற வங்க சொல்ற வார்த்தை அது... உனக்கு மட்டும் இக்கட்டை நான் உருவாக்கவில்லை. எனக்கும் விலங்கிட்டுக்கிட்டேன்னு இப்பதான் புரியுது. உன் மாமாவை வைத்து தேவநாதன் நம்ம ரெண்டு பேரையும் சிக்கவைச்சிட்டார்.

நாம இதிலிருந்து தப்பிக்கவே முடியாது. இருந்தாலும் எனக்கு ஏதோ நம்பிக்கை இருக்கு. நாளைக்கு மாலை தேவநாதன் வெளியே போறார். நான் எப்படியாவது கொத்துசாவியை எடுத்து வைக்கிறேன். ரெண்டு பேருமா சேர்ந்து நம்ம தலையெழுத்தை மாற்றின அந்தக் காகிதத்தைத் தேடுவோம். கிடைச்சிட்டா நாம தப்பிக்கலாம். இல்லையா ரெண்டு பேரும் ஒண்ணாவே செத்துத் தெலைவோம்...''

அழக்கூட முடியாமல் இருவரும் உட்கார்ந்து கிடந்தார்கள் மனதில் ஒரு நம்பிக்கை.

''ஆமாம் மாமா.. மாமி அக்காவோட பேசிக்கிட்டிருந்ததை நாங்க கேட்டோம். என்னவோ கடிதம்னு பேசிக்கிட்டாங்க. எங்க மாமாவை சந்திச்சால் எல்லாம் புரியும்...'' மேல் மூச்சு கீழ்மூச்சுவாங்கப் பேசிய பிரபுவை நமச்சிவாயத்திடம் ஒப்படைத்துவிட்டு அந்த வினாடியே பைக்கைக் கிளப்பினான் தமிழ்.

''நீங்கப்பாட்டுக்கு இங்கே நிம்மதியா மலைக்காத்தை அனுபவிச்சுக்கிட்டு இருக்கீங்க. அங்கே அந்த தேவநாதன் பொம்பளைங்க ரெண்டு பேரையும் தொல்லை செய்து கிட்டிருக்கார். செல்லக்கிளியை நான் திருமணம் செய்துக் காட்டாக்கூட பரவாயில்லை சார். அவளை வீணா அந்தக் கிழவனுக்கு பலிகொடுத்துவிடாதீங்க... உங்களைப் பார்க்க சென்னையிலேயிருந்து வந்திருக்கேன். என்னோட புறப்படுங்க... வாங்க...''

தன் எதிரே நின்று கொஞ்சும் தமிழரசனைப் பார்த்தார் சன்னாசி. திடீரென அழத் தொடங்கினார்.

''வரமுடியாது தம்பி. வரமுடியாது. நானும் இங்கே கைதி நிலையில்தான் இருக்கேன். என்னன்னு சொல்ல என் மனம் இடம் கொடுக்கலை. ஆனாலும் எங்களை நம்பி வந்திருக்கிற செல்லக்கிளிக்காக உண்மையைச் சொல்றேன்.''

அழுகைத் தொண்டையடைக்க சன்னாசி பேசினார். ''நாம நினைக்கறா மாதிரி தேவநாதன் நல்லவர் இல்லை. நிறைய சட்டப்புறம்பான காரியங்கள் செய்துகிட்டிருக்கார். பணம் நிறைய இருக்கிறதால் தப்பிச்சுக்கிட்டு வரார். தன்னுடைய பல வேலைகளுக்கு பலியாடு ஒன்று தேடிக்கொண்டிருந்தார் போலிருக்கு. அப்ப பார்த்து நான் கிடைச்சேன்.

வடிவோட பணத்தாசையை வைச்சு அவளை வாயடைச்சு என்னை இங்கே அனுப்பிட்டார். போன வாரம் ஒரு தொழிலாளியோட பெண்ணைக் கெடுத்தவங்களை கண்டு பிடிக்கறேன்னு வந்து தங்கினார்.

அந்த கொடுமையான காரியத்தில் தேவநாதனுக்கும் பங்கு இருக்கும்னு நான் நம்பறேன். அந்தப் பொண்ணு பாவம் தற்கொலை செய்துகிட்டது.



இங்கே வேலை செய்யறவங்க எல்லார்கிட்டேயும் வெள்ளைகாகிதத்தில் கையெழுத்து வாங்கி வைச்சிருக்கார். நானும் போட்டுக் கொடுத்திருக்கேன், அதைத் துருப்புசீட்டா வைச்சிட்டார்.

அந்த வெள்ளைக் காகிதத்தில் தொழிலாளியின் பெண்ணை நான்தான் கெடுத்து கொலை செய்து தற்கொலை போல ஏற்பாடு செய்திட்டேன்னு எழுதி என்கிட்டேயே காட்டினார்.

நான் பதறினேன். கதறினேன். அவருக்குப் பலரைக் கெடுத்துப்பழக்கமானதால் சிரித்துக் கொண்டே சொன்னார்.

''இதை வைத்துக் கொண்டு என்னவெல்லாம் செய்யப் போகிறேன் தெரியுமா? செல்லக்கிளியை அடையப்போறேன். உன் மனைவியை அடிமையாக்கிவிட்டு வேலைக்கு வைச்சுக்கறேன். பணத்தாசைப் பிடிச்ச உங்களுக்கு இது ஒரு பாடமாக இருக்கும். நீ இந்த தோட்டத்தைவிட்டு அசையக் கூடாது. உன் ஒவ்வொரு அசைவையும் கண்காணிக்க ஆள் இருக்கு... வரேன்...''

நான் அவர் சொல்லை மீறி பலமுறைத் தப்பிக்க முயற்சி செய்தேன். பலனாக அடியும், உதையும்தான் கிடைத்தது. திரைப்படத்தில் வர்றா மாதிரி இருக்கா! சில நேரங்களில் வாழ்க்கை திரைப்படத்தைவிட பயங்கரமாகவும் விசித்திரமான தாகவும் இருக்கும் தம்பி...''

தமிழரசு கொஞ்சம் யோசித்தான். ''இப்ப என்ன அந்தக் காகிதம் நம்மிடம் வந்துவிட்டால் தொல்லைகள் தீரும். அவ்வளவுதானே? நீங்க தைரியமாக இருங்க... நான் ஊருக்குப் போய் ஆகவேண்டியதைப் பார்க்கிறேன்.''

மாலை வருமுன்னே தேவநாதன், ராணி வீட்டுக்குப் போக ஆயத்தமானார். ஆளே அடையாளம் மாறி இருந்தார். தலைக்கு கறுப்பு மை அடித்து மீசை வெட்டி ஒழுங்கு செய்து கோட்டும் சூட்டும் அணிந்து புறப்பட்டுவிட்டார்.

கோட்டுப் பையில் ராணிக்கு அளிக்கவேண்டிய பரிசாக வைர நகை செட் ஒன்று இருந்தது. ஒரு கணம் ஏதோ யோசித்தவர் சன்னாசி எழுதியக் கடிதத்தையும் மறுபையில் வைத்துக் கொண்டு புறப்பட்டார்.

மறுவினாடி வடிவு வீட்டிலிருக்கும் அத்தனை சாவிக் கொத்துகளையும் கொண்டு வந்த செல்லக்கிளி முன்பு போட்டாள். இருவரும் சுறுசுறுப்பாக எழுந்து ஓடினார்கள்.

ராணியின் வீட்டில் தேவநாதனுக்கு தேவலோக வரவேற்புதான்

ராஜாம்பாள் எல்லாவற்றிலும் தேர்ந்தவள். அவளது நடிப்பிலும் அன்பிலும் மயங்கி தன் நிலை இழக்கத் தொடங்கினார் தேவநாதன்.

''அங்கிளை கோட்டைக் கழட்டச் சொல்லேன் ராணி... அறைக்கு அழைச்சுக்கிட்டு போம்மா...''



## 29

**ரா**ணியும், தேவநாதனும் அறைக் குள்ளே சென்ற பிறகு கோட்டுத் தனியாகத் தொங்கிக் கொண்டிருந்தது. ராஜாம்பாள் ஒரு ஆர்வத்தில் அதன் பைகளை ஆராய்ந் தாள். காகிதம் கண்ணில் பட்டது. படித்த வள் விசயத்தை ஊகித்துக் கொண்டாள்.



'இந்தக் காகிதம் இருக்கிறதாலதானே தேவநாதன் கைவிட்டு நழுவப் போகிறார். இதனால் யாருக்கும் எந்தப் பயனும் இல்லை.'

சுற்றும் முற்றும் பார்த்தாள். காகிதத்தைக் கசக்கி கணப்புக்காக எரிந்து கொண்டிருந்த நெருப்புக்குள் எறிந்தாள். வினாடி நேரத்தில் அது பொசுங்கி சாம்பலாகிப்போனது. தேவையானவர்கள் யார் கையிலும் கிடைக்காமல் அந்தக் காகிதம் உயிரை விட்டது.

அது தெரியாமல் உள்ளே தேவநாதன் சல்லாபித்துக் கொண்டிருக்க, வடிவும், செல்லக்கிளியும் வீட்டைத் தலைகீழாக்கிக் கொண்டிருக்க, சன்னாசி அழுது புலம்ப, தமிழரசு தேவநாதன் வீட்டுக்கு வந்து சேர்ந்தான்.

காகிதம் கிடைக்காத விரக்தியில் எல்லோரும் நம்பிக்கை இழந்து எழுந்தார்கள். இனி எப்படியும் எப்போதும் தப்பிக்க முடியாது என்கிற எண்ணமே ஆக்கிரமிக்க ஒருவரை ஒருவர் பார்த்துக் கண் கலங்கினார்கள்.

விடைபெறும் விதமாகத் தலையசைத்தபடி வார்த்தை இழந்து நகர்ந்தார்கள்.

தொலைபேசி அடித்தது. வடிவு எடுக்காமல் தமிழரசைக் கைக் காட்டினாள். துக்கம் தொண்டை அடைக்க அவள் உட்கார்ந்து விட்டாள்.

''என்னது... என்னது... ராணி... என்ன சொல்றே.. நீ... மன்னிச்சுக்கம்மா.. திருமதி ராணி தேவநாதன் பேசறீங்களா? அப்படியா செய்தி.. உங்கம்மா இருக்காங்களா? அவங்கக் கிட்டே ஒலிவாங்கியைக் கொடு... ஆன்ட்டி உங்கக் கால்கிட்டே அந்த ஒலிவாங்கியை வைச்சுக்குங்க, நான் காலுக்கு முத்தம்

தரேன். இதுக்கெல்லாம் வெட்கப்படாதீங்க.. என்னை வாழவைத்த தெய்வமே.. நீ வாழ்க!''

''என்னங்க மெதுவா ஓட்டுங்களேன்.. பயமா இருக்கு...''

''பயமா இருக்கில்லே? என்னை இறுக்கமா கட்டிப் பிடிச்சுக்கறது... மாட்டியா? இந்தா பெண்ணே? இப்ப நாம ரெண்டு பேரும் புதுமணத் தம்பதிகள்... நினைவிருக்கில்லே? பொண்டாட்டியைக் கொஞ்சக்கூட விடமாட்டாங்க போலிருக்கே...''

''அதெல்லாம் வெளியில் வைச்சுக்கக்கூடாது... நம் வீட்டில்தான் அனுமதி கிடைக்கும்.''

''கொஞ்சறதுக்கு அனுமதி இல்லையா... சரி பாடறதுக்கு அனுமதி உண்டா?''

''சரி... செய்யுங்க...''

''வாலைக் குமரியடி செல்லக்கிளி.... மருவக் காதல் கொண்டேன்.''

''வேண்டாங்க..பாடாதீங்க...'' கத்தியபடி செல்லக்கிளி காதில் விரலை வைத்து அடைத்துக் கொண்டாள். இருவரும் சிரித்த சிரிப்பு சாலையெங்கும் முத்துக்களாய் சிதறி ஓடியது.

R256
26/2/08



CONNEMARA PUBLIC LIBRARY
26 FEB 2008